Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 13-7-2016 Issued : 13-7-2016

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

சனிக்கிழமை, பிப்ரவரி 20, 2016—தொகுதி 93—எண் 2

Saturday, the 20th Feburary 2016—Volume 93—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai - 600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

20–2–2016

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 249-302

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 9 வரை இணைப்பு I ஆகச் சேர்க்கப்பட்டுள்ளன) 479-1735

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—

(அ) உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் அமைத்தல், 1970 முதல் 1980 வரை காவல் துறை துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 303-305

(ஆ) மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகள் பெறுவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தல் மற்றும் மாநில ஒருங்கிணைப்புக் குழு அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 305-309

3. பதினான்காவது பேரவை இறுதி கூட்டத் தொடர் நிறைவு பெறுவதையொட்டி முதலமைச்சரின் நன்றி மற்றும் பாராட்டு 309-310

பக்கங்கள்

4. உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம், காவல் துறை துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி, மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகள் அதிகரித்தல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 310-328

முனைவர் செ.கு. தமிழரசன் 310-314

திரு. உ. தனியரசு 314-317

திரு. பி.வி. கதிரவன் 317-319

திரு. ஆ. நாராயணன் 319-320

* *திரு. க. பாண்டியராஜன்* 320-322

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 322-323

* *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி* 323-324

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா 324-325

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி 325-326

* *மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்* 326-328

5. அறிக்கைகள் அளித்தல்—

சட்ட விதிகள் ஆய்வுக் குழு 329

6. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.) 330

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.) 373-374

பக்கங்கள்

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2016 (ஆஇ.)	381
(ஈ) மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)	382
(உ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)	382
(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2016 (ஆஇ.)	449
(எ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்	472-474

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016	330-331
**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்*	330-331
(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	331-333
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	331-333
(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	333-334
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	333-334
(ஈ) தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	334-335
மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்	334-335
(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2016	381-382
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	381-383

பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2016	449-451
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	449-450
**திரு. க. பாலகிருஷ்ணன்*	450
8. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2015–2016, அளித்தல்	335-344
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	335-344
9. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதத்திற்கான பதிலுரை—	
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	345-373
10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு	374-380
11. முன்பண மானியக் கோரிக்கைகள், 2016–2017, வாக்கெடுப்பு	383-448
12. அரசினர் தீர்மானங்கள்—	
(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்	451-452
(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்	475
13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—	
(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2016	452-454
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	452-453
(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2016	454-456
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	454-455
(இ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016	456-460
** மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்*	456-459

பக்கங்கள்

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

திரு. அ. சவுந்தரராசன்	456-457
(ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	460-462
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	460-462
(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	460-464
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	462-464
(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	464-466
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	464-466
(எ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	466-468
மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்	467-468
(ஏ) தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016	468-472
மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்	469, 472
**திரு. க. பாலகிருஷ்ணன்*	469-470
திரு. சு. குணசேகரன்	470-471

14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 475-477

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 பிப்ரவரி 20, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“கொடையளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி.”

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

மின்மாற்றி

***49596—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், பருத்திபுத்தூர் ஊராட்சி, பருத்திபுத்தூரிலுள்ள அருந்ததியர் காலனிக்கு தனியாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், பருத்திபுத்தூர் ஊராட்சி, பருத்திபுத்தூர் அருந்ததியர் காலனிக்கு பருத்திபுத்தூர் SS No. IV 100 KVA மின்மாற்றி வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. அந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின்பளு 92 கிலோ வாட் ஆகும். இந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின்பளு அதிகம் என்ற காரணத்தினால் 21–4–2015 அன்று தனியாக பருத்திபுத்தூர் காலனிக்கு அருகிலுள்ள முசலம்குலம் கிராமத்தில் புதிய 100 KVA திறன் கொண்ட பருத்திபுத்தூர் SS No. IX மின்மாற்றி நிறுவப்பட்டு பருத்திபுத்தூர் அருந்ததியர் காலனிக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் உறைவிடம், ஆற்றலின் பிறப்பிடம், ஈரோட்டு விடிவெள்ளியின் துணிவு, காஞ்சித் தென்றலாம் பேரறிஞர் அண்ணாவின் அறிவு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஈகை இவை ஒருசேர தன்னகத்தே கொண்ட தென்னகத்து ஜான்சிராணி, இந்தியாவிலேயே தமிழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டிய உலகத் தமிழினத்தின் ஒரே தலைவி, அகவை 68–ல் அடியெடுத்து வைக்கும் உலகத் தமிழ் மக்களின் உயிர் மூச்சு மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களை வாழ்த்த எனக்கு வயதில்லை. அம்மா! தங்களின் மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன். உலகம் போற்றும் உன்னதத் திட்டங்கள் தந்ததால் வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலிலே 234 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடி (மேசையைத்*

2016 பிப்ரவரி 20]

தட்டும் ஒலி) இன்றுபோல் என்றும் உலகம் போற்றும் நல்லாட்சி தொடரப்போகும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து மீண்டும், மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதியில் 500 ஆண்டுகளானாலும் செய்ய முடியாத மின் திட்டங்கள் இந்த ஐந்தே ஆண்டுகளில் செய்யப்பட்டுள்ளன. 10 கோடியில் அரக்கோணம் நகருக்கு தனியே ஒரு துணை மின் நிலையம், 12 கோடியில் இச்சிபுத்தூரிலே ஒரு துணை மின் நிலையம், 14 கோடியில் 33 KVA புன்னை துணை மின் நிலையத்தை 110 KVA-ஆகத் தரமுயர்த்தியது, நாகவேட்டிலே ஒரு புதிய துணை மின் நிலையத்தை அமைக்க உத்தரவு வழங்கியது என இந்த 5 ஆண்டுகளில் அடுக்கடுக்கான மின் திட்டங்களைத் தந்து, அரக்கோணத்தையே ஒளியால் மிளிரச் செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட பருத்திபுத்தூர் தாழ்த்தப்பட்ட அருந்ததியின மக்கள் வசிக்கும் பகுதிக்குத் தனியாக ஒரு மின்மாற்றி வேண்டுமென்று வினா கொடுத்து, அந்த விடை அவைக்கு வருவதற்குள்ளே அந்தப் பகுதியிலே மின்மாற்றி அமைத்தது மட்டுமல்லாமல், அங்கே குடியிருந்த 21 குடிசை வீடுகளுக்கும் ஒரு விளக்கு இணைப்பு வழங்கி, அவர்களுடைய வீட்டுக்கு மட்டுமல்லாமல், கல்வியின்மூலம் அவர்களுடைய வாழ்க்கைக்கும் வெளிச்சம் ஏற்படுத்திய தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவியாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் அத்தாணி பகுதியில் 110/33 KVA துணை மின் நிலையம் அமைக்க ஆணை பிறப்பித்தும் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே,

பணியினை விரைவாகத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தியூர் தொகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பது சம்பந்தமான பணிகளை விரைவுபடுத்தவும், அது என்ன நிலையில் இருக்கிறது என்றும் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகளை எந்தளவிற்கு விரைவுபடுத்த முடியுமோ அந்தளவிற்கு விரைவுபடுத்தி, அந்தந்தப் பகுதிகளுக்கு விரைவாக துணை மின் நிலையங்கள் அமைத்திட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தியூர் பகுதியிலும் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். முந்தைய கூட்டத்தொடரின்போது காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில், துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், எப்போது பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதியில் உள்ளடங்கிய கண்ணங்குடி பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே நடைபெறுகின்ற பணிகளை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கூத்தப்பாடி ஊராட்சியில் கே. அக்ரகாரம் கிராமத்தில் 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மின்மாற்றி பயன்பாட்டில் உள்ளது. இது தொடர்ந்து இத்தனை ஆண்டுகள் இருப்பதனால் அடிக்கடி பழுதடைந்துவிடுகிறது. கூடுதலாக, ஏராளமான மின் மோட்டார்களுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புதிதாக மின்மாற்றி அமைப்பதற்கும், வலுவுள்ள மின்சாரம் கிடைப்பதற்கான வகையிலே தரம் உயர்த்தித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதியில் குறைவான தாழ்வழுத்த மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார். அதை ஆய்வு செய்து, ஏதாவது குறையிருப்பின் அதை நிவர்த்தி செய்வதற்கு, உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

பாலத்தை அகலப்படுத்துதல்

*61068—**திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம்–மயிலாடுதுறை தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ஏழுகம்மா பாலத்தினை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம்–மயிலாடுதுறை தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ஏழுகம்மா பாலம் தேசிய நெடுஞ்சாலை எண் 45ஏ–ல் கி.மீ. 112/10–ல் அமைந்துள்ளது. இப்பாலம் இந்திய தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–IV மூலமாக புதிதாக கட்டப்படவுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம்–மயிலாடுதுறை அதாவது கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்திருக்கிற ஏழுகம்மா பாலம் என்பது ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட ஒரு பாலம். அப்போது, போக்குவரத்து மிகவும் குறுகிய நிலையிலே இருந்ததனால் குறுகிய பாலமாகக் கட்டியிருக்கிறார்கள். இப்போது போக்குவரத்து அதிகமாகிவிட்ட காரணத்தினால் அடிக்கடி விபத்து நடந்து, இரண்டு பக்கம் இருக்கிற கைப்பிடி சுவர்களும் கீழே விழும் நிலையில், கைப்பிடிச் சுவர்கள் அப்போதைக்கப்போது புதுப்பிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் சிதம்பரத்திற்கு புறவழிச் சாலை அமைத்துவிட்ட காரணத்தினால், மழைநீர் வடிய முடியாமல் ஓர் அணையைப் போலக் காட்சியளிக்கிறது.*

2016 பிப்ரவரி 20]

ஏழுகம்மா பாலம் குறுகிய பாலமாக இருப்பதால் மழைநீர் வடிய முடியவில்லை. எனவே, வெள்ளச் சேதத்திலிருந்து அதைப் பாதுகாப்பதற்கும், போக்குவரத்து அதிகமாக இருக்கிற காரணத்தினால் பணிகளை விரைவாக முடித்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம்–மயிலாடுதுறை தேசிய நெடுஞ்சாலை எண் 45ஏ–ல் கி.மீ. 112/10–ல் வினாவில் கேட்கப்பட்டுள்ள ஏழுகம்மா பாலம் அமைந்துள்ளது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–IV–ன்மூலம் விழுப்புரம், பாண்டிச்சேரி, சிதம்பரம் மற்றும் நாகப்பட்டினம் வரையில் நான்கு வழிச் சாலையாக அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தற்போது நிலம் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. நான்குவழிச் சாலை அமைக்கின்றபோது மேற்படி பழைய பாலத்திற்குப் பதில் புதிய பாலம் அகலப்படுத்தி கட்டப்படவுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

(முற்பகல் 10–10

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுகின்ற பணி நடைபெறுகிறபோது, சிதம்பரத்திற்கு புறவழிச் சாலை வழியாக அந்தச் சாலை செல்கிறது. எனவே, சிரம்பரத்திலேயிருந்து பிள்ளைமுத்தான் பிள்ளைசாவடி வழியாகச் செல்கிற பழைய சாலை தேசிய நெடுஞ்சாலைக்குள்ளே சேர்க்கப்படவில்லை. எனவே, அதிலே இருக்கிற 3 பாலங்கள், குறிப்பாக, எம்.கே. தோட்டம் மற்றும் அம்மாப்பேட்டை ஆகிய இடங்களிலே இருக்கிற பாலங்கள் மிகவும் பழமையாக, சிதிலமடைந்து, போக்குவரத்து நேரத்திலே எப்போது விபத்து

ஏற்படுமோ என்கிற அச்சத்தில் மக்கள் செல்ல வேண்டிய நிலைமையிலே இருக்கின்றன. எனவே, தேசிய நெடுஞ்சாலையின்கீழ் அல்லாமல் மாநில நெடுஞ்சாலைத் துறையின்கீழ் இருக்கிற அந்த 3 பாலங்களையும் செப்பனிட்டு, போக்குவரத்துக்கும் மக்களுடைய பாதுகாப்புக்கும் ஏற்றவகையில் அரசு அவற்றைக் கட்டித் தருவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பாலங்கள் E.P.C. மூலமாக அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதோடு, தேசிய நெடுஞ்சாலை 227 திருச்சி–சிதம்பரம் சாலை இலாநாங்கூர் என்ற இடத்தில் 8 கிலோ மீட்டர் அகலம் கொண்ட மிகப் பழமையான பாலம் வலுவிழந்துள்ளதால், புதிய பாலம் 3.8 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இரு சக்கரம் மற்றும் இலகு ரக வாகனங்கள் அனுமதிக்கப்படுகின்றன. மாற்று வழிச் சாலை அமைத்து, புதிய பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாலப் பணி ஆரம்பிப்பதற்கு முன் மாற்று வழிப் பாதை அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் குமராட்சியில் பழைய பாலம் வலுவிழந்துள்ளதால், ரூ.6 கோடி செலவில் புதிய பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாற்று வழிச் சாலை அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு பாலப் பணிகளும் மைய அரசின் அனுமதி பெற்ற பின், தொடங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பாலம் E.P.C. மூலமாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த 4¾ ஆண்டு பொற்கால ஆட்சியில், இதுவரை 1,599 சிறிய, பெரிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு, சாதனை படைத்த அரசு

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் இன்றைக்கு 7,925.29 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டும், 14,970.64 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டும், 21,016.72 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. இதுவரை, இந்த 5 ஆண்டுக் காலத்தில் 43,912.65 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைச் சீரமைத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 17,177.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எனது தொகுதியான நிலக்கோட்டை, அது மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்டை. இதுவரையிலும் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டாத்தையம்பாளையம், து. கண்ணாப்பட்டி ஆகிய ஊர்களை இணைக்கும் பாலம் குறுகிய பாலமாகவும், தூம்பு வடிவமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன்பு திடீர் காட்டாற்று வெள்ளம் வந்தபோது 4 பேர் இறந்துள்ளார்கள். எனவே, அந்தப் பாலத்தை அகற்றிவிட்டு, உயர்மட்டப் பாலமாக அமைத்து, அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், நான் குடியரசு தின விழாவிற்குச் சென்றபோது மாணவர்கள் இந்தப் பாலத்தை தங்களுக்குக் கண்டிப்பாக கட்டித் தர வேண்டும் என்று கோரியுள்ளனர். எனவே, மாணவர்கள் மற்றும் விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று இதை உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்* NABARD *திட்டத்தின் மூலமாக 474 பாலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தப் பாலப் பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. இதில் 281 பாலப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட்டுள்ளன. 109 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்ற பாலப் பணிகள் பல்வேறு நிலைகளிலே உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பாலங்கள் கட்டப்படவேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, எதிர்காலத்திலே அந்தப் பாலங்களைக் கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக ஒரு கேள்வி; வேறு ஒன்றுமில்லை. பட்டுக்கோட்டை புறவழிச் சாலை திட்டத்திற்கு டெண்டர் விடப்பட்டு, அக்ரிமென்ட் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. இப்போது ஒரு நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் தற்போது பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று நான் ஏற்கெனவே கடந்த 15 தினங்களுக்கு முன்பாகக் கூறியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரை உயர் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய நமது அரசு வழக்கறிஞரிடம் பேசி, தேர்தலுக்கு முன்பாக அந்தப் பணிகளை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் பட்டுக்கோட்டைக்கு புறவழிச் சாலை அமைப்பதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டப் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு, பணிகள் முடிவுபெற்றன. இரண்டாம் கட்டப் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. தனி நபர் ஒருவர் மதுரை உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறார். விரைந்து வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்து, தீர்ப்பைப் பெற்று அந்தப் பணிகள் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் 4 பாலங்களுக்கான வேலைகள் நீண்டகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக மத்திய திருப்பூரினுடைய நகரப் பகுதியிலே ஐந்தாவது பாலத்திற்கான வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்த 4 பால வேலைகளும் முடியாததால் திருப்பூரில் மிகப் பெரிய அளவிற்குப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே, புதியதாகக் கட்டக்கூடிய பால வேலைகளை விரைந்து முடித்து, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் பகுதியில் 4 பாலப் பணிகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்கள். போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. விரைவாக அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று இங்கே கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஒரு பாலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆகவே, அந்த வழக்கு முடிந்த பிறகு, அந்தப் பாலப் பணிகள் தொடங்கப்படும். ஏனைய பாலங்களுக்கான

பணிகள் விரைந்து தொடங்கப்பட்டு, முடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுபவத்தின் அரங்கமே அம்மா, ஆசை துறந்து அன்பை அளிப்பவரே அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) இயல்பாய் இருப்பவரே அம்மா, ஈடுயிணையில்லாத் திட்டங்கள் தீட்டுபவரே அம்மா, உலக சமாதானத்தின் முக்கிய அங்கமே அம்மா, ஊருக்கு உழைத்து அன்பாய் நடப்பவரே அம்மா, எங்கும் எதிலும் முன்னணியில் இருப்பவரே அம்மா, ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றும் உத்தமரே அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) ஐயமில்லாமல் அனைத்து முடிவும் எடுப்பவரே அம்மா, ஒன்று எங்கள் ஜாதி என்று மனிதர்களை அரவணைப்பவரே அம்மா, ஓயாமல் பகல் இரவு பாராமல் உழைப்பவரே அம்மா, ஔஷதம்போல் அனைவருக்கும் மருந்தாக இருப்பவரே அம்மா, அஃறிணை உயிர்களையும் அன்பாய் பார்ப்பவரே அம்மா, வருகின்ற பிப்ரவரி 24 ஆம் தேதி 68-வது பிறந்த நாள் விழா காணும் எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை நன்றியோடு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாட்ரோடு என்று சொல்லக்கூடிய, சதராஸ்-செங்கல்பட்டு-வாலாஜாபாத்-காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி சாலையில் கிலோ மீட்டர் 66/4 மற்றும் கிலோ மீட்டர் 67/2 ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய சிறிய, பழைய கல்வெட்டை அகற்றிவிட்டு புதியதாகக் கான்கிரீட்டாலான பாக்ஸ் கல்வெட்டைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பாலங்கள் குறுகலாக இருக்கின்றன, அவற்றை அகலப்படுத்திக் கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

முற்பகல் 10—20

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில், குடியாத்தம் நகரம் போக்குவரத்து நெரிசலால் மிகவும் கஷ்டப்படுகின்றது. தாழையாத்தம் பஜார், மேல்பட்டி ரோடு போன்ற பகுதிகளில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. இந்த விபத்துகளைத் தடுப்பதற்கு நகரின் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்ய ஆற்றின் கரைமீது ஒரு மாற்றுப் பாதை அமைக்க வேண்டுமென்று ஆரம்பம் முதல் கோரி வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் புறவழிச் சாலையானது, 7.70 கி.மீ. நீளத்தில் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் தேசிய நெடுஞ்சாலை எண் 234—ல் மங்களூர்—விழுப்புரம் சாலையில் நெல்லூர்பேட்டை ஏரிக்கரையில் கி.மீ. 23/5—ல் ஆரம்பித்து, சேத்துவண்டை கி.மீ. 29/4 வரை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஆண்டுத் திட்டம் 2015—2016 ஆம் ஆண்டின்கீழ் மேற்கொள்ளப்பட்டு ரூ.80 இலட்சத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான மதிப்பீடுகள் விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டவுடன் அந்தப் பணிகள் துவங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத்

தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய 15 இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட எங்களுடைய நாடாளுமன்றத் தொகுதியில் வென்றதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் 39–க்கு 37–ல் தனித்து நின்று வென்ற பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

68–வது பிறந்த நாளைக் கொண்டாடும் வேளையில், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லக்கூடிய நிலையை, தமிழக அரசின் சாதனைகள் உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உசிலம்பட்டி நகர், ஆண்டிப்பட்டி தொகுதி மற்றும் போடிநாயக்கனூர் தொகுதி ஆகிய இடங்களில் பை-பாஸ் சாலைகள் அமைக்கும் பணிகள் நீண்ட, நெடுநாட்களாக மத்திய அரசின் கிடப்பில் உள்ளது. அவற்றை விரைந்து எடுத்து, பை-பாஸ் சாலைகளை அமைத்தால், மூன்று நகரங்களிலும் நெருக்கடி தீரும். அதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மிக விரைவில் முடித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் புறவழிச் சாலைகள் அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தப் பணிகளை மேற்கொள்கின்றது. இதற்கு மாற்று நேர்பாடு

2016 பிப்ரவரி 20]

செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மாற்று நேர்பாடு செய்வதற்காக மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பெற்றவுடன் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவப் பேராசான் வார்த்தைகளுக்கேற்ப இந்தச் செயலை செய்யக்கூடிய ஆற்றலை யார் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அவர்களிடம் விடுவதுதான் சாலச் சிறந்தது என்பதை மக்கள் அறிந்துள்ளனர். மீண்டும் 6–வது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவார்கள் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையை, ஆளுமைப் பண்பைப் படைத்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் அருகே வைப்பாற்றின் குறுக்கே அமையப் பெற்றிருக்கிற தரைப் பாலத்தைப் புதுப்பித்து, மீண்டும் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரைப் பாலத்தை உயர் மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

திரு. எஸ்.கே. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் 68–வது பிறந்த நாளை முன்னிட்டு வாழ்த்துகின்ற வயது எனக்கு இல்லை என்றாலும்கூட, நூறாண்டு என்ன, இந்த உலகம் இருக்கும் வரை வாழ்வாங்கு வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆட்டையாம்பட்டி, வெண்ணந்தூர் சாலைகளில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணி எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது அந்தப் பணிகள் துவங்கப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். விரைவாக அந்தப் பணிகளைத் துவங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது புதிய அறிவிப்பாக ஆம்பூர் நகரத்திற்குட்பட்ட பெத்லஹேம் பகுதிக்குப் புதிய மேம்பாலம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் நிறைவுப் பெறக்கூடிய இந்த நிலையிலே, எப்போது அந்தப் பாலப் பணிகள் தொடங்கப்படும்? சமீபத்தில்கூட, ஆம்பூர், கன்னடிக்குப்பம் பாலப் பணி பூமி பூஜை செய்யப்பட்டு, தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முன்பே அறிவிக்கப்பட்ட ஆம்பூர்–பெத்லஹேம் பகுதிக்கு விரைவில் பாலப் பணிகள் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்

வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவரது கோரிக்கையை நிறைவேற்றிடும் விதமாக அங்கே இரயில்வே பாலம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். ஆகவே, இப்போது முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த முதற்கட்டப் பணிகள் நடைபெற்று முடிந்தவுடன், அங்கே அந்தப் பாலம் அமைக்கின்ற பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

93—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***57389—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வெங்கடசமுத்திரம் ஊராட்சி, இரங்காபுரம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு வட்டாரம், வெங்கடசமுத்திரம் ஊராட்சியைச்

சேர்ந்த இரங்காபுரம் அங்கன்வாடி மையத்திற்கு, இரங்காபுரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி வளாகத்திற்குள்ளேயே இடம் தேர்வு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மிகப் பெரிய பஞ்சாயத்தாக இருக்கக்கூடியது வெங்கடசமுத்திரம் ஊராட்சி. இதற்குட்பட்டு 16 குக்கிராமங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலுள்ள ஒரு குக்கிராமம்தான் இரங்காபுரம். ஏறத்தாழ 700 மக்கள்தொகைக் கொண்ட இந்தப் பகுதியிலே துவக்கப் பள்ளி ஒன்றின் ஓரத்தில், பழுதடைந்த இடத்தில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் ஏறத்தாழ 22 அங்கன்வாடிக் கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடங்களைக் கட்டித் தந்திருக்கின்றேன். இருந்தாலும், போதவில்லை. ஆகவே, இந்தப் பகுதிக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகுவிரைவாகச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மையங்களையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் மாற்றுவதற்கு, 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 601 கோடியே 91 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், வேலூர் மாவட்டத்தில் புதிதாகச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு*

2016 பிப்ரவரி 20]

அனுமதியளிக்கப்பட்ட மொத்த மையங்களின் எண்ணிக்கை 112. இந்த 112 மையங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இரங்காபுரம் ஊராட்சியில் தொடங்கப்படவிருக்கிற புதிய அங்கன்வாடி மையக் கட்டடமும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதலாக சிறுபான்மை பள்ளிகளில் இயங்கக்கூடிய சத்துணவுக் கூடங்களுக்கு நியமிக்கப்படும் பணியாளர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் போன்ற பணியிடங்களுக்கு அந்தச் சிறுபான்மை நிருவாகங்கள் பரிந்துரைக்கின்றவர்களையே நியமனம் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

95—

சார்பு நீதிமன்றம்

***34057—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலத்திலுள்ள முகாம் சார்பு நீதிமன்றத்தினை சார்பு நீதிமன்றமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் வாழும் மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, திருமங்கலத்தில் ஒரு புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க ரூபாய் 71,15,359 ஒப்பளிப்பு செய்து, அரசாணை எண் 977, உள் துறை, நாள் 29–12–2015–ல் ஆணை வெளியிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி எண் 110–ன்கீழ், திருமங்கலத்தில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அறிவிப்பு வெளியிட்டு, ரூ.37,18,548/– ஒப்பளிப்பு செய்து அரசாணை எண் 772, உள் துறை, நாள் 28–10–2015–ல் ஆணை வெளியிட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

2016 பிப்ரவரி 20]

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உரிமைகளையெல்லாம் சட்டப் போராட்டம் நடத்தி, வென்று காட்டிய நீதியின் காவலர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடுவதில் நீதிமன்றத்தின் வாயிலாக வெற்றி பெற்றார்கள். முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீர் தேக்கிக் கொள்ளலாம் என்ற உரிமையை நீதிமன்றத்தின்மூலம் வெற்றிபெற்று வந்தார்கள்.

திருமங்கலத்திலுள்ள வழக்கறிஞர்களும், பகுதிவாழ் பொதுமக்களும் அங்கு இருக்கின்ற நீதிமன்றத்தினை சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரி வந்தனர். அந்தக் கோரிக்கையினை நிறைவேற்றுகிற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன், திருமங்கலத்திலுள்ள நீதிமன்றத்தை சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தியும், கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை வழங்கியும், திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட பேரையூரிலே ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை வழங்கியும் பெருமை சேர்த்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் நகரத்திலே இருக்கக்கூடிய சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என இரண்டும் சேர்ந்து 100 ஆண்டுகள் பழமை கொண்ட ஒரு கட்டடத்தில் இருக்கின்றன. அங்கு ஏராளமான இடவசதி உள்ளது. எனவே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தினைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விரைவில் நீதி கிடைக்க வேண்டுமென்ற உயர்ந்த

[2016 பிப்ரவரி 20

நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இதுவரை 451 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே வெறும் 363 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 214 புதிய நீதிமன்றங்கள் 155 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் 119 புதிய நீதிமன்றங்கள்தான் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரையூர் நீதிமன்றத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியைப் பெற்றுத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சாதனையாக 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இன்று அனைத்து நீதிமன்றங்களும் சிறப்பான

2016 பிப்ரவரி 20]

முறையில் செயல்பட வழிவகை வகுத்துள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சரோஜா அவர்கள்.

திருமதி பெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 68 ஆம் ஆண்டு பிறந்த நாளில் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், வாழப்பாடியில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கிட்டத்தட்ட 214 புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

முற்பகல் 10–35

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் ஒன்றாகக்

செயல்பட்டபோது, கிருஷ்ணகிரியிலே மாவட்ட முதன்மை நீதிமன்றம் செயல்பட்டு வந்தது. 2004–ல் கிருஷ்ணகிரி, தருமபுரி எனப் பிரிக்கப்பட்டபின், தருமபுரியிலே Sub–Court–ல் மட்டுமே இன்று வரை முதன்மை நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. புதியதாக ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பணிகள் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக துவங்கப்படவில்லை. பெரும்பாலான வழக்கறிஞர்களும், பொதுமக்களும் அந்தக் கட்டடம் எப்போது கட்டப்படும், எப்போது பணி துவங்கப்படும் என்று பரவலாகக் கேட்கின்றனர். எப்போது அந்தப் பணி துவங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மேலும், மாவட்டங்களிலே வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, வழக்குகள் நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில் தருமபுரியிலே வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகளைத் தனியாக நடத்துவதற்கான சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, இப்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. உடனடியாகப் பணிகள் துவங்கப்படும். எந்த நீதிமன்றம் அமைப்பதானாலும், அதற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வர வேண்டும். உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வருகின்றபட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கறிஞர்கள் எல்லாம் கடந்த 20 ஆண்டுக்காலமாக சார்பு நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துள்ளனர். அங்கே சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு, உயர் நீதிமன்றத்திலிருந்து அனுமதி வழங்கி, அனைத்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர். உளுந்தூர்பேட்டையிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற வழக்கறிஞர்களும், பொதுமக்களும் விழுப்புரம் சென்று, சார்பு நீதிமன்றத்திலே வழக்காடுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, உளுந்தூர்பேட்டையிலே ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் வசதியாக இருக்கும். ஏற்கெனவே, விழுப்புரத்திலே 4 சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆகவே புதிதாக இல்லையென்றாலும்கூட இருக்கின்ற 4 சார்பு நீதிமன்றங்களில் ஒரு சார்பு நீதிமன்றத்தை உளுந்தூர்பேட்டைக்கு ஒதுக்கிக் கொடுத்தால், அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மிக விசுவாசமாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலே உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்பு நீதிமன்றம் கேட்டிருக்கின்றார்கள். அந்த மாவட்டத்தில்

இருக்கக்கூடிய Bar Council மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை அனுப்பப்பட்டு, உயர் நீதிமன்றத்தின்மூலம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றத்திலிருந்து வருகின்ற பரிந்துரைகள் அத்தனையும் ஏற்று, இன்றைக்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். சிறப்பான முறையிலே நீதிமன்றங்கள், நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பரிந்துரைகள் வருகின்றபட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், மதுரை மாவட்ட நீதிமன்றம் துவங்கப்பட்டு, அதற்கான கட்டடம் 1968–லே கட்டப்பட்டு, நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது இருக்கின்ற மக்கள் பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு, கூடுதல் நீதிமன்றங்கள் தேவை என்று அந்த மக்கள் கேட்டு வருகிறார்கள். எனவே, கூடுதல் நீதிமன்றமும், கூடுதல் வசதிகளும் பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தாங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், இன்றைக்கு சாதனையாக 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதி குடியிருப்புகள், அடிப்படை வசதிகள் என அனைத்தும் உருவாக்கியுள்ளார்கள். ஆகவே, அங்கே இருக்கக்கூடியவர்களின் கோரிக்கை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து அரசுக்கு பரிந்துரை

2016 பிப்ரவரி 20]

வருகின்றபட்சத்தில், கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், நெய்வேலியில் இருக்கின்ற குற்றவியல் நீதிமன்றம் என்.எல்.சி. இடத்தில் இருப்பதால், அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று என்.எல்.சி. நிருவாகம் சொல்லி வருகிறது. ஆகவே, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், வடக்குத்து கிராமத்தில் போதிய இடம் இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தினை வடக்குத்து கிராமத்தில் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நீதிமன்றத்திற்குரிய இடம் இருக்கின்றபட்சத்திலே, உயர் நீதிமன்றத்தின் குழு அங்கே சென்று பார்த்து, அந்த இடம் சரியான இடம் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குப் பரிந்துரை செய்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். ஆத்தூர் தொகுதியில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், ஆத்தூர் தொகுதியில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதிகள் மன்றமும் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட சாதாரண மடக்கு குச்சிகளுக்குப் பதிலாக ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படுகின்றன. மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு அவர்களின் இயலாத் தன்மையின் வகை, பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு உள்ளடக்கிய கல்வி வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிலேயே முதன் முறையாக மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கென மாநில ஆதார வள மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 108 நகராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு வசதியாக பொதுக் கட்டடங்களில் அவர்களுக்கென தனிக் கழிப்பிடங்கள் 8 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு 500 முதல் 3,500 ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. 1,500 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண்டுதோறும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட, பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 1,000 எண்ணிக்கை வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நகரும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான மறு வாழ்வு இல்லங்கள், அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் 11 மாவட்டங்களில் செயல்பட்டு வந்தன. மேலும் 21 மாவட்டங்களில் இந்த இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, மன வளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்கள் 21 மாவட்டங்களில் செயல்பட்டு வந்த நிலையில், மேலும் 11 மாவட்டங்களில் அதுபோன்ற

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 பிப்ரவரி 20

இல்லங்கள் துவங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதேபோன்று, பசுமை வீடுகள் திட்டத்திலும், தொகுப்பு வீடுகள் திட்டத்திலும் 3 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேசிய வேலை உறுதித் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் 50 சதவிகிதம் அல்லது 4 மணி நேரம் வேலைக்கே முழு ஊதியம் வழங்கப்படுகிறது. எனது தலைமையிலான அரசு செயல்படுத்தும் இத்தகைய திட்டங்களால்தான் மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பாதுகாப்பதில் சிறந்த மாநிலத்திற்கான விருதை 2013-2014 ஆம் ஆண்டில் பெற முடிந்தது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாற்றுத் திறனாளிகள் மேலும் சில சலுகைகள் கேட்டு அரசுக்குக் கோரிக்கைகள் வைத்துள்ளனர். இதன் அடிப்படையில் தற்போது சில சலுகைகளை அறிவிக்க விரும்புகிறேன்.

1. தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கு 1,000 ரூபாய் மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு குறைபாட்டின் அளவு 60 சதவிகிதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது 40 சதவிகிதம் என குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 40 சதவிகிதம் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகளும் ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை பெற இயலும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

2. மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கு மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர் அதாவது destitute என்ற நிலையில் இருக்க வேண்டுமென விதிமுறைகள் உள்ளன. எவ்வித வருவாய் இல்லாதவராகவும், 50,000 ரூபாய்க்கு அதிகமான சொத்துகள் இல்லாதவராகவும், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட மகன், மகனின் மகன் அதாவது பேரன், கணவர் அல்லது மனைவி இல்லாதவரே ஆதரவற்றோர் என வரையறுக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரை, ஆதரவற்றோராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, வேலைவாய்ப்பற்ற 40 சதவிகிதத்திற்கு மேல் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 பிப்ரவரி 20] [செல்வி ஜெ ஜெயலலிதா]

3. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகளில் 3 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்பது அவர்களின் கோரிக்கையாகும். இந்த இட ஒதுக்கீட்டை அரசு தவறாமல் கடைபிடித்து வருகிறது. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், இதுவரை 5,633 மாற்றுத் திறனாளிகள் அரசு மற்றும் அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகளுக்கான ஒதுக்கீடு முழுமையாகக் கடைபிடிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், தலைமைச் செயலாளர் தலைமையிலுள்ள உயர்மட்டக் குழு கண்காணித்து வருகிறது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திட்டங்களைக் கண்காணிக்கவும், அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கவும் சமூக நலத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒளியேற்றும் என நான் திடமாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பதினான்காவது பேரவை இறுதி கூட்டத் தொடர் நிறைவு பெறுவதையொட்டி முதலமைச்சரின் நன்றி மற்றும் பாராட்டு

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14-வது சட்டமன்றப் பேரவையின் இறுதி கூட்டத் தொடரின், இறுதி நாளான இன்று, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் வளம் சேர்க்கும் அறிவிப்புகளை வெளியிட்டதில் நான் பெரும் மனநிறைவடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த 14-வது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடன் முதலமைச்சர் என்ற முறையில் இணைந்து பணியாற்றியதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல சமயங்களில் விவாதங்கள் காரசாரமாக இருந்தாலும், காழ்ப்புணர்ச்சி இல்லாமல் செயல்பட்ட சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சட்டமன்றம் என்பது மக்களாட்சியின் மகத்துவமாகும். அனைத்து மக்களுக்கும் நன்மை புரிய நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு இது. இந்தச் சட்டமன்றத்தில் நடுநிலை தவறாது பணியாற்றிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம், காவல் துறை துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி, மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகள் அதிகரித்தல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முற்பகல் 11-40

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 24 ஆம் தேதி 67-வது அகவை முடிந்து, 68-வது அகவையில் அடியெடுத்து வைக்கிற போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் (குறுக்கீடு) வரும் 24 ஆம் தேதி 68-வது அகவை முடிந்து, 69-வது அகவையிலே அடியெடுத்து வைக்கிற போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த உலகத் தமிழர்களுடைய ஒளிவிளக்காக, 8 கோடி தமிழ் மக்களுடைய கலங்கரை விளக்கமாக, 2 கோடி நலிந்த மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக (மேசையைத் தட்டும் ஒலி) விளங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு மாபெரும் மக்கள் இயக்கத் தலைவி. அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு சிறந்தும், மிளிர்ந்தும், மகிழ்வுறும் நலத்தோடும், மட்டற்ற வளத்தோடும், மங்காத புகழோடும், பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்திட (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுமென எனது வாழ்த்துக்களை இந்தச் சந்தர்ப்பத்திலே முதலில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

2016 பிப்ரவரி 20] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாற்றுத் திறனாளிகளின் நலனைக் காக்கின்ற வகையிலும், வேளாண்மை இயக்கத்தின் மாண்பினைப் போற்றுகின்ற விதத்திலும், இரண்டு அறிவிப்புகளின்மூலம் மாபெரும் நலத் திட்டங்களை இந்தச் சட்டப் பேரவையிலே அறிவித்திருக்கிறார்கள். கூடும் நட்பு, கூடா நட்பாகலாம்; கூடா நட்பு கூடும் நட்பாகலாம்; பின்பு அது வாடும் நட்பாகலாம்; ஒருவரை ஒருவர் தேடும் நட்பாகலாம்; ஓடும் நட்பாகலாம். ஆனால், நாடும் நம்பிக்கையை எந்தச் சக்தி பெற்றிருந்தாலும், வான் பொய்த்தாலும், வையகம் பொய்த்தாலும், (மேசையைத் தட்டும் ஒலி) கார் பொய்த்தாலும், ஏர் பொய்த்தாலும், போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நாடும் நம்பிக்கை ஒருபோதும் பொய்க்காது; (மேசையைத் தட்டும் ஒலி) ஒருபோதும் பொய்க்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1970-களிலே ஏற்பட்ட அந்த வேளாண்மை இயக்கம் தமிழகத்தின் ஒருங்கிணைந்த விவசாயிகளுடைய சக்தியாக மலர்ந்தும், வளர்ந்தும், தமிழகத்திலே ஒரு தாக்கத்தை உருவாக்கியது. 1970-களிலே நிகழ்ந்த அந்த விவசாயப் போராட்டங்களை இன்றைக்கு நெஞ்சத்திலே தேக்கி வைத்திருந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் போராட்டங்களில் உயிரிழந்தவர்களின் 40 குடும்பங்களுக்கு 2 கோடி ரூபாய் அளவிலே நிதியுதவி தந்திருக்கிறார்கள். அதோடு, விவசாயிகளுடைய பெருந்தலைவராக இருந்த திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபத்தை கோவை கொங்கு மண்டலத்திலே, அவரது நினைவிடத்தில் அமைப்பதற்கு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அதனை ஒரு விவசாயியாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே மாற்றுத் திறனாளிகள் போராடினால், அந்த மாற்றுத் திறனாளிகளின் மனதை மாற்றுவதற்கு இது பயன்படாதா என்று அவர்களுடைய போராட்டத்தை வைத்து அரசியல் செய்பவர்கள், இந்த அனுதாபத்தின்மூலம் மக்கள் மனதில் ஏதாவது ஒரு மாற்றத்தை உருவாக்கிவிட முடியாதா என்று எண்ணி, அதற்காகக் காயை நகர்த்துபவர்கள் மத்தியிலே, மாற்றுத் திறனாளிகளுக்கு உண்மையாகவே ஏற்றம் தருகிற அந்த மாற்றத்தை உருவாக்குகிற வகையிலே, போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு விதி 110-ன்கீழ் பல நலத் திட்டங்களை அடுக்கடுக்காகத் தந்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே குறைந்தபட்சம் 60 வயது இருக்க வேண்டும் என்றிருந்ததை குறைத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஏற்கெனவே அவர்களுக்கு 250 ரூபாய் என்றிருந்ததை, 450 ரூபாயாக உயர்த்தி, இன்றைக்கு அந்த 450 ரூபாயும் 650 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்றால், அது இரண்டு மடங்கிற்கு மேலே மும்மடங்காக உயர்ந்திருக்கிறது என்றால், அந்தச் சாதனைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்த மாமன்றத்திலே படிப்படியாகச் செய்து காட்டியிருக்கிறார்கள். அம்மா! உங்கள் சாதனையை முறியடிப்பதற்கு உலகத்திலே வேறு எவரும் பிறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அது உங்களாலேயேதான் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் சாதனையை வென்றெடுப்பதற்கு; அந்தச் சாதனையை வீழ்த்துவதற்கு சாதனைச் செம்மலாய், சாதனைச் சிகரமாய், (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைச் சரித்திரமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற உங்களால்தான் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகள் கல்வி கற்க வேண்டும்; தன்னம்பிக்கை பெற வேண்டும் என்பதற்காக, அந்த அடிப்படைச் சிந்தனையை அவர்கள் வளர்த்தெடுப்பதற்காக, அவர்கள் சிறந்த மதிப்பெண் பெற்றால், 1 கோடி ரூபாய் அளவிலே அவர்களுக்கு ஊக்கத் தொகை, பரிசுத் தொகை வழங்கும் அந்தத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியவர் நீங்கள்தான்.

பார்வையற்றவர்களுக்கு விழியாக, பேச முடியாதவர்களுக்கு மொழியாக, (மேசையைத் தட்டும் ஒலி) நடக்க முடியாதவர்களுக்கு வழியாக (மேசையைத் தட்டும் ஒலி) மொழியாக, விழியாக, வழியாக, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் வழியாக விளங்கிக் கொண்டிருக்கிற நீங்கள், இந்த அவையிலே--ஏற்கெனவே தங்கள் வயதைக் குறிப்பிடும்போது நான் தடுமாறியதைப்போல, 184 அறிவிப்புகளா? 185 அறிவிப்புகளா என்று தெரியவில்லை--இந்த 5 ஆண்டுக் காலத்திலே மட்டும், விதி 110-ன்கீழ் அத்தனை அறிவிப்புகளை வெளியிட்டு, இந்த மாமன்றத்தின்மூலம் பல திட்டங்களை நீங்கள் தந்திருக்கின்றீர்கள். இதற்கு முன்பு முந்தைய ஆட்சிக் காலங்களில் இரண்டு முறை நீங்கள் முதலமைச்சராக இருந்தபோதும், அப்போதும் 70-க்கும் மேற்பட்ட அறிவிப்புகளை விதி 110-ன்கீழ் வழங்கியிருக்கிறீர்கள்.

2016 *பிப்ரவரி* 20] [*முனைவர் செ.கு. தமிழரசன்*]

முற்பகல் 11-45

ஆக, விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட 200-க்கும் மேற்பட்ட அறிவிப்புகளின்மூலம் இந்த மாமன்றத்திலே திட்டங்கள் கிடைத்திருக்கின்றன. இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் விதி 110-ன்கீழ் இத்தனைத் திட்டங்களை அறிவித்த அந்த சாதனையை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் தந்திருப்பவர் நீங்கள். நீங்களே சொன்னதைப்போலவே, மக்களாட்சியின் மணிமகுடம், மக்கள் அதிகாரமாக இருக்கின்ற மக்களாட்சியின் மணிமகுடம் உங்களால் சிறப்புப் பெற்றிருக்கிறது. வெளியிலிருந்து விமர்சிப்பவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் விதி 110-ன்கீழ் அறிவிப்புச் செய்ய வேண்டுமா என்று கேட்கலாம். ஆம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே அதற்கு மாண்பு சேர்க்கின்றபோது, அதற்கு ஒரு பெருமை சேர்க்கின்றபோது (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டங்கள் எந்த அளவிற்குத் தமிழகத்திலே வேகமாக மலரும், வேகமாக விடியலை ஏற்படுத்தும், வேகமாகச் செயல்படுத்த முடியும் என்பதை உணர முடியும். மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஓர் உத்தரவு போடுவதற்கும், ஒரு சாதாரண வட்டாட்சியர் ஓர் உத்தரவு போடுவதற்கும் வித்தியாசம் இருக்காதா? ஆக, அந்த உணர்வை இந்த மாமன்றத்திலே வளர்த்தெடுத்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நான் இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புவது, 200 அறிவிப்புகளின் சாதனை மட்டுமல்ல, ஓராயிரம் அறிவிப்புகளை விதி 110-ன்கீழ் இந்த மாமன்றத்திலே அறிவித்து, சாதனை உருவாக்குகின்ற பெருமையும் வருங்காலத்தில் உருவாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சாதனையை உருவாக்குகின்ற வகையில் தொடர்ந்து நல்லாட்சியைத் தருகின்ற நீங்கள், இந்த மாமன்றத்தில் மிகப் பெரிய பாராளுமன்ற ஜனநாயகவாதி என்பதை மீண்டும், மீண்டும் இன்றைக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள். மாறுபட்டு, வேறுபட்டு, எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும், அனைவருக்கும் கருத்து மாறுபாடு இருந்தாலும்கூட, இந்தக் கடைசி கூட்டத் தொடரில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்கின்றபோது நீங்கள் இந்தியாவின் தலைசிறந்த ஜனநாயகவாதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும், மீண்டும் இந்த அவையிலே தெளிவுபடுத்தியிருக்கின்றீர்கள்.

36 துறைகளிலும், எந்தத் துறையானாலும், யார் என்ன கேள்வி எழுப்பினாலும், இந்த மாமன்றத்தில் மூதறிஞர் இராஜாஜியைப்போல், பேரறிஞர் அண்ணாவைப்போல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐப்போல், (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்தலைவர் காமராசரைப்போல் வழிவந்த மாண்புகளில், அவர்களையெல்லாம் ஒருமித்த ஒரு சக்தியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 36 துறைகளிலும் (மேசையைத் தட்டும் ஒலி) கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சுட்டு விரலிலே, அவர்கள் தெளிவுபெறும் வகையில், வாதங்களில் பங்கேற்கும் மாண்பை உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினராக இதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பாராட்டி, வாழ்த்தி பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ வேண்டும். தமிழகத்திற்கு மட்டுமல்ல, தமிழகத்தின் இந்த ஆட்சி, ஆளுமை இந்தியத் துணைக் கண்டத்திலே உங்கள் ஆளுமை ஓங்கிட (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற ஆளுமை மேலும், மேலும் ஓங்க வேண்டும் என வாழ்த்தி, நன்றியோடு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைகளுக்கெல்லாம் வலிமை சேர்க்கின்ற மூல மரபு வழி தொழிலாக இருக்கின்ற வேளாண்மைத் துறையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து பல்வேறு துறைகளிலும் எண்ணற்ற நலத் திட்டங்களைத் தந்து, எண்ணற்ற உதவிகளையும் அந்தத் துறைகளுக்கெல்லாம் தந்து, துறைதோறும் மறுமலர்ச்சியை உருவாக்கிய சாதனைச் சிற்பி, வேளாண்மைத் துறையின் அளப்பெறும் வரலாற்றுச் சாதனையாக, வேளாண் குடிமக்களை உயிருக்கு உயிராக நேசிக்கின்ற உத்தமத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்குச் சான்றாக தமிழ்நாட்டின் நெடிய வரலாற்றில் வேளாண்மைத் துறையைப் பாதுகாக்க வேண்டும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டும், உணவு தானியத்தைப் பெருக்க வேண்டும், மக்கள் எல்லா வகையான வளங்களையும் பெற்று தாய்த் தமிழ்நாட்டில் இன்புற்று, மகிழ்வோடு வாழ வேண்டும் என்பதற்காகக் காவேரி ஆற்று நீர் உரிமையை மீட்டெடுத்து*

2016 பிப்ரவரி 20] [திரு. உ. தனியரசு]

வரலாற்றுச் சாதனையைச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையில் 136 அடியாக இருந்த நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்துகின்ற உரிமையைப் பெற்று, அந்த உரிமையைப் பெற்ற ஆண்டே இயற்கையும் மழை பொழிந்து, 142 அடிக்கும் மேலாக நீர்மட்டத்தை உயரச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக் அவர்களுக்கும் சிறப்புச் சேர்த்த அப்பழுக்கற்ற தியாகத்தின் மறுவுருவாய், வேளாண் துறையைச் சார்ந்த வேளாண்குடி மக்கள் பல நூறு ஆண்டுகள் பாதுகாப்பாக, வலிமையாக இந்தத் தமிழ் தேசத்தில் வாழ வேண்டும் என்பதற்காகத் திட்டங்களைத் தந்தவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-50

அதுபோன்று, நவீன கருவிகள்-சிறு, குறு, நடுத்தர விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனத்திற்காக 100 சதவிகிதம் மானியத்தைத் தந்ததால் இப்பொழுது விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது. உணவு தானிய உற்பத்தியிலும் நம்முடைய மாநிலம் முதன்மை பெற்றிருக்கிறது. பயறு வகையிலே நம்முடைய மாநிலம் முதன்மைப் பெற்றிருக்கிறது. சிறு தானிய உற்பத்தியிலே முன்னணியாக உயர்வான அளவைப் பெற்று விருதுகளைப் பெற்றிருப்பது தமிழ்நாட்டினுடைய வேளாண் துறைக்கு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த திட்டங்களுடைய பரிசுதான், நாட்டினுடைய விருது கிடைத்திருப்பது. அப்படி திட்டங்களையெல்லாம் தந்து வேளாண் குடிமக்களை மிகவும் நேசித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்னும் கூடுதல் சிறப்பு சேர்ப்பதற்கு, அவர் அரசியல் வரலாற்றையும் தொடர்புபடுத்தி இன்று இந்தச் சட்டமன்றப் பேரவையிலே விதி 110-ன்கீழே அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டினுடைய விவசாயிகள் சிதறிக் கிடந்தார்கள். ஆடு, மாடு மேய்த்து காடு, கழனியை பயிர் செய்து வாழ்ந்த மக்கள், ஒருங்கிணைந்து சங்கம் வைத்து, உரிமைகளுக்காகப் போராடத் தெரியாத காலகட்டத்திலே அவர்கள் போராட எத்தனித்த

வரலாற்றை 1966-1967-லே அவர்கள் சங்கத்தை துவக்கிய காலத்திலிருந்து வரலாற்றைச் சுட்டிக்காட்டி, அவர்கள் உரிமைகளுக்காகப் போராடி, உரிமைகளை வென்று எடுத்து, அந்த உரிமைக் களத்தில் மாண்ட உத்தமத் தியாகிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் கோரிக்கை வைக்காமலே இன்று 47 குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாயை அள்ளித் தந்து அந்த விவசாயக் குடும்பங்களுக்கு, தியாகிகளின் குடும்பங்களுக்கு மரியாதை செய்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தினுடைய தலைவர் வைக்கம் தந்த திரு. நாராயணசாமி நாயுடு ஐயா அவர்களுக்கு அவருடைய கிராமத்திலேயே, நினைவிடத்திலேயே மணி மண்டபம் தருகின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திரு. பென்னி குயிக் அவர்களுக்கும் மணி மண்டபம் அமைத்துத் தந்தார்கள். கல்லணை கட்டிய, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்கு மணி மண்டபம் கட்டி அழகு பார்த்த முதலமைச்சர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று திரு. நாராயணசாமி நாயுடு ஐயா அவர்களுக்கும் மணி மண்டபத்தை தந்திருக்கிறார்கள்.

உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைத் தந்து, வறட்சிக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிவாரணம் தந்து, இந்திய வரலாற்றில் வறட்சிக்கு நிவாரணம் தந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைத்து, துன்பத்தை துடைத்து, விவசாயிகள் தன்மானத்தோடு வாழ்வதற்கு எல்லாத் திட்டங்களையும் தந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் விவசாயிகள் எந்த சூழ்நிலையிலும் சோர்வுறாமல், வேதனையில்லாமல், துன்பமில்லாமல், துயரமில்லாமல், கண்ணீர் சிந்தாமல் பாதுகாக்கப்படுகிறார்கள். உயிருக்கு உயிராக விவசாயிகளை நேசிக்கிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் அரசு என்பதற்கான சான்றுதான் இந்த அறிவிப்பு.

இன்று மாற்றுத் திறனாளிகள் அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துப் போராடுவதற்கு முன்பாகவே சலுகைகளைத் தந்தவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். பல கூட்டங்களிலே, மாவட்டக் கூட்டங்களிலே மாண்புமிகு புரட்சித்

2016 பிப்ரவரி 20] [திரு. உ. தனியரசு]

தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்களை, பல நிகழ்ச்சிகளிலே பங்கு எடுத்து மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான சான்றிதழ்களைத் தந்துள்ளேன். 500 ரூபாய் உதவித் தொகையை ரூ.1000/-, ரூ.1500/-ஆக உயர்த்தியது, பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தைத் தந்தது என மாற்றுத் திறனாளிகளுடைய சமூகத்திலே ஒரு மலர்ச்சியை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

வருகின்ற 24 ஆம் தேதி பிறந்த நாள் விழா காணும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனு நீதி சோழனைப்போல் நீதி நெறி தவறாமல், கருணையோடு, மனித நேயத்தோடு தமிழ்ச் சமூகத்தை ஆட்சி செய்யும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016-லும் மகத்தான வெற்றியைப் பெற்று, மீண்டும் முதல்வராக வருவார்கள், வருவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற பிப்ரவரி 24 ஆம் தேதி பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லாச் செல்வங்களும் பெற்று, இறைவனின் ஆசியோடு, நீண்ட ஆயுளோடு இருந்து, இந்தத் தமிழ் மக்களைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல நேரத்திலே அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். குறிப்பாக விவசாயிகளை ஒற்றுமைப்படுத்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல. ஏனென்றால் அந்த விவசாயிகளை ஒற்றுமைப்படுத்தி அன்றையதினம் தலைவராக வந்து, அந்த விவசாயிகளுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, தருகின்ற தலைவராக, அனைத்து விவசாயிகளும் ஏற்றுக்கொண்ட தலைவராக இருந்த

மரியாதைக்குரிய திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

உண்மையிலேயே, இந்திய நாடு ஒரு விவசாய நாடு, விவசாயத்தை மதிக்கின்ற நாடாகும். விவசாயத்தை நம்பி வாழுகின்ற நாட்டில், விவசாய சங்கத் தலைவராக இருந்த மரியாதைக்குரிய திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு, அவருடைய நினைவாக மணி மண்டபம் கட்டித் தரப்படும் என்று அறிவித்து, ஒட்டுமொத்த விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, விவசாயிகளை மதிக்கின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவருக்கு மணி மண்டபத்தை கட்டித் தருவதாக இன்று விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து பாதுகாவலனாக இருந்து வருகின்றது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இன்றும்கூட மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகைகளை அறிவித்து, அந்தச் சலுகைகள் வாயிலாக அவர்கள் பயன் பெற வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்கள் மன நிறைவோடு இந்த அறிவிப்புகளை இன்றையதினம் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவர்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக இந்த இறுதி நாளான இன்றுகூட, விதி 110-ன்கீழ் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கின்றார்கள். உண்மையிலேயே விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட இந்த இரண்டு அறிவிப்புகளும் பாராட்டக்கூடியவை.

இன்றையதினம் 14-வது சட்டமன்றத்தின் நிறைவு நாளாகும். 234 சட்டமன்ற உறுப்பினர்களோடு தொடர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு நல்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தேசியத் தலைவன் தெய்வீகத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத்

2016 பிப்ரவரி 20] [திரு. பி.வி. கதிரவன்]

தெரிவித்துக்கொள்கிறேன். என்னோடு பணியாற்றிய 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையில் ஒரு பெரிய புரட்சியைச் செய்திருக்கின்ற தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றையதினம் விவசாய சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு, கோவை மாவட்டத்தில், அவர் நினைவிடத்தில் ஒரு மணி மண்டபம் அமைக்கப்படும் என்கின்ற ஒரு நல்ல செய்தியை விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளின் போராட்டத்தில் 47 நபர்கள் உயிர் இழந்தார்கள். அதில், இறந்த 40 விவசாயிகளின் குடும்பத்தைச் சார்ந்த வாரிசுதாரர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் இரண்டு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி அறிவித்திருக்கின்றார்கள்.

அதேபோல், அரசு ஊழியர்களின் பிரச்சினைக் குறித்து மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல முறையில், அவர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் பால்வார்க்கின்ற வகையில் சில அறிவிப்புகளை நேற்று விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள்.

இன்றையதினம் அறிவித்த அறிவிப்புகள் மூலமாக மாற்றுத் திறனாளிகளின் குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் மிகவும் சந்தோஷம் அடைவார்கள். கிட்டத்தட்ட அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள காது கேட்கின்ற கருவியை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இன்றையதினம் பத்தாவது மற்றும் பன்னிரெண்டாவது படிக்கின்ற மாணவர்களின் உணவு ஊட்டுச் செலவினத்தை 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தி வழங்கி, மாற்றுத் திறனாளிகளின் குடும்பத்தை வளமாக்கியிருக்கின்றார்கள்.

அம்மா, வெளியில் சிலர் செடியில் சூரிய ஒளி பட வேண்டும் என்கிறார்கள். செடியில் நேரடியாக ஒளி பட்டால், செடி கருகிவிடும், அம்மா. இலையுடன்கூடிய செடியை, எந்தச் சூரியனும்,

எந்த ஒளியும், எதுவும் செய்ய முடியாது, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பட்டுபோய் இருக்கும் செடிக்கும் துளிர்க்கவே இலைதான் தேவை, அம்மா. இலை இல்லாமல் நாட்டில் மழைகூட இல்லை, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றும், இன்றும், நாளையும் நீங்கள்தான் முதல்வர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) சூரிய ஒளியால் வரும் எந்த எதிர்ப்பையும், இலை வடிவாய் எதிர்க்கத் தயாராக இருக்கும் அம்மா, ஆளப் பிறந்த அம்மா, இப்போது நம்மை ஆண்டு கொண்டிருக்கும் அம்மா,

இதைப்போல் வரும் 15-வது சட்டமன்றப் பேரவையையும் தலைமையேற்று வழி நடத்த இருக்கும் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

*"தெய்வம் இருப்பது எங்கே, அது இங்கே! வேறு எங்கே!
(மேசையைத் தட்டும் ஒலி)
தெளிந்த நினைவும், சிறந்த நெஞ்சும் கொண்டவர் எங்கள் அம்மா;
பாலூட்டும் அன்பிலே அன்னை நீங்கள்;
பழகும் உறவிலே பிள்ளையும் நீங்கள்;
கருணை மனதிலே கங்கையும் நீங்கள்;
கல்லாருக்கும், கற்றவர்களுக்கும் தெய்வமும் நீங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)
இணங்காதோர் மனம்கூட உங்களைக் கண்டால் இணங்கும்;
நீங்கள் எதிர் வந்தால் எதிர்காலம் துலங்கும்;
வணங்காதோர் சிரம் உங்களைக் கண்டால் வணங்கும்;
வணங்காதோர் சிரம் உங்களைக் கண்டால் வணங்கும்;
உங்களை வலம் வந்தால் நலங்கள் எல்லாம் விளங்கும்"*

என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

***திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 24 இலட்சம் மாற்றுத் திறனாளிகள் சார்பாக பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கும் இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத்*

2016 பிப்ரவரி 20] [திரு. க. பாண்டியராஜன்]

தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இன்னும் பசுமையாய் ஞாபகம் இருக்கிறது. 2011 பிப்ரவரி மாதம் 5,000 மாற்றுத் திறனாளிகள்; அவர்களுடன் நானும் சேர்ந்து நடந்தேன். அந்தவகையிலே 5,000 மாற்றுத் திறனாளிகள் கோட்டையை நோக்கிப் பேரணியாகப் போனோம். அந்த நேரத்திலே கேட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், அதற்குப் பிறகு எதுவுமே நிறைவு பெறாமல் இருந்தது. அந்தக் கோரிக்கைகளில் முதன்மையான கோரிக்கை. எனக்கு இன்னும் பசுமையாய் ஞாபகம் இருக்கிறது. அந்த 5 வருடங்களில் மொத்த மாற்றுத் திறனாளிகளுக்கு PwD Act-ன்படி அதாவது, Persons with Disabilities Act-ன்படி 3 சதவிகிதம் வேலைவாய்ப்பு கொடுத்திருக்க வேண்டியது. ஆனால், அந்த அரசாங்கத்தில் அவர்கள் வேலைவாய்ப்பு கொடுத்தது 868 பேர்களுக்கு. மொத்தம் அந்த 5 வருடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளிலே கொடுத்த வேலைவாய்ப்புகள் 868. நாங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தோம், 5 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தேன் என்று சொன்னீர்களே, அப்படியென்றால் 15,000 இருந்திருக்க வேண்டுமே? மொத்தமே 6 சதவிகிதம்தான் கொடுத்திருந்தார்கள்.

இன்றைக்கு இந்த அரசாங்கம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம்தான் துணிச்சலாக 3 இலட்சத்து 3 ஆயிரத்து 111 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மொத்த அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறது. அதிலே மாற்றுத் திறனாளிகள் 5,633 பேர், இது மிகப் பெரிய சாதனை என்று சொல்வேன். எந்த State Government-ம் இந்த data-வைக் கொடுப்பதில்லை. பெரும்பாலும், RTI-மூலம் சண்டை போட்டு வாங்க வேண்டியிருக்கும். ஆனால், சட்டமன்றத்தில் இதை present பண்ணியிருப்பது பெரிய விஷயமென்று நினைக்கிறேன். கொடுக்க வேண்டிய 9,093 வேலைவாய்ப்புகளிலே 5,633 மாற்றுத் திறனாளிகளுக்குக் கொடுத்தாகிவிட்டது. 100-க்கு 63% செய்து முடித்தாகிவிட்டது. மீதியிருப்பதை Chief Secretary மூலம் review செய்து அதைச் செய்து கொடுக்கிறேன் என்று commitment கொடுத்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இதயபூர்வமான நன்றி. அதோடு, அறிவித்ததனுடைய பொருளாதாரத் தாக்கத்தை நினைத்தால் பிரமிப்பாக இருக்கிறது. இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள் ஒரு இலட்சம் பேர் வரை மாதாந்திர உதவித் தொகை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இது குறைந்தது 4

இலட்சம் எனக் கூடும். 40 சதவிகிதம் என குறைபாட்டின் அளவை நாம் கொண்டுவரும்போது, அதுவும் destitute-நீங்கள் ஆதரவற்றோராக இருக்க வேண்டுமென்கிற அவசியம் கிடையாது என்று சொல்லும்போது, இந்த ஓர் அறிவிப்பினுடைய தாக்கமே ஒரு வருடத்திற்கு 500 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்பதுதான் என்னுடைய சிற்றறிவிற்கு எட்டிய விஷயம். அந்த அளவுக்கு 500 கோடி ரூபாயை மாற்றுத் திறனாளிகளுக்கு எந்த State Government-ம் கொடுத்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு பெரிய விஷயத்தை அறிவித்த உங்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பிறந்த நாளில், 24 இலட்சம் மாற்றுத் திறனாளிகள் தவழ்ந்தும், உருண்டும், ஓடிக் கொண்டிருக்கிற, அந்த மாற்றுத் திறனாளிகளுடைய அடிமனத்திலிருந்து, ஆன்மாவிலிருந்து கொடுக்கிற பிறந்த நாள் நல்வாழ்த்தாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பு நல்வாழ்த்துக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னை ஒரு விவசாயி என்று கூறிக் கொண்டு பெருமிதமடைந்த ஒப்பற்றத் தலைவி ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டின் முதுகெலும்பு விவசாயிகள் என்று சொல்வார்கள். இரண்டாவது பசுமைப் புரட்சியை அறிவித்து, கடந்த ஆட்சியில் 5 வருடம் ஒதுக்கிய நிதி 7,437 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இந்த 5 வருடத்தில் 23 ஆயிரத்து 655 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து ஜூன் 12 ஆம் தேதிக்கு முன்னால் தண்ணீர் திறந்து சாதனை படைத்த அற்புதத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக கடந்த ஆட்சியில் 80 இலட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி, 2011-2012-ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒரு கோடியே ஒரு இலட்சம் டன்னாக உயர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) "கிரிஷி கர்மான்" விருதைப் பெற்றது.

2016 பிப்ரவரி 20] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

பிற்பகல் 12-05

தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கோரிக்கையை ஏற்று விவசாய சங்கத் தலைவர் மறைந்த பெரியவர் திரு. நாரயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 1970 முதல் 1980 வரை நடைபெற்ற போராட்டங்களில் இறந்த விவசாயிகளின், 40 குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் நிதி கொடுத்திருக்கிறார்கள். இப்படி விவசாயிகளுடைய விடிவெள்ளியாக, பாதுகாவலராக, கேட்காமலே கொடுக்கக்கூடிய ஒப்பற்ற தாயாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளில் அவருடைய பொற்பாதம் தொட்டு எனது வணக்கத்தைத் தெரிவித்து, விவசாயத் தலைவர் திரு. நாரயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவதற்கும், போராட்டத்தில் இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் 2 கோடி ரூபாய் நிதி கொடுத்ததற்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் விதி 110 என்பது அறிவிப்புச் சடங்காக இருந்ததை மாற்றி 110-ஐ சரித்திரமாக்கிய சங்கத் தமிழ் எங்கள் அம்மா. இதுவரை வெறும் 110, அம்மா நீங்கள் உச்சரிக்கும்போது அது தமிழக மக்களுக்குப் பூங்கொத்து; தமிழக மக்களுக்கு நீங்கள் எழுதிவைத்த சொத்து. தமிழகத்தின் இருள் போக்க ஒளிரும் ஒளி முத்து; தமிழகம் தழைக்க வேர்விட்ட வித்து. மாற்றுத் திறனாளிகளுக்கான சட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தமிழகத்தை பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாகத் திகழ வைத்திருக்கிறது. மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும் வகையில், மாற்றுத் திறனாளிகளை மனித நேயத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் பார்க்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு ஒதுக்கீடு செய்த தொகை வெறும் 415 கோடியே 15 இலட்சம்*

ரூபாய் மட்டும்தான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த 5 ஆண்டுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ள தொகை 1,301 கோடி ரூபாய். அதாவது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட மாண்புமிகு அம்மா அவர்களால் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 886 கோடி என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். இந்தப் பேரவையில் மாற்றுத் திறனாளிகளுக்கு முத்தான அறிவிப்புகளை வெளியிட்டு, மாற்றுத் திறனாளிகளுக்கும் ஏற்றம் தந்து மறுவாழ்வு அளித்திட்ட மாசற்ற தலைவி, எங்கள் மகாசக்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் பாதகமலங்களில் துறையின் சார்பாக கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பெண் இனத்தின் காவலராக, பெண்களைப் பாதுகாத்து, முன்னுரிமை தந்து, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் தர வேண்டுமென்ற எங்கள் தங்கம், தமிழக மக்களுக்காக அயராது உழைக்கின்றார். முட்களைப் பூக்களாக்கி, பாலையில் பயணித்து, தடைகளைப் படிகளாக்கி, சரித்திரம் படைத்த வாழும் வரலாறு மாண்புமிகு அம்மா அவர்கள்.

அறிவுத் திறனுக்கு எங்கள் அம்மா, ஆளுமைத் திறனுக்கு எங்கள் அம்மா, இறைப் பண்பிற்கு எங்கள் அம்மா, ஈகை உள்ளம் கொண்ட எங்கள் அம்மா, உன்னத ஆட்சிப் பண்பு கொண்ட எங்கள் அம்மா, ஊரும் நாடும் போற்றும் எங்கள் அம்மா, எல்லாமே மக்களுக்குத்தான் என்றுரைத்த அம்மா, ஏற்றம் பெற்ற தமிழகம் தந்த அம்மா, ஐயமில்லாத வாழ்க்கையை மக்களுக்குத் தந்த அம்மா, ஒருவரும் இல்லை, இனி எப்போதும் தங்களைப் போல ஒருவருமே இல்லை என்ற நிலையை உருவாக்கிய அம்மா, ஓட்டம், ஓட்டம், எதிரிகளுக்கெல்லாம் ஓட்டம் என்ற நிலையை உருவாக்கிய அம்மா, ஔவை பிராட்டியையும் நினைவுகூர்ந்து

2016 பிப்ரவரி 20] [திருமதி எஸ். கோகுல இந்திரா]

அவர் பெயரிலே விருது தந்த அம்மா, அஃதல்லவோ இப்பெண்மணி, இரும்புப் பெண்மணி என்று அனைவரின் பாராட்டைப் பெற்ற எங்கள் தங்கம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அகவை 68-ஐக் கடக்கும் எங்கள் அம்மா, தாங்கள் நீடூழி பல்லாண்டு வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வணங்குகின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 24 ஆம் தேதி 69-வது பிறந்த நாள் விழா காணும் பொற்கால முதலமைச்சர், பொற்காலத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் பணிந்து வணங்குகிறேன். உலகமெங்கும் வாழுகின்ற 10 கோடி தமிழர்களின் தலைவியாக வாழுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த மறைந்த திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-லே மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்திலேதான் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடர் ஜீவரத்தினம் ஆகியோருக்கு சென்னையிலே மணி மண்டபம், ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோருக்கு திண்டுக்கல்லிலே மணி மண்டபம், சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு சிதம்பரத்திலே மணி மண்டபம், தமிழ்நாடு என்று பெயர் வைக்க உண்ணாவிரதம் இருந்து, உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கம் நாடார் அவர்களுக்கு விருதுநகரிலே மணி மண்டபம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலே சென்னையிலே மணி மண்டபம் என இப்படி மணி மண்டபங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டு, மறைந்த தலைவர்களை மதிக்கின்ற தலைவியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இப்படி தமிழுக்காகவும், தமிழ்நாட்டுக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்த தலைவர்களுக்கு மணி மண்டபம், நினைவுச் சின்னம், நினைவுத் தூண்கள் மற்றும் சிலைகள் அமைத்தும், மறைந்த தலைவர்களை மதித்து அவர்களுக்கு விழா எடுக்கும் எங்கள்

[திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி] [2016 பிப்ரவரி 20

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயிகளின் விடிவெள்ளியாக விளங்கி, மறைந்த தலைவர் அய்யா நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க அறிவிப்பு வெளியிட்டதற்கு விவசாயிகளின் சார்பாகவும், என் சார்பாகவும், எனது துறையின் சார்பாகவும், எனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயிற் சிறந்த கோயிலும் இல்லை என்பது பண்டைத் தமிழினத்தின் முதுமொழி. தாய்ச் சொல்லைத் தட்டாதே என்பது நமது தலைவர் வகுத்துத் தந்த கட்டளை. தாயில்லாமல் நாம் இல்லை என்பது ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சு. (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் வாழும் தமிழினத்தின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் அம்மா.

சுனாமி, தானே புயல், வறட்சி, சென்னை மாநகரத்தில் ஏற்பட்ட வெள்ளம் ஆகியவை தமிழக மக்களுக்கு எத்தகைய துன்பத்தை ஏற்படுத்தினாலும், அத்தகைய துன்பங்களையும், கையாளுகின்ற விதம், துன்பங்களை, துயரங்களைக் களைகின்ற விதம், நிவாரணம் வழங்குகின்ற விதம், தானாக ஓடிவந்து தமிழக மக்களைக் காக்கின்ற விதம், ஒப்பற்றத் தலைவர் அம்மா! அம்மா! அம்மா என்பது உலகத்தின் ஒரே பேச்சு! (மேசையைத் தட்டும் ஒலி)

"என் பெற்றோர் வைத்த பெயரையே நான் மறக்கும் வண்ணம் "அம்மா" என்று நீங்கள் என்னை அழைக்கும் ஒரு சொல்லுக்கே என் ஆயுளையும் அர்ப்பணித்து உழைக்கின்றேன்" என்னும், தொண்டுக்கே பிறந்த தூய தவம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு விதி எண் 110-ன்கீழ் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பாக விவசாய சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அய்யா அவர்களுக்கு மணி மண்டபம் அறிவித்து, கொங்கு மண்ணின் நெடுநாளையக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்துள்ளார்கள்.

2016 பிப்ரவரி 20] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

மேலும், அன்றைக்கு 9 பைசா என்றிருந்த மின்சாரக் கட்டணத்தை 11 பைசாவாக உயர்த்தியதைக் கண்டித்து போராடிய விவசாயிகளைக் கரும்புக் கரம் நீளாது, இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று அன்றைக்கு கருணாநிதி அவர்கள் 47 விவசாயிகளை சுட்டுக் கொன்று, காக்கை, குருவிகளைப் போல நசுக்கிய நேரத்திலே, இத்தனை ஆண்டுக் காலம் உருண்டோடியதற்குப் பிறகு, அந்தக் குடும்பங்களைத் தேடிக் கண்டறிந்து, 40 குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்த கொடை வள்ளல், அற்புதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி! நன்றி! நன்றி! என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு தாயாக நானிருந்து உங்களைக் காப்பேன் என உரைக்கும் வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

இதேபோன்று, அத்திக்கடவு-அவினாசித் திட்டத்திற்கு அரசாணை வழங்கி, அற்புதமாய் கொங்கு மண்டல மக்களுக்குப் பரிசளித்த அன்புத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஆயிரம் கோடி நன்றி மலர்களைக் கொங்கு மண்டல மக்களின் சார்பாகக் காணிக்கையாக்குகின்றேன். இதுபோன்ற நல்ல பல அறிவிப்புகளை இங்கே தந்துள்ளார்கள். நல்லவை யாவும் மாண்புமிகு அம்மா அவர்களால்தான் எந்நாளும் முடியுமென்று நற்றமிழர் பூமி நமக்கு நல்லாசி எந்நாளும் கூறும். மாண்புமிகு அம்மா அவர்களே, என்னுடைய நன்றியினை உங்கள் மலர்ப் பாதங்களிலே உரித்தாக்குகின்றேன்.

அகவை 69 காணுகின்ற இந்த இனிய நேரத்தில் உங்களை வாழ்த்த வயதில்லை தாயே; உங்கள் மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். நான் வாழும் நாளும் நீங்கள் நீடூழி வாழ்ந்து, 100 ஆண்டுக் காலம் தமிழருக்கும், தமிழினத்திற்கும் உங்கள் மேலான சேவையைத் தொடர வேண்டுமென்று தங்கள் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். தருமத்தின் வழி நின்று தமிழ் மக்கள் துணை கொண்டு நேற்றும் இன்றும் எய்திட்ட வெற்றிகள் நாளைக்கு 'மே' ஆகும். ஈகை வடிவான தாய்க்கு பார்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2016 பிப்ரவரி 20

வியக்கும் வாகைகள் பன்மடங்காகி பரிவட்டம் சூடும். சித்திரைப் புத்தாண்டு இரட்டை இலைக்கான, முத்திரைப் புத்தாண்டாகி, கழகத்தின் வெற்றியை, இமயத்து உச்சமென, உலகமே மெச்சிட கரவொலிகள் கூட்டும், வைகாசித் திங்களில், வள்ளல்மனத் தாயின் கரங்களில் வந்தமரும், புத்தம் புதுச் செங்கோல், புதுமைகளால் ஜொலிக்கும், அது வளர்தமிழ் பூமிக்கு, வளர்ந்த மாநிலம் என்னும், புரட்சி சரித்திரத்தை புகழ் மாலையாய் படைக்கும் என்று கூறி நன்றி மலர்களை அன்புத் தாய், மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களிலே உரித்தாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உழவர் ஏர் விடுத்துவிட்டால் பூமித்தாய்க்கு பச்சைப் பட்டாடை ஏது. உழுபவன் ஓய்வெடுத்தால் ஓட்டத்தை நிறுத்திக்கொள்ளும் இந்த உலகம். தமிழகத்தின் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வழி செய்யும் வகையில், பல்வேறு திட்டங்களைத் தந்து, காவேரியை மீட்டுவந்து, பெரியாறு காத்து தந்து, கறவை மாடு, ஆடு சேர்த்து தந்து, நஞ்சை, புஞ்சை காத்து வாழும் மாண்புமிகு அம்மா அவர்கள், உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம், நிதியுதவி குறித்த அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். ஏரோட்டும் உழவர் கூட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அறிவிப்புக்கு ஏகமனதாக நன்றி சொல்லும்.

மாற்றுத் திறனாளிகள் ஏற்றம் பெற 1993 ஆம் ஆண்டிலே மாற்றுத் திறனாளிகளுக்கான தனி இயக்ககத்தை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அன்போடு எங்களைக் காத்து, ஆற்றொணாத் துயரத்தில் இருந்த எங்களை, இருகரம் கொண்டு அணைத்து ஈகைத் திட்டங்கள் தரும் தாய், உயர்வு பெற ஊக்கம் தந்து, எங்கள் வாழ்விலே ஏற்றம் அடையச் செய்யும் அன்னை. மாற்றுத் திறனாளிகளை மாசற்ற தங்கங்களாகக் கருதும் ஒரே தலைவர் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் நிழல் ஆறுதல் தருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு அடைக்கலம் தரும் மாதாவாக திகழ்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் நன்றியோடு என்னுடைய நன்றியையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 பிப்ரவரி 20]

5. அறிக்கைகள் அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.*

திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலத்தின் அத்தனை ஜீவன்களும் உச்சரிக்கும் சொல் அம்மா, அம்மா, அம்மா. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் வேதச் சொல் அம்மா, அம்மா, அம்மா. 8 கோடி தமிழர்களின் வாழ்வை வளம்பெறச் செய்த சொல் அம்மா, அம்மா, அம்மா. சீர்மிகு சிந்தனையால், பேரறிவு ஆற்றலால் துறைதோறும், துறைதோறும் ஐந்து தலைமுறைகளானாலும் காண முடியாத வளர்ச்சியை, ஐந்தே ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சியை உயரச் செய்த எங்கள் உயிரே, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கை இடர்பாடான வறட்சியானாலும் தமிழகம் வாடாமல், இயற்கை இடர்பாடுகளான மழை, வெள்ளமானாலும் மக்களைக் காத்திடும் மாதரசி, எங்கள் அம்மா. இயற்கைப் பேரிடர்களால் வளர்ந்த நாடுகள் நிலை குலைந்தாலும் தமிழகத்தின் வளர்ச்சியை நிலைபெறச் செய்தவர் அம்மா. தொற்றுநோய்களே தொட முடியாமல் மாநிலத்தின் துயர் துடைத்து காத்திட்ட காவல் தெய்வம், எங்கள் அம்மா. என்றென்றும் நாங்கள் போற்றிடும், வணங்கிடும் அம்மா. வருகின்ற 24 ஆம் தேதி அம்மா அவர்களின் 69-வது பிறந்த நாள். அகிலம் சிறந்திடும் நன்னாள். வீடு தோறும் விழா எடுப்போம், வீதி எங்கும் கொண்டாடுவோம். இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா, உலகில் தமிழ் மொழி உள்ள வரை ஆள வேண்டும் ஆள வேண்டும், வாழ்க! வாழ்க! வாழ்க என மகிழ்ந்து பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

பிற்பகல் 12-20

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 23-வது மற்றும் 24-வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலைப் பெண்கள் கைப்பற்றி ஆண்டால் அங்கு போரும் இல்லை, சாக்காடும் இல்லை என்று சொன்னார் பாரதிதாசன். பாவேந்தர் பாரதிதாசன் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் மகளிர் கரங்களுக்கு அதிகாரம் அளிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள்.

பெண்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரும் திருப்புமுனையை மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தில் 6 இலட்சத்து 8 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் 92 இலட்சத்து 9 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து வருடத்தில் 25 ஆயிரத்து 933 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கி, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் செய்யாத மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்திலே பெண்களுக்கு அதிகாரம் மற்றும் சம உரிமை அளிப்பதாக வாய் ஜாலம் காட்டும் ஒரு சில தலைவர்கள் மத்தியில், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பெண்களின் முன்னேற்றத்திற்காக மற்றும் சம உரிமைக்காக அல்லும் பகலும் பாடுபடும் ஒரே ஒப்பற்றத் தலைவர் ஆவார்.

கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலே பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மொத்தம் உள்ள 12 மாநகராட்சிகளில், 7 மாநகராட்சிகளில் பெண்களை மேயர் பதவியில் அமர்த்தி அழகு பார்த்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றபோது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள். இன்றைக்கு அதிக நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: இட ஒதுக்கீடு வழங்கி, பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். தற்போது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை மேம்படுத்தும் வகையிலும், பெண்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையிலும் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்ற ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-25

(ஈ) தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முறையாக மீன் வளம் சார்ந்த கல்விக்கென மீன் வளப் பல்கலைக்கழகம் வழங்கிய மீனவ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே எங்கள் அம்மா! மீன்பிடித் தொழிலின் தரம் உயர்த்திட மீன்பிடித் துறைமுகங்களை நவீனப்படுத்தியதோடு, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழக மீனவர்களுக்கு ஆழ்கடல் சூரை மீன்பிடிப்புத் திட்டம் தந்த மீனவர்களின் வாழ்வாதாரமே எங்கள் அம்மா! சதிவலைகளை அறுத்தெறிந்து, சதி புனைந்த சோதனைகளையெல்லாம் சாதனை ஆக்குவதில் எங்கள் சாதனைத் தாய்க்கு நிகர் எவருமே இல்லை. நலிந்தோருக்கு நாளெல்லாம் உழைத்து, வறியவருக்கு வசந்தத்தைத் தந்து, வான்மழைபோல் நல்ல திட்டங்களை தினந்தோறும் தந்திடும் தாயே! மண்ணாளப் பிறந்தவராம், மதிநுட்பம் நிறைந்தவராம், எந்நாளும் மக்கள் இதயத்தில் நிறைந்தவராம் எங்கள் அம்மா! பூமிக்கு வந்த புண்ணியமே, புரட்சியில் விளைந்த பொற்காலமே, தமிழகம் காத்திடும் கண்ணியமே, கன்னித் தமிழும் போற்றிடும் எங்கள் காவல் தெய்வமே, மாண்புமிகு அம்மா அவர்களே! உங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2016 பிப்ரவரி 20] [திரு. கே.ஏ. ஜெயபால்]

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2015-2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு புது நம்பிக்கையூட்டி, இளைய தலைமுறைக்கு புத்தெழுச்சி தந்து, புதுமைகளைச் செயலாக்கி, தமிழகத்தை என்றும் புதியதாய் படைக்கும் வெற்றித் திருமகள்; வாக்களித்த மக்களின் நம்பிக்கையை ஈடேற்றி, நிருவாகத்தைச் சீர்படுத்தி, நேர்படுத்தி, திறம்படவே மேம்படுத்தி, உரிமைக் குரல் எழுப்பி, உற்சாகப் பணியாற்றி, ஆக்கபூர்வமான

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 20

சிந்தனையால், அறிவார்ந்த செயல்களால், முன்னோடித் திட்டங்களால், தமிழையும், தமிழ்நாட்டையும் கட்டிக் காத்து, மேம்படுத்தி, தமிழர் வாழ்வு நலம் பெறவே, தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்து வரும் தன்னிகரில்லாத் தனிப் பெருந்தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்.

துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை @ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 10,605.30 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 8,088.89 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 2,516.41 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று, 2015-2016 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் "புதுப் பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை, அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

2015 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 3,039.24 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10,000 குடிசைவாழ் குடும்பங்களை மறுகுடியமர்த்தவும், அதற்கான வசதிகள் மற்றும் உதவிப் படிகள் வழங்கவும், தமிழ்நாடு குடிசை மாற்று

@ 339 முதல் 344 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

வாரியத்திற்குச் சிறப்பு மானியமாக 107 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-30

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பெறும் ஊரக மற்றும் நகர்ப்புற நியாய விலைக் கடைகளுக்கு 2010-2011 முதல் 2013-2014 வரையிலான காலத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்காக அரசு கூடுதலாக 102.93 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 60.14 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

2011-2012 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட 552 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 616.31 கோடி ரூபாய் கூடுதல் செலவில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு மத்திய அரசின் பங்குத் தொகை பெறப்படுவதை எதிர்நோக்கி, மாநில அரசின் இணை பங்குத் தொகையுடன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 500 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 229.46 கோடி ரூபாய் செலவில், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு

நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையிலான 20 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழிச் சாலையை ஆறு வழிச் சாலையாக மேம்படுத்துவதற்கும், படப்பை புறவழிச் சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கும் 189.81 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

ஒன்பது கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், ஒரு பொதுத் துறை சர்க்கரை ஆலைக்கும் கரும்புக்குரிய நிலுவைத் தொகையை வழங்குவதற்குக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 83.98 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015-2016 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2015–2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	3	–	1,05,56
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	14,39	–	–
3	நீதி நிருவாகம்	14,45,18	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	664,62,92	4	1,19,69
5	வேளாண்மைத் துறை	78,90,41	16,47,79	6,40,12
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	33	51,18,56	39,39
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	18	3	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	29,53,17	–	–
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	15,36,00	6	9,99
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	10	–	39,99

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	22,02,34	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	61,09,01	–	–
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	25	4	–
14	எரிசக்தித் துறை	1	1,295,63,97	2
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	3,90,50	–	–
16	நிதித் துறை	1,61,04	–	4,44,21
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	37,68,04	–	1
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	6,29,47	49	85,07

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	319,45,58	128,79,65	37,99
20	உயர் கல்வித் துறை	68	5,39,39	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	11,93,21	34,36	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	430,76,84	47,50,70	9,31,81
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	66,24,77	10,10,97	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	43,46,91	3,45,54	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	47,69,40	28,67,57	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	133,80,68	107,87,97	–
27	தொழில் துறை	8	1	4

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	32,81,24	–	–
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	7,13,71	6	–
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	7,88,76	6,56,41	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	27,82,20	50,00	–
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	46	12,61,63	8,99
33	சட்டத் துறை	4	32,49	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	20	9	1
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	3,25,54	3,46,43	10,00
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	14,22,32	3	–

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)	6	–	–
38	பொதுத் துறை	89,33,96	–	1
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	8	8,50,16	8,99
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	22	1,48	–
41	வருவாய்த் துறை	37	–	18,44
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	25	2	–
43	பள்ளிக் கல்வித் துறை	958,03,09	375,07,61	9,99
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	14	1	–
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	193,63,52	31,43,80	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	32,75,51	–	48,39

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	9,22	–	–
48	போக்குவரத்துத் துறை	10,14,29	–	267,99,99
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	14,02,47	2,13,89	–
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	15	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	4,193,87,94	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	113,56,94	1,39,18	–
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	37	12	28,00,00
	பெருமொத்தம்	**7,687,64,57**	**2,137,50,55**	**321,58,70**

9. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2016-2017, பொது விவாதத்திற்கான பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கான பதிலுரை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றாத பாசமும், குறையில்லாப் பரிவும், தம்மீது கொண்ட தமிழக மக்களைத் தாங்கி நிற்கும் வேராக இன்னுயிர் சுமப்பதே, மண்ணுயிர்த் தமிழினம் மலர்ச்சி காணவே, என்றெனும் தவத்தாலே உழைக்கின்ற, தரணியே வியக்கும் தாயாக தருமமே உருவாகி, தமிழினத்திற்கே வரமாகி, தாயுருவில் அவதரித்து, தமிழகத்தை வழிநடத்தும் ஈகையின் இருப்பாக, ஈரிலையின் உயிர்ப்பாக, (மேசையைத் தட்டும் ஒலி) இருள்படிந்து கிடந்த மண்ணுக்கு அருள் தரவே அவதரித்த அருட்கொடையாக, தாழ்ந்து கிடந்த தமிழ் மண்ணை, ஆழ்ந்த ஞானத்தால், அண்ணாந்து பார்க்கும்வண்ணம், வீறுநடை போட வைத்த விவேகத்தின் துடிப்பாக பேரறிவால், பேராற்றலால், விருது மேல் விருதுகளை வென்று குவிக்கும் வெற்றிகளின் குவியலாக விழியசைவில் சாதனைகள், விரலசைவில் சரித்திரங்கள் என்றே, ஆற்றல்களின் அமுத சுரபியான எங்கள் அன்னையே.*

2011 ஆம் ஆண்டில் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த ஐந்தாண்டுகளில் வரியில்லாத 5 நிதிநிலை அறிக்கைகளையும், தற்போது ஆறாவதாக, வரியில்லா இடைக்கால நிதிநிலை அறிக்கையையும் இப்பேரவையில் சமர்ப்பித்து, தொடர்ச்சியாக இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கின்ற பெருமைமிகு நல்வாய்ப்பை எனக்கு அளித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, நானும் எனது சந்ததிகளும், வாழ்நாள் முழுவதும், இனி வரும் காலம் முழுவதும், நன்றிக்கடன் பட்டிருப்போம் அம்மா, என்று என் உள்ளத்து நன்றியை வாசமிகு மலர்களாக்கி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் சமர்ப்பிக்கின்றேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப் புத்தகங்களைப் புரட்டினால் பண்டைக்கால மன்னர்களைப் பற்றி பக்கம், பக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீரம், விவேகம், பல்லவ மன்னர்களின் பராக்கிரமம், அசோகச் சக்கரவர்த்தியின் மகத்துவம், முகலாய மாமன்னன் அக்பரின் நல்லாட்சி சரித்திரம், இந்தப் பெருமைகள் எல்லாம் எப்படி காலங்காலமாக மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கிறதோ, அதேபோல மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை ஆண்ட சரித்திரமும் மக்கள் மனங்களில் அகலாது (மேசையைத் தட்டும் ஒலி) பெருமை பெற்று நிலைத்து நிற்கும் என்பதை இந்த மாபெரும் அவையிலே மகிழ்வுடன் பதிவு செய்வதில் பெருமைக்கொள்கிறேன்.

அனைத்துத் துறைகளையும், அவற்றில் நடக்கும் அத்தனை பணிகளிலும் கவனம் செலுத்துகின்ற ஒரே முதலமைச்சர், அகில இந்தியாவிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழை வாசித்து, வாசித்து, தமிழர்களை நேசித்து, நேசித்து வாழ்ந்து வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்' என்ற இலட்சியம் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தப் பூமி பந்திற்கு வானமே எல்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே தமிழக மக்கள் அடைந்திருக்கும் மகிழ்ச்சிக்கோ அளவே இல்லை. தமிழர்தம் கல்வி மேம்பாட்டுக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக, வாழ்வு வளம் பெறுவதற்காக, கோடி, கோடியாய்க் கொட்டிக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கொடுப்பது என்றாலே, எங்கு சென்று யாரைக் கேட்டாலும் இரட்டை விரலைத்தான் காட்டுவார்கள். ஒரு விரல் புரட்சித் தலைவர், இன்னொரு விரல் இந்த நாடே சொல்லும், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லாம் வல்ல இறைவன் மண்ணில் மனிதர்களைப் படைக்கும்பொழுதே மனித தெய்வங்களையும் படைக்க முடிவெடுத்தான். அவன் படைத்த முதல் மனித தெய்வம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இறைவன் படைத்த இரண்டாவது மனித தெய்வம், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'பூமியில் நேராக வாழ்பவர் எல்லோரும் சாமிக்கு நிகரில்லையா? பிறர் தேவையறிந்து வாரிக் கொடுப்பவர்கள் தெய்வத்தின் பிள்ளையில்லையா' என்று புரட்சித் தலைவர் பாடியதை உண்மையாக்கிக் காட்டியவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு கடந்த 2011, மே மாதம் பொறுப்பேற்று, மக்களுக்குப் பயனளிக்கும் ஐந்து நிதிநிலை அறிக்கைகளை, பல திட்டங்களுடன் அளித்துள்ளது. இதைத் தொடர்ந்து, கடந்த 16-2-2016 அன்று 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையும் இப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சட்டம்-ஒழுங்கைச் சீராக்கி, பல வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் நிறைவேற்றி, மக்கள் அனைவரும் பயன்பெறத்தக்க சமூகப் பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்தி, நாடு போற்றும் ஒரு நல்லாட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துள்ளார்கள்.

தேர்தல் வாக்குறுதிகளை யார் வேண்டுமானாலும் தரலாம். ஆட்சிக்கே வர முடியாது என்பவர்கள்கூட வாய்க்கு வந்தபடி பல வாக்குறுதிகளைத் தரலாம். ஆனால், தந்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்து நிறைவேற்றுகின்ற துணிவும், ஆற்றலும், உறுதியும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் மட்டும்தான் உள்ளது என்பதை இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதனால்தான் எஞ்சியிருந்த ஒரு வாக்குறுதியையும் நிறைவேற்றும் வண்ணம் முதியோருக்குக் கட்டணமில்லா பேருந்து பயணத்திற்கு வழிவகுக்கும் அறிவிப்பையும் 18-2-2016 அன்று வெளியிட்டு, அந்த வாக்குறுதியையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள்.

சிலர் இதில்கூட குற்றம் காணுகின்றனர். வாக்குறுதியை நிறைவேற்றாதபோது ஏன் நிறைவேற்றவில்லை என்கின்றவர்கள், நிறைவேற்றிய பின் இதுவரை ஏன் நிறைவேற்றவில்லை

என்கிறார்கள். ஆக, வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா, இல்லையா என்பதுதான் முக்கியம். அந்த வாக்குறுதியை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். இதை மக்களும் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். இப்படி அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி, மேலும் பல திட்டங்களைத் தந்து சிறப்பான நல்லாட்சியை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துள்ளார்கள்.

பிற்பகல் 12-40

தமிழக மக்களின் நலனையும் தமிழ்நாடு மக்களின் முன்னேற்றத்தையுமே இலட்சியமாகக்கொண்டு, எந்தவித எதிர்பார்ப்புமின்றி தமிழக மக்களுக்கு தன் வாழ்வையே அர்ப்பணித்து, தியாக வாழ்க்கை வாழ்ந்துவரும் போற்றுதலுக்குரிய மாண்புமிகு அம்மா அவர்கள் 'மக்களால் நான் மக்களுக்காக நான்' என்ற கொள்கை அடிப்படையில் கடந்த ஐந்து நிதிநிலை அறிக்கைகளை எப்படி உருவாக்கினார்களோ அதேபோல இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையையும் உருவாக்கியுள்ளார்கள்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ஏழையெளிய மக்களைப் பாதுகாக்கவும் பல நலத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்தும் ஒரு மக்கள் நல அரசாக, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2010-2011 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பீட்டளவு, அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 94,218.19 கோடி ரூபாய். இது படிப்படியாக கடந்த ஐந்து ஆண்டுகளில் உயர்த்தப்பட்டு 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடு 1,98,689.29 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல, மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 2010-2011-ல் 70,187.63 கோடி ரூபாய் என இருந்தது. 2016-2017 ஆம் ஆண்டிற்கு 1,524.23 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 65 சதவிகிதம் பேர் விவசாயத்தைச் சார்ந்தே உள்ளனர். அதனால்தான், விவசாயம் போன்ற முதன்மைத் துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளை வழங்கி, கட்டமைப்பை மேம்படுத்தி முதன்மைத் துறையின் வளர்ச்சிக்கு மாண்புமிகு முதலமைச்சர்

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாக வழி வகுத்தார்கள். மேலும், மனித வளம் சார்ந்த கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணற்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்கள். இது தவிர, ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பல திட்டங்களைச் செயல்படுத்தி, அனைவருக்கும் பலனளிக்கும்வகையில் ஒரு சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த கடந்த ஐந்தாண்டுகளாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவுபடுத்தியவாறு பொருளாதார வளர்ச்சி மட்டும் மாநிலத்தின் நிலைமையை வெளிப்படுத்தாது, அந்த வளர்ச்சி அனைவருக்கும் பயனளிக்க வேண்டும். ஒரு மாநிலத்தில் சில துறைகளிலோ, சில தொழிற்சாலைகளிலோ மட்டும் உற்பத்தி ஏற்பட்டால் போதாது. அது பரவலாக அனைத்துத் துறைகளிலும் இருக்க வேண்டும். அனைவருக்கும் பயனளிக்கும் வகையிலும் அது இருக்க வேண்டும். அதனால்தான், ஒரு சமச்சீர் நிலையை ஏற்படுத்த, ஏழையெளியோருக்குச் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கவனமாகச் செயல்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் உள்ளங்கள் மகிழ்வதற்காக, இல்லங்கள் நிறைவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அடுக்கடுக்கான திட்டங்கள், அத்தனையும் அற்புதத் திட்டங்கள். பசிப் பிணி போக்கும் அட்சயப் பாத்திரமாய் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், உடற்பிணி நீக்கிடும் திருமந்திரமாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கிராமப்புற மக்களின் பொருளாதார புரட்சிக்கும், வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்ட விலையில்லா கறவை மாடு, ஆடு வழங்கும் திட்டம், அறிவுப் புரட்சிக்கு அடித்தளமாக மடிக்கணினி வழங்கும் திட்டம், மாணவச் செல்வங்களுக்கு தன்னம்பிக்கை ஏற்பட மிதிவண்டி வழங்கும் திட்டம், இல்லத்தரசிகளின் இதயங்கள் குளிர, விலையில்லா மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கும் திட்டம், பசும்தளிராம் இளம் சிசுக்கள் உயிர் காக்க தொட்டில் குழந்தைத் திட்டம், ஏழைப்

பெண்களின் திருமணக் கனவுகளை நனவாக்க தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், பட்டம், பட்டயம் பெற்ற பெண்களின் வாழ்விலே வசந்தம் வீசிட, திருமண உதவியாக தாலிக்குத் தங்கத்தோடு திருமண நிதி உதவியும் வழங்கும் திட்டம், தாயும், சேயும் நலம் காண மகப்பேறு நிதி உதவித் திட்டம், ஏழையெளியோரின் இல்லக் கனவை நனவாக்க சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், நடுத்தர மக்களின் நன்மைக்காக பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், உலகமே வியக்கின்றவகையில் மலிவான விலையில் அடித்தட்டு மக்கள் வயிறார உணவு உண்ண 'அம்மா உணவகம்', மக்களின் சோகம் தீர்த்த தாய், தாகம் தீர்ப்பதற்காக தரும் 'அம்மா குடிநீர்', உப்பிட்டவர்களை தமிழர்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள் என்பதைப் பெருமைப்படுத்த 'அம்மா உப்பு'.

பிற்பகல் 12-45

தாயின் கருணையை நினைக்க வைக்கும் சலுகை விலை 'அம்மா மருந்தகம்', கட்டடம் கட்டுவதற்கு இனி கவலை வேண்டாம், அரசின் குறைந்த விலை 'அம்மா சிமெண்ட்', மக்கள் அரசைத் தேடி அலைய வேண்டாம் என அன்புத் தாய் இட்ட ஆணையினால் மக்கள் இருக்குமிடம் தேடி வந்து குறைகள் தீர்க்கும் மகத்தான 'அம்மா திட்டம்', இந்துக்கள் மானசரோவர், முக்திநாத் சென்றுவர, கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் சென்று வர, இஸ்லாமியர்கள் ஹஜ் யாத்திரை சென்றுவர, புனிதப் பயணங்களுக்கு நிதி உதவும் திட்டம், இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் ஊடகமே பாராட்டி மகிழ்ந்த பாசத் தாயின் திட்டம், ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சிக்காக பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்கும் திட்டம் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் நலத் திட்டங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தவும், தமிழகத்தின் வளர்ச்சிக்கான முன்னேற்றத் திட்டங்களை அமல்படுத்தவும், அரசின் பல்வேறு துறைகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்த தொகைகளைக் கேட்டால் மலைப்பு ஏற்படும். அதையே மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலத்தில் ஒதுக்கீடு செய்த தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சித் திறன் குறித்து ஒரு பிரமிப்பே ஏற்படும்.

உதாரணத்திற்கு காவல் துறைக்கு தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் 11 ஆயிரத்து 361 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 22 ஆயிரத்து 990 கோடி ரூபாயாக உயர்வு, அதாவது 102 சதவிகிதம் உயர்வு; பொதுப் பணித் துறை-பாசனத்துக்கு 7 ஆயிரத்து 113 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் 14 ஆயிரத்து 408 கோடி ரூபாயாக உயர்வு, அதாவது 103 சதவிகிதம் உயர்வு; நீதி நிருவாகத்திற்கென ஆயிரத்து 661 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 3 ஆயிரத்து 526 கோடி ரூபாயாக உயர்வு, அதாவது 112 சதவிகிதம் உயர்வு; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு, ஐந்தாண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கீடு 3,788 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 145 சதவிகிதம் உயர்த்தி 9,309 கோடி ரூபாய் ஒதுக்கீடு; விவசாயத்திற்கு 7 ஆயிரத்து 655 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, 23 ஆயிரத்து 472 கோடி ரூபாயாக உயர்வு, அதாவது 206 சதவிகிதம் உயர்வு; கால்நடை துறைக்கு ஆயிரத்து 437 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 4 ஆயிரத்து 826 கோடி ரூபாயாக உயர்வு, அதாவது 235 சதவிகிதம் உயர்வு; மீனளத் துறைக்கு 538 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 2 ஆயிரத்து 335 கோடி ரூபாயாக உயர்வு; பால் வளத் துறைக்கு 218 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 643 கோடி ரூபாயாக உயர்வு; எரிசக்தித் துறைக்கு 9 ஆயிரத்து 612 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, 38 ஆயிரத்து 484 கோடி ரூபாயாக அதாவது 300 சதவிகிதம் உயர்வு; மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறைக்கு 14 ஆயிரத்து 981 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 34 ஆயிரத்து 043 கோடி ரூபாயாக உயர்வு; வருவாய்த் துறைக்கு 10 ஆயிரத்து 717 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 27 ஆயிரத்து 717 கோடி ரூபாயாக உயர்வு; ஊரக வளர்ச்சித் துறைக்கு 26 ஆயிரத்து 456 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 62 ஆயிரத்து 150 கோடி ரூபாயாக உயர்வு; பள்ளிக் கல்வித் துறைக்கு 39 ஆயிரத்து 58 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 86 ஆயிரத்து 193 கோடி ரூபாயாக உயர்வு; நகராட்சி நிருவாகத் துறைக்கு 18 ஆயிரத்து 434 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 41 ஆயிரத்து 988 கோடி ரூபாயாக உயர்வு; உயர் கல்வித் துறைக்கு 6 ஆயிரத்து 142 கோடி ரூபாயாக

இருந்த ஒதுக்கீடு 14 ஆயிரத்து 390 கோடி ரூபாயாக உயர்வு; சமூக நலத் துறைக்கு 9 ஆயிரத்து 166 கோடி ரூபாயாக தி.மு.க. ஆட்சியில் இருந்த ஒதுக்கீடு 18 ஆயிரத்து 594 கோடி ரூபாயாக உயர்வு; சிறு, குறு தொழில்கள் துறைக்கு 318 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு ஆயிரத்து 107 கோடி ரூபாயாக உயர்வு; இளைஞர் நலன், விளையாட்டுத் துறைக்கு 266 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 743 கோடி ரூபாயாக உயர்வு என பல முக்கியத் துறைகளிலும் நிதி நெருக்கடிக்கு இடையிலும் 100 சதவிகிதத்திற்கும் கூடுதலாக நிதியை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த ஐந்தாண்டுகளில் உயர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது 17-2-2016, 18-2-2016 மற்றும் 19-2-2016 ஆகிய மூன்று நாட்களில் பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துகளையும், குறைபாடுகள் என்று தாங்கள் கருதுவதையும் சுட்டிக்காட்டி, மாமன்ற உறுப்பினர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். இது இடைக்கால நிதிநிலை அறிக்கை என்றாலும், மாமன்ற உறுப்பினர்கள் ஒரு முழு நிதிநிலை அறிக்கையாகவே கருதி, விவாதத்தில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இந்த அறிக்கையைப்பற்றி பத்திரிகைகள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோரும் அவரவர் நிலைக்கேற்ப கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்று நாட்களாக உறுப்பினர்கள் எழுப்பிய பல கருத்துகளுக்கு குறிப்பாக கரும்பு விலை, நெல் கொள்முதல் விலை, மின்சாரம் பற்றிய பிரச்சினைகள், வெள்ள நிவாரணம், சுகாதாரம், விலைவாசி உயர்வு, அரசு அலுவலர்கள் கோரிக்கை ஆகிய பலவற்றிற்கும், அவ்வப்போது சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டு விரிவான பதிலை அளித்துள்ளார்கள். நிதிப் பற்றாக்குறை, கடன் அளவு போன்றவற்றிற்கும் உறுப்பினர்கள் எழுப்பிய கருத்துகளுக்கு உரிய விளக்கத்தை ஏற்கெனவே அளித்துள்ளேன்.

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஓர் ஆட்சியை நடத்துவது என்பது மிகக் கடினமான பணி. அது கூர்மையான கத்தியின் மேல் நடப்பதற்குச் சமம். நாளுக்கு நாள் மக்களின் எதிர்பார்ப்புகள் பெருகிக் கொண்டே போகின்றன. ஆனால், அவற்றையெல்லாம் நிறைவேற்றத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவது மிகக் கடினமான பணியாகும். மாநிலத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட வரி வருவாய், மத்திய அரசைக் காட்டிலும் மிகக் குறைவு. ஒருபுறம் மக்களின் எதிர்பார்ப்பு, மறுபுறம் அரசு இயந்திரத்தை இயக்கும் அரசு அலுவலர்கள், கூடுதல் சம்பளம் கேட்டும், மத்திய அரசுக்கு இணையான சம்பளம் கேட்டும் போராட்டம். அவர்களின் நியாயமான கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இது ஒருபுறமிருக்க, இன்னொருபுறம் பொதுமக்கள் அடிப்படைத் தேவைகளுக்குப் போராடுகிறார்கள். அத்திக்கடவு-அவினாசி போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கும் நிதி தேவை. இவற்றையும் நிறைவேற்ற வேண்டும். மாநில வரி வருவாய் குறைந்து நிதி பற்றாக்குறை என வரும்போது செலவுகள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். வருவாயைக் கூட்ட வரியை ஏற்றிக்கொண்டே செல்வதும் சரி ஆகாது. அதேசமயம், மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் முன்னுரிமைப்படுத்தி நிறைவேற்ற வேண்டியது அவசியம். அதைப் புறந்தள்ளிவிட முடியாது. எனவே, கிடைக்கின்ற நிதி ஆதாரத்தோடு கடன் மூலமும் நிதி திரட்டி, அவற்றை முக்கியப் பணிகளுக்குச் செலவிடுவது அவசியமாகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏனெனில், நமது வருவாயை மட்டுமே பயன்படுத்தி, இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்றால், இத்தகைய வளர்ச்சியை, குறிப்பாக கல்வி அறிவு, சுகாதாரம், அடிப்படை வசதிகளான குடிநீர், தெருவிளக்கு போன்றவற்றை அமைப்பதற்கும், மின் உற்பத்தி, சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும் இன்னும் 10 ஆண்டுகளோ அல்லது 20 ஆண்டுகளோ, அதற்கு மேலுமோ காத்திருக்க வேண்டிவரும். இதனால், மாநிலம் பின் தங்கிட வாய்ப்புள்ளது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு எப்படி வளர்ந்துள்ளது?

சுதந்திரம் பெற்றபோது தமிழ்நாட்டின் பொருளாதார நிலை, பீகார், உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் போலத்தான் இருந்தது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அவற்றைவிட

மோசமாகத்தான் நமது மாநிலம் இருந்தது. அந்த மாநிலங்களில் உள்ள வளம் நமது மாநிலத்தில் இல்லை. ஆனால், இன்று தனி நபர் வருவாயில், பொருளாதார வளர்ச்சியில் இந்த மாநிலங்களைக் காட்டிலும் நாம் உயர்ந்து வரக் காரணம் என்ன? நம் வருவாயைப் பெருக்கியும், கடன் பெற்றும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருவதும்தான் காரணம்.

உதாரணமாக, தமிழ்நாட்டின் 2015-2016 ஆம் ஆண்டுக்கான நமது மாநில வரி வருவாய் திருத்தப்பட்ட அளவில் 86 ஆயிரத்து 538 கோடி ரூபாய் என்றால், பீகார் மாநிலத்தின் வரி வருவாய் 30 ஆயிரத்து 875 கோடி ரூபாய் மட்டும்தான். மேற்கு வங்க மாநிலத்தின் வரி வருவாய் 46 ஆயிரத்து 497 கோடி ரூபாய் மட்டும்தான். இப்படி கூடுதல் வரிமூலம் நிதி திரட்டியும், கடன் பெற்றும்தான் நாம் திட்டங்களை முறையாக நிறைவேற்றி வருகிறோம். அதனால்தான், சுதந்திரம் பெற்றபோது மேற்கு வங்க மாநிலத்தைவிட குறைவாக இருந்த நமது மாநிலத்தின் உற்பத்தி மதிப்பு அவர்களைவிட இன்று கணிசமாக உயர்ந்துள்ளது. இதுகுறித்துத் தெரிவிக்கும்போது மேற்கு வங்க மாநிலம் நம்மைவிட வளம் நிறைந்த மாநிலம்தான் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-55

எனவே, கடன் பெறுவதே தவறு என்று கூறிவிட முடியாது. மக்கள்மீது அக்கறையுள்ள எந்த அரசும், தங்கள் வருவாயை மட்டும் வைத்துதான் திட்டம் போடுவோம், கடனே வாங்க மாட்டோம் என்று கூற முடியாது. அளவோடு, அதாவது திரும்பச் செலுத்தும் திறனுக்குட்பட்ட அளவில் கடன் வாங்கி, வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும், மக்கள் நலப் பணிகளுக்கும் பயன்படுத்த வேண்டும். கடன் அளவைப் பொறுத்தவரை பல முறை இந்த மாமன்றத்தில் விரிவாக பதிலளித்துள்ளேன். நமது வரம்பு மாநில உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதம் என்றால், நாம் 20 சதவிகிதத்திற்குள்தான் கடன் அளவை வைத்துள்ளோம். அவை வளர்ச்சிப் பணிகளுக்காகத்தான் செலவிடப்படுகின்றன.

உதாரணமாக, கடந்த ஐந்து ஆண்டுகள் நாம் கூடுதலாக இதுவரை, அதாவது 2015-2016 ஆம் ஆண்டு வரை பெறவுள்ள கடனையும் சேர்த்து, 2015-2016 மார்ச் மாதம் வரை பெற்ற மொத்த கடன் 1 இலட்சத்து 10 ஆயிரத்து 553 கோடி ரூபாய். இதில் 99

ஆயிரத்து 362 கோடி ரூபாய் மூலதனப் பணிகளுக்கும், மீதித் தொகை வளர்ச்சி மற்றும் மக்கள் நலப் பணிகளுக்கும் மட்டும்தான் செலவிடப்பட்டுள்ளது. அடுத்ததாக, இந்தக் கடனைத் திரும்பச் செலுத்த இயலுமா என்பது கேள்வி. ஓர் அரசு கடனைத் திரும்பச் செலுத்த இயலுமா என்பதன் அடிப்படையில்தான், மத்திய அரசு, மாநிலத்தின் உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதம் என கடன் அளவை நிர்ணயித்திருக்கிறது. பெறுகின்ற கடனுக்கு செலுத்தும் வட்டி, மாநில வருவாய் வரவில் எத்தனை சதவிகிதம் என்பது இன்னொரு அளவுகோல். அதுவும் 10 முதல் 12 சதவிகிதம் அளவிலேயே இருக்கிறது.

2010-2011 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து ஓராயிரத்து 349 கோடி ரூபாய் நிகரக் கடன். அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 1 இலட்சத்து ஓராயிரத்து 349 கோடி ரூபாய் நிகரக் கடன். அப்போதைய மாநிலத்தின் உற்பத்தி மதிப்பு 5 இலட்சத்து 18 ஆயிரத்து 576 கோடி ரூபாய். அப்போதைய வருவாய் வரவு 70 ஆயிரத்து 188 கோடி ரூபாய். ஆனால், 2015-2016 ஆம் ஆண்டு இறுதியில் கடன் அளவு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 903 கோடி ரூபாய்.

2016-2017 ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்ட கடன் அளவு 2 இலட்சத்து 47 ஆயிரத்து 31 கோடி ரூபாய் என்பது 31-3-2017 ஆம் நாளில் வரக்கூடிய அளவு. அதாவது வரக்கூடிய 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை. இது தேர்தலுக்குப் பிறகு மாற்றியமைக்கப்படலாம். 2015-2016 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில உற்பத்தி மதிப்பு 10 இலட்சத்து 99 ஆயிரத்து 675 கோடி ரூபாய். வருவாய் வரவு 1 இலட்சத்து 38 ஆயிரத்து 306 கோடி ரூபாய். இந்த ஆண்டின் இறுதியில் கடன் அளவு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 903 கோடி ரூபாயாக இருக்கும். எனவே, கடன் என்பது மாநில உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் பார்க்கும்போது உயரவில்லை.

உதாரணமாக, ஒருவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுகிறார். வங்கியில் மூன்று மாத சம்பளமாக மூன்று இலட்சம் ரூபாய் கடன் பெறுகிறார். இப்போது அவர் சம்பளம் இரண்டு இலட்சம் ரூபாய் என உயர்ந்துவிட்டது. எனவே, மூன்று மாத சம்பளமாக ஆறு இலட்சம் ரூபாய் வரை வங்கி அவருக்குக் கடன் பெற அனுமதிக்கிறது. அவருடைய திரும்பச் செலுத்தும் திறன் உயர்ந்துள்ளது.

அதனடிப்படையில் கடன் பெறும் அளவும் உயர்ந்துள்ளது. இதைப்போலத்தான் மாநில கடன் அளவும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்புகூட கம்யூனிஸ்டு ஆண்ட மேற்கு வங்கத்தில் அவர்கள் ஆட்சியில் எப்படி அளவுக்கு அதிகமான கடன் பெற்றார்கள் என்பதைப் புள்ளிவிவரத்துடன் குறிப்பிட்டேன். மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களின் கடன் அளவுகூட நமது மாநிலத்தைவிடக் கூடுதலாகவே உள்ளது. இதை நாம் மனதில் கொள்ள வேண்டும் எனக் கூறி, இந்த விளக்கம் அரசின் கடனைப் பொறுத்தவரை போதுமானது என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது நிதிநிலை அறிக்கை பகுதி 1-ல், பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் பெரிய அளவில் முன்னேறவில்லை எனவும், குறைவான வளர்ச்சி விகிதம் தமிழகத்தில் நிலவி வந்துள்ளதைப் பற்றி ஆழ்ந்து யோசிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுப் பேசினார்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழகம் எப்படி இருந்தது என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களது தலைமையின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் தமிழகம் எவ்வாறு முன்னேறியுள்ளது என்பதையும் திரு. பாலகிருஷ்ணன் சீர்தூக்கி சிந்தித்துப் பார்க்கவில்லை என்றே கருதுகிறேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'அறுத்த விரலுக்கு சுண்ணாம்பு தர மாட்டான், ஆண்டி வந்தாலும் பிச்சை போட மாட்டான்' என்று ஒரு பழமொழி இருக்கிறது. அது தி.மு.க. ஆட்சிக்காகவே எழுதப்பட்ட பழமொழி. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஓர் ஆட்சியின் இலக்கணம் எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னார். 'For the people, by the people, of the people'. அதையேதான் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் இலக்கணம் என்ன தெரியுமா? 'For the குடும்பம், by the குடும்பம், of the குடும்பம்'. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களோ, 'தமிழகக் குடும்பங்கள் எல்லாம் என்

குடும்பம்' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'எனக்கென்று யாருமில்லை, எனது இல்லமும், உள்ளமும் தமிழ்நாடுதான்'. (மேசையைத் தட்டும் ஒலி) 'எனக்கு எல்லாமே நீங்கள்தான்' என்று மக்களிடம் சொன்னார்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதை அடிப்படையாகக்கொண்டு, தமிழர்கள் நலம் பெறவும், தமிழகம் வளம் பெறவும், மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சி இலக்குகளை நிர்ணயித்து, முன்னேற்றப் பாதையில், தமிழகத்தை விரைந்து முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை, நுணுக்கமாக அணுகிப் பார்த்தால் அந்த வளர்ச்சி எப்போதுமே ஒரே சீராக இருப்பதில்லை என்பதை நாம் காண முடியும். பொருளாதார சூழ்நிலை சில ஆண்டுகளில் உயரும், சில ஆண்டுகளில் குறைவான வளர்ச்சியைப் பெறும். அவை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் (block years) சராசரி வளர்ச்சி எப்படி உள்ளது என்பதன் அடிப்படையில்தான் மாநிலத்தின் பொருளாதார நிலை கணிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 2012-2013 ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி நிலவியதையும், அதனால் விவசாயத் துறையின் வளர்ச்சி குறைந்திருந்ததையும் மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டுள்ளார்கள். அப்படியிருந்தும்கூட, பிற ஆண்டுகளில் ஒரே சீரான வளர்ச்சியைத் தமிழகம் பெற்றுள்ளது. அதனால்தான் 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 2015-2016 ஆம் ஆண்டுவரை நிலையான விலை அடிப்படையில் சராசரி ஆண்டு வளர்ச்சி 8.01 சதவிகிதமாகவும், நடப்பு விலை அடிப்படையிலான வளர்ச்சி 13.20 சதவிகிதமாகவும் தமிழகத்தினுடைய வளர்ச்சி இருந்துள்ளது. ஆனால், இந்தக் காலகட்டத்தில் இந்திய அளவில் நிலையான விலை அடிப்படையிலான வளர்ச்சி 6.75 சதவிகிதமும், நடப்பு விலை அடிப்படையிலான வளர்ச்சி 12.48 சதவிகிதம் மட்டுமே என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல் நமது வளர்ச்சி 8.01 சதவிகிதம் என்ற அளவில் இருந்த காலகட்டத்தில் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களின் வளர்ச்சி நமது மாநிலத்தின் வளர்ச்சி விகிதத்தைவிடக் குறைவாகவே இருந்துள்ளது. எனவே,

பொருளாதார வளர்ச்சி என்பதை ஆண்டுக்காண்டு பார்ப்பதைவிட, கடும் பொருளாதார மந்த நிலையிலும், இந்திய சராசரிக்குக் கூடுதலாக நமது மாநிலம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நிலவுகின்ற பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில்கொண்டால் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கூறியதுபோல் வளர்ச்சி விகிதம் நமது மாநிலத்தில் குறையவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதிக வருவாய்ப் பற்றாக்குறை உள்ளதுபற்றி மாமன்ற உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் சார்ந்த காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற கேரள மாநிலத்தில் அம்மாநிலத்தின் செலவு நமது அளவில் பாதியாக இருந்தும்கூட, வருவாய்ப் பற்றாக்குறை 9 ஆயிரம் கோடி ரூபாயையும் தாண்டியுள்ளது என்பதை அவர் கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவைக்கு வெளியிலும் இதுபற்றிப் பேசுகிறார்கள். இதுபற்றிய தெளிவான விளக்கத்தை இங்கு தர வேண்டுமென்று நான் கருதுகிறேன். மாநில அரசுக்குக் கிடைக்கின்ற வரி வருவாயின் பெரும்பகுதி, அதாவது சுமார் 65 சதவிகிதம் வணிக வரியிலிருந்து கிடைக்கிறது. அதிலும் குறிப்பாக பெரிய நிறுவனங்களிடமிருந்தும் ஆட்டோமொபைல், சிமெண்ட், இரும்பு போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்தும், பெட்ரோலியப் பொருட்கள் போன்றவற்றின்மூலம்தான் கணிசமான வருவாய் கிடைக்கின்றது. பெரிய அளவு வருவாய் கிடைக்கும் வரிகளில் மாநில அரசுக்கு வணிக வரி மட்டுமே விதிக்க அதிகாரம் உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கவனிக்க வேண்டும். ஆனால், மத்திய அரசுக்கு வருமான வரி, கலால் வரி, நிறுவனங்கள் மீதான வரி, அதாவது corporate tax, இறக்குமதி வரி, சேவைகள் மீதான வரி என அனைத்து முக்கிய வரிகளை வசூலிக்கும் அதிகாரம் உள்ளது. எனவே, மாநில அரசுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டும் திறன் மிகக் குறைவுதான் என்பதை நாம் கருத்தில்கொள்ள வேண்டும். இந்த குறைந்த நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் மாநில அரசு நிருவாகம் செய்ய வேண்டும்.

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 1-05

மத்திய அரசு பகிர்ந்தளிக்கும் நிதி, பீகாருக்கு 71.80 சதவிகிதம், உத்திரப் பிரதேசத்திற்கு 55.29 சதவிகிதம். அவற்றின் மொத்த வருவாய் வரவில் கிடைக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிற்கு 25 முதல் 30 சதவிகிதம் வரை மட்டுமே கிடைக்கின்றது. இதற்குக் காரணம் நமது மாநிலம் முன்னேறிய மாநிலம் என்கிறார்கள்.

அதேசமயம், மத்திய அரசுக்குக் கிடைக்கும் இந்த வரிகளின் பெரும்பகுதி, அதேசமயம், மத்திய அரசுக்குக் கிடைக்கும் இந்த வரிகளின் பெரும்பகுதி தமிழ்நாட்டில் வசூலிக்கப்படுகிறது. அதாவது, நமக்கு வழங்கப்படுவதைப்போல நான்கு மடங்குக்குக் கூடுதலாக மத்திய அரசு வசூலிக்கிறது தமிழ்நாட்டின்மூலமாக வரியாக இந்த நிலையில், மாநில அரசின் செலவுகளின் பெரும்பகுதியை நமக்குக் கிடைக்கும் இந்தச் சொற்ப வரி வருவாயின் மூலமாகத்தான் ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில், மாநில அரசின் செலவுகளில் பெரும்பகுதியை நமக்குக் கிடைக்கும் இந்தச் சொற்ப வரி வருவாயின் மூலமாகத்தான் ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது. மாநில அரசுக்கு செலவுகளும், பொறுப்புகளும் மிக அதிகமாக உள்ளன. சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வேண்டும். கல்வித் துறைக்கு அதிகம் செலவிட வேண்டும். சுகாதாரத் துறைக்கு அதிகம் செலவிட வேண்டும். இந்தத் துறைகளுக்கு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாகச் செலவிடுவதால்தான், நம் மாநிலம் மனிதவள குறியீடுகளில் மிக உயர்ந்த மேல் நிலையில் உள்ளது.

ஊரக வளர்ச்சி, சாலைகள், கிராமப்புற வீட்டு வசதி போன்ற அடிப்படை வசதிகள், நகர்ப்புற வளர்ச்சி, குடிநீர், நெடுஞ்சாலைகள் என பல துறைகளுக்கும், மாநில அரசுதான் செலவிட வேண்டியுள்ளது. இந்தத் துறைகளிலெல்லாம் தமிழ்நாடு அதிக செலவினங்களை மேற்கொள்கிறது. அதனால்தான் தமிழ்நாட்டில் மின் வசதியற்ற கிராமங்கள் இல்லை, தார்ச் சாலைகள் இல்லாத கிராமங்கள் இல்லை, குடிநீர் வசதி அனைத்து கிராமங்களிலும் உள்ளன. அடிப்படை வசதிகளில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும், நமது மாநிலம் சிறந்துள்ளது. சமூக நலத் திட்டங்களிலும் நமது மாநிலம் பிற மாநிலங்களைவிட முன்னிலையில் உள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையற்ற பேரறிவும், ஈடில்லா கூர்மதியும் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஒரே சிந்தனை தமிழர்களின் நலன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஒரே இலக்கு தமிழகத்தின் வளர்ச்சி. இதை உணர்ந்துகொண்ட காரணத்தினால்தான் தமிழக மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களைத் தங்களது இதயத்தில் கொலு வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு திரைப்படத்தில் அண்ணன், தம்பி இருவருக்கும் இடையே ஒரு வாக்குவாதம். ஒருவன், அவனிடம் இருக்கும் சொத்துகளை எல்லாம் பட்டியலிடுகிறான். "என்னிடம் பணம் இருக்கிறது, பங்களா இருக்கிறது, மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் இருக்கின்றன. ஆள், அம்பு, சேனை, அந்தஸ்து அத்தனையும் இருக்கின்றன. ஆனால், உன்னிடம் என்ன இருக்கிறது?" என்று கேட்கிறான். அதற்கு மற்றவன், ஒற்றை வரியில் பதில் சொல்லுவான், "எனக்கு அம்மா இருக்கிறார்கள்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி) உன்னிடம் என்ன இருந்தாலும், அத்தனையும் "அம்மாவுக்கு" ஈடாகாது என்று சொல்வான். இதைத்தான் இன்றைக்குத் தமிழக மக்கள் அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் எங்களுக்கு "அம்மா" இருக்கிறார்கள்; எங்களுக்கு "அம்மா" இருக்கிறார்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) தான் பெற்ற பிள்ளைகள் அனைவரையும் ஒரே மாதிரியாக நேசிப்பவர்தான் தாய். ஒரே அளவிலே பாசம் செலுத்துபவர்தான் தாய். அந்த நேசத்தின் அடிப்படையிலும், பாசத்தின் அடிப்படையிலும், தேவையான துறைகளுக்கு, தேவையான நிதியை ஒதுக்கி, திட்டப் பணிகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நமது வருவாய் வரவு 1 இலட்சத்து 52 ஆயிரத்து 4 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் நமது மாநில வரி மற்றும் வரி அல்லாத வருவாய் அதாவது, மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரம் 69.62 சதவிகிதம். மத்திய அரசின் உதவிகள் மற்றும் நிதி பகிர்வு 30.38 சதவிகிதம் மட்டுமே. வருவாய்ச் செலவினம் 1 இலட்சத்து 61 ஆயிரத்து 159 கோடி ரூபாய், இதில் நிருவாகத்திற்குச் செலவிடுவது--அதாவது, சம்பளம் 47 ஆயிரத்து

262 கோடி ரூபாய், ஓய்வூதியம் 19 ஆயிரத்து 841 கோடி ரூபாய், நிருவாகப் பராமரிப்பு 5 ஆயிரத்து 774 கோடி ரூபாய், ஆக மொத்தம் வருவாய் வரவில் நிருவாகச் செலவு மட்டுமே 47.94 சதவிகிதம்.

பிற்பகல் 1-10

சம்பளச் செலவு கூடினால் மக்களுக்காகச் செயல்படுத்துகிற திட்டச் செலவைக் குறைக்க வேண்டும் அல்லது கூடுதல் வரிச் சுமையை மக்களிடம் திணிக்க வேண்டும். இது ஒருபுறமிருக்க, மொத்த வரி வருவாயில் 14.02 சதவிகிதம் வட்டி செலுத்த வழங்குவது போக, மீதம் 38.04 சதவிகிதம் மக்கள் நலத் திட்டங்களுக்குத்தான் செலவிடப்படுகின்றது. இந்த நலத் திட்டச் செலவுகள் அனைத்தும் வருவாய்ச் செலவினமாகத்தான் செலவிடப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வருவாய்ச் செலவினங்கள் என்றவுடன் அது ஏதோ தேவையற்ற செலவினம் என்பதுபோல் பேசுகிறார்கள். இந்த வருவாய்ச் செலவினத்தில் பெரும் பகுதி திட்டச் செலவினங்கள்தான் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். உதாரணத்திற்கு மின்சார மானியம் 7,370 கோடி ரூபாய், உணவு மானியம் 5,500 கோடி ரூபாய், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் 3,820 கோடி ரூபாய், அனைவருக்கும் கல்வித் திட்டம் 2,329 கோடி ரூபாய், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் 1,696 கோடி ரூபாய், சத்துணவுத் திட்டம் 1,645 கோடி ரூபாய், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம் 1,140 கோடி ரூபாய், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கான உயர் கல்வி உதவித் தொகை 1,430 கோடி ரூபாய், மாணவர்களுக்கான விலையில்லா மடிக்கணினி திட்டம் 572 கோடி ரூபாய், மாணவர்களுக்கான பயணக் கட்டண மானியம் 504 கோடி ரூபாய், போக்குவரத்துக் கழகங்களுக்கான டீசல் மானியம் 500 கோடி ரூபாய், விலையில்லா வேட்டி-சேலைத் திட்டம் 495 கோடி ரூபாய், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 430 கோடி ரூபாய், மாணவர்களுக்கான விலையில்லா சீருடைத் தொகுப்புகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மிதிவண்டிகள், கல்வி உபகரணங்கள் 1,148 கோடி ரூபாய், முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 928 கோடி ரூபாய், திருமண உதவித் தொகை

703 கோடி ரூபாய், அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம் 689 கோடி ரூபாய், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் 668 கோடி ரூபாய், முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் திரும்ப வழங்கும் திட்டம் 579 கோடி ரூபாய், இந்திரா வீட்டு வசதித் திட்டம் 656 கோடி ரூபாய் என இந்தத் திட்டங்கள் எல்லாம் வருவாய்ச் செலவில்தான் வருகின்றன. மாநில அரசின் செலவில் பெரும் பகுதி வருவாய்ச் செலவினம்தான். இதில் எந்தச் செலவினத்தைக் குறைக்க முடியும்? வருவாய்ச் செலவினத்தினை வருவாய் வரவிற்குள் மாநில அரசுகள் கொண்டுவர வேண்டும் என்பதுபற்றி பொருளாதார வல்லுநர்களிடையேகூட மாறுபட்ட கருத்து உள்ளது. பல திட்டங்களையும் வருவாய்ச் செலவில் செயல்படுத்தும் மாநில அரசுகளுக்கு இது சாத்தியமா என்ற கேள்விக்கூட எழுந்துள்ளது.

வரி வருவாய் ஆதாரத்தை மத்திய அரசு அதிக அளவிலும், மாநில அரசு குறைந்த அளவிலும் கொண்டுள்ளபோதும், அதிக செலவு பொறுப்புகளை ஏற்றுள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு குறைந்த நிதி வழங்கினால் இது சாத்தியமா என்பதே நமது கேள்வி. பொருளாதார தேக்கநிலைக் காரணமாக வருவாய் வரவு குறையும்போது, வருவாய்ச் செலவினத்தைத் திடீரெனக் கட்டுப்படுத்த முடியுமா? இயலாது. இவை போன்ற பல கருத்துகளை நாம் விரிவாக ஆராய வேண்டும்.

ஓரிரு ஆண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படுவதும் இந்த நிலை தொடர்ந்தால் அது அதிகரிப்பதும் தவிர்க்க முடியாதவை. அதுதான் தற்போதும் நடந்துள்ளது. பொருளாதார நிலை மாறும்போது இந்த நிலையும் மாறும். இது நமக்கு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும்.

எல்லா மாநிலங்களிலும் வருவாய்ப் பற்றாக்குறை இப்போது ஏற்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில்கூட இப்போது வருவாய்ப் பற்றாக்குறை உள்ளது. ஒருவேளை அதிக வருவாய் ஆதாரம் உள்ள மாநிலங்களிலும் அதிக நலத் திட்டங்களைச் செயல்படுத்தாத மாநிலங்களிலும் வருவாய் உபரி என்பது சாத்தியமாகலாம். அவசியமான திட்டங்களைச் செயல்படுத்தாமல் வருவாய் உபரியைப் பெறுவதால் மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சியில் 2009-2010 ஆம் ஆண்டில்கூட 3,531 கோடி ரூபாயாகவும், 2010-2011 ஆம் ஆண்டில், 2,729 கோடி ரூபாயாகவும் வருவாய்ப் பற்றாக்குறை இருந்தது. எனவே, பொருளாதார வளர்ச்சி மாறி, மாறி வரும் சுழற்சியில் வருவாய்ப் பற்றாக்குறையே இல்லாமல் ஓர் அரசு தொடர்ந்து செயல்பட முடியாது. வருவாய்ச் செலவில் உள்ள திட்டங்களை எல்லாம் இலவசம் என தள்ளிவிடவும் முடியாது. இதுபற்றி விமர்சனம் செய்பவர்கள் எந்தத் திட்டம் வீணானது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

பிற்பகல் 1-15

விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் கொடுப்பதை விமர்சிக்கிறார்கள். கிராமங்களில் எந்தச் சொத்தும் இன்றி நிராதரவாக இருக்கும் விதவைகள், பெண்கள் 30 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள கறவைப் பசுவையும், 13 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஆடுகளையும் பெற்று அதன்மூலம் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள உதவும் இத்திட்டம் வீணானத் திட்டமா? உழைப்பின்மூலம் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள, ஏழைகளுக்கு உதவும் இந்தத் திட்டம் எப்படி வீணான இலவசத் திட்டமாகும்? அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மடிக்கணினி பெற்று, கணினி அறிவைப் பெறுவது வீணானத் திட்டமா? உணவு மானியம் வீணானதா? மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வீணானதா? மக்கள் நல்வாழ்வுத் துறையிலும், கல்வித் துறையிலும் செயல்படுத்தப்படும் வருவாய்ச் செலவினத் திட்டங்கள் வீணானவையா? ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை வீணானதா? இவையெல்லாம் வருவாய்ச் செலவினங்களில்தான் உள்ளன.

ஏதோ, மூலதனப் பணிகள் மட்டும்தான் பலனுள்ளவை, வருவாய்ச் செலவினங்கள் பலனற்றவை என்ற தவறான தோற்றத்தைச் சிலர் ஏற்படுத்துகின்றனர். அதைத் தவறாகவும் பலர் புரிந்துகொள்கின்றனர். மூலதனப் பணிகள் முக்கியம்தான். சாலைகள், கட்டடங்கள் போன்றவை மூலதனப் பணிகளில் வரும். அவற்றையும் தேவைக்கேற்ப நாம் செயல்படுத்துகிறோம்.

ஆனால், பிற திட்டப் பணிகள், குறிப்பாக, கல்வித் திட்டங்கள், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், சத்துணவுத் திட்டம் போன்ற

வருவாய்ச் செலவில் வரும் திட்டங்களும் முக்கியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கடன் பெற்று, ஏதோ நிருவாகச் செலவு செய்வது போன்ற ஒரு தவறான புரிதலை பொருளாதார வல்லுநர்களே ஏற்படுத்துகின்றனர். வருவாய்ச் செலவில், 35.07 சதவிகிதம், வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களுக்குச் செலவிடப்படுகிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

இந்த நிலையில், மாநில அரசு கடனைத் திரும்பச் செலுத்தும் திறன் இருந்தால், அதைப் பெற்று, மூலதனப் பணிகளுக்குச் செலவிடலாம். அதில் தவறில்லை. வருவாய் வரவு குறையும்போது திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த கல்விக்கும், சுகாதாரத்திற்கும், விவசாயத்திற்கும், ஆதி திராவிடர் நலனுக்கும், குறிப்பாக, அவர்கள் கல்வி உதவிக்கும் பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை என்றே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கருதுகிறது. குறிப்பாக, வரி வருவாய் குறையும்போது, ஒரு நல்ல அரசு அவசியமாக இத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்றே நான் கருதுகிறேன்.

எனவே, வருவாய்ப் பற்றாக்குறை என்ற ஓர் அளவுகோலை மட்டும் வைத்துக்கொண்டு, மாநில அரசின் நிதிநிலையை மதிப்பிட முடியாது என்றும், அது அந்தந்த அரசுகள் செயல்படுத்தும் திட்டங்களின் அடிப்படையிலும், பெறுகின்ற வரி வருவாய் அடிப்படையிலும் மாறி அமையும் என்பதையும் தெரிவிப்பதோடு, மிக முக்கியக் குறியீடுகளான மாநில உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள கடன் அளவு மற்றும் நிதிப் பற்றாக்குறை அளவு எப்படி உள்ளது என்பதையே நாம் பார்க்க வேண்டுமென்றும், இந்த அளவீடுகளில் ஐந்தாண்டுகளாகத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு வரையறைக்குட்பட்டே உள்ளது என்றும் இம்மாமன்றத்திற்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் உரிமைகளை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பதில் கல்மனம் படைத்த சிலருக்கு தாராள மனது; காரணம், அவர்களுக்கு இருப்பது சுயநலம் மிக்க சுரண்டல் மனது என்றுகூடச்

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சொல்லலாம். மீனவர்களின் அடிவயிற்றிலே அடித்து, கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். கேரளாவிலும், கர்நாடகாவிலும் குடும்பத் தொலைக்காட்சிகள்மூலம் கோடிகளைக் குவிப்பதற்காக, விவசாயிகளின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி, தமிழக விவசாயிகளின் ஜீவாதார உரிமைகளான காவேரியையும், முல்லைப் பெரியாறையும் விட்டுக் கொடுத்தார்கள். பதவி சுகத்திற்காக, ஆட்சி அதிகாரத்தில் அவரது குடும்பங்கள் திளைப்பதற்காக, இலங்கையிலே நம் தொப்புள் கொடி உறவுகளை நோகடித்தார்கள், சாகடித்தார்கள். தமிழர்களின் வாழ்வாதாரத்தில் விஷம் தெளித்தார்கள். இத்தனைக்குப் பிறகும் தமிழர்களே, தமிழர்களே, என்னைக் கடலில் தூக்கிப் போட்டாலும் கட்டுமரமாகத்தான் மிதப்பேன் என்று கதை அளக்கிறார்கள். கெடுப்பதையெல்லாம் கெடுத்துவிட்டு, கிடக்கிறது கிடக்கட்டும், கெடுப்பதையெல்லாம் கெடுத்துவிட்டு, "கிடக்கிறது கிடக்கட்டும், கிழவனைத் தூக்கி மணையிலே வை" என்ற பழமொழியைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஆட்சியில் அமர்வதற்காக யார் காலிலும் விழுவதற்குத் தயாராக இருக்கிறார் கருணாநிதி. ஆனால், தமிழ் இனத்தைக் காக்கின்ற தாயாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ் இன விரோதிகள் விட்டுக் கொடுத்த தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைகளையெல்லாம் மீட்டெடுக்கின்ற தவமாக இருக்கிறார், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வரமாக இருக்கிறார். காவேரியை மீட்டெடுத்து, நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வர வைத்தார்கள். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர வைத்து, புகழின் உச்சிக்குப் போனார்கள் என்பதை மிகவும் பெருமையுடனும், பெருமிதத்துடனும் இப்பேரவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அதோ அந்தப் பறவைபோல வாழ வேண்டும், இதோ இந்த அலைகள்போல ஆட வேண்டும், ஒரே வானிலே, ஒரே மண்ணிலே, ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்'-என்று 'ஆயிரத்தில் ஒருவன்' படத்திலே புரட்சித் தலைவர், மக்கள் திலகம் அவர்கள் பாடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கையிலே உள்ள தமிழனுக்கும் அதுதான் கனவாக இருந்தது. ஆனால், மத்தியிலே ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு, அந்தக் கனவை சிதைத்து, சின்னா பின்னமாக்கியது. அதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள். இலங்கைத் தமிழன் அடக்கப்பட்டபோதும், அழிக்கப்பட்டபோதும், அகதிகளாக அனுப்பப்பட்டபோதும், கொஞ்சம்கூட நெஞ்சம் கலங்காதவர்கள் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள்.

ஈழத் தமிழரின் உயிர் போனாலும் போகட்டும், மைனாரிட்டி ஆட்சி போய்விடக் கூடாது என்பதற்காக தமிழர்களின் வீரத்தையும், தன்மானத்தையும் மத்திய காங்கிரசிடம் அடகு வைத்து அடிமைச் சாசனமே எழுதிக் கொடுத்த வீராதி வீரர்கள்தான் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள்.

அமாவாசை இருள் அகன்று, அழகு நிலா பவனி வந்ததுபோல, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி மறைந்து, தமிழினத்தை தனது உயிர்போல் நேசிக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வந்த பிறகுதான், இலங்கைத் தமிழரின் வாழ்விலே இருள் போய் வெளிச்சம் வந்தது, விடிவு பிறந்தது. இளங்காலை விடியலாய், விடியலின் விடிவெள்ளியாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொப்புள் கொடி உறவுகளாய்த் திகழும், இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன் தொடர்பான பணிகளை, ஆக்கபூர்வமான முறையில் மேற்கொண்டு வருகிறார்கள்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வினை மேற்கொள்ள, தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் ஆதரவற்றோர் முதியோர் ஓய்வூதியம், திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம், முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவி என அனைத்து நலத் திட்ட உதவிகளையும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியோ, மக்களின் நெஞ்சைக் குத்திக் கிழித்த கூர்வேல்; மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியோ குளுமையோடு மணம் வீசும் குறிஞ்சி மலர்;

(மேசையைத் தட்டும் ஒலி) பரிதவிக்கும் அகதிகளின் பாச மலர். இலங்கைத் தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் நேச மலர் என்று இலங்கையில் மட்டுமல்ல, உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களை நெஞ்சார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே தமிழ் இனம் அழிவதற்குத் துணை போனவர்கள் ஊழலிலே கூட்டு, அடித்த கொள்ளையிலே கூட்டு, தமிழர்களை ஏமாற்றுவதிலே கூட்டு என்று கூடித் திரிந்தார்கள். தமிழினத் துரோகிகள் என்று மக்கள் வசை பாடிய பிறகு, அவர்களின் பொய் முகங்களைக் கிழித்தெறிந்த பிறகு, மக்கள் ஆதரவை முற்றிலும் இழந்து, மூக்குடைபட்ட பிறகு தி.மு.க.-வினர் ‘கூடா நட்பு கேடாய் முடியும்’ என்று நட்பை முறித்துக் கொண்டார்கள். அனுபவிக்கிற வரைக்கும் அனுபவித்து விட்டுத்தான், அந்த நாடகத்தை அரங்கேற்றினார்கள். அப்போது பிரிந்தவர்கள், இப்போது மீண்டும் சேர்வதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்களை வெல்வதற்காகவாம்!

தியாகமும், தியாகமும் சேர்ந்தால், மக்கள் வரவேற்பார்கள், வாழ்த்துவார்கள். துரோகமும், துரோகமும் சேர்வதை அறிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) Facebook-ல் பொங்கி எழுந்துவிட்டார்கள். Whatsapp-ல் வறுத்தெடுத்துவிட்டார்கள். தமிழர்களின் தன்மானத்தைக் காப்பவர் அம்மா; தமிழர்களின் உரிமைகளை மீட்பவர் அம்மா; அந்தத் தெய்வத்தை வெல்வதற்குத் தீயசக்திகள் சேர்ந்ததைக் கண்ட மக்கள் சீறிப் பாய்ந்து விட்டார்கள். எதிர்ப்புகளால் இடிந்து போனது தி.மு.க.-வின் கனவு. இடுக்கில் அகப்பட்ட குரங்குபோல ஆகிவிட்டது காங்கிரசின் நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி) செய்த துரோகங்களையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து தி.மு.க.-வைத் தேடி காங்கிரஸ் போனது. ‘சேலை இல்லேன்னு பக்கத்து வீட்டுக்குப் போனாளாம், அவ ஈச்சம் பாயைக் கட்டிக்கிட்டு எதிரே வந்து நின்னாளாம்’ என்ற பழமொழியைப் போல, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் நிலைமை பரிதாபமாக முடியப்போகிறது. தமிழ் இனத்தைக் காக்கின்ற ஒரே தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உண்மையை வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலே மக்கள் உணர்த்தத்தான் போகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களின் போராட்டங்கள் பற்றி இங்கு பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளம் கொண்டவர்கள். அதனால்தான், கடந்த ஐந்தாண்டுகளாக அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு அறிவித்தவுடன் அகவிலைப் படியை உடனுக்குடன் உயர்த்தி வழங்கினார்கள். பல மாநில அரசுகள் இதைச் செய்யவில்லை. மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள்கூட இந்தத் தொகையை வைப்பு நிதியில்தான் பிடித்தம் செய்தன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக வழங்கினார்கள். வருவாய்த் துறை, வளர்ச்சித் துறை போன்ற பல துறைகளில் அவ்வப்போது எழுந்த கோரிக்கைகளை நிறைவு செய்திருக்கின்றார்கள். ஆசிரியர்களுக்குப் பெருமளவு பயனளிக்க தேர்வு நிலை, சிறப்பு நிலைக்குப் பிற மாநிலங்களிலும், மத்திய அரசிலும் 3 சதவிகிதம் மட்டும் ஊதிய உயர்வு தந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்கள் 6 சதவிகிதமாக உயர்த்தி வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் பல சலுகைகளையும் வழங்கினார்கள். அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். காலிப் பணியிடங்களை விரைவாக நிறைவு செய்தார்கள். ஐந்தாண்டுகள் நமது மாநிலம் அமைதியாகத்தான் சென்றது. தேர்தல் நெருங்கியவுடன், அரசு ஊழியர்கள் திடீர் போர்க்கொடி. இதற்கு அரசியல் சாயத்தைக்கூட நான் பூச விரும்பவில்லை. ஏன் இந்த நெருக்கடி?

பிற்பகல் 1-25

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இவர்கள் போராட்டம் என்று அறிவித்தவுடன், உடனடியாக அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டினார்கள். அரசு அலுவலர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்க்க உத்தரவிட்டார்கள். அரசு அனுமதி பெற்றவை, பெறாதவை என வேறுபாடு பாராமல் அரசுப் பணியாளர் சங்கங்கள் அனைத்தையும் அழைத்து, அமைச்சர்கள் குழு பேச்சு நடத்த உத்தரவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகள் கனிவுடன் கேட்கப்பட்டது. அவர்களின் நியாயமான, தீர்க்க வாய்ப்புள்ள அனைத்து கோரிக்கைகளையும் மாண்புமிகு

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீர்க்க உத்தரவிட்டுள்ளதையும் தெரிவித்து, தேர்தல் நெருங்கி வருவதைக் கருத்தில் கொண்டும், பள்ளிகளில் மாணவர்கள் தேர்வு வருவது போன்றவற்றை கருத்தில் கொண்டும், மக்கள் நலன் கருதி, போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டோம். அதை பல சங்கங்கள் செவிமடுத்தன. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளையில், சில சங்கங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தன. அரசிடம் நிதி போதுமான அளவு இருந்தால் பிரச்சினை இல்லை. அந்தக் கோரிக்கைகள் நியாயமற்றவை என்றும் நாங்கள் கூறவில்லை. நான் முன்பு கூறியதுபோல், நமது வரி வருவாயில் 69.51 சதவிகிதம் சம்பளம், ஓய்வூதியம், நிருவாகத்திற்கு செலவிடப்படுகிறது. மீதமுள்ள தொகையை வைத்துத்தான் மக்களுக்கு நலத் திட்டங்களை நாம் செயல்படுத்த வேண்டும். இதையும் நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், தாயுள்ளம் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்று பேரவை விதி 110-ன்கீழ் பல நல்ல அறிவிப்புகளை வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் மிகுந்த பரிவோடு அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை அணுகி வருகிறார்கள். எந்தெந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியுமோ, அவை எல்லாவற்றையும் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன உலகில் உடம்பில் உள்ள குறைபாடுகளை மறைப்பதற்கு புதிது, புதிதாக வழி கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நவீன உலகில் உடம்பில் உள்ள குறைபாடுகளை மறைப்பதற்கு புதிது, புதிதாக வழி கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். முடி கொட்டிப் போனால், விக் வைத்துக் கொள்கிறார்கள்; முகம் கெட்டுப்போனால் சர்ஜரி செய்து கொள்கிறார்கள்; கண் கெட்டுப் போனால் லென்ஸ் வைத்துக் கொள்கிறார்கள்; காது கெட்டுப் போனால் மிஷின் மாட்டிக் கொள்கிறார்கள்; ஆனால், கெட்டுப் போன தனது செல்வாக்கைச் சரி செய்வதற்கு மட்டும், என்ன செய்வதென்று தெரியாமல், சிலர் முழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓய்வு பெற வேண்டிய வயதிலும் ஓய்வு பெறாமல், ஏதாவது உளறிக் கொண்டே இருக்கிறார்கள். அவர் ஓய்வு பெற வேண்டும்

என்று குரல் எழுப்புவோரும், ஓய்வு பெறவே கூடாது என்று குரல் எழுப்புவோரும் சேர்ந்து தமிழக அரசியலையே குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். குழம்பிய குட்டையிலே மீன் பிடித்துவிடலாம் என்றும் சிலர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஓய்வுக்கே ஓய்வு கொடுத்துவிட்டு, ஓய்வே இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டியவர்களுக்கு தோல்விகளைப் பரிசாகத் தந்து, அரசியலில் இருந்தே அனுப்பி வைப்பார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதோடு, அரசுப் பணியில் இருப்பவர்களுக்கும், அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரவணைப்பு என்றென்றும் இருக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு 7 சதவிகிதம் நிதி மட்டுமே வழங்கப்படுகிறது என்று தெரிவித்திருந்தார். மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, மாநிலத்தின் மொத்த சொந்த வரி வருவாயில் 10 சதவிகித அளவிலான நிதி உள்ளாட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதுதவிர, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், 'தாய்' திட்டம் போன்ற திட்டங்களுக்குக் கூடுதல் நிதியை மாநில அரசு வழங்கி வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2014-2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட மாநில சொந்த வரி வருவாய் 2 இலட்சத்து 83 ஆயிரத்து 146 கோடி ரூபாய். இதில், கேளிக்கை வரி மற்றும் முத்திரைத் தீர்வைமீதான மேல் வரி உள்பட 32 ஆயிரத்து 497 கோடி ரூபாய்; அதாவது, 11.48 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி, மாநில சொந்த வரி வருவாய் 86 ஆயிரத்து 538 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, குறைந்தபட்சம் 10 சதவிகிதம் பகிர்ந்தளிக்கப்படும். இதுதவிர, ஐந்தாண்டுகளில் நான் முன்பு குறிப்பிட்டுள்ளதுபோல், கூடுதலாக 6 ஆயிரத்து 807 கோடி ரூபாய் குறிப்பிட்ட திட்டங்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மாநில அரசு நிதியை விடுவித்துள்ளது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சத்தியத் தாயின் சாதனை அரசு இலட்சியத்தில் உறுதி கொண்டு, கொடுத்த வாக்குறுதிகளை இம்மியும் குறையாமல் நிறைவேற்றி, தமிழகத்தை பூலோகச் சொர்க்கமாகவே மாற்றியிருக்கிறது, இந்திய தேசத்திற்கே வழிகாட்டுகின்ற மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி, மக்களாட்சி இலக்கணத்திற்கு மகுடம் சூட்டியிருக்கிறது, எனக்காக ஏதுமில்லை, எல்லாமும் என் மக்களுக்கே (மேசையைத் தட்டும் ஒலி) எனக்காக ஏதுமில்லை, எல்லாமும் என் மக்களுக்கே என்கிற தவத்தில் உழைக்கின்ற தாயே, நீங்கள் தமிழினத்திற்கு காலம் கொடுத்த வரம், ஆறறிவுத் தலைவர்களுக்கு மத்தியில் நூறறிவுப் பொக்கிஷமாய் தாய் வடிவாகித் தமிழகத்திற்கு இறை தந்த திறம், ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமான எங்கள் அன்னையே, அரசியல் அதிகார மாடங்களில் ஏழையெளிய தொண்டர்களையும் அமர்த்தி, பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியத்தை இலட்சத்திற்கும் மேற்பட்ட கழகத் தொண்டர்களுக்கு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பாரத தேசத்தின் மூன்றாம் பெரும் இயக்கமாக, கழகம் என்கிற அன்பியல் இயக்கத்தை உச்சத்தில் அமர்த்தியிருக்கும் ஆற்றலின் வடிவே, அன்புள்ளத்தின் உருவே, இதுதான் தலைமை, இதுதான் இயக்கம், இதுதான் ஆட்சி, இதுதான் மக்களாட்சிக்கே மாட்சி. அணிவகுத்து நிற்கும் சாதனைகள்தான் பொற்காலம் என்பதற்கு சாட்சி.

சித்திரையை மீட்டெடுத்த எங்கள் செந்தமிழ்த் தாயே, உங்களுக்கே முத்திரை என்று காத்திருக்கும் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) சித்திரைப் புத்தாண்டில் இப்பேரவையில், மாண்புமிகு அம்மா, உங்களின் தலைமையில் உங்களின் அருளாசி பெற்றவர்கள் மட்டுமே அமரக்கூடிய பொற்காலம் காத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2016, நல்லோர் கனவுகள் நனவாகும் ஆண்டு, நற்றமிழர் வாழ்விற்கு நன்மை தொடரும் ஆண்டு, மகராசிக்கு மகுடம் சூட்டி மகிழ்கின்ற ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் வேண்டுதலை மலரச் செய்யும் ஆண்டு, முயற்சி விதைகள் முப்போகமும் விளையும் ஆண்டு, முத்தமிழ்த் தாய்க்கு மீண்டும் முடிசூட்டி மகிழும் ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பொற்காலம் தொடரும் ஆண்டு, பொல்லாங்கு தொலையும் ஆண்டு, வழியெங்கும் வாகைகள் குவியும் ஆண்டு, வரலாற்று

திருப்பங்கள் விளையும் ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) திசையெங்கும் கிழக்காகி தித்திப்பு சுரக்கும் ஆண்டு, அமைதி, வளம், வளர்ச்சி அமோகமாய் செழிக்கும் ஆண்டு, அப்பன், மகன் அதிகார வெறியை ஆணியிலே அறையும் ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தருமத்தின் ஆட்சிக்கு தலைப்பாகை சூடும் ஆண்டு, விஷன்-2023 நோக்கி வீறுநடை போடும் ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இது தரணிக்கு leap ஆண்டு, தமிழர்க்கு leaf ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஈராயிரத்துப் பதினாறே, வெற்றிகள் குவியும் ஆண்டு, ஈடில்லா வெற்றிகளை இலை கொண்ட இயக்கத்திற்கு இரட்டிப்பாய்த் தரும் ஆண்டு, எங்கள் புரட்சித் தாய்க்குப் புத்தம் புது வெற்றிகளால் புகழ்மாலை தரும் ஆண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 மே திங்களில் தமிழ் ஜெகமே, அம்மா அவர்களுக்குத் தரும் பெரும் ஜெயமே. (மேசையைத் தட்டும் ஒலி) உப்பிட்டவரை உயிர் உள்ளவரை நினைக்கின்ற ஒப்பில்லாத் தமிழரினம், அன்னமிடும் அம்மா அவர்களுக்கு 234 தொகுதிகளிலும் வெற்றி தந்து, நாவார நன்றி சொல்லும். (மேசையைத் தட்டும் ஒலி) நமது இலக்கோ 234, அடையப் போகும் தொகுதிகளும் 234. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் விரல் அசைவில், வெற்றி வரும். அது நிச்சயமாய் வரும். அந்த வெற்றியை, சத்தியத் தாய்க்கு, தமிழ் இனம் நிச்சயமாய் பெற்றுத் தரும் என்று உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 24 ஆம் தேதி இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த நன்னாளாகும். இந்த இனிய நாளில், மாண்புமிகு அம்மா அவர்கள், பல்லாண்டுக் காலம் நீடூழி வாழ்க என்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இனிய நாளில், மாண்புமிகு அம்மா அவர்கள், பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என்றே தேவதைகள் வாழ்த்துச் சொல்ல, தெய்வங்கள் எல்லாம், என்றும் உறுதுணையாய் இருக்கும். தமிழக மக்களின் ஏகோபித்த விருப்பத்தினை நிறைவேற்றிடும்வகையில், எதிர்வரும் மே திங்களில் மீண்டும் முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள் அரியணை ஏறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது உறுதி, உறுதி என்று சொல்லி, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லாத காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி மகிழ்கின்றேன்.

பிற்பகல் 1-35

நிறைவாக இந்த 14-வது சட்டமன்றப் பேரவையின் 5 ஆண்டுக் காலத்தில் நடந்தேறிய 11 கூட்டத் தொடர்களின் அனைத்து நாட்களிலும் தவறாது வருகைத் தந்து, தமிழக மக்களுக்கு எண்ணிலடங்கா ஏற்றமிகு திட்டங்களை அள்ளி வழங்கியதுடன், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு அறிவார்ந்த பதிலளித்து, இப்பேரவை சிறப்பாக நடைபெற வழிகாட்டிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இத்தருணத்தில் என் சார்பாகவும், பேரவையின் அனைத்து உறுப்பினர்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நடுநிலை தவறாது, அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமாக வாய்ப்பளித்து, பேரவையைப் பாங்குடன் பரிமளிக்க வைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மாமன்றம் சிறப்புற நடைபெற பூரண ஒத்துழைப்பு நல்கிய மரியாதைக்குரிய எதிர்க்கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவைச் செயலர் ஆகியோருக்கும் மற்றும் அவருடன் சார்ந்த செயலகத்தின் இதர அரசு அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016-2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம் மீதான நிதி அளிப்புக்கான தீர்மானத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015-2016 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

MESSAGE

"In pursuance of Clause 2 of Article 205, read with Clause 3 of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the financial year 2015-2016."

10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கை. 2015-2016 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20-2-2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	3	—	1,05,56
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	14,39	—	—
3	நீதி நிருவாகம்	14,45,18	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	664,62,92	4	1,19,69
5	வேளாண்மைத் துறை	78,90,41	16,47,79	6,40,12
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	33	51,18,56	39,39
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	18	3	—
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	29,53,17	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	15,36,00	6	9,99
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	10	—	39,99

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	22,02,34	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	61,09,01	–	–
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	25	4	–
14	எரிசக்தித் துறை	1	1,295,63,97	2
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	3,90,50	–	–
16	நிதித் துறை	1,61,04	–	4,44,21
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	37,68,04	–	1
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	6,29,47	49	85,07

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	319,45,58	128,79,65	37,99
20	உயர் கல்வித் துறை	68	5,39,39	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	11,93,21	34,36	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	430,76,84	47,50,70	9,31,81
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	66,24,77	10,10,97	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	43,46,91	3,45,54	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	47,69,40	28,67,57	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	133,80,68	107,87,97	–
27	தொழில் துறை	8	1	4

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	32,81,24	—	—
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	7,13,71	6	—
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	7,88,76	6,56,41	—
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	27,82,20	50,00	—
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	46	12,61,63	8,99
33	சட்டத் துறை	4	32,49	—
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	20	9	1
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	3,25,54	3,46,43	10,00
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	14,22,32	3	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)	6	–	–
38	பொதுத் துறை	89,33,96	–	1
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	8	8,50,16	8,99
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	22	1,48	–
41	வருவாய்த் துறை	37	–	18,44
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	25	2	–
43	பள்ளிக் கல்வித் துறை	958,03,09	375,07,61	9,99
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	14	1	–
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	193,63,52	31,43,80	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	32,75,51	–	48,39

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	9,22	—	—
48	போக்குவரத்துத் துறை	10,14,29	—	267,99,99
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	14,02,47	2,13,89	—
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	15	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	4,193,87,94	—	—
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	113,56,94	1,39,18	—
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	37	12	28,00,00
	பெருமொத்தம்	**7,687,64,57**	**2,137,50,55**	**321,58,70**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

MESSAGE

"In pursuance of Clause 3 of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants for the financial year 2016-2017."

(உ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

MESSAGE

"In pursuance of Clause 2 of Article 206 read with Clause 3 of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance for the financial year 2016-2017."

பிற்பகல் 1-40

11. முன்பண மானியக் கோரிக்கைகள், 2016–2017, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.*

(அ) மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,33,79,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.21,47,39,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 3- நீதி நிருவாகம். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.485,48,02,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஈ) மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 4- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,762,19,72,000/-, மூலதனக் கணக்கில் ரூ.163,39,76,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(உ) மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 5- வேளாண்மைத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.97,82,50,000/ - ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1, திரு. எம். ஆறுமுகம்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலை மற்றும் விவசாயப் பண்ணைகளில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 51, திரு. அ. சவுந்தரராசன்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இயற்கை உரம், பூச்சி விரட்டிகளை மலிவு விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

2016 *பிப்ரவரி* 20] [*திரு. அ. சவுந்தரராசன்*]

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 56, திரு. க. பீம்ராவ்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,000/- வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 89, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 125, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 153, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 199, திரு. ப. டில்லி பாபு.*

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம்-பையூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 202, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு தோட்டக்கலைத் துறை பண்ணைகளில் 10 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றும் பண்ணைத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 232, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேளாண் விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 294, திரு. ஏ. லாசர்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயிகளின் முந்திரிக்கு நியாயமான விற்பனை விலையை அரசு நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 306, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 341, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,229,19,75,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,04,46,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,82,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 349, திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 356, திரு. மு. திராவிடமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 1-45

(ஊ) மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.701,11,15,000/-, மூலதனக் கணக்கில் ரூ.71,66,27,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(எ) மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 7-மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.258,33,34,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.224,60,83,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஏ) மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,57,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.45,17,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஐ) மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.611,49,17,000/-, மூலதனக் கணக்கில் ரூ.68,73,60,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஒ) மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.210,92,81,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஓ) மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.198,69,97,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2016 *பிப்ரவரி* 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஔ) மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.388,64,66,000/-, மூலதனக் கணக்கில் ரூ.74,42,78,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.8,04,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 1-50

(அஅ) மானியக் கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,709,31,81,000/-, மூலதனக் கணக்கில் ரூ.330,64,23,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆஆ) மானியக் கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,314,50,62,000/-, மூலதனக் கணக்கில் ரூ.2,056,75,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,408,85,05,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(அஇ) மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 15- சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,61,05,000/-, மூலதனக் கணக்கில் ரூ.9,75,01,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.13,00,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(அஈ) மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.726,22,76,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,300,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.71,15,70,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(அ௨) மானியக் கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 17- கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.705,53,38,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.24,67,44,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(அஊ) மானியக் கோரிக்கை எண் 18—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.113,27,39,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 1-55

(அஎ) மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 24, திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 49, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொன்னேரியில் அரசு பொது மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 61, திரு. க. பீம்ராவ்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அயப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 86, திரு. அர. சக்கரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 94, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 115, திரு. வீ.பி. நாகைமாலி.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கீழ்வேளூர் தொகுதி, தெற்குப் பனையூர் கிராமத்தில் செயல்பட்டுவரும் ஆரம்ப துணை சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 124, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டு தீர்மானம் எண் 145, திரு. அ. அஸ்லம் பாஷா.

2016 பிப்ரவரி 20]

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், ஆசனாம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 155, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அரசு மருத்துவமனையோடு புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. ப. டில்லி பாபு.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிருஷ்ணகிரியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 206, திரு. வெ. பொன்னுப்பாண்டி.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை முன்பு உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 236, திருமதி. எஸ். விஜயதரணி.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, குழித்துறை அரசு மருத்துவமனையில் MRI Scan வசதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 262, திரு. சு. குணசேகரன்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனைத்து வகை சிறப்புப் பிரிவுகளையும் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

2016 பிப்ரவரி 20] [திரு. சு. குணசேகரன்]

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 291, திரு. ஏ. லாசர்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியகுளம் தொகுதி, தேனி அரசு மருத்துவமனையில் மனநல மருத்துவப் பிரிவு துவக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 318, திரு. டி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 336, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் நகர், கீழக்கரை, இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் முகாம் அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண்மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,819,88,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,16,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 343, திரு. பி.வி. கதிரவன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, மாடக்குளம் கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் கடந்த 6–6–2013 அன்று அகற்றப்பட்டுவிட்டது.

8—

ஏரிக்கரை உயர்த்துதல்

வினா எண் 35250—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் 3 டி.எம்.சி. கொள்ளளவுள்ள ஏரிகளின் கரைகளை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்திலுள்ள 3 டி.எம்.சி. கொள்ளளவுள்ள ஏரிகளின் கரைகளை உயர்த்திடும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

(ஆ) அவசியம் எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

9—

கருவேல மரம் அகற்றுதல்

வினா எண் 35266—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொதுப் பணித் துறை நீர்நிலைகளிலுள்ள கருவேல மரங்களை அகற்றி நீராதாரத்தை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொதுப் பணித் துறை / நீர்வள ஆதாரத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நீர்நிலைகளில் காணப்படும் கருவேல மரங்கள் அகற்றப்பட்டு நீராதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

10—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 36198—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர், கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 128, நிதித் (க.க.1) துறை, நாள் 26–5–2014–ன்படி இராமநாதபுரம் மாவட்டம்,

2016 பிப்ரவரி 20]

முதுகுளத்தூர் சார் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.55,00,000/–க்கு (ரூபாய் ஐம்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிருவாக ஒப்பளிப்பு மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி கருவூலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

11—

அணை கட்டுதல்

வினா எண் 36579—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் ஒன்றியம், இராமநாயகன்பாளையம் ஊராட்சி, கல்லாறு பகுதியில் அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் மலையாற்றின் குறுக்கே ஏரி அமைக்க தேவைப்படும் வன நிலங்களை கையகப்படுத்த இத்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டதில், வனத் துறை திட்டம் அமையவுள்ள இடமானது நாகலூர் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும் என்றும் வனப் பகுதியில் நன்கு வளர்ந்துள்ள நிலையில் ஏராளமான மரங்களும் வன விலங்குகளும் மிகுந்துள்ளன என்றும் வனப் பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம்மூலம் மலையாற்றின் குறுக்கே 4 தடுப்பணைகள் கட்டப்பட்டு, அதன்மூலம் மறைமுக நீர் செறிவு தாக்கத்தின்மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள பாசனப் பரப்பு பயனடைந்து வருகின்றன என்றும் தெரிவித்து அந்த நிலத்தினை தர மறுத்துவிட்டது. எனவே, வனத் துறை இத்திட்டத்திற்குத் தேவையான வன நிலங்களை தர மறுத்துள்ளதாலும் உத்தேசிக்கப்பட்ட பாசன பரப்புகள் பயனடைந்து வருவதாலும் அரசால் இத்திட்டமானது கைவிடப்பட்டது.

[2016 *பிப்ரவரி* 20

12—

ஏரி அமைத்தல்

வினா எண் 37134—திருமதி ர. சுபா: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி ஒன்றியம், கடம்பூர் ஊராட்சியில் புதிய ஏரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், கடம்பூர் கிராமத்தில் கலிங்கம் ஆற்றின் குறுக்கே ஏரி அமைக்க திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. திட்டத்திற்கு வன நிலம் 3.02 ஏக்கர் கையகப்படுத்தும்பொருட்டு மாவட்ட வன அலுவலர், வருவாய்க் கோட்டாட்சியர் ஆகியோருடன் பொதுப் பணித் துறையினரால் கூட்டுப் புலத் தணிக்கை செய்யப்பட்டது. இத்திட்டப் பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் (Tamil Nadu Afforestation Project) *மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாலும், வனத் துறையினரால் சில தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளதாலும், மாவட்ட வன அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் புதிதாக ஏரி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. புதிய ஏரிக்குப் பதிலாக புதியதாக குட்டை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இதனடிப்படையில் திட்டத் தளத்தில் வன நிலம் மற்றும் பட்டா நிலம் ஆகியவற்றை தவிர்த்து ரூ.12.50 இலட்சத்திற்குக் குட்டை அமைக்கப்பட்டு, இத்திட்டம் பயன்பாட்டில் உள்ளது.*

13—

ஏரி அமைத்தல்

வினா எண் 37135—திருமதி ர. சுபா: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) கெங்கவல்லி ஒன்றியம், கடம்பூர், கலிங்கம் ஆற்றின் குறுக்கே ஏரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், கடம்பூர் கிராமத்தில் கலிங்கம் ஆற்றின் குறுக்கே ஏரி அமைக்க திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. திட்டத்திற்கு வன நிலம் 3.02 ஏக்கர் கையகப்படுத்தும்பொருட்டு மாவட்ட வன அலுவலர், வருவாய்க் கோட்டாட்சியர் ஆகியோருடன் பொதுப் பணித் துறையினரால் கூட்டுப் புலத் தணிக்கை செய்யப்பட்டது. இத்திட்டப் பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் (Tamil Nadu Afforestation Project) *மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாலும், வனத் துறையினரால் சில தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளதாலும், மாவட்ட வன அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் புதிதாக ஏரி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. புதிய ஏரிக்குப் பதிலாக புதியதாக குட்டை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இதனடிப்படையில் திட்டத் தளத்தில் வன நிலம் மற்றும் பட்டா நிலம் ஆகியவற்றை தவிர்த்து ரூ.12.50 இலட்சத்திற்குக் குட்டை அமைக்கப்பட்டு இத்திட்டம் பயன்பாட்டில் உள்ளது.*

14—

தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 40686—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை பேரூராட்சி பகுதியில் வைகை ஆற்றின் இரு கரையோரங்களிலும் கருங்கல்லினாலான தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சி பகுதியில் வைகை ஆற்றின் இரு கரையோரங்களிலும் கருங்கல்லினாலான தடுப்புச் சுவர் அமைக்க சாத்தியம் இல்லை.

15—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 41064—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, கீரிப்பட்டி, ஊத்துக்காடு பகுதியில் புதிய தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, கீரிப்பட்டியிலுள்ள ஊத்துக்காடு பகுதியில் தடுப்பணை அமைக்க கோரப்பட்ட திட்ட தளத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது திட்டத் தளத்தின் மேற்புறத்தில் 100 மீ. தூரத்தில் ஏற்கெனவே ஒரு தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

16—

பாலம் அமைத்தல்

வினா எண் 49989—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, கோரைக்காடு மாரியம்மன் கோயில் அருகே சரபங்கா ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, கோரைக்காடு மாரியம்மன் கோயில் அருகே சரபங்கா ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்ட கோரிய இடத்திலிருந்து கீழ்புற பகுதியில் 2 கி.மீ. தொலைவிலும், மேல்புற பகுதியில் 2 கி.மீ. தொலைவிலும் இரண்டு பாலங்கள் அமைந்துள்ளது. எனவே, அங்கு தரைப்பாலம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

தூர்வாருதல்

வினா எண் 52010—திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் பெரிய ஏரியை தூர்வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, துறையூர் பெரிய ஏரியை ரூ.83,68,610/– மதிப்பீட்டில் சரி செய்து செப்பனிட்டு புதுப்பிப்பதற்காக அரசாணை (நிலை) எண் 85, பொதுப் பணி (என்2) துறை, நாள் 20–4–2015–ல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

[2016 *பிப்ரவரி* 20

18—

சொந்தக் கட்டடம்

வினா எண் 54119—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர், சார்நிலைக் கருவூலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2014–2015 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு நிதி துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பில் கீழ்வேளூர் சார்நிலைக் கருவூலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் தெரிவு செய்யப்பட்டு, முன்நுழைவு அனுமதி வழங்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வேண்டப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறையிடமிருந்து தோராய திட்ட மதிப்பீடு மற்றும் கட்டட வரைபடம் ஆகியவை பெறப்பட்ட பின்னர், சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பான உரிய ஆணை பிறப்பிக்கப்படும்.

19—

ஆய்வு மாளிகை கட்டுதல்

வினா எண் 54517—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர், பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 54789—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாசுதேவநல்லூர் தலையணைப் பகுதியிலுள்ள செண்பகவல்லி அணை உடைப்பை சீர்செய்து, புதிய தடுப்பணைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி மேற்குப் பகுதி, மேற்கு தொடர்ச்சி மலையில் கேரள மாநிலம் காப்புக் காடுகள் பகுதியில் உள்ள பெரியாறு வடிநிலத்தில் புளியம்பட்டிதோடு மற்றும் சொக்கம்பட்டிதோடு ஆகிய இரு ஓடைகள் கூடுமிடத்தில் செண்பகவல்லி அணைக்கட்டு அமைந்துள்ளது. அதிலிருந்து வரும் கால்வாயில் கேரள மாநில எல்லைக்குள் 30 மீ. அளவில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், தண்ணீர் தமிழக பகுதிக்கு வராமல் கேரள மாநில எல்லைக்குள் சென்றுவிடுகிறது. மேற்படி உடைப்பை சரி செய்ய அரசாணை நிலை எண் 234, நாள் 26–2–1985–ன்மூலம் தமிழக அரசால் ரூ.5.15 இலட்சம் நிதி கேரள அரசுக்கு வழங்கப்பட்டது. ஆனால், கேரள வனப் பகுதியில் புலிகள் சரணாலயம் இருப்பதால் பணிகள்

[2016 பிப்ரவரி 20

செய்ய இயலாது எனக் கூறி டிசம்பர் 2005–ல் தமிழக அரசு செலுத்திய தொகையை கேரள அரசு திரும்ப செலுத்திவிட்டது. மேற்படி சீரமைப்புப் பணியை தமிழ்நாடு அரசு மேற்கொள்வதற்கு இசைவினை தெரிவிக்கும்படியும் அல்லது கேரள அரசு இவ்வணையினை சீரமைக்கும் பணியை மேற்கொள்ளுமாயின் அதற்கான செலவினை தமிழ்நாடு அரசு ஈடுசெய்யும் எனவும், அதற்குரிய ஒப்புதலைத் தெரிவிக்குமாறும் தொடர்ந்து கேரள அரசிடம் நேரடியாகவும் மத்திய அரசின் நீராதார அமைச்சகத்தின் மூலமாகவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளின் நலனை பாதுகாக்கும்பொருட்டு செண்பகவல்லி அணைக்கட்டினை சீரமைக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண தகுந்த நடவடிக்கையின்மூலம் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

21—

நீரேற்றுத் திட்டம்

வினா எண் 56005—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரி உபரி நீர் தொப்பையாறு நீரேற்றுத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேட்டூர் அணையின் முழு நீர் மட்ட அளவு 240.792 மீட்டர் ஆகும். தொப்பையாறு அணையின் முழு நீர் மட்ட அளவு 363.600 மீட்டர் ஆகும். இது, மேட்டூர் அணையின் முழு நீர் மட்ட அளவினைவிட சுமார் 122.808 மீட்டர் உயரமாக இருப்பதால் காவேரி உபரி நீரினை தொப்பையாறு அணைக்கு நீரேற்றுத் திட்டம்மூலம் கொண்டு செல்ல தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

2016 பிப்ரவரி 20]

22—

நதிகள் இணைப்பு

வினா எண் 56757—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரி–பாலாறு நதிகள் இணைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலத்திற்குள் பாயும் ஆறுகள் இணைப்புத் திட்டத்தின்கீழ் காவேரி ஆற்றினை பாலாற்றுடன் இணைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

23—

நதிகள் இணைப்பு

வினா எண் 56758—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் நதிகள் இணைப்பு குறித்து ஆய்வு செய்ய சிறப்புக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் நதிகள் இணைப்பு குறித்து ஆய்வு செய்ய சிறப்புக் குழு அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

24—

சார்நிலைக் கருவூலம் அமைத்தல்

வினா எண் 59803—திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அவினாசி தொகுதி, அன்னூர் வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், அன்னூர் வட்டத்தில், புதிய சார் நிலைக் கருவூலம் அமைப்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

25—

சூரியசக்தி பூங்கா அமைத்தல்

வினா எண் 29003—திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, சூரிய சக்தி பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் சூரிய சக்தி பூங்கா அமைக்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

2016 பிப்ரவரி 20]

26—

மரபுசாரா மின்சக்தி விழிப்புணர்வு

வினா எண் 29025—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூரியசக்தி, காற்றாலை மின்சக்தி குறித்த விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு வருடமும் உலகளாவிய பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கம் மூலமாகவும், சாலை காட்சி மூலமாகவும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை சூரிய சக்தி காற்றாலை மின் சக்தி குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி வருகிறது.

27—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 29032—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், செய்யூர் ஊராட்சி, அவிநாசி கண்டிகை கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், செய்யூர் ஊராட்சி, அவிநாசி கண்டிகை கிராமத்தில் புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்கப்பட்டு 31–3–2015 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டது.

28—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 29563—திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், நீடூரில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், நீடூரில் 12-வது பெருந்திட்ட காலத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது..

29—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 29564—திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மணக்குடியில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க பணியை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், மணக்குடியில் துணை மின் நிலையம் ஒன்றை 12–வது பெருந்திட்ட காலத்தில் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

30—

மின் இணைப்பு

வினா எண் 29789—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, போடி, சிலமலை, சூலப்புரம் பகுதி மக்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, போடி சிலமலை, சூலப்புரம் பகுதியிலிருந்து பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. சூலப்புரம் கிராமத்திலிருந்து பெறப்பட்ட ஒரு விண்ணப்பம் மட்டும் சிலமலை கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஆட்சேபனைத் தெரிவித்ததன் காரணமாக நிலுவையில் உள்ளது.

31—

கடல் பாசி மின்சாரம்

வினா எண் 32334—திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

கடல் பாசியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கடல் பாசியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 32343—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, தேவதானப்பட்டியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, தேவதானப்பட்டியிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள ஏழுவானம்பட்டியில் புதிய 110 கி.வோ. துணை மின் நிலையம் 10 எம்.வி.ஏ. மின்மாற்றியுடன் அமைக்கப்பட்டு 12–6–2014 அன்று இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

33—

நீர்மின் திட்டம்

வினா எண் 34417—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

விளவங்கோடு தொகுதி, கோதையார் நீர்மின் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கோதையார் புனல் திட்டம், கோதையார் மின் நிலையம்–1 (60 மெகா வாட்) மற்றும் கோதையார் மின் நிலையம்–2 (40 மெகா வாட்) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவ்விரு மின் நிலையத்திலிருந்து தண்ணீரின் இருப்பிற்கேற்ப எதிர்வரும் கோடை காலத்திற்கும் பயன்படும்வகையிலும் நீண்ட நாட்கள் இம்மின்நிலையத்தை இயக்குவதற்கு ஏதுவாக தற்போது 40 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

34—

நீர்மின் திட்டம்

வினா எண் 34418—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அணை நீர்மின் திட்டத்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அணை நீர்மின் நிலையத்திலிருந்து இன்றைய தேதியில் பொதுப் பணித் துறையின் நீரின் தேவை இல்லாததால் அலகு ஒன்று இயக்கப்படவில்லை. மேலும், இரண்டாவது அலகு நிர்மாணம் செய்த கம்பெனியரால் திறன் சோதனை நடத்த ஆயத்தமாக உள்ளது. எப்போது பொதுப் பணித் துறையினரால் விவசாய பாசனத்திற்கு நீர் திறந்து விட கேட்டுக்கொள்ளப்படுகிறதோ அப்போது சோதனை ஓட்டம் செய்யப்பட்டு மின் உற்பத்தி இரண்டாவது அலகில் துவங்கப்படும்.

[2016 பிப்ரவரி 20

35—

துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 34492—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, திருவப்பூர் 110 கே.வி. துணை மின் நிலையத்தை 16 மெகா வாட் திறனுடைய மின் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். புதுக்கோட்டை (திருவப்பூர்) துணை மின் நிலையத்தில் உள்ள மின்மாற்றி திறனை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

36—

துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 34493—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, சிப்காட் 110 கே.வி./16 மெகா வாட் திறன் கொண்ட துணை மின் நிலையத்தை கூடுதல் திறன்கொண்ட மின் நிலையமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை அருகே புதுக்கோட்டை நகரம் மற்றும் இச்சடி 110/22 கி.வோ. துணை மின் நிலையங்கள்

அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளதால் சிப்காட் துணை மின் நிலையத்தில் மின்மாற்றி திறனை அதிகரிக்க அவசியம் எழவில்லை.

37—

துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 34494—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி 110 கே.வி./10 மெகா வாட் திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 16 மெகா வாட் திறன்கொண்ட துணை மின் மின் நிலையமாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம், புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் உள்ள 110/33 கி.வோ. 1 x 10 எம்.வி.ஏ. மின்மாற்றியை 1 x 16 எம்.வி.ஏ. மின்மாற்றியாக திறன் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

38—

துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 34495—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு மற்றும் ஆலங்குடி 10 மெகா வாட் திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 16 மெகா வாட் திறன்கொண்ட துணை மின் நிலையமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு மற்றும் ஆலங்குடி துணை மின் நிலையங்களில் மின்மாற்றி திறனை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

39—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 35317—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, அகரக்கடம்பனூர் ஊராட்சி, ஸ்ரீகண்டிநத்தம், வடகரை, இலுப்பூர் மற்றும் ஆய்மழை ஊராட்சி, நாரணமங்கலத்தில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, அகரக்கடம்பனூர் ஊராட்சி, ஸ்ரீகண்டிநத்தம், வடகரை, இலுப்பூர் பகுதிகளுக்கும் மற்றும் ஆய்மழை ஊராட்சி, நாரணமங்கலத்திலும் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுவிட்டன.

40—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 36146—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், செங்கத்தான்குடி ஊராட்சி, பாராவயல் மேலத்தோப்பில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், செங்கத்தான்குடி ஊராட்சி, பாராவயல் மேலத்தோப்பு பகுதிக்கு ஒரு புதிய 100 கே.வி.ஏ./22 கே.வி. மின்மாற்றி திருப்பனந்தாள் SS IV *என பெயரிடப்பட்டு 10–2–2015 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.*

41—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 36255—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம் சருகனியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம் சருகனியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

42—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 37075—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சிறுகப்பட்டி ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சிறுகப்பட்டி ஊராட்சியில் புதிய 100 கே.வி.ஏ./22 கே.வி. மின்மாற்றி சிறுகப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டு 30–9–2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

43—

கோதையாறு மின் திட்டம்

வினா எண் 37507—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையார் மின் திட்டத்தை நவீனப்படுத்தி, மின் உற்பத்தியை பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையார் 1, கோதையார் 2 என இரண்டு புனல் மின் நிலையங்களும் மிகச் சிறப்பாக இயங்கி வந்தாலும் மின் நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உழைப்புக்காலம் முடிவடைந்த நிலையில் அவற்றின் உழைப்பு மற்றும் பாதுகாப்புத் தன்மையை அறியும்பொருட்டும் மின் நிலையத்தை நவீனமயமாக்கும்பொருட்டும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பணிகள் விரைவில் துவங்கி முடிவடைவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

44—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 38034—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் பழையனூரில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

45—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 38362—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, அய்யம்பாளையம், எஸ்.ஆர். நகர், சிவசக்தி நகர் ஆகிய கிராமங்களில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, அய்யம்பாளையம், எஸ்.ஆர். நகர் பகுதியில் புதிய மின்மாற்றி ஒன்று நிறுவப்பட்டு, 13–9–2013 அன்றும், அய்யம்பாளையம் சிவசக்தி நகர் பகுதியில் புதிய 100 கே.வி.ஏ./11 கி.வோ. மின்மாற்றி ஒன்று நிறுவப்பட்டு, 21–5–2014 அன்றும் மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டன.

46—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 41313—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், வேப்பங்குப்பம் பகுதியில் 110 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், வேப்பங்குப்பம் பகுதியில் 110 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றி அமைக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

2016 பிப்ரவரி 20]

47—

சூரியசக்தி மின்சாரம்

வினா எண் 43690—திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பாம்பூர் ஊராட்சிப் பகுதியில் சூரியசக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்ட பணிகள் எப்போது துவக்கப்படும் என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பாம்பூர் ஊராட்சிப் பகுதியில் 100 மெகா வாட் திறன்கொண்ட சூரியசக்தி மின் உற்பத்தி பூங்கா அமைக்க ராசி கிரீன் பவர் எனர்ஜி என்ற தனியார் நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு, 100 மெகா வாட் திறன்கொண்ட சூரியசக்தி மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின் கட்டமைப்பிற்குக் கொண்டு செல்லும் மின் தொடர் மற்றும் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

48—

சூரியசக்தி துணை மின் நிலையம்

வினா எண் 45553—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூரிய மின்சக்திமூலம் துணை மின் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூரிய மின் சக்திமூலம் துணை மின் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

49—

கோதையார் மின் திட்டம்

வினா எண் 46344—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோதையார் மின் திட்டத்தை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கோதையார் மின் திட்டத்தை விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

50—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 46774—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையமே இப்பகுதியில் உள்ள மின் பளுவை எதிர்கொள்ள போதுமானதாகும். எனவே, ஆலங்காட்டில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

51—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 47672—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, சிராயன்பட்டி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, சிராயன்பட்டி கிராமத்தில் புதிய 100 கே.வி.ஏ./11 கே.வி. சிராயன்பட்டி SS XII மின்மாற்றி அமைக்கப்பட்டு, 17–9–2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

52—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 49478—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், நொச்சியூரணி கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், உச்சிபுளி நொச்சியூரணி கிராமத்தில் 100 கே.வி.ஏ./22 கே.வி. மின்மாற்றி 16–2–2015 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

53—

துணை மின் நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 49586—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி வட்டம், ஆச்சாள்புரம் துணை மின் நிலையத்தை 110 கே.வி.ஏ. ஆக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், ஆச்சாள்புரம் துணை மின் நிலையத்தில் 1x8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றி உபயோகத்தில் இருந்தது. இதன் உச்ச மின் பளு 8 எம்.வி.ஏ. ஆகும். இப்பகுதியில் பெருகிவரும் மின்பளுவை நிறைவு செய்ய இரண்டாவது 8 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு, ரூபாய் 144.10 இலட்சத்தில் 26–3–2015 அன்று மின்மாற்றி இயக்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆச்சாள்புரம் துணை மின் நிலையத்தை தரம் உயர்த்தும் கருத்துரு தற்போது இல்லை.

54—

சொந்தக் கட்டடம்

வினா எண் 50215—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியிலுள்ள இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சிக்கு உட்பட்ட உதவி மின்பொறியாளர் அலுவலகம் ஏற்கெனவே கரைப்புதூர் ஊராட்சியில் கரைப்புதூருக்கு அருகில் அமைந்துள்ள 110/11 கி.வோ. வீரபாண்டி துணை மின் நிலைய வளாகத்தில் உள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

55—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 50247—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், பாலாபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், பாலாபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

56—

புதை மின்வடம் அமைத்தல்

வினா எண் 50308—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, பல்லடம் நகராட்சி பகுதிகளில் புதை மின் வடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி, பல்லடம் நகராட்சி பகுதிகளில் உயரழுத்த புதை மின் வடங்கள் அமைக்க தற்சமயம் கருத்துரு ஏதும் இல்லை.

57—

மானிய விலை மின்சாரம்

வினா எண் 50698—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சிக்கு பயன்படுத்தும் தொழிற்கூடத்திற்கு மானிய விலையில் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரித்து மறு சுழற்சிக்கு பயன்படுத்தும் தொழிற்சாலை கூடத்திற்கு மானிய விலையில் மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

2016 பிப்ரவரி 20]

58—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 51090—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, செம்பியத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, செம்பியத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க தேவை எழவில்லை.

59—

புதை மின் வடம் அமைத்தல்

வினா எண் 51094—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 45–வது வட்டம், கணேசபுரம் 1,2,3 தெருக்கள் மற்றும் சுந்தரம் 2–வது தெருவில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதை வடங்களாக பதிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 45–வது வட்டம், கணேசபுரம் 1,2,3 தெருக்கள் மற்றும் சுந்தரம் 2–வது தெருவில் மின்சாரம் புதைவடம் மூலமாகத்தான் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

[2016 பிப்ரவரி 20

60—

புதை மின் வடம் அமைத்தல்

வினா எண் 51097—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 46–வது வட்டம், மல்லிகைப்பூ காலனியில் சாலையின் மேலே செல்லும் மின்கம்பிகளை பூமிக்கடியில் புதை வடங்களாக பதிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 46–வது வட்டம், மல்லிகைப்பூ காலனியில் சாலையில் உள்ள மின்கம்பிகள் பூமிக்கடியில் புதை வடங்களாகத்தான் உள்ளன.

61—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 51099—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 34–வது வட்டம், எவரெடி காலனி 18–வது தெரு, விளையாட்டு மைதானம் அருகில் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 34–வது வட்டம், எவரெடி காலனி 18–வது தெரு விளையாட்டு மைதானம் அருகில் புதிய 250 கே.வி.ஏ. மின்மாற்றி எவரெடி காலனி SS II, மின்மாற்றியாக 5–1–2015 அன்று அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது.

2016 பிப்ரவரி 20]

62—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 51100—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 34—வது வட்டம், வெங்கடேஸ்வரா நகர், தென்றல் நகர் பகுதிகளில் மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 34—வது வட்டம், தென்றல் நகர் 7—வது தெரு மற்றும் மணலி நெடுஞ்சாலைக்கு இடைப்பட்ட பகுதியிலும் மற்றும் வெங்கடேஸ்வரா நகர் 2—வது தெருவிலும் புதிய மின்மாற்றிகள் மற்றும் வளைய மின்சுற்றுதர் சாதனம் (ஆர்.எம்.யூ—RMU) அமைக்க மறுசீரமைக்கப்பட்ட திட்டத்தில் (R-APDRP) ஒப்புதல் பெறப்பட்டு, புதிய 250 கே.வி.ஏ. மின்மாற்றி மற்றும் வளைய மின்சுற்றுதல் சாதனம் (ஆர்.எம்.யூ—RMU) தென்றல் நகர் 7—வது தெரு மற்றும் மணலி நெடுஞ்சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டு, 17—12—2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது. மேலும், புதிய 250 கே.வி.ஏ. மின்மாற்றி மற்றும் வளைய மின்சுற்றுதர் சாதனம் வெங்கடேஸ்வரா நகர் 2—வது தெருவில் அமைக்கப்பட்டு, 4—4—2015 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

63—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 51231—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், நாச்சிபாளையம் ஊராட்சி, புளியாண்டம்பாளையத்தில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், நாச்சிபாளையம் ஊராட்சி, புளியாண்டம்பாளையம் பகுதிக்கு 110/11 கி.வோ. அலகுமலை துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. நாச்சிபாளையம் மின்பாதை வழியாக மின்னூட்டம் செய்யப்படுகிறது. தற்போது புளியாண்டம்பாளையம் உள்ளிட்ட நாச்சிபாளையம் ஊராட்சியில் மின்விநியோகம் சீரான முறையில் இருந்து வருகிறது என்பதாலும், ஏற்கெனவே அப்பகுதியில் உள்ள 100 கே.வி.ஏ. புளியாண்டம்பாளையம் மின்மாற்றி எண் 1 மற்றும் 63 கே.வி.ஏ. R.G.G.V.Y. மின்மாற்றி போதுமானது என்பதாலும் கூடுதலாக மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

64—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 52478—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, பீர்க்கலைக்காட்டில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. காரைக்குடி தொகுதி, பீர்க்கலைக்காட்டில் துணை மின் நிலையம் அமைக்க அவசியம் தற்போது எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

65—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 52836—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சருகனி ஊராட்சி, சருகனியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சருகனி ஊராட்சி, சருகனியில் மின்னழுத்த குறைபாடு எதுவும் இல்லாததால் தற்போது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

66—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 52889—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பர்மா காலனியில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பர்மா காலனி பகுதியில் புதிய 100 கே.வி.ஏ./22 கே.வி. மின்மாற்றி அமைக்கப்பட்டு, 23–3–2015 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

[2016 பிப்ரவரி 20

67—

அலுவலகம் கட்டுதல்

வினா எண் 54766—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஊராட்சி ஒன்றியம், வாலிப்பட்டி ஊராட்சி, நத்தகயம் கிராமத்தில் தமிழ்நாடு மின்சார வாரிய பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஊராட்சி ஒன்றியம், வாலிப்பட்டி ஊராட்சி, நத்தகயம் கிராமத்தில் புதிய மின்சார வாரிய பிரிவு அலுவலகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

68—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 56159—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், எலையமுத்தூர் ஆதி திராவிடர் காலனியில் புதிய மின்மாற்றிகள் அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், எலையமுத்தூர் ஆதி திராவிடர் காலனியில் புதிய 100

2016 பிப்ரவரி 20]

கே.வி.ஏ./22 கே.வி. எலையமுத்தூர் SS 19 மின்மாற்றி அமைக்கப்பட்டு, 9–3–2015 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

69—

காற்றாலை மின்சாரம்

வினா எண் 56285—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மின் பற்றாக்குறையைப் போக்க, புதிய காற்றாலைகளை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மின் பற்றாக்குறையைப் போக்க, தனியார் துறையால் அமைக்கப்படும் காற்றாலைகளை நிறுவ அரசு ஆவன செய்து வருகிறது.

70—

துணை மின் நிலையம் சீரமைத்தல்

வினா எண் 56523—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் அருகிலுள்ள துணை மின் நிலையத்தை சீரமைத்து நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் அருகிலுள்ள மானாமதுரை 110/22 கி.வோ. துணை மின்

[2016 பிப்ரவரி 20

நிலையத்தில் 14–11–2014 அன்று ஏற்பட்ட பழுது சீரமைக்கப்பட்டு, பழுதான இரண்டு மின்மாற்றிகளும் மாற்றப்பட்டு, புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு தற்சமயம் நன்கு செயல்பட்டு வருகிறது.

71—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 56524—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, அன்பு நகரில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, அன்பு நகர் பகுதிக்கு தற்போது இரண்டு 200 கே.வி.ஏ./22 கே.வி. மின்மாற்றிகள் மற்றும் ஒரு 100 கே.வி.ஏ./22 கே.வி. மின்மாற்றிகள்மூலம் மின்விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகளில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளு வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், மேற்படி பகுதியில் குறைந்த மின்னழுத்த குறைபாடு எதுவும் இல்லாததாலும் தற்போது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

72—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 56618—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அரனையூர் கிராமத்தில் கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அரனையூர் கிராமத்தில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

73—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 56619—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், இராஜபுளியேந்தல் கிராமத்தில் கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், இராஜபுளியேந்தல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

74—

சூரிய ஒளி மின்சாரம்

வினா எண் 58736—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதியில் சூரிய ஒளியின் மூலமாக மின் உற்பத்தி செய்யும் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில் சூரிய ஒளியின் மூலமாக மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

75—

குப்பைமூலம் மின்சார உற்பத்தி

வினா எண் 58739—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சியில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சியில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

2016 பிப்ரவரி 20]

76—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 59786—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அளவிடங்கானில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அளவிடங்கானில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

77—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 59787—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், வ.அண்டக்குடியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், வ.அண்டக்குடியில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

78—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 59790—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், மெய்யனேந்தலில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், மெய்யனேந்தலில் கூடுதலாக புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

79—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 59791—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், ஆழிமதுரை ஆதி திராவிடர் காலனியில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், ஆழிமதுரை ஆதி திராவிடர் காலனியில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

80—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 59807—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்பரிஷிபுரம் ஊராட்சி, ஜடேரி காலனியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்பரிஷிபுரம் ஊராட்சி, ஜடேரி காலனியில் மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

81—

மின்மாற்றி அமைத்தல்

(அ) செங்கம் வட்டம், வளையம்பட்டு வலசைக்கு செல்லும் இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கம் வட்டம், வளையம்பட்டு வலசைக்கு செல்லும் இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

159—

மாற்றுச் சாலை அமைத்தல்

வினா எண் 35589—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் நகரில் கவுண்டன்யா மகாநதி கரைமீது மாற்றுச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் நகரில் கவுண்டன்யா மகாநதி கரை மீது மாற்றுச் சாலை அமைக்க கோருமிடம் ஊராட்சி மற்றும் நகராட்சி சாலைகள் என்பதால் அவ்விடத்தில் மாற்றுச் சாலை அமைக்க தற்போது சாத்தியமில்லை.

2016 பிப்ரவரி 20]

160—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 35722—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலிருந்து சீர்காழி வரை புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலிருந்து சீர்காழி வரை புறவழிச்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

161—

பாலம் கட்டுதல்

வினா எண் 35749—திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, சந்திரப்பாடி கிராமச் சாலையின் குறுக்கேயுள்ள உப்பனாற்றில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, சந்திரப்பாடி கிராமச் சாலையின் குறுக்கேயுள்ள உப்பனாற்றில் புதிய பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

[2016 பிப்ரவரி 20

162—

பாலம் அமைத்தல்

வினா எண் 36580—திரு. கே. குப்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, விம்கோ நகர் பகுதியில் இரயில்வே கடவில் சாலை கீழ்ப்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, விம்கோ நகர் பகுதியில் இரயில்வே கடவில் சாலை கீழ்ப்பாலம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

163—

பாலம் அமைத்தல்

வினா எண் 36710—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி தேவகோட்டை சாலையிலுள்ள தேனாத்தி ஆற்றில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி தேவகோட்டை சாலையிலுள்ள தேனாத்தி ஆற்றின் குறுக்கே

2016 பிப்ரவரி 20]

பாலம் அமைக்கும் பணிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி துவங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

164—

நான்கு வழிச்சாலை அமைத்தல்

வினா எண் 36880—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம், அயோத்தியாப்பட்டினம் முதல் அரூர் ஊத்தங்கரை வழியாக செல்லும் மாநில நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், அயோத்தியாப்பட்டினம் முதல் அரூர் ஊத்தங்கரை வழியாக செல்லும் மாநில நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

165—

நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துதல்

வினா எண் 37106—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர்–சாயல்குடி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர்–சாயல்குடி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

166—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 37124—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

167—

பாலம் அமைத்தல்

வினா எண் 37216—திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, மேமாத்தூர்–உத்திரங்குடி நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் கடலாழி ஆற்றில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, மேமாத்தூர்–உத்திரங்குடி நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் கடலாழி ஆற்றில் உள்ள பாலம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, பாலத்தை புதுப்பித்து கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

168—

நெடுஞ்சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 37338—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், ஆலப்பாக்கம் முதல் உளுந்தூர்பேட்டை வரையுள்ள சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி அகலப்படுத்தி மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், ஆலப்பாக்கம் முதல் உளுந்தூர்பேட்டை வரையுள்ள சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி அகலப்படுத்தி மேம்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

169—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 37581—திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் பகுதியில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தாராசுரம் (கும்பகோணம்) முதல் தஞ்சாவூர் பள்ளியக்ரஹாரம் வரை புதிய நேர்பாட்டில் புறவழிச் சாலை (Byepass) *அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

170—

பாலம் அமைத்தல்

வினா எண் 37788—திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் வட்டம், மருதூர் தெற்கு முதல் கரியாப்பட்டினம் நெடுஞ்சாலையில் நாசியம்பெளம் ஆற்றின் குறுக்கே பாலம் பழுதடைந்துள்ளதால் பானாமடைப் பகுதியில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் வட்டம், மருதூர் தெற்கு முதல் கரியாப்பட்டினம் நெடுஞ்சாலையில் நாசியம்பெளம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

171—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 37794—திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) வேதாரண்யத்தில் புறவழிச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

172—

விருந்தினர் மாளிகை கட்டுதல்

வினா எண் 38073—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேனி மாவட்டம், வீரபாண்டியில் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான விருந்தினர் மாளிகைக்கு புதியதாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், வீரபாண்டியில் புதியதாக விருந்தினர் மாளிகை கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

173—

சுரங்க நடைபாதை அமைத்தல்

வினா எண் 38078—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பாலுச்செட்டிச்சத்திரம் அருகே சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பாலுச்செட்டிச்சத்திரம் அருகே சுரங்க நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

174—

சாலை தரம் உயர்த்துதல்

வினா எண் 38080—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல்லில் இருந்து குஜிலியம்பாறை வழியாக கரூர் செல்லும் சாலையின் தரத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்லில் இருந்து குஜிலியம்பாறை வழியாக கரூர் செல்லும் சாலையின் தரத்தை மேம்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

175—

சாலை சீரமைத்தல்

வினா எண் 39731—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

திசையன்விளை பேரூராட்சிப் பகுதி வழியாகச் செல்லும் நாங்குநேரி–உவரி சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திசையன்விளை பேரூராட்சிப் பகுதி வழியாகச் செல்லும் நாங்குநேரி–உவரி சாலையை சீரமைக்கும் பணிக்கான ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

176—

பயணியர் மாளிகை அமைத்தல்

வினா எண் 39753—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடத்தில் கூடுதல் அறைகளுடன் புதிய பயணியர் மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடத்தில் புதிய பயணியர் மாளிகை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

177—

பயணியர் விடுதி அமைத்தல்

வினா எண் 39756—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூரில் புதிய நவீன பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூரில் புதிய நவீன பயணியர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 40864—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை நகரிலுள்ள திருவப்பூர் இரயில்வே கடவுக்கு அருகில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை நகரிலுள்ள திருவப்பூர் இரயில்வே கடவுக்கு அருகில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

179—

உயர்மட்ட பாலம் அமைத்தல்

வினா எண் 41059—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஒட்டப்பட்டி, ஒலப்பாடி, தென்னம்பிள்ளையூர் இணைப்பு சாலையில் உயர்மட்ட பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஒட்டப்பட்டி, ஒலப்பாடி, தென்னம்பிள்ளையூர் இணைப்பு சாலையில் உயர்மட்ட பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

180—

பாலம் அமைத்தல்

வினா எண் 41061—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, ஏத்தாபூரிலுள்ள பழைய குறுகிய பாலத்தை அகற்றி விட்டு அகலமான பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஏத்தாபூரிலுள்ள பழைய குறுகிய பாலத்தை அகற்றி விட்டு அகலமான பாலம் கட்ட தள ஆய்வுப் பணிகள் முடிவுற்று வடிவமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

181—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 41263—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம், பனப்பட்டியிலிருந்து சுல்தான் பேட்டைக்குச் செல்லும் சாலையிலுள்ள பள்ளத்தில் உயர்மட்ட பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம் பனப்பட்டியிலிருந்து சுல்தான் பேட்டைக்குச் செல்லும் சாலையிலுள்ள பள்ளத்தில் உயர்மட்ட பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

182—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 41264—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம், பனப்பட்டி கிராமத்திலிருந்து செட்டிப்பாளையம் செல்லும் சாலையிலுள்ள பள்ளத்தில் உயர்மட்ட பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம்–பனப்பட்டி கிராமத்திலிருந்து செட்டிப்பாளையம் செல்லும் சாலையில் உள்ள தரைமட்ட பாலத்திற்கு பதிலாக உயர்மட்ட பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

2016 பிப்ரவரி 20]

183—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 41279—திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் நகரம், புதுப்பேட்டை பகுதி, திருச்சி வழி மாநில சாலையிலுள்ள இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?.

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் நகரம், புதுப்பேட்டை பகுதி, திருச்சி வழி மாநில சாலையிலுள்ள இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

184—

சாலை சீரமைத்தல்

வினா எண் 41586—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், ஆற்றங்கரை முதல் கோப்பெரி மடம் வரையுள்ள பழுதடைந்த சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், ஆற்றங்கரை முதல் கோப்பெரி மடம் வரையுள்ள பழுதடைந்த சாலையை 2013–14 ஆம் ஆண்டின்

[2016 பிப்ரவரி 20

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பராமரிப்பு திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட உள்ளது.

185—

மேல்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 41819—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், மறுகால்குறிச்சி ஊராட்சி, நீதிமன்ற வட்ட அலுவலகம் முன்பு மேல்மட்ட பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை 7–ல் மதுரை–கன்னியாகுமரி சாலையில் நாங்குநேரி நீதிமன்றம் மற்றும் வட்ட அலுவலகம் முன்பு மேல்மட்ட பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

186—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 41823—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், பொன்னாக்குடி ஊராட்சி, பொன்னாக்குடி நான்கு வழிச்சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை ஒன்றியம், பொன்னாக்குடி ஊராட்சி, பொன்னாக்குடி நான்கு வழிச்சாலையில் மேம்பாலம் கட்டுவது தொடர்பான திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

187—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 42922—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சிக்கு புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சிக்கு புறவழிச்சாலை அமைப்பதற்கான நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

188—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 43886—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி சாலையில் தட்டாங்கோவில் முதல் திருத்துறைப்பூண்டி கோடியக்கரை வரை உள்ள நெடுஞ்சாலைத் துறை சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மன்னார்குடி சாலையில் தட்டாங்கோவில் முதல் திருத்துறைப்பூண்டி கோடியக்கரை வரை உள்ள சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

189—

உயர்மட்ட இணைப்புப் பாலம் அமைத்தல்

வினா எண் 43899—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, சிட்லிங் கிராமம் மற்றும் மலைத்தாங்கி கிராமங்களுக்கிடையே உள்ள பெரிய காட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட இணைப்பு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சிட்லிங் கிராமம் மற்றும் மலைத்தாங்கி கிராமங்களுக்கிடையே உள்ள பெரிய காட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட இணைப்பு பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

190—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 43922—திருமதி ர. சுபா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி தொகுதி, ஜங்கமசமுத்திரம் ஊராட்சி, வாழக்கோம்பைக்கு செல்லும் சாலையின் குறுக்கே வரட்டாற்றில் மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, ஜங்கமசமுத்திரம் ஊராட்சி, வாழக்கோம்பைக்கு செல்லும் சாலையில் வரட்டாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

191—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 43929—திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தே.நெ.49—ல் கமுதக்குடி இரயில் கடவு மற்றும் உச்சிப்புளி இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

கமுதக்குடி இரயில்வே கடவு:

தே.நெ. 49 சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும்போது, கமுதக்குடி இரயில் கடவில் மேம்பாலம் அமைக்கும் பணியினையும் சேர்த்து மேற்கொள்ளப்படும்.

உச்சிப்புளி இரயில்வே கடவு:

உச்சிப்புளி இரயில்வே நிலையம் அருகில் மேம்பாலம் கட்டுவதற்கு 2014–2015 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் திட்டத்தில் (Annual Plan 2014-2015) சாலை மேம்பாடு செய்ய மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைத்தவுடன், சாலை மேம்பாடு பணிகள் மற்றும் உச்சிப்புளி இரயில்வே கடவு மேம்பாலம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

192—

சாலை தரம் உயர்த்துதல்

வினா எண் 43930—திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை எண் 210-லிருந்து பிரிந்து சித்தார்கோட்டை, அத்தியூத்து, நேர்போகி, புதுவலசை, பனைக்குளம், அழகன்குளம், ஆத்தாங்கரை வழியாக தே.நெ.எண்.49 வரை செல்லும் 21 கி.மீ சாலையை மாவட்ட இதர சாலையிலிருந்து மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) மேற்கண்ட சாலையை மாவட்ட இதர சாலையிலிருந்து மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்த போக்குவரத்து செறிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

193—

இருவழிப் பாதை அமைத்தல்

வினா எண் 47659—திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, வடமதுரை முதல் 24 வீரபாண்டி வரையுள்ள சாலையை இருவழிப் பாதையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் தொகுதி, வடமதுரை முதல் 24 வீரபாண்டி வரையுள்ள சாலையை இருவழிப் பாதையாக மாற்றி அமைக்கும் திட்டம் தற்சமயம் இல்லை.

194—

உள் வட்டச்சாலை அமைத்தல்

வினா எண் 47822—திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராஜபாளையம் நகருக்கு உள் வட்டச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ராஜபாளையம் நகருக்கு உள் வட்டச்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

195—

தேசிய நெடுஞ்சாலை சீரமைத்தல்

வினா எண் 48035—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) மார்த்தாண்டம் முதல் நாகர்கோவில் வரையிலான தேசிய நெடுஞ்சாலையினை (தே.நெ.எண் 47) சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டம் முதல் நாகர்கோவில் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 47–யினை சீரமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

196—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 48075—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, மதுரை–கன்னியாகுமரி தங்கநாற்கரச் சாலையில் பணகுடி பகுதியிலிருந்து தண்டையார்குளம் சுண்டவிளை வழியாக கும்பிளம்பாடு வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி, மதுரை–கன்னியாகுமரி தங்கநாற்கரச் சாலையில் பணகுடி பகுதியிலிருந்து தண்டையார்குளம் சுண்டவிளை வழியாக கும்பிளம்பாடு வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

2016 பிப்ரவரி 20]

197—

இருவழிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 48076—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு சந்திப்பிலிருந்து காவல்கிணறு வடக்கன்குளம் வழியாக ராதாபுரம் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு சந்திப்பிலிருந்து காவல்கிணறு வடக்கன்குளம் வழியாக ராதாபுரம் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

198—

பாலம் அமைத்தல்

வினா எண் 48077—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி வழியாகச் செல்லும் மதுரை—கன்னியாகுமரி தங்கநாற்கரச் சாலை பணகுடி நுழைவாயில் பகுதியில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை—கன்னியாகுமரி தங்கநாற்கரச் சாலை பணகுடி புறவழிச் சாலையின் ஆரம்ப மற்றும் முடிவு பகுதியில் மேம்பாலம் கட்டும்

பணிகள் துவங்கப்பட்டு விட்டன. பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

199—

இருவழிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 48078—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, திசையன்விளை–இட்டமொழி சாலையினை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி, திசையன்விளை–இட்டமொழி சாலையினை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

200—

பாலம் அமைத்தல்

வினா எண் 48079—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி உவரி சாலையில் நாங்குநேரி இருப்புப்பாதை கடவில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி–உவரி சாலையில் நாங்குநேரி இருப்புப்பாதை கடவில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

2016 பிப்ரவரி 20]

201—

சுரங்கப்பாதை அல்லது நடைபாதை மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 48090—திரு. து. முருகேசன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர், கூடுவாஞ்சேரி மற்றும் சிங்கபெருமாள்கோவில் ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அல்லது நடைப்பாதை மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மறைமலைநகர், கூடுவாஞ்சேரி மற்றும் சிங்கப்பெருமாள் கோவில் ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் சுரங்கபாதை அல்லது நடைபாதை மேம்பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது ஏதுமில்லை.

202—

உயர்மட்ட பாலம் அமைத்தல்

வினா எண் 49039—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆனைமலை பூலாங்கிணர் நெடுஞ்சாலையில் சாலையூர் கிராமத்தின் தெற்குப்பகுதி தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்ட பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆனைமலை பூலாங்கிணர் நெடுஞ்சாலையில் சாலையூர் கிராமத்தின் தெற்குப்பகுதி தரைமட்டப் பாலத்திற்கு பதிலாக உயர்மட்ட பாலம் கட்ட ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

203—

உயர்மட்ட பாலம் அமைத்தல்

வினா எண் 49040—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பூலாங்கிணர்–கொங்கல் நகரம் நெடுஞ்சாலையில் கி.மீ. 0/2–ல் உயர்மட்ட பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பூலாங்கிணர்–கொங்கல் நகரம் நெடுஞ்சாலையில் கி.மீ. 0/2–ல் உயர்மட்ட பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

204—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 49235—திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) கடலூர்–நகாப்பட்டினம் சாலை, சீர்காழி தென்னலக்குடி முதல் ஆக்கூர் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 45ஏ சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர்–நாகப்பட்டினம் சாலை, சீர்காழி தென்னலக்குடி முதல் ஆக்கூர் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண்.45ஏ சாலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

205—

தடுப்புச்சுவர் அமைத்தல்

வினா எண் 49411—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, வேதாளை சாலையில் உள்ள குறுகலான மேட்டுப் பகுதியில் சாலையை அகலப்படுத்தி, இருபுறமும் தடுப்புச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் தொகுதி, வேதாளை சாலையில் போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாத காரணத்தினால் தற்போது அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

206—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 49908—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விக்கிரபாண்டியம், திருக்கொள்ளிக்காடு, திருநெல்லிக்காவல் வரை உள்ள சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விக்கிரபாண்டியம், திருக்கொள்ளிக்காடு, திருநெல்லிக்காவல் வரை உள்ள சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

207—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 49919—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் முதல் தஞ்சாவூர் வரை உள்ள சாலையை இருவழிச் சாலையாக மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தாராசுரம் (கும்பகோணம்) முதல் தஞ்சாவூர் பள்ளியக்ரஹாரம் வரை புதிய நேர்பாட்டில் வலுவூட்டப்பட்ட புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

208—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 50403—திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

தஞ்சாவூர் மாவட்டம், அய்யம்பேட்டை முதல் தாராசுரம் வரை புறவழிச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தாராசுரம் (கும்பகோணம்) முதல் தஞ்சாவூர் பள்ளியக்ரஹாரம் வரை புதிய நேர்பாட்டில் புறவழிச் சாலை (Bye-pass) அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

209—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 50413—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் வட்டம், வசப்பத்தூர் ஊராட்சி, நடராஜபுரத்தையும் கீழதிருச்சுழிப்பாலை வீரன் கோவில்திட்டையும் இணைத்து உப்பனாற்றில் புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம், வசப்பத்தூர் ஊராட்சி, நடராஜபுரத்தையும் கீழதிருச்சுழிப்பாலை வீரன் கோவில்திட்டையும் இணைத்து உப்பனாற்றில் புதிய பாலம் ரூ.10.06 கோடி செலவில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உயர்மட்ட பாலப் பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

210—

பாலத்தை புதுப்பித்தல்

வினா எண் 50415—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிழக்கு கடற்கரை சாலையில் சிதம்பரத்துக்கும்–சீர்காழிக்கும்–கொள்ளிடம் பாலத்துக்கும் இடையில் உள்ள பழமையான கொள்ளிடம் பாலத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிழக்கு கடற்கரை சாலையில் சிதம்பரத்துக்கும்–சீர்காழிக்கும்–கொள்ளிடம் பாலத்துக்கும் இடையில் உள்ள பழமையான கொள்ளிடம் பாலம் கி.மீ.116/10–ல் பழைய செங்கற்களால் ஆன ஆர்ச் வடிவ குறுகிய பாலமாக தே.நெ.45ஏ–ல் அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டம் பகுதி–IV (NHDP - Phase IV) திட்டத்தின்கீழ் இப்பழைய பாலத்திற்குப் பதில் புதிய பாலம் கட்டப்படவுள்ளது.

211—

சர்க்கரை ஆலை சாலையை சீரமைத்தல்

வினா எண் 50569—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சி, சேத்தியாதோப்பு சர்க்கரை ஆலை சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சி, சேத்தியாதோப்பு சர்க்கரை ஆலை சாலையை சீரமைக்க வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

212—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 50570—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சியிலுள்ள ஷெட்டர் பாலம் மிக குறுகலாக உள்ளதால் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சியிலுள்ள குறுகலான ஷெட்டர் பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

213—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 50571—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைக்க ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

214—

மேம்பாலப் பணிகளை விரைவுப்படுத்துதல்

வினா எண் 50581—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவை மாநகரிலுள்ள நஞ்சுண்டாபுரம், இராமநாதபுரம் சாலையில் அமைக்கப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்தி பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கோவை மாநகரிலுள்ள நஞ்சுண்டாபுரம், இராமநாதபுரம் சாலையில் அமைக்கப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப்பணி முடிவடைந்துள்ளது. துணை வேலையான படிக்கட்டுகள் கட்டும் பணி செயலாக்கப்படவுள்ளது. சேவை சாலை மற்றும் வடிகால் கட்டும் பணி கோவை மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ளது.

215—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 50780—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, ஹைவேவிஸ் பேரூராட்சியில் தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, ஹைவேவிஸ் பேரூராட்சி பகுதியில் சாலை அமைக்க முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

216—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 50801—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி புறவழிச்சாலை அமைக்கும் பணியினை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்தணி புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெறுகிறது. அப்பணிகள் முடிந்தவுடன் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும்.

217—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50803—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) பள்ளிப்பட்டு வட்டம், அம்மையார் குப்பம்—மகன்கானிபுரம் வழியாக சி.ஜி. சாலை வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், அம்மையார் குப்பம்—மகன்கானிபுரம் வழியாக சி.டி. சாலை வரையுள்ள சாலையில் தற்போது போக்குவரத்து செறிவு குறைவாகவுள்ளதால் இச்சாலையை அகலப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

218—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50804—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், அம்மையார் குப்பம் முதல் சி.டி. சாலை வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, ஆர். கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், அம்மையார் குப்பம் முதல் சி.டி. சாலை வரையுள்ள சாலையில் போக்குவரத்துச் செறிவு குறைவாக இருப்பதால் இச்சாலையை அகலப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

2016 பிப்ரவரி 20]

219—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50805—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிப்பட்டு வட்டம், சி.டி. சாலையிலிருந்து கட்டாரிகுப்பம் வரையிலுள்ள சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், சி.டி. சாலையிலிருந்து கட்டாரிகுப்பம் கிராமம் வரையிலுள்ள சாலையில் போக்குவரத்து செறிவு குறைவாக இருப்பதால் இச்சாலையை அகலப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பாசீலனையில் தற்போது இல்லை.

220—

நான்கு வழிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 50846—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூரிலிருந்து தாராபுரம் வழியாக ஒட்டன்சத்திரம் வரையுள்ள சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு இடம் கையகப்படுத்தி பணிகளை விரைவாக துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூரிலிருந்து தாராபுரம் வழியாக ஒட்டன்சத்திரம் வரையுள்ள சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

221—

நான்கு வழிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 50848—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம்–பொள்ளாச்சி சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம்–பொள்ளாச்சி சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

222—

ஆறு வழிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 50849—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர்–பல்லடம் வரையுள்ள சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர்–பல்லடம் வரையுள்ள சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

223—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 50853—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, சென்னை–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் மாமங்கலம் செங்கால் ஓடையில் அமைந்துள்ள குறுகிய பாலத்தை மாற்றி புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, சென்னை–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் மாமங்கலம் செங்கால் ஓடையில் அமைந்துள்ள குறுகிய பாலத்தை மாற்றி புதிய பாலம் அமைக்க ஆரம்ப நிலை பணிகள் முடிவு செய்யப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

224—

இருவழிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 50875—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு–கம்மாபுரம் செல்லும் சாலையை இருவழிச்சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு–கம்மாபுரம் செல்லும் சாலையை இருவழிச்சாலையாக மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

225—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 50876—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரியில் புறவழிச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, புவனகிரியில் புறவழிச்சாலை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

226—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 50880—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சி–கீரப்பாளையம் ஊராட்சியை இணைக்கும் வெள்ளாற்றின் குறுக்கேயுள்ள பாலம் பழுதடைந்துள்ளதால் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சி–கீரப்பாளையம் ஊராட்சியை இணைக்கும் வெள்ளாற்றின் குறுக்கேயுள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

227—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50962—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி முதல் விளக்குடி வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி முதல் விளக்குடி வரையுள்ள சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

228—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50963—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கச்சனம் முதல் திருக்கொள்ளிக்காடு வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கச்சனம் முதல் திருக்கொள்ளிக்காடு வரையுள்ள சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

229—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50964—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோபாலசமுத்திரம் முதல் தில்லைவிளாகம் வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோபாலசமுத்திரம் முதல் தில்லைவிளாகம் வரையுள்ள சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

230—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 50965—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலத்தம்பாடி முதல் ஆலாத்தூர் வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலத்தம்பாடி முதல் ஆலாத்தூர் வரையுள்ள சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

231—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 50972—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குலசேகரம் அருகிலுள்ள நாகக்கோடு திருவரம்பு சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

குலசேகரம் அருகிலுள்ள நாகக்கோடு திருவரம்பு சாலையை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

232—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 51539—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் அரசு பொது மருத்துவமனை வரை சுரங்கபாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் அரசு பொது மருத்துவமனை வரை சுரங்கபாதை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

233—

வட்டச்சாலை அமைத்தல்

வினா எண் 51585—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவிலில் வட்டச்சாலை (Ring Road) *அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலில் வட்டச்சாலை (Ring Road) *அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.*

234—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 51599—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சி, அத்திமாஞ்சேரிபேட்டை சாலை முதல் பொதட்டூர்பேட்டை வரை புறவழிச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சி, அத்திமாஞ்சேரிபேட்டை சாலை முதல் பொதட்டூர்பேட்டை வரை புறவழிச்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

235—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 51770—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர்–மேச்சேரி சாலையில் அமைந்துள்ள இரயில்வே கடவில் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர்–மேச்சேரி சாலையில் அமைந்துள்ள இரயில்வே கடவில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

236—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 52071—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2016 பிப்ரவரி 20

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டு–சித்தூர் கூட்டு சாலையின் குறுக்கேயுள்ள சிறிய ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டு–சித்தூர் கூட்டு சாலையின் குறுக்கேயுள்ள சிறிய ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

237—

தார்ச்சாலை சீரமைத்தல்

வினா எண் 52072—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், புண்ணியம் முதல் அரசராசபட்டடை வழியாக நகரி கூட்டு சாலை வரையுள்ள தார்ச் சாலையை சீரமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், புண்ணியம் முதல் அரசராசபட்டடை வழியாக நகரி கூட்டு சாலையில் கி.மீ.0/0–1/0 வரை ரூ.40 இலட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2014–2015–ன்கீழ் சாலை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

238—

தரைமட்டப் பாலத்தை உயர்த்திக் கட்டுதல்

வினா எண் 52291—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாவலூர் ஊராட்சி, ரெட்டியார்பட்டி அரசு தொடக்கப்பள்ளி அருகிலுள்ள தரைமட்டப் பாலத்தை உயர்த்திக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாவலூர் ஊராட்சி, ரெட்டியார்பட்டி அரசு தொடக்கப்பள்ளி அருகிலுள்ள தரைமட்டப் பாலத்தை உயர்த்திக் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

239—

புதியபாலம் கட்டுதல்

வினா எண் 52292—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி-கீரப்பாளையம் இடையிலுள்ள வெள்ளாற்றின் குறுக்கேயுள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி-கீரப்பாளையம் இடையிலுள்ள வெள்ளாற்றின் குறுக்கேயுள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2016 பிப்ரவரி 20

240—

இருவழிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 52415— திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை–கன்னியாகுமரி (NH-7) தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கோவில்பட்டி நகருக்குள் செல்லும் ஒருவழிச்சாலையை இருவழிச்சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை–கன்னியாகுமரி (NH-7) தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கோவில்பட்டி நகருக்குள் செல்லும் மாநில நெடுஞ்சாலையான, மதுரை–கன்னியாகுமரி சாலை (மா.நெ.எண்.26) கி.மீ.88/270–92/800 மற்றும் கி.மீ.92/900–94/590 வரையுள்ள சாலைப் பகுதிகள் அனைத்தும் இருவழிச்சாலையாக உள்ளது.

241—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 52549—திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் முதல் திருநெல்வேலி வரை புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் முதல் திருநெல்வேலி வரை புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

242—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 52550—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் முதல் தென்காசி வரை புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் முதல் தென்காசி வரை புறவழிச்சாலை அமைக்க அவசியம் எழவில்லை.

243—

சாலையைப் பராமரித்தல்

வினா எண் 52552—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் செண்பகத்தோப்பு வரையுள்ள சாலையை பராமரித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் செண்பகத்தோப்பு வரையுள்ள சாலையை முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

244—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 52575—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை—சிறுவாச்சி—கப்பலூர் வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை—சிறுவாச்சி—கப்பலூர் வரையுள்ள சாலையை அகலப்படுத்த தற்போது போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாத காரணத்தினால், அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

245—

இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 52576—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) காரைக்குடி தொகுதி, கோட்டையூர் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கோட்டையூர் இரயில்வே மேம்பாலம் அமைக்க தற்போது போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாத காரணத்தினால் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

246—

புதிய சாலை மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 52600—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பணிக்கன்குப்பம்–மாளிகம்பட்டு கிராமங்களுக்கிடையே புதிய சாலை மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பணிக்கன்குப்பம்–மாளிகம்பட்டு கிராமங்களுக்கிடையே புதிய சாலை மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

247—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 52624—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2016 பிப்ரவரி 20

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரத்திற்கும் மடத்துக்குளம்–அந்தியூர் வரையுள்ள தே.நெ.209 தேசிய நெடுஞ்சாலைக்கும் புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரத்திற்கும் மடத்துக்குளம்–அந்தியூர் வரையுள்ள தே.நெ. 209 தேசிய நெடுஞ்சாலைக்கும் புறவழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

248—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 52856—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரையிலிருந்து நல்லமனார்கோட்டை வழியாக செல்லும் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரையிலிருந்து நல்லமனார்கோட்டை வழியாக செல்லும் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

249—

பாலம் கட்டுதல்

வினா எண் 52862—திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, வாங்கலில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியினை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் மோகனூருக்கும், கரூர் மாவட்டத்தில் வாங்கலுக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பாலம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவிடப்படும்.

250—

பயணியர் விடுதி கட்டுதல்

வினா எண் 53369—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயலில் பயணியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, புதுவயலில் பயணியர் விடுதி கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

251—

புதிய பயணியர் மாளிகை கட்டுதல்

வினா எண் 53387—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிபாடி ஊராட்சி ஒன்றியம், வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் பயணியர் மாளிகை புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிபாடி ஊராட்சி ஒன்றியம், வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் பயணியர் மாளிகை புதியதாக கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

252—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 53407— திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பழைய பேருந்து நிலைய பகுதியிலுள்ள இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பழைய பேருந்து நிலைய பகுதியிலுள்ள இரயில்வே கடவில் மேம்பாலம்

அமைக்க தற்போது போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாத காரணத்தினால் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

253—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 53422—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பழைய பேருந்து நிலைய சந்திப்பில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பழைய பேருந்து நிலைய சந்திப்பில் மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

254—

நெடுஞ்சாலை சீரமைத்தல்

வினா எண் 53423—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்-திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்—திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2016 பிப்ரவரி 20

255—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 53424—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்-பார்வதிபுரம் சந்திப்பில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்-பார்வதிபுரம் சந்திப்பில் மேம்பாலம் கட்ட ரூ.50.00 கோடிக்கு மத்திய அரசு ஆண்டுத் திட்டம் 2014–15-ன்கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. இதனை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

256—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 53425—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல்–உடையார்விளை சாலையை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல்–உடையார்விளை சாலையில் கி.மீ.0/0–4/3 வரையுள்ள பகுதி சீர் செய்யப்பட்டுள்ளது. இச்சாலை பகுதியை இனி வரும் காலங்களில் போக்குவரத்து செறிவின் அடிப்படையில் அகலப்படுத்த பரிசீலிக்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

257—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 53427—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம்-திங்கள் நகர் சாலையை சீரமைத்து அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம்-திங்கள் நகர் சாலை பகுதி மேம்பாடு செய்யப்பட்டு போக்குவரத்துக்கு உகந்த நிலையில் உள்ளது.

258—

புதிய பயணியர் மாளிகை கட்டுதல்

வினா எண் 53639—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் புதிய பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான பயணியர் மாளிகை பயன்பாட்டில் உள்ளதால் புதிய பயணியர் மாளிகை கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

259—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 53646—திருமதி ர. சுபா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி தொகுதி, சேலம் தேசிய நெடுஞ்சாலை, சார்வாய் பேருந்து நிலையத்திலிருந்து, சார்வாய், வடகுமார ஊராட்சிக்கு செல்லும் மாநில சாலையை அகலப்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, சேலம் தேசிய நெடுஞ்சாலை, சார்வாய் பேருந்து நிலையத்திலிருந்து, சார்வாய், வடகுமார ஊராட்சிக்கு செல்லும் மாநில சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

260—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 53904—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, தாஜ்புரா ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் புறவழிச்சாலை அமைக்கும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆற்காடு தொகுதி, தாஜ்புரா ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

261—

நான்குவழிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 53929—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில்–தேனி செல்லும் நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில்–தேனி செல்லும் நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

262—

பாலத்தினை அகலப்படுத்துதல்

வினா எண் 53959—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, அல்லிவிளாகம் ஊராட்சியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை பாலத்தினை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அல்லிவிளாகம் ஊராட்சியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை பாலத்தினை அகலப்படுத்தும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

263—

பாலத்தை அகலப்படுத்துதல்

வினா எண் 54089—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவில்–களியக்காவிளை சாலையில் குமாரகோயில் விலக்கு அருகில் வள்ளியாற்று பகுதியிலுள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்–களியக்காவிளை சாலையில் குமாரகோயில் விலக்கு அருகில் வள்ளியாற்று பகுதியிலுள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்துவதற்கான கருத்துரு மத்திய அரசின் ஆண்டுத் திட்டம் 2015–2016–ல் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

264—

புதிய பாலங்கள் கட்டுதல்

வினா எண் 54102—திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) வேதாரண்யம் தொகுதியில், தகட்டூர்–தென்னடிர் பேருந்து வழித்தடத்திலுள்ள பழுதடைந்துள்ள முள்ளியாறு பாலம், லெட்சுமியாறு பாலங்களை புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதியில், தகட்டூர்–தென்னடிர் பேருந்து வழித்தடத்திலுள்ள பழுதடைந்துள்ள முள்ளியாறு பாலத்தினை புதிதாக கட்டுவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. மேலும் லெட்சுமியாறு பாலத்தினை புதியதாக கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

265—

பயணியர் மாளிகைக்கு புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 54520—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகைக்கு புதிய கட்டடம் கட்ட தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

266—

உயர்மட்டப் பாலம் அமைத்தல்

வினா எண் 54787—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, காட்டோடையின் குறுக்கே நடுவபட்டி முதல் திருவேங்கடம் வரை உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, காட்டோடையின் குறுக்கே நடுவபட்டி முதல் திருவேங்கடம் வரை உயர்மட்டப் பாலம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

267—

நெடுஞ்சாலையை செப்பனிடுதல்

வினா எண் 54797—திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சி–சிதம்பரம் நெடுஞ்சாலையை விரைந்து செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருச்சி–சிதம்பரம் சாலையில் (தே.நெ.227) சில பகுதிகளில் ரூ.27.75 கோடி மதிப்பீட்டில் காலமுறை பழுது பார்த்தல் (Periodical Renewal) *திட்டத்தின்கீழ் பராமரிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.*

2016 பிப்ரவரி 20]

268—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 54804—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி–புதுவயல் வழியாக பீர்க்கலைக்காடு சாலையில் இசவேலி கண்மாய் கரையில் அகலமான புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி–புதுவயல் வழியாக பீர்க்கலைக்காடு சாலையில் இசவேலி கண்மாய் கரையில் அகலமான புதிய பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

269—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 54913—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலமருதப்பபுரம் ஊராட்சி, அண்ணாமலைபுதூரில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, மேலமருதப்பபுரம் ஊராட்சி, அண்ணாமலைபுதூரில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

[2016 பிப்ரவரி 20

270—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 55062—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி முதல் வந்தவாசி வரை ஈரடுக்கு தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி முதல் வந்தவாசி வரையிலுள்ள 39.20 கி.மீ. நீளமுள்ள சாலையில், 5.80 கி.மீ. நீளமுள்ள பகுதி மட்டுமே மேம்பாடு செய்யப்பட வேண்டியுள்ளது. இச்சாலைப் பகுதியானது வரும் நிதியாண்டில் திட்டப்பணிகளின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

271—

இருவழிச் சாலையாக தரம் உயர்த்துதல்

வினா எண் 55080—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, திருபத்தூர் ஊராட்சி ஒன்றியம், மரிமாணிகுப்பம் ஊராட்சி, புதூர் கிராமத்திலிருந்து பூங்குளம் ஊராட்சிக்கு செல்லும் ஒரு வழிச் சாலையை இருவழிச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, திருபத்தூர் ஊராட்சி ஒன்றியம், மரிமாணிகுப்பம் ஊராட்சி, புதூர் கிராமத்திலிருந்து பூங்குளம்

2016 பிப்ரவரி 20]

ஊராட்சிக்கு செல்லும் ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக தரம் உயர்த்த, போதுமான போக்குவரத்து செறிவு தற்போது இல்லாத காரணத்தால் அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

272—

புறவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 55155—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியத்திற்கு புறவழிச்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

273—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 55741—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, அம்மம்பாளையம் ஊராட்சியிலுள்ள தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, அம்மம்பாளையம் ஊராட்சியிலுள்ள தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

274—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 55743—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, பாப்பநாயக்கன்பட்டி வழியிலுள்ள கோழிகூப்பிட்டான் ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தினை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பாப்பநாயக்கன்பட்டி வழியிலுள்ள கோழிகூப்பிட்டான் ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தினை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

275—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 55745—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, காளிச்செட்டியூரில் வசிஷ்ட நதியின் குறுக்கேயுள்ள தரைப்பாலத்தினை அகற்றி, உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, காளிச்செட்டியூரில் வசிஷ்ட நதியின் குறுக்கேயுள்ள தரைப்பாலத்தினை அகற்றி, உயர்மட்டப் பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

276—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 55857—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம்–பிரமனூர் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம்–பிரமனூர் சாலையின் பல பகுதிகள் ஏற்கெனவே சீரமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலைப் பகுதிகள் வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செயலாக்கம் செய்ய தக்கவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2016 பிப்ரவரி 20

277—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 55862—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டத்தில் மழையால் சேதமான சாலைகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டத்தில் மழையால் சேதமான சாலைகள் ஏற்கெனவே சீர் செய்யப்பட்டுவிட்டன.

278—

பாலம் கட்டுதல்

வினா எண் 55863—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மழவராயனேந்தல்–வேம்பத்தூர் இடையே வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டக் கோருமிடத்தின் அருகில் சிறிய இடைவெளியில் புதிதாக

2016 பிப்ரவரி 20]

இரண்டு உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டு அவை நல்ல நிலையில் செயல்பட்டு வருவதால், தற்போது மழவராயனேந்தல்–வேம்பத்தூர் இடையே வைகை ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

279—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 55879—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளைம் ஒன்றியம், காளிச்செட்டியூர் வசிஷ்ட நதியின் குறுக்கேயுள்ள தரைபாலத்தினை அகற்றி மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளைம் ஒன்றியம், காளிச்செட்டியூர் வசிஷ்ட நதியின் குறுக்கேயுள்ள தரைபாலத்தினை அகற்றி மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

280—

உயர்மட்டப் பாலம் கட்டுதல்

வினா எண் 56040—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர்–மேச்சேரி சாலை பகுதியிலுள்ள இரயில்வே கடவில் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர்–மேச்சேரி சாலை பகுதியிலுள்ள இரயில்வே கடவில் உயர்மட்டப் பாலம் கட்டும் கருத்துரு ஆய்வில் உள்ளது.

281—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 56336—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, விக்கிரவாண்டி–தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலை (எண் 8)-ல் 125–129 கி.மீ. வரை கும்பகோணம்–தாராசுரம்–திருவலஞ்சுழி சாலையினை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, விக்கிரவாண்டி–தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலை (எண்.8)-ல் 125–129 கி.மீ. வரை கும்பகோணம்–தாராசுரம்–திருவலஞ்சுழி சாலை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

282—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 56338—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம்–கோவை நான்குவழிச் சாலையிலிருந்து வைகுந்தம் முதல் வடுகப்பட்டி வரை செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம்–கோவை நான்குவழிச் சாலையிலிருந்து வைகுந்தம் முதல் வடுகப்பட்டி வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

283—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 56340—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் சித்தர் கோவில் சாலையிலிருந்து கே.கே.நகர், மாட்டையாம்பட்டி வழியாக பாப்பம்பாடி செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம் சித்தர் கோவில் சாலையிலிருந்து கே.கே.நகர், மாட்டையாம்பட்டி வழியாக பாப்பம்பாடி செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

284—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 56342—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், எளம்பிள்ளை பெருமாக்கவுண்டம்பட்டியிலிருந்து அய்யனூர், அ.புதூர் வழியாக கச்சுப்பள்ளி செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எளம்பிள்ளை பெருமாக்கவுண்டம்பட்டியிலிருந்து அய்யனூர், அ.புதூர் வழியாக கச்சுப்பள்ளி செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

285—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 56343—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், எளம்பிள்ளை சந்தைப்பேட்டையிலிருந்து தைலாம்பட்டி வழியாக கச்சுப்பள்ளி செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எளம்பிள்ளை சந்தைப்பேட்டையிலிருந்து தைலாம்பட்டி வழியாக கச்சுப்பள்ளி செல்லும் சாலையை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

286—

சாலை விரிவாக்கம்

வினா எண் 56439—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஏற்காடு மலையிலிருந்து சேலம் மாநகருக்கு செல்லும் சாலையை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு மலையிலிருந்து சேலம் மாநகருக்கு செல்லும் சாலையை விரிவாக்கம் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

287—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 56446—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அந்தியூர் தொகுதி, அத்தானி–அந்தியூர் சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, அத்தானி–அந்தியூர் சாலை போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

288—

சாலையை செப்பனிடுதல்

வினா எண் 56612—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூடலூர் தொகுதிக்குட்பட்ட நெல்லியாளம் நகராட்சி, சேராங்கோடு ஊராட்சி, மகினகுடி ஊராட்சி, தேவர்சோலை பேரூராட்சி, ஸ்ரீ மதுரை ஊராட்சி, நடுவட்டம் பேரூராட்சி, ஓவேலி பேரூராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள இணைப்புச் சாலையின் அனைத்து மாவட்ட இதர சாலைகளை செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூடலூர் நெடுஞ்சாலைத் துறையின் உட்கோட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மாவட்ட இதர சாலைகளும் நல்ல நிலையில் உள்ளன.

289—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 56740—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை முதல் தெ.புதுக்கோட்டை வழியாக பரமக்குடி வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை முதல் தெ.புதுக்கோட்டை வழியாக பரமக்குடி வரை செல்லும் சாலையினை அரசின் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக இருவழிப்பாதையாக அகலப்படுத்த பரிசீலிக்கப்படும்.

290—

நெடுஞ்சாலையை சீரமைத்தல்

வினா எண் 56743—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி–செய்யாறு நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட முக்கிய சாலையான ஆரணி–செய்யாறு சாலையின் பழுதடைந்த பகுதியினை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

291—

நெடுஞ்சாலையை சீரமைத்தல்

வினா எண் 56744—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி–வேலூர் நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநில நெடுஞ்சாலையான ஆரணி–வேலூர் சாலையின் பழுதடைந்த பகுதியினை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

292—

நெடுஞ்சாலையை சீரமைத்தல்

வினா எண் 56745—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி–தேவிகாபுரம் நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட முக்கிய சாலையான ஆரணி–தேவிகாபுரம் சாலையின் பழுதடைந்த பகுதியினை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

293—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 57667—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை வடபழனியிலிருந்து போரூர் வரை செல்லும் ஆற்காடு சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சென்னை வடபழனியிலிருந்து போரூர் வரை செல்லும் ஆற்காடு சாலை தற்போது தார் நொடிகள் போடப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

294—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 57678—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிள்ளியூர் தொகுதி, இரவிபுத்தன்துறை-வள்ளவிளை இணைப்புச் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கிள்ளியூர் தொகுதி, இரவிபுத்தன்துறை வள்ளவிளை-இணைப்புச் சாலையில் கடலரிப்பு தடுப்புச்சுவர் கட்டும் பணி முடிவடைந்தபின்பு சாலை சீரமைப்புப் பணி தொடங்க இயலும்.

295—

சாலையை செப்பனிடுதல்

வினா எண் 57680—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில் பழுதடைந்துள்ள முளகுமூடு-பூக்கடை சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதியில் பழுதடைந்துள்ள முளகுமூடு-பூக்கடை சாலையில் கி.மீ.0/0–1/0, 2/0–5/0 வரையுள்ள பகுதிகளில் CRIDP *2014–2015 திட்டத்தின்கீழ் ரூ.170.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

296—

சாலையை செப்பனிடுதல்

வினா எண் 58813—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் கமண்டல நாகநதியில் பழைய பாலத்தை பலப்படுத்தவும், அருகில் புதிய பாலம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணியில் கமண்டல நாகநதியிலுள்ள பழைய உயர்மட்டப் பாலமானது தற்போது நல்ல நிலையில் போக்குவரத்து செறிவிற்கு போதுமானதாக உள்ளதால் மற்றொரு புதிய பாலம் கட்ட அவசியம் எழவில்லை.

297—

சாலை விரிவாக்கம்

வினா எண் 58815—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகரில் ஆற்றுப்பாலம் முதல் அருணகிரி சத்திரம் வரையுள்ள சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி நகரில் ஆற்றுப்பாலம் முதல் அருணகிரி சத்திரம் வரையுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றினாலே போதுமானதாகும். சாலையை அகலப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

298—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 58816—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி–வந்தவாசி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி–வந்தவாசி சாலையின் அகலம் தற்போதுள்ள போக்குவரத்துச் செறிவுக்கு போதுமானதாக உள்ளதால் இச்சாலையை அகலப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

299—

அகலமாகன மதகுகளை அமைத்தல்

வினா எண் 61072—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம்–மயிலாடுதுறை தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பழைய கொள்ளிடம் மதகுகளை அகற்றி புதிய அகலமான மதகினை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம்–மயிலாடுதுறை தேசிய நெடுஞ்சாலையில் (தே.நெ.45ஏ) கி.மீ.116/10–ல் பழைய ஆர்ச் வடிவ

[2016 பிப்ரவரி 20

குறுகிய பாலம் ஒன்று அமைந்துள்ளது. இப்பாலம் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டம் பகுதி–IV (NHDP Phase-IV) திட்டத்தின்மூலம் புதியதாக கட்டப்பட உள்ளது.

300—

நான்குவழிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 61105—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிழக்கு கடற்கரை சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றுவதற்கான பணிகளை உடனடியாக துவக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிழக்கு கடற்கரை சாலை கி.மீ.22/300 (அக்கரை) முதல் கி.மீ.55/800 (பூஞ்சேரி) வரை இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக விரிவாக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது.

301—

சாலைகள் அமைத்தல்

வினா எண் 61107—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி–தஞ்சாவூர் நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றும் பணியினை உடனடியாக துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணி, விக்கிரவாண்டி முதல் மீன்சுருட்டி வரை நான்கு வழிச்சாலையாகவும் மற்றும் மீன்சுருட்டி முதல் தஞ்சாவூர் வரை கடின புருவங்களுடன்கூடிய இருவழிச் சாலையாகவும் மாற்றும் பணி தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NHDP-IV) மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டு, இதற்கான நில ஆர்ஜிதப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

302—

பாலம் அமைத்தல்

வினா எண் 61126—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆனைமலை–புங்கமுத்தூர் நெடுஞ்சாலையில் நவக்கரை ஓடையில் மேல் மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆனைமலை–புங்கமுத்தூர் நெடுஞ்சாலையில் நவக்கரை ஓடையில் மேல் மட்டப் பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

303—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 28997—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) தென்காசி தொகுதி, தென்காசியில் சிட்கோ வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசியில் சிட்கோ வளாகம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தென்காசியில் சிட்கோ வளாகம் அமைப்பதற்கு சிட்கோமூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

304—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 29688—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க

ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் விருத்தாசலத்தில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோமூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

305—

முந்திரி தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 29690—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி முதனை அல்லது இருப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்தில் முந்திரிக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் 2011–ல் வீசிய, தானே புயல் காரணமாக 75 சதவீதம் முந்திரி மரங்கள் முறிந்து, வேரோடு சாய்க்கப்பட்டு, முந்திரி மரங்கள் சேதமடைந்துவிட்டபடியால், இன்னும் 5 ஆண்டுகளுக்கு, இந்தப் பகுதியில் இயங்கிவரும் சின்னஞ்சிறு முந்திரி பதப்படுத்தும் / உடைக்கும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கச்சா முந்திரிக் கொட்டைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இந்நிலையில், விருத்தாசலம் தொகுதி முதனை அல்லது இருப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்தில் முந்திரிக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாக உள்ளது. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் விருத்தாசலம் தொகுதி, முதனை அல்லது இருப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்தில் முந்திரிக்கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் 25% முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க

மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன் பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்–தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன் பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழ் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்றுப் பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், கடலூர் மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

306—

மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 31004—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரில் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதியில் மகளிருக்கென தனியாக புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் தேவை தற்போது எழவில்லை.

307—

தொழிற்சாலைகள்

வினா எண் 32586—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தேங்காய் எண்ணெய் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் பெரிய அளவில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அமைக்கத் தேவையான கொப்பரைத் தேங்காய் விளைவிக்கப்படுவதில்லை. மேலும், திருப்புவனம் பகுதியில் விளைவிக்கப்படும் தேங்காய்கள், மதுரை நகராட்சி மற்றும் அருகாமையில் உள்ள இடங்களில் உணவுப் பொருளுக்காக விற்பனை செய்யப்படுகிறது. வாசனைத் திரவியங்கள் தயாரிக்கத் தேவைப்படும் முக்கிய மூலப் பொருட்களான மலர்கள் அதிக அளவில் இல்லாத காரணத்தினால் மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பகுதியில் அரசு சார்பில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழில் நிறுவனம் துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தேங்காய்

[2016 பிப்ரவரி 20

எண்ணெய் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்களுக்கு 25% முதலீட்டு மானியம், வேலைவாய்ப்புப் பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக்கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன் பெறலாம்.

2. மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்–தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன் பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழ் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்றுப் பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

308—

வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 33454—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதியினை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பணிநாடுநர்களும் பயன்பெறும்வகையில் மாவட்டத் தலைமையிடமான சிவகங்கையில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், தற்போது வேலைவாய்ப்புத் துறைக்கென கணினி இணையதளம் செயல்படுத்தப்பட்டு கல்வித் தகுதிகளை பதிவு செய்தல், கூடுதல் பதிவு, பதிவு புதுப்பித்தல் ஆகிய வாலாயமான பணிகளை இணையம் வழியே (On-line) *மேற்கொள்ள பணிநாடுநர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், இதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, காரைக்குடியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

309—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 34059—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி

ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் புதிய தொழிற்பேட்டையை சிட்கோ நிறுவனம் மூலமாக அமைப்பதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

310—

தொழிலாளர் நலன்

வினா எண் 34060—திரு. இ. சுப்பையா: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள மதுரா கோட்ஸ் பஞ்சாலை நிறுவனத்தில் எடுக்கப்பட்டுவரும் தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் களைய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

ஆம். கதவடைப்புக் காலத்தில் ஒழுங்கீன செயல்கள் மற்றும் குற்றங்களில் ஈடுபட்ட 40 தொழிலாளர்கள் மதுரா கோட்ஸ் பிரைவேட் லிமிடெட், அம்பாசமுத்திரம் நிருவாகத்தால், தற்காலிகப் பணி நிக்கம் செய்யப்பட்டனர். உள் விசாரணைக்குப் பின்னர், 27 தொழிலாளர்கள் மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். 7 தொழிலாளர்கள் மதுரை மற்றும் தூத்துக்குடிக்கு மாற்றம் செய்யப்பட்டனர். 6 தொழிலாளர்கள் 26–10–2013 ஆம் தேதி முதல் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள் தொழிலாளர் அலுவலர் முன்பு தொழிற் தகராறு எழுப்பி சமரச முறிவு ஏற்பட்டது. பணி நீக்கம் செய்யப்பட்ட 6 தொழிலாளர்களில், 5 தொழிலாளர்கள் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2(A)–ன்கீழ் மனு தாக்கல் செய்தனர். இதில் இருதரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் திருநெல்வேலி தொழிலாளர் அலுவலர் முன்பு நடைபெற்று உடன்பாடு எட்டப்படாததால், 4 வழக்குகளில் சமரச முறிவு பதிவு செய்யப்பட்டது. ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது. மேலும், ஒருவர் தொழிற்தாவா ஏதும் தாக்கல் செய்யவில்லை.

2016 பிப்ரவரி 20]

இது குறித்து, சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உரிய தொழிலாளர் நீதிமன்றத்தில் மேற்முறையீடு மனுவைத் தாக்கல் செய்து நிவாரணம் பெறலாம்.

311—

தொழில்கள்

வினா எண் 34193—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராமங்களில் சிறுதொழிலை மேம்படுத்த 100 சதவீதம் மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமங்களில் சிறுதொழிலை மேம்படுத்த 100 விழுக்காடு மானியத்துடன் கூடிய தொழில் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2. இருப்பினும், ஆர்வமுள்ள தொழில் முனேவோர்கள் தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும்பட்சத்தில் அந்தந்த மாவட்ட தொழில் மையங்களை அணுகி, அனைத்துவிதமான வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்றுப் பயனடையலாம்:

1. *புதிய தொழில் முனைவோர்–தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25% மானியம்*
2. *வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்*
3. *தொழல்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25% முதலீட்டு மானியம்*
4. *20% குறைந்த அழுத்த மின் மானியம்*
5. *மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்*
6. *மின்னாக்கி மானியம்*

[2016 பிப்ரவரி 20

312—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 34612—திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன் வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

313—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 34730—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்கப்பட்டு, 2015 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

314—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 34738—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கத் தகுதி வாய்ந்த அரசு புறம்போக்கு மற்றும் வெற்று நிலங்கள் ஏதும் இல்லை. எனவே, காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[2016 பிப்ரவரி 20

315—

தொழிற்சாலைகள்

வினா எண் 34768—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நேந்திரம் வாழைக்காய் பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நேந்திரம் வாழைக்காய் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், மேற்காணும் தொழிற்சாலை அமைக்க முன்வரும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கன்னியாகுமரி மாவட்ட தொழில் மையத்தை அணுகி அனைத்துவிதமான வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்றுப் பயனடையலாம்:

1. புதிய தொழில் முனைவோர் – தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25% மானியம்

2. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்

3. தொழல்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25% முதலீட்டு மானியம்

4. 20% குறைந்த அழுத்த மின் மானியம்

5. மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்

6. மின்னாக்கி மானியம்

2016 பிப்ரவரி 20]

316—

தொழில்கள்

வினா எண் 35459—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் சிறு தொழில்களை ஊக்குவிக்க தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழில்களை நிறுவத் தேவைப்படும் உரிமங்களையும் அனுமதிகளையும் வெளியிடுவதைத் துரிதப்படுத்த ஏதுவாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை 27–12–2012 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 53-ல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு என்ற குழுவினை கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் அமைத்து அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன:

வ. எண்	உறுப்பினர்கள் விவரம்	பதவியின் பெயர்
1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்
2.	பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம்	உறுப்பினர் செயலர் / அமைப்பாளர்
3.	மாவட்ட தலைமை அலுவலர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்	உறுப்பினர்
4.	செயற்பொறியாளர், ஒவ்வொரு பகிர்மான வட்டம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்	உறுப்பினர்
5.	உதவி இயக்குநர் ஊராட்சி / நகராட்சி	உறுப்பினர்

[2016 பிப்ரவரி 20

6.	மாவட்டங்களிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சங்கத்தைச் சார்ந்த பிரதிநிதி	உறுப்பினர்
7.	அரசு சாரா அமைப்பினர் (மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு குறு, சிறு தொழில்கள் சங்கத்தை சார்ந்தவர்)	உறுப்பினர்
8.	கல்வி நிறுவனத்தை சார்ந்தவர் (முதன்மைக் கல்வி அலுவலர், பொறியியல் கல்லூரியின் ஆறு வல்லுனர்கள், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரியின் மூன்று வல்லுனர்கள் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள அண்ணா பொறியியல் கல்லூரி)	உறுப்பினர்
9.	மாவட்ட முன்னோடி வங்கி	சிறப்பு அழைப்பாளர்

317—

வேலைவாய்ப்பு

வினா எண் 35464—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாவட்டந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் அறிவுரையின்பேரில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு தொழில்திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து வேலைவாய்ப்பு முகாம்களை பல்வேறு கட்டங்களாக நடத்தி வருகின்றன. இவ்வாறு நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்களில் தமிழகத்தைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள் அழைக்கப்பட்டு, அவர்களின்மூலம் தகுதி படைத்த

2016 பிப்ரவரி 20]

தனியார் துறை பணியில் சேரும் ஆர்வம் கொண்ட மனுதாரர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுகின்றனர். மேலும், தமிழகத்தின் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகங்களிலேயே பிரதி மாதம் இரண்டாவது வெள்ளிக் கிழமையன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தகுதியுடைய மனுதாரர்கள் தனியார் துறை வேலையளிப்போரால் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தம் செய்யப்படுகின்றனர். ஆகையால், இவ்வாறு நடத்தப்பட்டுவரும் வேலைவாய்ப்பு முகாம்கள் வேலை தேடும் இளைஞர்களுக்கு பயனளிக்கும் வகையில் உள்ள நிலையில், மாவட்டந்தோறும் அரசால் தனியாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

318—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 35545—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் கயிறு சார்ந்த தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் கயிறு சார்ந்த தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும் பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின்

[2016 பிப்ரவரி 20

அடிப்படையில் ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோமூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

319—

பட்டுப்புழு வளர்ப்பு மையம் அமைத்தல்

வினா எண் 36074—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் மற்றும் லாடனேந்தல் பகுதியில் மீண்டும் பட்டுப் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை பகுதியில், மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல் மற்றும் திருப்புவனம் ஒன்றியம், லாடனேந்தலில் அரசு மாதிரி பட்டுப் பண்ணைகளின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டு, பண்ணை நிலம் வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில், மீண்டும் அரசு பட்டுப் பண்ணைகள் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மானாமதுரை பகுதியில் உள்ள விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு பயன் பெறுவதற்கு முன்வந்தால், துறைமூலம் தேவையான உதவிகள் வழங்கப்படும்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

320—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 36961—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியாபுரம் பேரூராட்சியில் தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

(ஆ) எழாது.

321—

பட்டு நூற்பாலை அமைத்தல்

வினா எண் 42309—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் பட்டு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பட்டு நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

322—

வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 43368—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) அரூர் தொகுதி, அரூரில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதியினை உள்ளடக்கிய தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பணிநாடுநர்களும் பயன்பெறும்வகையில் மாவட்டத் தலைமையிடமான தருமபுரியில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், தற்போது வேலைவாய்ப்புத் துறைக்கென கணினி இணையதளம் செயல்படுத்தப்பட்டு கல்வித் தகுதிகளை பதிவு செய்தல், கூடுதல் பதிவு, பதிவு புதுப்பித்தல் ஆகிய வாலாயமான பணிகளை இணையம் வழியே (On-line) *மேற்கொள்ள பணிநாடுநர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், இதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, அரூரில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் நிலை எழாது.*

323—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 44257—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் தேவை தற்போது எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

324—

தொழில்கள்

வினா எண் 47699—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோர கிராமங்களில் நலிந்துவரும் கயிறு தொழிலை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோர கிராமங்களில் நலிவடைந்துவரும் கயிறு தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு கயிறு வாரியத்தின்மூலம் இப்பகுதியில் வாழும் மக்களுக்குக் கயிறு தொழிலில் பல்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கயிறு தொழிலுக்கு புத்துயிர் ஊட்ட மைய அரசின் 'ஸ்பூருட்டி' திட்டத்தின்கீழ் ஈத்தாமொழியில் ஒரு கயிறு குழுமம் அமைத்திடும் கருத்துருவிற்கு கயிறு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், ரிமோட் திட்டத்தின்கீழ் கயிறு தொழிற்திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

325—

மகளிர் தொழில் மையம்

வினா எண் 48168—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் மகளிருக்கான தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகமெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட தொழில் மையம் இயங்கி வருகிறது. தற்போது சேலம் மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சேவை செய்ய ஏற்கெனவே ஒரு தொழில் மையம் இயங்கி வருகிறது. தற்போது இயங்கிவரும் மாவட்டத் தொழில் மையம் அனைத்து வகையான உதவிகளையும் மகளிர் தொழில் முனைவோர்க்கு அளித்து வருவதால் கூடுதலாக மகளிருக்கான ஒரு மாவட்டத் தொழில் மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

326—

மாவட்ட தொழில் மையம்

வினா எண் 50989—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டத் தொழில் மையத்தை இரண்டாகப் பிரித்து மேட்டூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத் தொழில் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் மாவட்டத் தலைநகரங்களை மையமாக வைத்து மாவட்டத் தொழில் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டத் தொழில் மையம்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து ஆலோசனைகள், அரசின் ஊக்க மானிய விவரங்கள் வழிகாட்டுதல் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில்

2016 பிப்ரவரி 20]

செயல்படும் தொழில் மையம்மூலம் சேலம் மாவட்டத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சேவைகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன.

327—

தொழிற்சாலைகள்

வினா எண் 50990—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பாக்கு மட்டைகள்மூலம் தட்டுகள், சிறு கப்புகள் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பாக்கு மட்டைகள்மூலம் தட்டுகள், சிறு கப்புகள் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், மேற்காணும் தொழிற்சாலைகளை அமைக்க முன்வரும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் சேலம் மாவட்ட தொழில் மையத்தை அணுகி அனைத்துவிதமான வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்றுப் பயனடையலாம்.

1. புதிய தொழில் முனைவோர் – தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25% மானியம்
2. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்
3. தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25% முதலீட்டு மானியம்
4. 20% குறைந்த அழுத்த மின் மானியம்
5. மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்
6. மின்னாக்கி மானியம்

[2016 பிப்ரவரி 20

328—

பொருத்துநர் தொழிற்பிரிவு அமைத்தல்

வினா எண் 51016—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காது கேளாதோர் மற்றும் வாய் பேச இயலாதோருக்கென புதிதாக பொருத்துநர் தொழிற்பிரிவு துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தற்போது நாகர்கோவில் மற்றும் உளுந்தூர்ப்பேட்டை ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காது கேளாதோர் மற்றும் வாய் பேச இயலாதோருக்கென புதிதாக பொருத்துநர் தொழிற்பிரிவு துவங்குவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அரசு ஆணை வெளியிடப்படவுள்ளது. இப்பயிற்சித் திட்டம் 2015–2016 ஆம் கல்வியாண்டு முதல் செயலாக்கத்திற்கு வரும்.

329—

தொழிற்சாலைகள்

வினா எண் 51686—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதியில் குறு, சிறு தொழிற்சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதியில் குறு, சிறு தொழிற்சாலைகளை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

இருப்பினும், மேற்காணும் தொழிற்சாலைகளை அமைக்க முன்வரும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கன்னியாகுமரி மாவட்ட தொழில் மையத்தை அணுகி அனைத்து விதமான வழிகாட்டுதல்களுடன் கீழ்க்காணும் மானியங்களைப் பெற்றுப் பயனடையலாம்:

1. புதிய தொழில் முனைவோர் – தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25% மானியம்
2. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25% மானியம்
3 தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25% முதலீட்டு மானியம்
4. 20% குறைந்த அழுத்த மின் மானியம்
5. மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்
6. மின்னாக்கி மானியம்

330—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 51846—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

331—

மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 52376—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதியில் ஒரு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழியில் மகளிர்க்கென அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

332—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 52642—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

333—

ஈட்டுறுதி மருத்துவமனை

வினா எண் 53023—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் ஒரு மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும் (one doctor type ESI Dispensary), *மானாமதுரையில் 'ஒரு மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும்* (one doctor type ESI Dispensary), *சிங்கம்புணரியில் 'ஒரு மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும்* (one doctor type ESI Dispensary), *சிவகங்கையில் 'இரண்டு மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமும்* (two doctor type ESI Dispensary) *செயல்பட்டு வருகின்றன. மேலும், காரைக்குடி, சிவகங்கை, மானாமதுரை மற்றும் சிங்கம்புணரி ஆகிய பகுதிகளில் 25,000-க்கும் மேல் காப்பீட்டு நபர்கள் எண்ணிக்கை உயரும்பட்சத்தில் காரைக்குடியில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை* (ESI Hospital) *துவக்க புதுதில்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

334—

துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 53775—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

திருத்தணி தொகுதி, திருத்தணியில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதியினை உள்ளடக்கிய திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பணிநாடுநர்களும் பயன்பெறும்வகையில் மாவட்டத் தலைமையிடமான திருவள்ளூரில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், தற்போது வேலைவாய்ப்புத் துறைக்கென தனியாக இணையதளம் செயல்படுத்தப்பட்டு கல்வித் தகுதிகளை பதிவு செய்தல், கூடுதல் பதிவு, பதிவு புதுப்பித்தல் ஆகிய வாலாயமான பணிகளை இணையம் வழியே (Online) *மேற்கொள்ள பணிநாடுநர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், இதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, திருத்தணியில் தனியாக துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

335—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 54037—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், குலையநேரி ஊராட்சியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், குலையநேரி ஊராட்சியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

336—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 55358—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் தென்னை பொருட்கள் தயாரிப்பு பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் ஒன்றியத்தில் சுமார் 1,700 ஹெக்டேரில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டு சுமார் 250 இலட்சம் எண்ணிக்கையிலான தேங்காய்கள் பெறப்படுகின்றன. கயிறு வாரியத்தின் கிளை அலுவலகம் சிங்கம்புணரியில் ஏற்கெனவே இயங்கி வருகிறது. இந்த வாரியம் கயிறு திரித்தலுக்கும், கயிறு பொருட்கள் தயாரிப்பிற்கும் மகளிருக்கு பயிற்சிகள் வழங்கி வருகின்றது. குறைந்தபட்சம் 10 பேர் தங்கள் கல்வித் தகுதி, வயது முதலியனவற்றிற்கு ஆதாரத்துடன் விண்ணப்பிக்கும்போது, பயிற்றுநர்மூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, திருப்புவனம் பகுதியில் தென்னை மற்றும் கயிறு பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி பெற விரும்புபவர்கள் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சிவகங்கை அல்லது மண்டல அலுவலர், கயிறு வாரியம், பொள்ளாச்சி அவர்களையோ தொடர்புகொண்டு பயன்பெறலாம். எனவே மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி மையம் அரசு சார்பில் ஆரம்பிக்க புதிய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2016 பிப்ரவரி 20

337—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 55557—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருத்தணியில் தொழிலாளர் நலத் துறை துணை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்ட தலைமையிடமான திருவள்ளூரில் தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர் அலுவலகம், தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகம், தொழிலாளர் துணை ஆய்வாளர் அலுவலகம், தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், முத்திரை ஆய்வாளர் அலுவலகம் ஆகியவை தற்போது இயங்கி வருகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள அனைத்துத் தொகுதிகளிலும் (திருத்தணி தொகுதியையும் சேர்த்து) உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. மேலும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன. எனவே திருத்தணியில் தனியாக தொழிலாளர் நலத் துறை அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

338—

ஆதி திராவிடர் நலன்

வினா எண் 55986—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் பிறக்கும் முதல் தலைமுறையின பெண் குழந்தைகளுக்கு அரசு வேலை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

பொதுவாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலையளிப்போரிடமிருந்து பெறப்படும் பணிக்காலியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதி, வயது, இன சுழற்சி மற்றும் பதிவு மூப்பின் அடிப்படையிலேயே மனுதாரர்கள் பரிந்துரை செய்யப்படுகின்றனர். மாநில அரசுத் துறைகளால் அரசாணை நிலை எண் 142, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (கே) துறை, நாள் 14–10–2009–ன்படி வழங்கப்பட்ட ஆணைகளிலுள்ள இன சுழற்சி முறையினைக் கடைப்பிடித்து கோரப்படும் பணிக் காலியிடங்களுக்கு தகுதியுள்ள பதிவர்கள் இன சுழற்சி மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படுகின்றனர். பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் பிறக்கும் முதல் தலைமுறையின பெண் குழந்தைகளும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருப்பின் மேற்காணும் தகுதிகளுக்குட்பட்டு பல்வேறு பணிக்காலியிடங்களுக்கு பரிந்துரை செய்யப்படுவர்.

339—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 56796 திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆரணி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு

புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும் பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, வேலூர் மாவட்டம், ஆரணி தொகுதியில் தொழிற்பேட்டையை சிட்கோமூலமாக அமைப்பதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

340—

துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 59244—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடத்தில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியினை உள்ளடக்கிய திருப்பூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பணிநாடுநர்களும் பயன்பெறும்வகையில் மாவட்டத் தலைமையிடமான திருப்பூரில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், தற்போது வேலைவாய்ப்புத் துறைக்கென கணினி இணையதளம் செயல்படுத்தப்பட்டு கல்வித் தகுதிகளை பதிவு செய்தல், கூடுதல் பதிவு, பதிவு புதுப்பித்தல் ஆகிய வாலாயமான பணிகளை இணையம் வழியே (On-line) மேற்கொள்ள பணிநாடுநர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், இதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, பல்லடத்தில் தனியாக துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

341—

சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 59245—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பொங்கலூரில் அரசு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூரில் அரசு தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் தொழிற்பேட்டையை சிட்கோமூலமாக அமைப்பதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

342—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

வினா எண் 60081—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருத்தணியில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருத்தணியில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை (Hospital) *அமைப்பது தொடர்பாக அப்பகுதியில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொடர்பான 'அளவை அறிக்கை'* (Survey Report) *புதுதில்லி தொழிலாளர் மாநிலக் காப்புறுதி கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தபின்பு, சேலம் மண்டலம் நிருவாக மருத்துவ அலுவலரிடமிருந்து 'சாத்தியக்கூறு அறிக்கை' கிடைக்கப் பெற்றதும், அப்பகுதியிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அரசு ஈட்டுறுதி மருந்தகம்* (ESI Dispensary) *அல்லது அரசு ஈட்டுறுதி மருத்துவமனை* (Hospital) *அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

343—

குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம்

வினா எண் 29533—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கட்டாய இலவச கல்விக்கான குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 31–ன்படி 2005 ஆம் ஆண்டின் தேசியக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய சட்டப் பிரிவு 17–ன்படியும் தமிழகத்தில் ஏற்கெனவே தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அரசாணை (நிலை) எண் 45, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28–3–2012–ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2016 *பிப்ரவரி* 20]

344—

ஊட்டச்சத்து மையம்

வினா எண் 29783—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் குழந்தைகள் நல ஊட்டச்சத்து முதன்மை மையம் அமைத்து புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சியில் ஏற்கெனவே 31 முதன்மை அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதால் இங்கு, புதிய முதன்மை அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

345—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 30556—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், கல்லேரிப்பட்டில் உள்ள அங்கன்வாடிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம் கல்லேரிப்பட்டில் கல்லேரிப்பட்டு I, *கல்லேரிப்பட்டு* II *என 1982*

[2016 பிப்ரவரி 20

முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வரும் இரண்டு முதன்மை அங்கன்வாடி மையங்களில் கல்லேரிப்பட்டு I மையத்திற்கு புதியக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

346—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 30793—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நெசல் மதுரா, தென்றல் நகர் காலனிக்குப் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நெசல் மதுரா, தென்றல் நகர் குறு அங்கன்வாடி மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

347—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 31162—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி, 13–வது வார்டு, புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள அங்கன்வாடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி, 13–வது வார்டு, புதுக்குடியிருப்பு பகுதியில் கிருஷ்ணா நகர் குறுமையம் 1–10–2007 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

348—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 31701—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், புதுக்குளம் ஊராட்சி, சாலங்குளத்தில் அங்கன்வாடி கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், புதுக்குளம் ஊராட்சியில் புதுக்குளம், வீரளப்பெருஞ்செல்வி, ஆயன்குளம் ஆகிய மூன்று அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் சாலங்குளம் என்ற பெயரில் கிராமம் ஏதும் இல்லை. எனவே, இங்கு அங்கன்வாடி கட்டடம் அமைக்கும் தேவை எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

349—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 33318—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, களத்தூர் ஊராட்சி, அமனாபட்டி கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, களத்தூர் ஊராட்சி, அமனாபட்டி கிராமத்தில் அங்கன்வாடி மையம் 1982 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனினும் இம்மையத்திற்குப் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்ட (சர்வே எண் 85) பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தொடர்புடைய ஆவணங்கள் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

350—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 33324—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மேலச்செட்டிவயலிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 *பிப்ரவரி* 20]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மேலச்செட்டிவயல் முதன்மை அங்கன்வாடி மையம் 26–11–2008 முதல் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

351—

மறு வாழ்வு மையம்

வினா எண் 33863—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறு வாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறு வாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

352—

மறு வாழ்வு மையம்

வினா எண் 33864—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறு வாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறு வாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

353—

மறு வாழ்வு மையம்

வினா எண் 33865 திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறு வாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறு வாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

354—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 34434—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், கிளியூர் ஊராட்சி, கிளியூர் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை வட்டம், கிளியூர் அங்கன்வாடி மையம் 1–7–1982 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனினும், இம்மையம் முழுவதும் பழுதடைந்துள்ளதால், அதே இடத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

355—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 35110—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை வட்டம், அழகாபுரி நகர் கிராமம், அகதிகள் முகாம், அக்பர் தெரு, அங்காலங்கோட்டை, அடசிவயல், அனையடிவயல் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) (1) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை வட்டம், தேவக்கோட்டை ஒன்றியம், அழகாபுரி நகர் அங்கன்வாடி மையம் 1–5–2007 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(2) அகதிகள் முகாம் அங்கன்வாடி மையம் 1–5–2007 முதல் அரசு இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(3) அக்பர் தெரு அங்கன்வாடி மையம் 27–11–2006 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(4) தேவக்கோட்டை ஒன்றியம், அங்காலங்கோட்டை அங்கன்வாடி மையம் 1–5–2007 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(5) தேவக்கோட்டை ஒன்றியம், அடசிவயல் குறு அங்கன்வாடி மையம் 1–5–2007 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(6) தேவக்கோட்டை ஒன்றியம், அனையடிவயல் குறு அங்கன்வாடி மையம் 1–5–2007 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

356—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 36725—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சுந்தரபாண்டிபுரம் பேரூராட்சியிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சுந்தரபாண்டிபுரம் பேரூராட்சியில் 7 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3 மையங்கள் அரசு கட்டடங்களிலும், 4 மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த 4 அங்கன்வாடி மையங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

357—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 36727—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், குலையநேரி ஊராட்சி, துரைசாமியாபுரத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், குலையநேரி ஊராட்சி, துரைசாமியாபுரம் முதன்மை அங்கன்வாடி மையம் 1–1–2007–ல் தொடங்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இம்மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

358—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 36728—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், பாட்டபத்து ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, பாட்டபத்து ஊராட்சியில், பாட்டபத்து 1, 2 மற்றும் பாட்டபத்து இந்திரா காலனி என 3 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பாட்டபத்து 1, 2 முதன்மை அங்கன்வாடி மையங்கள் 1–2–1982–ல் தொடங்கப்பட்டு அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது மற்றும் பாட்டபத்து இந்திரா காலனி அங்கன்வாடி மையம் 1–9–2004–ல் தொடங்கப்பட்டு வாடகை இல்லாத இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

359—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 36730—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல்வலசை மற்றும் அய்யாபுரம் கிராமங்களிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குத்துக்கல்வலசை மற்றும் அய்யாபுரம் பஞ்சாயத்தில் 10 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 8 மையங்கள் அரசு கட்டடங்களிலும் 2 மையங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த 2 மையங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

360—

ஊனமுற்றோர் உதவித் தொகை

வினா எண் 36832—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சியிலுள்ள ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) தென்காசி, காசிமேஜர்புரம் ஊராட்சியில் 64 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். அவர்களின் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக 14 நபர்களுக்கும் வருவாய்த் துறைமூலம் 19 மாற்றுத் திறனாளி நபர்களுக்கும் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை பெற தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகள் எவரேனும் இருந்தாலும் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

361—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 37080—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஆயினிபட்டியில் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஆயினிப்பட்டியில் அங்கன்வாடி மையம் 26–11–2008 முதல் தனியார் இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

362—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 37482—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சங்கராபுரம் ஊராட்சியில் கற்பக விநாயகர் நகரில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், கற்பகவிநாயகர் நகரிலுள்ள பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள வைரவபுரம் I, II *மற்றும் நவரத்தின நகர் ஆகிய அங்கன்வாடி மையங்களில் பயனடைந்து வருவதால், இங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.*

363—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 38150—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, ராமநாதபுரத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, ராமநாதபுரத்தில் முதன்மை அங்கன்வாடி மையம் 1–5–2004 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

364—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 38297—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பூங்குளம் ஊராட்சி, கங்கானிமேடு மற்றும் பூங்குளம் காலனி பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

பூங்குளம் ஊராட்சியில் கங்கானி மேடு அங்கன்வாடி மையம் வாடகைக் கட்டடத்திலும் மற்றும் பூங்குளத்தில் குறு அங்கன்வாடி மையம் பஞ்சாயத்து கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்கீழ் இவ்விரு மையங்களுக்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

365—

அங்கன்வாடி மையம்

வினா எண் 38323—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, கீழவெள்ளக்கால் ஊராட்சி, அருந்ததியர் காலனியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கீழவெள்ளக்கால் ஊராட்சி, அருந்ததியர் காலனி பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள துவரங்காடு முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால் அங்கு அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

366—

அங்கன்வாடி மையம் சீரமைத்தல்

வினா எண் 38327—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊரணியிலுள்ள அங்கன்வாடி மையத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊரணியிலுள்ள மேலப்பாவூர்–2 முதன்மை அங்கன்வாடி மையத்தின் பழுதுகள் முற்றிலுமாக சீரமைக்கப்பட்டு மையம் அரசு கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

[2016 *பிப்ரவரி* 20

367—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 39263—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, இராஜகோபாலபேரி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, இராஜகோபாலபேரி ஊராட்சியில் 5 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 2 மையங்கள் அரசுக் கட்டடங்களிலும் 3 மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த 3 மையங்களுக்கும் நிலம் தேர்வு செய்யப்பட்டு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

368—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 39264—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கீழப்பாவூர் வட்டாரம், சுரண்டை பேரூராட்சியில் மொத்தம் 26 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 12 மையங்கள் அரசுக் கட்டடங்களிலும் 14 மையங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த 14 மையங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

369—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42347—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை நகராட்சி, 21–வது வார்டில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 21–வது வார்டு அங்கன்வாடி மையம் 19–9–1982–ல் தொடங்கப்பட்டு, தற்போது இம்மையம் தற்காலிகமாக தாய் சேய் நலக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு, பணி நிறைவு பெறும் நிலையில் உள்ளதால், அக்கட்டடப் பணியினை விரைந்து முடிக்க நகராட்சி நிருவாகத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

370—

பெண்கள் விடுதிகள்

வினா எண் 42980—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களுக்குத் தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மத்திய அரசின் மானியம் பெறும் மூன்று விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. (நாகர்கோவில்–2 மற்றும் தக்கலை–1) நாகர்கோவிலில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவருக்கு விடுதிகள் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

371—

பெண்கள் விடுதிகள்

வினா எண் 42981—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மத்திய அரசின் மானியம் பெறும் மூன்று விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. (நாகர்கோவில்—2 மற்றும் தக்கலை—1) மார்த்தாண்டத்தில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவருக்கு விடுதிகள் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

372—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 43010—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, ஜெ.ஜெ. நகர் அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டாரம், ஜெ.ஜெ. நகர் பகுதிக்குட்பட்ட சின்னகாளி பாளையம் முதன்மை அங்கன்வாடி மையம் 25—6—2007 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இம்மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

373—

அங்கன்வாடி மையம் சீரமைத்தல்

வினா எண் 43507—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) புதுக்கோட்டை தொகுதி, தொண்டைமான் ஊரணி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி, தொண்டைமான் ஊரணி ஊராட்சியில் முதன்மை அங்கன்வாடி மையம் 1–7–1982 முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் பெரிய பழுதுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

374—

குழந்தைகள் உரிமை பாதுகாக்கும் ஆணையம்

வினா எண் 43868—திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் மாநில ஆணையத்திற்கு உறுப்பினர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், கைனூர் ஊராட்சி, கைனூர் ராமதாஸ் நகர் அங்கன்வாடி மையம் 2010 முதல் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்திற்கு சர்வே எண் 308–ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016 பிப்ரவரி 20]

441—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 59886—திரு. சு. ரவி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை, காந்தி நகர் மற்றும் மிஷன் தெருவிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சர்வே எண் 361, 391/2–ல் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, காந்தி நகர் அங்கன்வாடி மையம் ஏற்கெனவே அரசு கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் தேவை எழவில்லை. மேலும் குருவராஜப்பேட்டை மற்றும் மிஷன் தெரு, அங்கன்வாடி மையங்களுக்கு சர்வே எண் 391/2–ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

442—

அங்கன்வாடி மையம்

வினா எண் 61458—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோரகுப்பம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோரகுப்பம் கிராமத்தில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் 1982 முதல் அரசு கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் இங்கு புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

443—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61527—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், பெரிய ஆவரங்காடு வடக்கு பகுதி மற்றும் பனைக்குளம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், பெரிய ஆவரங்காடு வடக்கு பகுதி மற்றும் பனைக்குளம் அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

444—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61529—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வளநாடு மற்றும் பள்ளமிட்டான் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வளநாடு மற்றும் பள்ளமிட்டான் அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

445—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61531—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கீழமேல்குடி தெக்கூர் அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கீழமேல்குடி தெக்கூர் அங்கன்வாடி மையம் 1–12–2009 முதல் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2016 பிப்ரவரி 20

446—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61532—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சி, V-கரிசல்குளம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சி, V–கரிசல்குளம் அங்கன்வாடி மையம் 1–12–2009 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

447—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61533—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், துத்திக்குளம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், துத்திக்குளம் அங்கன்வாடி மையம் 1–3–1983 முதல் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

448—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61534—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், இளையநாயக்கன் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், இளையநாயக்கன் அங்கன்வாடி மையம் 1–12–2009 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

449—

அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம்

வினா எண் 61535—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மேலநெட்டூர் ஊராட்சி, P. ஆலங்குளம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மேலநெட்டூர் ஊராட்சி P. ஆலங்குளம் அங்கன்வாடி மையம் ஏற்கெனவே 15–9–2009 முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

450—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61537—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், இளமனூர் ஊராட்சி, குணப்பனேந்தல் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், இளமனூர் ஊராட்சி, குணப்பனேந்தல் கிராம அங்கன்வாடி மையம் 1–7–1982 முதல் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு

இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

451—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61538—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கழுகர்கடை ஊராட்சி, பெருமாள்புரம் காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கழுகர்கடை ஊராட்சி, பெருமாள்புரம் காலனி அங்கன்வாடி மையம் 15–7–2007 முதல் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

452—

அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 61539—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பெத்தானேந்தல் ஒத்தவீடு கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பெத்தானேந்தல் ஒத்தவீடு கிராம அங்கன்வாடி மையம் 15–7–2007 முதல் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

453—

அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம்

வினா எண் 61719—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சி, வார்டு–10, பெருமாள் புதூரிலுள்ள அங்கன்வாடி மைய கட்டடத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சி, வார்டு–10, பெருமாள் புதூரிலுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் தற்போது ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கட்டடத்திற்கு மாற்றப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்படுகின்றது. மேலும், இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016 பிப்ரவரி 20]

454—

அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம்

வினா எண் 61761—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, நெய்யூர் பேரூராட்சி, சேனம்விளையில் அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, நெய்யூர் பேரூராட்சி, சேனம்விளை அங்கன்வாடி மையத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

455—

அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம்

வினா எண் 61967—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தாரமங்கலம் நடுநிலைப் பள்ளியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தாரமங்கலம் நடுநிலைப் பள்ளியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2016 பிப்ரவரி 20

456—

கலைக் கல்லூரி

வினா எண் 29790—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

457—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 30634—திரு. சு. ரவி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி புல எண் 542, 543-ல் உள்ள நிலத்தில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம் இச்சிபுத்தூர் ஊராட்சியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

458—

சர்வதேச தரத்தில் பல்கலைக்கழகம்

வினா எண் 30983—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் சர்வதேச தரத்தில் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சென்னையில் சர்வதேச தரத்தில் பல்கலைக்கழகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

459—

ஔவையார் பல்கலைக்கழகம்

வினா எண் 32231—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஔவையார் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஔவையார் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

460—

அரசு பொறியியல் கல்லூரி

வினா எண் 32364—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

461—

அரசு பெண்கள் கலைக் கல்லூரி

வினா எண் 34478—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 *பிப்ரவரி* 20]

462—

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 34498—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

463—

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 34499—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

464—

அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரி

வினா எண் 35055—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

465—

ஆசிரியர் பயிற்றுநர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 35056—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் ஆசிரியர் பயிற்றுநர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் ஆசிரியர் பயிற்றுநர் பயிற்சிக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

466—

அரசு பொறியியல் கல்லூரி

வினா எண் 35152—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

467—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 35154—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

468—

கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

வினா எண் 35600—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக அரசு கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, முதற்கட்டமாக அரசாணை (நிலை) எண் 71 உயர்கல்வி, நாள் 29–4–2013 இல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான நாற்காலிகள், மேசைகள் மற்றும் கரும்பலகைகள் ஆகியவை டான்சி மூலமாக வாங்குவதற்கு ரூ.20.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. ரூ.16,68,79,446/– மதிப்பீட்டிலான 19,775 எண்ணிக்கையில் அறைகலன்கள் மற்றும் கரும்பலகைகள் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக அரசாணை (நிலை) எண் 214, உயர்கல்வி, நாள் 17–10–2013 இல் 69 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கு நூலகங்களுக்கான மேசைகள், நாற்காலிகள், மொழி ஆய்வகங்களுக்கான கணினி மேசைகள், நாற்காலிகள், நூலகங்களுக்கு தேவையான அலமாரிகள், அறிவிப்பு பலகைகள் ஆகியவற்றையும் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நாற்காலிகள், மேசைகள் மற்றும் கரும்பலகைகள் ஆகியவற்றையும் டான்சி மூலமாக வாங்குவதற்கு ரூ.24,49,76,745/– தொகை நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2016 பிப்ரவரி 20]

469—

அரசு பொறியியல் கல்லூரி

வினா எண் 35972—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

470—

உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கட்டடம்

வினா எண் 36142—திரு. சு. ரவி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, திருவள்ளுவர் பல்கலைக்கழக இருபாலர் உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 112, வருவாய்த் துறை, நாள் 10–4–2013–ல் ஆட்டுப்பாக்கம் கிராமம், அரக்கோணம் தாலுகா, வேலூர் மாவட்டம், புல எண்கள் 238/3 மற்றும் 240 ஆகியவற்றில் 3.03.5 ஹெக்டேர் பரப்பளவு நிலம், அரக்கோணத்தில்

துவங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு உயர்கல்வித் துறைக்கு நிலமாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், அரசாணை (நிலை) எண் 145 உயர்கல்வி, நாள் 12–8–2013–ல் மேற்காண் நிலத்தில் அரக்கோணத்தில் துவங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தர கட்டடம் கட்டும் பொருட்டு அரசின் பங்களிப்பான ரூ.4,83,32,000/–ஐ (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இக்கட்டடம் கட்டுவது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

471—

அரசு மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 36195—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

472—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 36222—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) சோழவந்தான் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சோழவந்தான் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை

473—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 36224—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

474—

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 36259—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

475—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 36822—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடைஷெ

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை

476—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 37456—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை

477—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 37724—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

478—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 38042—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

479—

சமுதாயக் கல்லூரி

வினா எண் 39064—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலகத்தில் சமுதாயக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, மேலகத்தில் சமுதாயக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

480—

கலைக் கல்லூரி

வினா எண் 41742—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், எஸ்.வி. நகரம், ஜாகீர் அரண்மனையினுள் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், எஸ்.வி. நகரம், ஜாகீர் அரண்மனையினுள் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

481—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 42021—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) நாங்குநேரி தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

482—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 42433—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் செயல்படும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தவிர்த்து, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் செயல்படும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தவிர்த்து, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

483—

கலைக் கல்லூரி

வினா எண் 42985—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்ட தலைநகரில் மகளிருக்கென அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்ட தலைநகரில் மகளிருக்கென அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

484—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 43679—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

485—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 44384—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

486—

பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 46215—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்தில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்தில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2016 பிப்ரவரி 20

487—

பொறியியல் கல்லூரி

வினா எண் 46782—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு பொறியியல் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

488—

உள் விளையாட்டு அரங்கம்

வினா எண் 47271—திரு. சோழன். சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

2016 பிப்ரவரி 20]

489—

பொறியியல் கல்லூரி

வினா எண் 49581—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

490—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 49583—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மங்கைமடம் பகுதியை மையமாகக் கொண்டு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மங்கைமடம் பகுதியை மையமாகக் கொண்டு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

491—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 50243—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

492—

பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 50275—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்ட பகுதியில் பெண்களுக்கென பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி தேவகோட்டை வட்ட பகுதியில் பெண்களுக்கென பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

493—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 50710—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) திருத்தணியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

494—

மகளிர் அரசு கலைக் கல்லூரி

வினா எண் 50718—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரத்தில் புதிய மகளிர் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்தில் புதிய மகளிர் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

495—

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 50763—திரு. க. தினகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சூலூரில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சூலூரில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

496—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 51070—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

497—

பொறியியல் கல்லூரி

வினா எண் 51150—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

498—

அரசு கலைக் கல்லூரி

வினா எண் 51210—திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓமலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதியில் புதிதாக அரசு கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 *பிப்ரவரி* 20

499—

கலைக் கல்லூரி

வினா எண் 52738—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

500—

அரசு மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 52739—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2016 *பிப்ரவரி* 20]

பட்டியல் 7

1—

மாலைநேரக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 52892—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் இருபாலர் பயிலும் மாலைநேர கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் இருபாலர் பயிலும் மாலைநேர கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

கல்வியியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 53879—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் கல்வியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதியில் கல்வியியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 54746—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

பொறியியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 57764—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

5—

கூடுதல் கட்டடம்

வினா எண் 61784—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி இராமசாமி தமிழ் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, காரைக்குடி இராமசாமி தமிழ் கல்லூரி அரசு உதவிபெறும் கல்லூரியாகும். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டடப் பணிகளை, சார்ந்த கல்லூரிகளே தங்கள் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

6—

நியாய விலை கடைக்குக் கட்டடம்

வினா எண் 6084—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, சாமிசெட்டிப்பட்டி, கமலநத்தம், சி.புதூர் பகுதிகளில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, சாமிசெட்டிப்பட்டியில் முழுநேர நியாய விலைக் கடை அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கமலநத்தம் பகுதிநேர நியாய விலைக் கடை சட்டமன்ற

உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடப்பட்ட கட்டடத்தில் 3–4–2013 முதல் செயல்பட்டு வருகின்றது. மேற்கூறிய நியாய விலைக் கடைகளுக்கு புதிதாக கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. சி.புதூர் கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

7—

கூட்டுறவு வங்கி

வினா எண் 30198—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கள்ளிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து மீண்டும் வடமலைபாளையத்தில் தனித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தினைப் பிரித்து மீண்டும் வடமலைபாளையத்தில் புதியதாக சங்கம் தனித்து இயங்க வாய்ப்பு இல்லை.

8—

கூட்டுறவுச் சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம்

வினா எண் 32635—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள தீபாலப்பட்டி கூட்டுறவுச் சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2014–2015 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 1–ன்படி தீபாலப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு பாதுகாப்பு அறை மட்டும் கட்டத் தெரிவு செய்யப்பட்டு, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.2,30,652/– அனுமதிக்கப்பட்டு, தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.7.60 இலட்சம் நிதியுதவி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திடம் பெற்று அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி வரப்பெற்றவுடன் அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

சொந்தக் கட்டடம்

வினா எண் 32800 திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, மொரப்பூர் ஒன்றியம், காமண்ட அள்ளி ஊராட்சி, ஆர்.எஸ்.தொட்டம்பட்டி நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மொரப்பூர் ஒன்றியம், காமண்ட அள்ளி ஊராட்சி, கே.கே.81 சின்னாகவுண்டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆர்.எஸ். தொட்டம்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடைக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டப்பட்டு, 1–7–2014 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

[2016 பிப்ரவரி 20

10—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 33791—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், கிளியூர் ஊராட்சி, கிளியூரில் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதியில் உள்ள கிளியூர் நியாய விலைக் கடை 346 குடும்ப அட்டைகளுடன் பல வருடங்களாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கிளியூர் நியாய விலைக் கடையை புளியால் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நடத்துகின்றது. இந்த நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட சங்கத்திற்கு சொந்தமான இடம் இல்லை. இட ஒதுக்கீடும், நிதி ஒதுக்கீடும் கிடைக்கப்பெறும் பட்சத்தில், கிளியூர் ஊராட்சி, கிளியூரில் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 33797—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், இராமகிருஷ்ணாபுரம் ஊராட்சி, தினையூரணி நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் இராமானுஜம் கூட்டுறவு பண்டக சாலையால் நடத்தப்படும் இராமகிருஷ்ணாபுரம் முழுநேர நியாய விலைக் கடையின் பகுதிநேரக்கடையான தினையூரணி பகுதி நேரக்கடை 163 குடும்ப அட்டைகளுடன் இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இராமானுஜம் கூட்டுறவு பண்டக சாலையில் போதுமான இடவசதியும், நிதி வசதியும் இல்லாத சூழ்நிலையில் தினையூரணி நியாய விலைக் கடைக்கு புதிதாக கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

தேங்காய் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 34858—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பது தொடர்பாக, வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் மற்றும் தொடர்புடைய இதர மாவட்ட அலுவலர்களுடன், மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து ஆலோசித்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய மேலாண்மை இயக்குநருக்கு பரிந்துரை செய்யும்பட்சத்தில், அரசு ஆணை (நிலை) எண் 99, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11–7–2006 இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில், குழித்துறையில் கொப்பரைக்

[2016 பிப்ரவரி 20

கொள்முதல் நிலையம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 34871—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், செலுகை ஊராட்சியில் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், செலுகை முழுநேர நியாய விலைக் கடை 400 குடும்ப அட்டைகளுடன் பிடாரநேந்தல் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட போதுமான இடவசதியும், நிதி ஒதுக்கீடும் இல்லாததால் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 34895—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, அகரபுத்தூர் ஊராட்சி, கோவிந்தராஜன்பேட்டை நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, அகரபுத்தூர் ஊராட்சி, கோவிந்தராஜன்பேட்டை பகுதிநேர நியாய விலைக் கடை 131 குடும்ப அட்டைகளுடன் வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி பகுதிநேர நியாய விலைக் கடைக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

15—

கூட்டுறவு மருந்துக் கடைகள் அமைத்தல்

வினா எண் 35358—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடியில் கூட்டுறவு மருந்துக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடியில் தனியார் மருந்துக் கடைகள் ஏற்கெனவே உள்ளதாலும், கண்ணங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் மற்றும் திருப்பத்தூர் வேளாண் விளை பொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருவதாலும், அப்பகுதியில் புதிய கூட்டுறவு மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 36885—திருமதி ர. சுபா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) கெங்கவல்லி தொகுதி, செங்கட்டு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி, செங்கட்டு பகுதிநேர நியாய விலைக் கடை 250 குடும்ப அட்டைகளுடன் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கொடுக்கப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்திடம் சொந்தமான மனையோ, நிதியோ இல்லாததால், கெங்கவல்லி தொகுதி செங்கட்டு பகுதிநேர நியாய விலை கடைக்கு என சொந்தக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

17—

நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 37310—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, தருமபுரி நகரம், 9–வது வார்டில் உள்ள நியாய விலைக் கடைக்கு வட்டார வளர்ச்சி காலனியில் நிலம் தேர்வு செய்து சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி சட்டமன்றத் தொகுதி, 9–வது வார்டில் 640 குடும்ப அட்டைகளுடன் வட்டார வளர்ச்சி காலனி நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரின் மையப்பகுதியில் செயல்பட்டு வருகிறது. இப்பகுதியில் நியாய விலை கடைக்குக் கட்டடம் கட்ட நிலம் ஏதும் கிடைக்காததால் சொந்தக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

2016 பிப்ரவரி 20]

18—

கூட்டுறவு வங்கி புதிதாக அமைத்தல்

வினா எண் 37802—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், சிறுவாச்சி ஊராட்சியில் கூட்டுறவு வங்கி புதியதாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறுவாச்சி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

19—

கூட்டுறவு வங்கி புதிதாக அமைத்தல்

வினா எண் 38062—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆவுடையானூர் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

[2016 பிப்ரவரி 20

20—

கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு

வினா எண் 38394—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிற்றம்பலம் ஊராட்சி 0.322 மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி ஆகும். மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏற்கெனவே 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. திருச்சிற்றம்பலம் ஊராட்சிக்கும், மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 9 கிலோ மீட்டர் ஆகும். திருச்சிற்றம்பலம் ஊராட்சிக்குட்பட்ட விவசாய உறுப்பினர்களின் தேவைக்கு, மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள வேளாண்மைக் கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குள் திருச்சிற்றம்பலம் ஊராட்சி செயல்பட்டு வருவதாலும், ஏற்கெனவே இத்தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 150 மெட்ரிக் டன் கொள்ளளவில் கிடங்குகள் உள்ளதாலும், மேலும், கிடங்கு கட்டக் கோரும் திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை இல்லாததாலும் அவ்வூராட்சியில் வேளாண்மை கிடங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]
21—

கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு

வினா எண் 38395—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குணராமநல்லூர் ஊராட்சி 0.400 திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி ஆகும். திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏற்கெனவே 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. மேலும், கிராமப்புற உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF XVIII) திட்டத்தின்கீழ் நபார்டு நிதி உதவி பெற்று 2012–2013 ஆம் ஆண்டில் புதிதாக 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் திப்பணம்பட்டி கிராமத்தில் வேளாண்மை கிடங்கு கட்டப்பட்டுள்ளது. குணராமநல்லூர் ஊராட்சிக்கும், திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டர் ஆகும். குணராமநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட விவசாய உறுப்பினர்களின் தேவைக்கு திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள வேளாண்மைக் கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குள் குணராமநல்லூர் ஊராட்சி செயல்பட்டு வருவதாலும், ஏற்கெனவே இத்தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 150 மெட்ரிக் டன் மற்றும் 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் இரண்டு கிடங்குகள் உள்ளதாலும், மேலும், கிடங்கு கட்ட கோரும் குணராமநல்லூர் ஊராட்சியில் திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு சொந்தமான அடிமனை இல்லாததாலும் அவ்வூராட்சியில் வேளாண்மை கிடங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2016 பிப்ரவரி 20

22—

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்

வினா எண் 38400—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரப்பேரி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

23—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 38408—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

2016 பிப்ரவரி 20]

24—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 39573—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலகரத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலகரத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உள்ளதால் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

25—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 39670—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 485.21 ஹெக்டேர் உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத

[2016 பிப்ரவரி 20

நிலையிலும், திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் 2011–2012 தணிக்கை அறிக்கையின்படி ரூ.2.46 இலட்சம் நட்டத்தில் இயங்கி வருவதாலும், புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத நிலையிலும் கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரம் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

26—

கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைத்தல்

வினா எண் 39672—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சி, 0.233 கீழப்பாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி ஆகும். கீழப்பாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ஏற்கெனவே இரண்டு 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் உள்ளது. இதில் ஒன்று கீழப்பாவூர் கிராமத்திலும், மற்றொன்று மேலப்பாவூர் கிராமத்திலும் உள்ளது. மேலப்பாவூர் ஊராட்சிக்குட்பட்ட விவசாய உறுப்பினர்கள் தங்கள் தேவைக்கு 0.233 கீழப்பாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உள்ள வேளாண்மை கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், கிடங்கு கட்டக்கோரும்

2016 பிப்ரவரி 20]

மேலப்பாவூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு கிடங்கு உள்ள நிலையிலும், 0.233 கீழப்பாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு மேலப்பாவூர் ஊராட்சியில் சொந்தமான அடிமனை இல்லாத நிலையிலும், மேலப்பாவூர் ஊராட்சியில் கூடுதல் வேளாண்மை கிடங்கு அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 39673—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலப்பாவூர் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு ஏதும் இல்லை.

28—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 39675—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கீழவெள்ளகால் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழவெள்ளகால் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

29—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 39676—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, இனாம் வெள்ளக்கால் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இனாம் வெள்ளக்கால் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

30—

கூட்டுறவு வங்கி அமைத்தல்

வினா எண் 42911—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கேத்தனூர் ஊராட்சியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 947 ஹெக்டேர் மட்டுமே உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளின்படியும் கேத்தனூர் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

31—

சொந்தக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 45591 திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியிலுள்ள கூட்டுறவு நகர கடன் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நகரக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கென சொந்தமாக அடிமனை இல்லாத நிலையிலும், சங்கம் 2009–2010 முதல் குவிந்த நட்டத்தில் இயங்குவதாலும், 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.199.94/– இலட்சம் குவிந்த நட்டத்தில் செயல்படுவதாலும் சங்கத்திற்கென சொந்தமாக கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

[2016 பிப்ரவரி 20

32—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 47546—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, பலபத்திரராமபுரம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பலபத்திரராமபுரம் ஊராட்சியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 324 ஹெக்டேர் உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளின்படியும் பலபத்திரராமபுரம் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

33—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 47551—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழக்கலங்கல் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழக்கலங்கல் ஊராட்சியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 224 ஹெக்டேர் உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளின்படியும் கீழக்கலங்கல் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

34—

சொந்தக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 48443—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகரில் 10 மற்றும் 25–வது வார்டுகளிலுள்ள பொது விநியோக நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி நகரில் 10 மற்றும் 25–வது வார்டுகளிலுள்ள பொதுமக்கள், கொடிமரம் பகுதியில் செயல்படும் நியாய விலைக் கடைகளில் பொருட்கள் பெற்று வருகின்றனர். கட்டடம் கட்டுவதற்கு நிதி வசதியும், இட வசதியும் கிடைக்கப்பெறாததால் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

35—

சொந்தக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 49389—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, மங்கானூர் பகுதியில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, மங்கானூர் நியாய விலைக் கடை வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. மேற்படி நியாய விலைக் கடைக்குத் தேவையான இட வசதியும் நிதி ஒதுக்கீடும், கிடைக்கப்பெறாததால் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

36—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 49926—திரு. சு. ரவி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பாடி ஊராட்சி, சித்தாம்பாடியில் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பாடி ஊராட்சி, சித்தாம்பாடி நியாய

2016 பிப்ரவரி 20]

விலைக் கடை 302 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே கடைக்கு மீண்டும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

37—

கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம்

வினா எண் 49946—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஊராட்சியில் உள்ள கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இசட் 570 நெப்பத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிட்டங்கியுடன்கூடிய அலுவலகக் கட்டடம் 1696 சதுரடி அடி அளவில் ரூ.9.40 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, 1–3–2013 முதல் செயல்பாட்டில் உள்ளது.

38—

கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம்

வினா எண் 50387—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், மாதப்பூர் ஊராட்சி, தொட்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கே. 431, தொட்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ரூ.8.38 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் கட்டும் பொருட்டு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில், வட்டியில்லா கடன் பெறுவதற்கான முன்மொழிவு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி இச்சங்கத்திற்கு பாதுகாப்புக் கதவுடன்கூடிய பாதுகாப்பு அறை அமைக்க, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.5,14,670/– நிதியுதவி 30–9–2014–ல் பெறப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

39—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 50840 திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி, கிருஷ்ணாபுரம் ஊராட்சிகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இச்சிப்பட்டி, கிருஷ்ணாபுரம் ஊராட்சிகளில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 774.98 ஹெக்டேர் மட்டுமே உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு

2016 பிப்ரவரி 20]

கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளின்படி இச்சிப்பட்டி மற்றும் கே. கிருஷ்ணாபுரம் ஊராட்சிகளில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

40—

சொந்தக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 51502—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரி மற்றும் கொளத்தூர் பகுதியில் உள்ள சேலம் மத்திய கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேச்சேரி மற்றும் கொளத்தூர் மேட்டூர் அணை மற்றும் மேட்டூர் ஆர்.எஸ். ஆகிய கிளைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கிளைகளுக்கு சொந்த அடிமனை நிலம் இல்லை. எனவே, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கொளத்தூர் மற்றும் மேச்சேரி கிளைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை.

41—

தானியக் கிடங்குகள் அமைத்தல்

வினா எண் 51513—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் தானியக் கிடங்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமானது லக்கம்பட்டி, சிங்கிரிப்பட்டி, ஆலமரத்துப்பட்டி, கொளத்தூர், தின்னப்பட்டி, மூலக்காடு மற்றும் சாம்பள்ளி ஆகிய ஏழு வருவாய் கிராமங்களை செயல் எல்லையாகக் கொணடுள்ளது. இப்பகுதி விவசாயிகளின் விளைபொருட்களான பருத்தி மற்றும் நிலக்கடலையை சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொளத்தூர் விற்பனை பிரிவின்மூலம் (Marketing centre) நியாயமான விலைக்கு விற்பனை செய்து தரப்பட்டு வருவதால், கொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள 107 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரு கிடங்குகளை பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை.

எனவே, கொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு என தனியே தானியக் கிடங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 51799—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, எம். காளிப்பட்டியிலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, எம். காளிப்பட்டியிலுள்ள நியாய விலைக் கடை பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அதே நியாய விலைக் கடைக்கு மீண்டும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

43—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 51801—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், விருதாசம்பட்டி ஊராட்சி செங்கரட்டிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், விருதாசம்பட்டி ஊராட்சி செங்கரட்டு பகுதியில் பி.என். பட்டி முழுநேரக்கடையும், மல்லப்பனூர் முழுநேரக் கடையும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்படி நியாய விலைக் கடைக்குக் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

44—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 52036—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் ஊராட்சி, மானாசிபாளையம் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுகா மற்றும் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் ஊராட்சி, மானாசிபாளையம் நியாய விலைக் கடை தனியார்

[2016 பிப்ரவரி 20

வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நியாய விலைக் கடைக்கு இடமும், போதிய நிதி வசதியும் கிடைக்கப்பெறாததால், கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 52308—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, ஓய் 73 குறுமாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓய் 73 குறுமாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது விளவங்கோடு வட்டம், குறுமாத்தூர் கிராமத்தில் 199 ஆம் ஆண்டில் 1200 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. சங்கம் தற்போது செயல்பட்டு வரும் சொந்தக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

46—

கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 52310—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சிக்குட்பட்ட ஓய் 55 குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒய் 55 குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், விளவங்கோடு வட்டம், குன்னத்தூர் கிராமம், தோட்டவரத்தில் 15–11–1977–ல் 1000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட சொந்த அலுவலகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. சங்கம் தற்போது செயல்பட்டு வரும் சொந்தக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

47—

கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 52311—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கணபதிபுரம் பேரூராட்சி, முஞ்சிறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒய் 45 பார்த்திபபுரம் முஞ்சிறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பிரதி மாத வாடகை ரூ.2300/– ஆகும். சங்கத்திற்கு சொந்தமாக அடிமனை ஏதும் இல்லாத நிலையில், புதிய கட்டடம் கட்ட வழி வகை இல்லை.

48—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 52608—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வாலிபாளையம் ஊராட்சியில், நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வாலிபாளையம் ஊராட்சியில், நியாய விலைக் கடை 322 குடும்ப அட்டைகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் 1-12-2014 முதல் செயல்பட்டு வருவதால், மேலும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

49—

கூட்டுறவுச் சங்கத்திற்குக் கூடுதல் கட்டடம்

வினா எண் 52609—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கண்டியன்கோயில் ஊராட்சி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கண்டியன்கோயில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1400 சதுர அடிப்பரப்பில் 1997-1998 ஆம் ஆண்டு கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டில் தேசிய ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF) திட்டத்தின்மூலம் ரூ.8 இலட்சம் மதிப்பில் 100 சதவீத

2016 பிப்ரவரி 20]

மானியத்தில் 100 மெட்ரிக் டன் கிடங்கு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இச்சங்கத்திற்கு கூடுதல் கிடங்கு கட்டும் பொருட்டு 2014–2015 இல் தானியக் கிடங்கு மேம்பாட்டு நிதி (Warehouse Infrastructure Fund – WIF) திட்டத்தின்கீழ் 100 மெட்ரிக் டன் கிடங்கு கட்ட கண்டியன்கோயில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

2014–2015 ஆம் ஆண்டிற்கான தானியக் கிடங்கு மேம்பாட்டு நிதி அனுமதிக்கப்பட்டவுடன் 100 சதவிகித அரசு மானியத்தில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள தானியக் கிடங்கு கட்டப்படும். எனவே, சங்க அலுவலக கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

50—

தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 53070—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது இம்மேலாண்மை நிலையத்தின்மூலம் பல்வேறு வகையான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவதற்கு அகில இந்திய தொழில்நுட்பக் குழுமம் (AICTE) மற்றும் தொழில்நுட்ப இயக்ககத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும். இம்மேலாண்மை பயிற்சி நிலையத்தில் போதிய இட வசதி இன்மையால், கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

ஒருங்கிணைந்த சந்தை வளாகம் அமைத்தல்

வினா எண் 53071—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் மிளகாய் விற்பனைக்கென ஒருங்கிணைந்த சந்தை வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

*சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு கொளத்தூர் பகுதியில் சொந்த அடிமனை மற்றும் நிதி வசதி இல்லை என்பதால், மேட்டூர் தொகுதி கொளத்தூரில் மிளகாய் விற்பனைக்கென ஒருங்கிணைந்த சந்தை வளாகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் மிளகாய் மற்றும் பருத்தி விற்பனை கொளத்தூர் ஒழுங்குமுறை விற்பனை (*Regulated Market*) கூடம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

52—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 53604—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பூசிமலைகுப்பத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, பூசிமலைகுப்பத்திலுள்ள நியாய விலைக் கடை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் (JVVT) கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

53—

கூட்டுறவுக் கடன் சங்கம்

வினா எண் 53955—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மண்டலத்தில் உள்ள தாண்டவன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வரும் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

அம்மா மருந்தகம் அமைத்தல்

வினா எண் 53972—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் அம்மா மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் பொதட்டூர்பேட்டை பிரதம கூட்டுறவு பண்டக சாலைமூலம் 10—12—2014 முதல் அம்மா மருந்தகம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

55—

கூட்டுறவு விவசாயக் கிடங்கு

வினா எண் 54837— திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலக்கலங்கல், கீழவீராணம் ஆகிய ஊராட்சிகளில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) (i) தென்காசி சட்டமன்றத் தொகுதியில் உள்ள மேலக்கலங்கல் ஊராட்சி, 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி ஆகும். 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏற்கெனவே அலுவலகத்துடன் இணைந்த 75 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. தற்பொழுது புதியதாக 2013—2014—ல் நபார்டு நிதியுதவியுடன் கிராமப்புற உள் கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று கட்டடப்பட்டு வருகிறது. மேலகலங்கல் ஊராட்சிக்குட்பட்ட விவசாய உறுப்பினர்கள் தங்கள் தேவைக்கு 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள வேளாண்மை கிடங்கினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும்,

2016 பிப்ரவரி 20]

கிடங்கு கட்ட கோரும் மேலகலங்கல் ஊராட்சியில் 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான அடிமனை இல்லாத நிலையில் மேலகலங்கல் ஊராட்சியில் வேளாண்மை கிடங்கு அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ii) தென்காசி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கீழவீராணம் ஊராட்சி, 0.1976 கிடாரக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி ஆகும். 0.1976 கிடாரக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏற்கெனவே 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள் உள்ளது. மேலும், தற்போது கிராமப்புற உள் கட்டமைப்பு வளர்ச்சி (RIDF XVIII) திட்டத்தின்கீழ் நபார்டு நிதி உதவி பெற்று 2012–2013 ஆம் ஆண்டில் புதியதாக 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வேளாண்மை கிடங்கு ஒன்று கட்டப்பட்டுள்ளது. கீழவீராணம் ஊராட்சிக்குட்பட்ட விவசாய உறுப்பினர்கள் தங்கள் தேவைக்கு 0.1976 கிடாரக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள வேளாண்மை கிடங்குகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், கிடங்கு கட்ட கோரும் கீழவீராணம் ஊராட்சியில் 0.1976 கிடாரக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான அடிமனை இல்லாத நிலையில் கீழவீராணம் ஊராட்சியில் வேளாண்மை கிடங்கு அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

56—

கூட்டுறவு விவசாயக் கிடங்கு

வினா எண் 54839—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குறிச்சாம்பட்டி, நவநீதகிருஷ்ணாபுரம் ஆகிய ஊராட்சிகளில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி சட்டமன்றத் தொகுதி குறிச்சாம்பட்டி, மற்றும் நவநீதகிருஷ்ணாபுரம் ஊராட்சிகள் 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி ஆகும். 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏற்கெனவே அலுவலகத்துடன் இணைந்த 75 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. தற்பொழுது புதியதாக 2013—2014-ல் நபார்டு நிதியுதவியுடன் கிராமப்புற உள் கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று கட்டப்பட்டு வருகிறது. குறிச்சாம்பட்டி மற்றும் நவநீதகிருஷ்ணாபுரம் ஊராட்சிகளுக்குட்பட்ட விவசாய உறுப்பினர்கள் தங்கள் தேவைக்கு 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள வேளாண்மை கிடங்கினைப் பயன்படுத்திக்கொள்ளலாம். 0.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான அடிமனை இல்லாத நிலையில் குறிச்சாம்பட்டி மற்றும் நவநீதகிருஷ்ணாபுரம் ஊராட்சிகளில் வேளாண்மை கிடங்கு அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 54880—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலவீராணம், மேலமருதப்பபுரம் ஆகிய ஊராட்சிகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலவீராணம், மேலமருதப்பபுரம் ஆகிய ஊராட்சிகளில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு முறையே 387 மற்றும்

2016 பிப்ரவரி 20]

120.12 ஹெக்டேர், உறுப்பினர்கள் முறையே 137 மற்றும் 212 உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளின்படியும் மேலவீராணம், மேலமருதப்பபுரம் ஆகிய ஊராட்சிகளில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

58—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 54882—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சீவலபுரம், கரடி உடைப்பு, வடக்கு காவலக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீவலபுரம், கரடி உடைப்பு (முத்தம்மாள்புரம்), மற்றும் வடக்கு காவலக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 277 மற்றும் 136 ஹெக்டேர், உறுப்பினர்கள் முறையே 1965 மற்றும் 1619 உள்ள நிலையிலும், மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3–10–2006 இல் விதித்துள்ள நிபந்தனைகளின்படியும் சீவலபுரம், கரடி உடைப்பு (முத்தம்மாள்புரம்), வடக்கு காவலக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

[2016 பிப்ரவரி 20

59—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 55071—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், சங்கிதவாடியிலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி மற்றும் ஒன்றியம், சங்கிதவாடி பகுதி நேர நியாய விலைக் கடை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் கடந்த 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருவதால், இதே கடைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

60—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 55073—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆதனூரிலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி மற்றும் ஒன்றியம், ஆதனூரில் உள்ள நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்தில் ஏற்கெனவே

2016 பிப்ரவரி 20]

செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 55483—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆலமரத்துப்பட்டி ஊராட்சி, குரும்பனூரிலுள்ள நியாய விலைக் கடைக்கு (எண் EPO18) சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆலமரத்துப்பட்டி ஊராட்சி, குரும்பனூரிலுள்ள நியாய விலைக் கடை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், அதே கடைக்கு புதிய சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

62—

நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

வினா எண் 56008—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, குருக்கன்பட்டியிலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சியில் குருக்கன்பட்டி என்ற பகுதியே இல்லையாதலால், நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுதல் குறித்த வினா எழவில்லை.

63—

கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைத்தல்

வினா எண் 60983—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் சட்டமன்றத் தொகுதியில் 29 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், ஒரு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் இரண்டு பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கங்கள் உள்ளன. இவை அனைத்தும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. நலிவடைந்த நிலையில் எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும் இல்லை என்பதால் புனரமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

64—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 61646—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கட்டிக்குளத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கட்டிக்குளம் கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 935 ஏக்கர் உள்ளது. ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும், மிளகனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் ஏற்கெனவே நட்டத்தில் இயங்கி வருவதாலும், கட்டிக்குளம் கிராமத்தில் புதிய சங்கம் அமைக்கப்பட்டால் மிளகனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் நலிவடையும் நிலை எழும் என்பதாலும் அரசு நிபந்தனைகளின்படி மானாமதுரை ஒன்றியம் கட்டிக்குளத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

65—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 8785—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி ஒன்றியம், கிழக்கு ஓலப்பாளையம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி ஒன்றியம், கிழக்கு ஒலப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சொந்தக் கட்டடம் இல்லாததால், புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

66—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 13912—திரு. ஏ.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, விண்ணமங்கலத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, விண்ணமங்கலம் கிராமத்தில் 540 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், மீண்டும் அதே பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

67—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 28810—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டம், புலியூர் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து சாயனாபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கழுவன் குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் புலியூர் முழுநேர நியாய விலைக் கடை 413 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 98 குடும்ப அட்டைகளையுடைய சாயனாபுரம் பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சாயனாபுரத்திலேயே தாய்க்கடைச் செயல்பட்டு வருகிறது. குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க்கடையில் 315 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். அரசு நெறிமுறைகளின்படி குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க்கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேரக் கடை துவங்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. மேலும், புலியூர் தாய் நியாய விலைக் கடை பகுதிநேரக் கடைக் கோரும் சாயனாபுரத்திலேயே செயல்பட்டு வருவதாலும், சாயனாபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

68—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 28826—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வடக்கு செட்டியாபட்டி, கீழசெட்டியாபட்டி மற்றும் இந்திரா நகர் பகுதிகளுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடவாளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் APO13 வடவாளம் முழுநேர அங்காடி 460 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் வடக்கு செட்டியாபட்டி, கீழசெட்டியாபட்டி மற்றும் இந்திரா நகர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 79 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கும் தாய்க்கடைக்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் உள்ளது. குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க்கடையில் 381 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். அரசு நெறிமுறைகளின்படி பகுதிநேரக்கடை துவங்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க்கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் வடக்கு செட்டியாபட்டி, கீழசெட்டியாபட்டி மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் தனியே புதிய பகுதிநேரக் கடை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

நவீன சேமிப்புக் கிடங்கு அமைத்தல்

வினா எண் 29053—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்கு மைவாடி கிராமம் புல எண் 549, 605–ல் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டத்திற்கு என புதிய செயல்முறை கிடங்கு கட்ட மைவாடி கிராமம் புல எண் 549, 605–ல் தேர்வு செய்யப்பட்ட இடம் பொருத்தமாக இல்லாத காரணத்தால் வேறு பொருத்தமான நிலம் வேடப்பட்டி கிராமம் புல எண் 160/1, 160/ 2 மற்றும் 160/3–ல் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அந்நிலத்திற்கான அரசு நில மதிப்பீடு வட்டாட்சியர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. நிலமதிப்பீடு பெறப்பட்டபின் அரசு நிதி ஒதுக்கீட்டின்பேரில் செயல்முறை கிடங்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 29065—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கே. கிருஷ்ணாபுரம் ஊராட்சி, செங்கோடம்பாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வழிகாட்டு நெறிகளின்படி புதிய பகுதிநேர அங்காடி அமைப்பதற்கு உத்தேச பகுதிநேர அங்காடியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகளும், தாய் அங்காடி செயல்படும் இடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குறையாமலும் பிரிக்கப்பட்ட பின்பு தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். இந்நேர்வில் மேற்காணும் நிபந்தனைகள் ஏதும் பூர்த்தியாகாத நிலையில்

[2016 பிப்ரவரி 20

செங்கோடம்பாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 29084—திரு. பி.ஆர். மனோகர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பாக்கம் ஒன்றியம், வெங்குப்பட்டு ஊராட்சி, கெங்காபுரம் கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், வெங்குப்பட்டு ஊராட்சி, வெங்குப்பட்டு முழுநேர நியாய விலைக் கடை 994 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் கெங்காபுரம் பகுதியைச் சேர்ந்த 211 குடும்ப அட்டைகளும் அடங்கும், தாய் நியாய விலைக் கடைக்கும், உத்தேச முழுநேரக் கடைக்கும் இடையே ஒரு கிலோ மீட்டர் தூரமே உள்ளது. கிராமப்புறங்களில் முழுநேரக் கடை அமைய குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் 211 குடும்ப அட்டைகளே கொண்ட கெங்காபுரம் பகுதியில் புதிய முழுநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 29094—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, தென்காசி வட்டம், அரியப்பபுரம் ஊராட்சி, ரகுமானியபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தென்காசி வட்டம், அரியப்பபுரம் ஊராட்சி, நாடாக்கண்ணுப்பட்டி நியாய விலைக் கடை 1243 குடும்ப அட்டைகளுடன் திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றது. இதில் ரகுமானியபுரம் கிராமத்தில் 200 குடும்ப அட்டைகள் உள்ளன. மேலும், நாடாக்கண்ணுப்பட்டி நியாய விலைக் கடைக்கு திரவியம் நகர் என்ற பகுதி நேரக்கடை 257 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், ரகுமானியபுரம் கிராமத்திற்கும் நாடாக்கண்ணுப்பட்டி தாய் நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் முக்கால் கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. எனவே, அரசு விதிகளின்படி மேற்படி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

பகுதிநேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 29258—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மறையூரிலுள்ள, கூட்டுறவு பொது விநியோகக் கடையை இரண்டாகப் பிரித்து ஊர்குடி கிராமத்தில் பகுதிநேர கூட்டுறவு நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், ஊர்குடி கிராமத்தில் 151 குடும்ப அட்டைகள் உள்ளன. இவை மறையூர் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்படவில்லை. மாறாக, கோவங்குடியில் செயல்படும் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஊர்குடி கிராமத்தில் உள்ள 151 குடும்ப அட்டைகளைப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தால், தாய்க்கடையான கோவங்குடியில், 177 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததாலும், இலவச அரசுக் கட்டட வசதி இல்லாததால், ஊர்குடியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 29383 திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் ஊராட்சி, கட்டபுளியங்காட்டில் முழுநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் ஊராட்சி, கட்டபுளியங்காடு பகுதியில் 65 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், அதன் அருகிலுள்ள கவுண்டனேரி பகுதிநேர நியாய விலைக் கடைக்கும், உத்தேசிக்கப்பட்ட கட்டபுளியங்காடு பகுதிக்கும் இடையே 0.50

2016 பிப்ரவரி 20]

கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசின் நெறிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில் கட்டபுளியங்காடு பகுதியில் புதிய முழுநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

75—

நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 30099—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணாங்குடி ஒன்றியத்தில், நெல் கொள்முதல் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு கொள்முதல் பருவம் 2014–2015–ல் காரைக்குடி தொகுதி, கண்ணாங்குடி ஒன்றியத்தில் 3–1–2015 அன்று நேரடி நெல் கொள்முதல் நிலையம் 1 திறக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

76—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 30286—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, திருமலைநாயக்கம்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, கெங்கமநாயக்கம்பாளையத்தில் 471 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் திருமலைநாயக்கம்பாளையத்தைச் சேர்ந்த 125 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் திருமலைநாயக்கம்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

77—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 30287—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் கிராம ஊராட்சி, சந்தவநாயக்கம்பாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி, காட்டூர் நியாய விலைக் கடையிலிருந்து 170 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 170 குடும்ப அட்டைகளுடன் சந்தவநாயக்கம்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 26–12–2013 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

78—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32632—திரு. க. தினகரன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், பெரிய கம்மாளப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், பெரிய கம்மாளப்பட்டியில் 3–2–2015 முதல் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

79—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32789—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேலூர் தொகுதி, செ. மேலப்பட்டி, கேசம்பட்டி, வெள்ளிமலை, டி. தர்மசானப்பட்டி, அய்யனார்புரம் ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்குவதற்கு அரசின் நிபந்தனைகள் பொருந்தாத நிலையில்,

[2016 பிப்ரவரி 20

மேலூர் தொகுதி, செ.மேலப்பட்டி, கேசம்பட்டி, வெள்ளிமலை, டி. தர்மசானப்பட்டி, அய்யனார்புரம் ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32951—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, தேக்காட்டூர் ஊராட்சி, மேல தேமுத்தம்பட்டி, பூவப்பட்டி, குறிச்சிப்பட்டி ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, தேக்காட்டூர் ஊராட்சி, மேல தேமுத்தம்பட்டி, பூவப்பட்டி, குறிச்சிப்பட்டி ஆகிய கிராமங்களில் 201 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 19–6–2014 முதலும், தே.பூலம்பட்டியில் 203 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. குறிச்சிப்பட்டி கிராமத்தில் 98 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், குறிச்சிப்பட்டியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32958—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

திருமயம் தொகுதி, கீழாநிலை பிர்க்கா கல்லுக்குடியிருப்பு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, கீழாநிலை பிர்க்கா கும்மங்குடி பகுதியில் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில், தலையாத்திவயல் பொந்துபுளி, மீனிகந்தா மற்றும் கல்லுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்ப அட்டைகள் அடங்கியுள்ளன. ஏற்கெனவே, தலையாத்திவயல் பொந்துபுளி, மீனிகந்தா ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால், கல்லுக்குடியிருப்பு பகுதியில் நான்காவதாக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

82—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32960—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, வாளரமாணிக்கம் ஊராட்சி, சமுத்திராபட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, வாளரமாணிக்கம் ஊராட்சி, சமுத்திராபட்டி கிராமத்தில் 121 குடும்ப அட்டைகளே உள்ளன. மேலும், சமுத்திராபட்டிக்கும் தாய் நியாய விலைக் கடையான வாளரமாணிக்கம் கிராமத்திற்குமிடையே உள்ள தூரம் 1 கிலோ மீட்டர் ஆகும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில்

சமுத்திராப்பட்டியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

83—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32962—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, லெம்பலக்குடி ஊராட்சி, ந.புதூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, லெம்பலக்குடி ஊராட்சி, புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் ந.புதூர் கிராமத்தில் 133 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் ந.புதூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

84—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32963—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, முனசந்தை ஊராட்சி, தெற்கு நல்லிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, முனசந்தை ஊராட்சி, தெற்கு நல்லிப்பட்டி கிராமத்தில் 111 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் தெற்கு நல்லிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

85—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32964—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, அரசம்பட்டி ஊராட்சி, மெய்யபட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, அரசம்பட்டி ஊராட்சி, மெய்யபட்டி கிராமத்தில் 90 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் மெய்யபட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

86—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32965—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

திருமயம் தொகுதி, துலையானூர் ஊராட்சி, வலையன்வயல் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, துலையானூர் ஊராட்சி, புதிய பகுதிநேரக் கடை அமைக்கக் கோரும் வலையன்வயல் கிராமத்தில் 110 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் வலையன்வயல் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

87—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32969—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, நெருஞ்சிக்குடி ஊராட்சி, பழைய நெருஞ்சிக்குடியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, நெருஞ்சிக்குடி ஊராட்சி, பழைய நெருஞ்சிக்குடியில் 204 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், மீண்டும் அதே பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

88—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 32972—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, செங்கீரை ஊராட்சி, செங்கீரை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, ராயரெகுநாதசமுத்திரம் தாய் நியாய விலைக் கடையில் உள்ள 734 குடும்ப அட்டைகளில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் செங்கீரை கிராமத்தைச் சேர்ந்த 260 குடும்ப அட்டைகளும் அடங்கும். இந்த குடும்ப அட்டைகளைப் பிரித்தால் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கு குறைவாகவே இருக்கும். எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் செங்கீரை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

89—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 33793—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை 23–வது வார்டு, கிருஷ்ணராஜபுரம் பகுதியில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகர், 23–வது வார்டு, கிருஷ்ணராஜபுரம் பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த அமுதம் நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்கு, சொந்தக் கட்டடம் கட்ட ஏதுவாக அரசுக்குச் சொந்தமான தகுதியான காலியிடம் ஏதும் தற்போது இல்லாத காரணத்தினால் இந்த நியாய விலைக் கடைக்கு தற்போது சொந்தக் கட்டடம் கட்ட வழிவகையில்லை.

90—

நடமாடும் நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 34898—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப்பகுதியில் நடமாடும் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப்பகுதியில் பர்கூர் நியாய விலைக் கடை எண் 1–ல் இணைக்கப்பட்டுள்ள 13 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சோளாகணை கிராமத்திலுள்ள 104 குடும்ப அட்டைகளுக்கு முதல் மற்றும் மூன்றாம் வார புதன்கிழமைகளிலும், பர்கூர் 002 நியாய விலைக் கடை எண் 2–ல் இணைக்கப்பட்டுள்ள, 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சுண்டப்பூர் கிராமத்திலுள்ள 106 குடும்ப அட்டைகளுக்கு பிரதிமாதம் முதல் மற்றும் மூன்றாம் வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் வாடகைக்கு வாகனம் அமர்த்தி குடிமைப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

91—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 35057—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், இறகுசேரி, ஸ்ரீதத்தாத்ரேய முனீஸ்வரர் கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், இறகுசேரி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீதத்தாத்ரேய முனீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் மேற்படி திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்திட வழிவகை இல்லை.

92—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 35380—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவுத், துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூரில் அமுதம் நியாய விலைக் கடையைப் பிரித்து தென் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர் வட்டம் மற்றும் கிராமம் JA*061 அமுதம் நியாய விலைக் கடை 1,363 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்தின் தென்பகுதியில்* JP048 *வீரகேரளம்புதூர் நியாய விலைக் கடை 461 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் கலிங்கப்பட்டி பகுதி நேரக் கடை* (JPO48P1) *390 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. வீரகேரளம்புதூர் கிராமத்தில் ஏற்கெனவே இரண்டு முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால், கூடுதலாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

93—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 36800—திரு. க. தினகரன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலைப்பாளையம் ஊராட்சி, பச்சாபாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், பச்சாபாளையத்தில் 242 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை 3–2–1995 முதல் செயல்பட்டு வருவதால் மீண்டும் அப்பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

94—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 36818—திரு. சு. ரவி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, கீழ்ப்பாக்கம் ஊராட்சி, ராஜபாளையம் கிராமத்திற்கு தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, கீழ்ப்பாக்கம் ஊராட்சி, கீழ்ப்பாக்கம் முழுநேர தாய் நியாய விலைக் கடை 555 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் ராஜபாளையம் பகுதியைச் சேர்ந்த 145 குடும்ப அட்டைகள் அடங்கும். தாய் நியாய விலைக் கடையிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இராஜாபாளையம் கிராமத்தில் உத்தேச புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு 145 குடும்ப அட்டைகளைப் பிரித்த பின்பு, கீழ்பாக்கம் முழுநேர நியாய விலைக் கடையில் 410 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், இராஜாபாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

புனித தீர்த்தக் குளங்களைப் புதுப்பித்தல்

வினா எண் 36827—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் புனித தீர்த்தக்குளங்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலின் உள்ளே உள்ள தீர்த்தக்குளங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. திருக்கோயிலின் வெளியே உள்ள தீர்த்தக்குளங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

96—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 37311—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, சோகத்தூர் ஊராட்சி, சத்தியா நகரில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, சோகத்தூர் ஊராட்சி, ரெட்டிஅள்ளி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 193 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, சத்தியா நகரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 6–12–2014 முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

97—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 37325—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், சாயமலை ஊராட்சி, சிதம்பராபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், சாயமலை ஊராட்சி, சாயமலை நியாய விலைக் கடை 634 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் சிதம்பராபுரம் கிராமத்தைச் சேர்ந்த 162 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு பகுதிகளுக்குமிடையே 1.4 கிலோ மீட்டர் தூரமே உள்ளது. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் சிதம்பராபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

98—

புதிய கோபுரம் அமைத்து குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 37734—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, நாராயணத்தேவன்பட்டி அருகிலுள்ள கூத்தனாட்சி அம்மன் கோயிலில் புதிய கோபுரம் அமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, நாராயணத்தேவன்பட்டி அருகிலுள்ள கூத்தனாட்சி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்துறைமூலம் திருக்கோயிலுக்கு புதிய கோபுரம் அமைத்து குடமுழுக்கு நடத்திட வழிவகை இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

99—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 37765—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, நெடும்பலம் ஊராட்சி, மங்களநாயகிபுரம் மேற்கில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, நெடும்பலம் ஊராட்சி, நெடும்பலம் கிராமத்தில் 993 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் மங்களநாயகிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 120 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் மங்களநாயகிபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

100—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 39547—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், சாயமலை ஊராட்சி, சிதம்பராபுரம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், சாயமலை ஊராட்சி, சிதம்பராபுரம் பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர், தாய்க்கடையில் 472 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும் நிலையில் சிதம்பராபுரம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

101—

நியாயவிலைக் கடை

வினா எண் 39668—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, செல்வவிநாயகபுரம், மலையராமபுரத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி வட்டம், கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரம் DA039 *என்ற நியாயவிலைக் கடை 1049 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையிலிருந்து கல்லூரணி* DA039P1 *மற்றும் செல்வவிநாயகபுரம்* DA039P2 *ஆகிய இரு பகுதி நேரக் கடைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.*

மலையராமபுரம் கிராமத்தில் 150 குடும்ப அட்டைகள் உள்ளன. மலையராமபுரம் குடும்ப அட்டைதாரர்கள் பாவூர்சத்திரம் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். இரு பகுதிகளுக்குமிடையே ஒரு கிலோ மீட்டர் தூரம் உள்ளது. தாய்க் கடைக்கு ஏற்கெனவே இரண்டு பகுதி நேரக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள

நெறிமுறைகளின்படி தாய்க்கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் மலையராமபுரத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

102—

நியாயவிலைக் கடை

வினா எண் 39674—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சி, மேலக்காலனி, அம்பேத்கர் நகரில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி வட்டம், மேலப்பாவூர் ஊராட்சி, மேலப்பாவூர் கிராமத்தில் DA042 *என்ற நியாயவிலைக் கடை 755 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலக்காலனியில்* DA042P1 *என்ற முதல் பகுதிநேரக் கடை 229 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அம்பேத்கர் நகரிலுள்ள 96 குடும்ப அட்டைதாரர்கள் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மேலக்காலனி நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். மேலக்காலனி நியாயவிலைக் கடைக்கும் அம்பேத்கர் நகர் பகுதிக்கும் இடையே அரை கிலோ மீட்டர் தூரமே உள்ளது. தற்போதுள்ள நெறிமுறைகளின்படி புதிய நியாயவிலைக் கடைகள் அமைப்பதற்கான குறைந்தபட்ச குடும்ப அட்டைகள் மற்றும் இரு கடைகளுக்கிடையேயான தூரம் குறித்த நிபந்தனைகள் பூர்த்தியாகாததன் காரணமாக மேலக்காலனி அம்பேத்கர் நகரில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

2016 பிப்ரவரி 20]

103—

நியாயவிலைக் கடை

வினா எண் 39678—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சி, வினைதீர்த்த நாடார்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி வட்டம், திப்பணம்பட்டி ஊராட்சியில் DA038 *என்ற நியாயவிலைக் கடை 1,288 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதன் முதல் பகுதி நேரக் கடை* DA038P1 *ஆரியங்காவூரில் 229 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. வினைதீர்த்த நாடார்பட்டியில் உள்ள 310 குடும்ப அட்டைதாரர்கள் திப்பணம்பட்டி நியாயவிலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். மேற்கூறிய தாய் நியாயவிலைக் கடை வினைதீர்த்த நாடார்பட்டியிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளது. புதிய பகுதி நேரக் கடை அமைப்பதற்கான குறைந்தபட்ச தூரம் குறித்து தற்போது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாததன் காரணமாக வினைதீர்த்த நாடார்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

104—

நியாயவிலைக் கடை

வினா எண் 39683—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, மாணிக்காபுரம் ஊராட்சி, மின் நகர், வைரம் நகர் பகுதிகளில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, மாணிக்காபுரம் ஊராட்சி, 423 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் அம்மாபாளையம் பகுதிநேர நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்ட 55 குடும்ப அட்டைகள் கொண்ட வைரம்நகர் பகுதி 0.07 கி.மீ. தூரத்திலும், 7 குடும்ப அட்டைகள் கொண்ட மின் நகர் பகுதி 2 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளன. புதிய பகுதிநேரக் கடை அமைக்க அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் வைரம் நகர் மற்றும் மின் நகர் ஆகிய பகுதிகளில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

105—

நியாயவிலைக் கடை

வினா எண் 39687—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, 3–வது வார்டு, நாரணபுரத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி 3–வது வார்டு, நாரணபுரத்தில் 106 குடும்ப அட்டைகள் மட்டுமே

உள்ளன. மேலும் தெற்குபாளையம் பகுதிநேரக் கடைக்கும் உத்தேச பகுதிநேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. எனவே, நாரணபுரம் 3–வது வார்டு பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் ஒரு பகுதிநேரக் கடையிலிருந்து மற்றொரு பகுதிநேரக் கடை பிரிப்பதற்கு வாய்ப்பில்லை.

106—

நியாயவிலைக் கடை

வினா எண் 40271—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, இடையர்தவணை ஊராட்சியில், நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, இடையர்தவணை முழுநேரக் கடை மீனாட்சிபுரம்பகுதியில் 899 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதில் மீனாட்சிபுரத்தை சேர்ந்த 701 குடும்ப அட்டைகளும் இடையர்தவணை கிராமத்தைச் சேர்ந்த 198 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இடையர்தவணை பகுதிக்கும், நியாயவிலைக் கடை கட்டடம் அமைந்துள்ள பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 200 மீட்டர் ஆகும். தாய்க்கடைக்கும் புதிய பகுதிநேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தபட்சம் 1.5 கி.மீ இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் இடையர்தவணை ஊராட்சியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2016 பிப்ரவரி 20

107—

நியாயவிலைக் கடை

வினா எண் 40273—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, வி.கே. புதூர் ஊராட்சி, 11—வது வார்டில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, வி.கே. புதூர் ஊராட்சியில் உத்தேச பகுதி நேரக்கடை கோரும் 11—வது வார்டில் (இராமன்புதூர்) 10.5 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், உத்தேச பகுதி நேரக்கடைக்கும் தாய்க்கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்கு குறைவாக உள்ளது. உத்தேச பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய்க்கடைக்கும் உத்தேச பகுதிநேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், 11—வது வார்டு வி.கே. புதூரில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

108—

கோயில் புனரமைப்பு

வினா எண் 41740—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், சதுப்பேரிபாளையம், விரதகண்ட ஆதிதிராவிடர் காலனியிலுள்ள மாரியம்மன் கோயில் கோபுரத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சதுப்பேரிப்பாளையம், விரதகண்ட ஆதிதிராவிடர் காலனியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயில் 6 ஆண்டுகளுக்கு முன்னர் பொதுமக்களால் புதியதாக கட்டப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. திருக்கோயிலின் கோபுரம் நல்ல நிலையில் உள்ளது. முன்மண்டபம் மட்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

எனவே, மேற்படி திருக்கோயிலின் கோபுரம் நல்ல நிலையில் உள்ளதால் தற்போது இத்திருக்கோயில் கோபுரத்தை புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

109—

நியாயவிலைக் கடை

வினா எண் 40765—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, குப்பையன்பட்டி ஊராட்சி பி.மாத்தூருக்கு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, குப்பையன்பட்டி ஊராட்சி பி. மாத்தூர் கிராமத்தில் முழுநேர நியாயவிலைக் கடை 598 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்கும் அவசியம் எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

110—

கோயில் திருப்பணி

வினா எண் 41995—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், நொச்சிகுளம் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் மேட்டுகுடி ஜெயஜோதி விநாயகர் கோயிலுக்கு சுற்றுச்சுவர் அமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், நொச்சிகுளம் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் மேட்டுக்குடி அருள்மிகு ஜெயஜோதி விநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் மேற்படி திருக்கோயிலுக்கு சுற்றுச் சுவர் அமைத்து குடமுழுக்கு நடத்த வழிவகை இல்லை.

111—

நியாயவிலைக் கடை

வினா எண் 42936—திரு. சு. ரவி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, நரசிங்கபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி மற்றும் ஒன்றியம், காவனூர் ஊராட்சி, காவனூர் கிராமத்தில் 1113 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் நரசிங்கபுரத்தைச் சேர்ந்த 448 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு கிராமங்களுக்கிடையே 0.5 கி.மீ. தூரமே உள்ளதால், அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் நரசிங்கபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

112—

தானியக் கிடங்கு

வினா எண் 43186—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், தக்கலை, திங்கள் நகர் பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், தக்கலை, திங்கள் நகர் பகுதிகளில் நெல் கொள்முதல் பருவம் 2012–2013 மற்றும் 2013–2014–ல் விவசாயிகளிடமிருந்து நெல் வரத்து இல்லாத காரணத்தினால், நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

113—

நியாயவிலைக் கடை

வினா எண் 43530—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி, சின்னக்காளிபாளையத்தில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம் மற்றும் வட்டம், இடுவாய் ஊராட்சி, இடுவாய் தாய் நியாயவிலைக் கடையிலிருந்து 1040 குடும்ப அட்டைகளிலிருந்து சின்னக்காளிபாளையத்தைச் சேர்ந்த 165 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, 1–3–2012 முதல் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

114—

நியாயவிலைக் கடை

வினா எண் 43764—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, பழையங்குடி ஊராட்சியில் முழுநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, பழையங்குடி ஊராட்சி, பழையங்குடி கிராமத்தில் 768 குடும்ப அட்டைகளுடன்

ஏற்கெனவே முழுநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருவதால், அதே பகுதியில் மீண்டும் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

115—

நியாயவிலைக் கடை

வினா எண் 43766—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, இராயநல்லூர் ஊராட்சியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, இராயநல்லூர் ஊராட்சி, இராயநல்லூர் பகுதியில் 992 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே, ஒரு முழுநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருவதால், மீண்டும் அப்பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

116—

தானியக் கிடங்கு

வினா எண் 46313—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியிலுள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க போதிய இடம் பெறப்பட்டு 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் அரசு நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

117—

தானியக் கிடங்கு

வினா எண் 46314—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நெடும்பலத்திலுள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நெடும்பலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க போதிய இடம் பெறப்பட்டுள்ளது. அவ்விடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு பத்திரபதிவு செய்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நடப்பு 2014–2015 ஆம் நிதியாண்டில் மேற்படி இடத்தில் நபார்டு நிதியுடன் அரசு நெல் கொள்முதல் நிலையம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

118—

நியாயவிலைக் கடை

வினா எண் 46810—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் வட்டம், கண்டியன்கோவில் கிராமம், கருங்காலிபாளையத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் வட்டம், கண்டியன்கோவில் முழுநேரக் கடை 834 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இதிலிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கருங்காலிப்பாளையம் கிராமத்தில் 152 குடும்ப அட்டைகளுடன் 26–2–2014 முதல் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

119—

நியாயவிலைக் கடை

வினா எண் 46811—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், ஸ்ரீலட்சுமி நகரில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், ஸ்ரீலட்சுமி நகர், அபிராமி நகர் மற்றும் வ.ஊ.சி. நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 156 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஸ்ரீலட்சுமி நகரில் 21–2–2015 முதல் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

120—

தானியக் கிடங்கு

வினா எண் 47023—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியிலுள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட கொத்தமங்கலம் ஊராட்சியினை சுற்றி 5 கிலோ மீட்டர் சுற்றுப் பகுதியில் கடியாச்சேரி, திருத்துறைப்பூண்டியில் இரு நேரடி கொள்முதல் நிலையங்கள், மேட்டுப்பாளையம் மற்றும் வரம்பியம் ஆகிய பகுதிகளில் தலா ஒன்று என நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கிவருவதால் கொத்தமங்கலம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவது குறித்த அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2016 பிப்ரவரி 20]

121—

நியாயவிலைக் கடை

வினா எண் 47185—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், பேயம்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், ஓ.சிறுவயல் கிராமத்திலிருந்த 970 குடும்ப அட்டைகளிலிருந்து 220 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு 220 குடும்ப அட்டைகளுடன் பேயம்பட்டியில் 20–8–2014 முதல் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது.

122—

நியாயவிலைக் கடை

வினா எண் 49981—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி, செட்டிக்காடு மற்றும் புட்டமனையில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி, தேவண்ணகவுண்டனூர் தாய்கடைக்கும், செட்டிக்காடு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.00 கி.மீ. மட்டுமே உள்ளதால், அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் செட்டிக்காடு பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், தேவண்ணகவுண்டனூர் நியாயவிலைக் கடை புட்டமனை பகுதியிலேயே அமைந்துள்ளதால், அதே பகுதியில் மீண்டும் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

123—

நியாயவிலைக் கடை

வினா எண் 50395—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, இலுப்பக்குடி ஊராட்சி, லெட்சுமி நகரில் உள்ள பகுதிநேர நியாயவிலைக் கடையை முழுநேர நியாயவிலைக் கடையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, இலுப்பக்குடி ஊராட்சி, லெட்சுமி நகரில் செயல்படும் பகுதிநேரக் கடையில் 270 குடும்ப அட்டைகளே உள்ளன. இதனை முழுநேரக் கடையாக மாற்ற அரசாணையின்படி குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை

2016 பிப்ரவரி 20]

பூர்த்தியாகாததால், லெட்சுமி நகர் பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

124—

நியாயவிலைக் கடை

வினா எண் 50978—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, கும்மங்குடி ஊராட்சி, கல்லுக்குடியிருப்பு கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, கும்மங்குடி ஊராட்சி, கும்மங்குடியில் செயல்பட்டுவரும் நியாயவிலைக் கடையிலிருந்து சில குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு தலையாத்திவயல், பொந்துபுளி மற்றும் மீனிகந்தா ஆகிய பகுதிகளில் 3 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கக் கோரும் கல்லுக்குடியிருப்பு கிராமத்தில் 198 குடும்ப அட்டைகள் இருப்பினும், ஏற்கெனவே 3 பகுதிநேரக் கடைகள் செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் மீண்டும் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

125—

தங்கும் விடுதி

வினா எண் 51145—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், மத்தூரில் உள்ள மகிஷாசூரமர்த்தினி கோயிலில் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மத்தூர் கிராமத்திலுள்ள அருள்மிகு மகிஷாசூரமர்த்தினி அம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் அம்மனை தரிசனம் செய்ததும் புறப்பட்டுவிடுகிறார்கள். அவர்கள் தங்குவது இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் தங்கும் விடுதி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

126—

நியாயவிலைக் கடை

வினா எண் 51264 — திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழவந்தான் தொகுதி, மாணிக்கம்பட்டி நியாயவிலைக் கடையை பிரித்து பொம்மிநாயக்கன்பட்டியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, மாணிக்கம்பட்டியில் 662 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில், பொம்மிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த 172 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவ்விரு பகுதிகளுக்குமிடையே 1 கி.மீ. தூரமே இடைவெளி உள்ளது. அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் பொம்மிநாயக்கன்பட்டியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

127—

நியாயவிலைக் கடை

வினா எண் 51800—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, திப்பம்பட்டி அரசு பள்ளி அருகில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, திப்பம்பட்டி பகுதி மக்கள் ராமன் நகர், பொன்னி 1, பொன்னி 2 ஆகிய நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் பெற்று வருகின்றனர். திப்பம்பட்டிக்கும் மேற்கண்ட தாய் நியாயவிலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளதால் திப்பம்பட்டியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

128—

தூர்வாருதல்

வினா எண் 52775—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மிட்டகண்டிகை கிராமத்தில் உள்ள அருள்மிகு கன்னிகோயில் குளத்தினை தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மிட்டகண்டிகை கிராமம், அருள்மிகு கன்னி திருக்கோயில், இத்துறை நேரடிக்

கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, திருக்குளத்தினை தற்போதைக்கு தூர்வாரி சீரமைத்திட வழிவகை இல்லை.

129—

தூர்வாருதல்

வினா எண் 53132—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் குளத்தை தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் சரவணப்பொய்கை திருக்குளம் ஒவ்வொரு ஆண்டும் ஆடிக்கிருத்திகை தெப்பத்திருவிழாவின்போது முழுமையாக சுத்தப்படுத்தப்படுகிறது. தற்போது சேறும், சகதியும் இல்லாமல் நல்ல நிலையில் உள்ளது. எனவே, தற்போதைய நிலையில் அதை புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

130—

நியாயவிலைக் கடை

வினா எண் 53605—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், கனகம்பட்டியில், நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், கனகம்பட்டு கிராமத்தில், 103 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை 2009 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதால், மீண்டும் அப்பகுதியில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

131—

நியாயவிலைக் கடை

வினா எண் 54700—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விளக்குடி நியாயவிலைக் கடையைப் பிரித்து விளக்குடி கடைத்தெருவில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விளக்குடி நியாயவிலைக் கடை 1069 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கக்கோரும் விளக்குடி கடைத்தெருவினைச் சேர்ந்த 417 குடும்ப அட்டைகளும் அடங்கும். இரண்டு பகுதிகளுக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்குள்ளாகவே இருப்பதால் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் விளக்குடி கடைத் தெருவில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2016 *பிப்ரவரி* 20

132—

நியாயவிலைக் கடை

வினா எண் 54887—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சி, கருப்பினான்குளத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சி, கருப்பினான் குளத்தில் 51 குடும்ப அட்டைகளே உள்ளதால், அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

133—

நியாயவிலைக் கடை

வினா எண் 57307—திரு. சு. ரவி: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சி, கணபதிபுரம் ஆதி திராவிட காலனியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சியில், கணபதிபுரம் கிராமத்தில் 656 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. அதில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கக் கோரும் ஆதிதிராவிட காலனி பகுதியைச் சேர்ந்த 204 குடும்ப அட்டைகளும் அடங்கும். 204 குடும்ப அட்டைகளைப் பிரித்தால் தாய்க்கடையில் 500–க்கும் குறைவான குடும்ப அட்டைகளே இருக்கும் என்பதாலும், இரு பகுதிகளுக்குமிடையேயான தொலைவு 1 கி.மீ. மட்டுமே இருப்பதால் அரசின் நிபந்தனைகள் பூர்த்தி ஆகாத நிலையில், ஆதிதிராவிட காலனி பகுதியில் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

134—

நியாயவிலைக் கடை

வினா எண் 57877 திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், கவுண்டம்பட்டி ஊராட்சி, கவுண்டம்பட்டி கிராமத்திற்கு நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், கவுண்டம்பட்டி ஊராட்சி, கவுண்டம்பட்டி கிராமத்தில் 237 குடும்ப அட்டைகளுடன் கிராமத்திற்குச் சொந்தமான பொதுக் கட்டடத்தில் 21–2–2005 முதல் பகுதிநேரக் கடையாக செயல்பட்டு வருகிறது.

[2016 பிப்ரவரி 20

135—

நீதிமன்றம்

வினா எண் 60080—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் நுகர்வோர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986, பிரிவு 9 (a)—ன்படி *மாவட்ட தலைநகரங்களில் நுகர்வோர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், திருவள்ளூர் மாவட்டத்திற்கென்று திருவள்ளூரில் ஒரு நுகர்வோர் குறைதீர் மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டைக்கென்று தனியாக நுகர்வோர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

136—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 5779—திரு. க. தினகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சூலூர் தொகுதி, சூலூரை தலைமையிடமாக கொண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சூலூர் பகுதியை மையமாகக் கொண்டு புதிய பகுதி அலுவலகம் அமைக்க அரசாணை (நிலை) எண் 542. உள் (போ.வ.7) துறை, நாள் 17–7–2012–ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டு, சூலூர் பகுதி அலுவலகம் இயங்கி வருகிறது. எனவே, சூலூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

137—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 5862—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை, சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ளது. மானாமதுரை தாலுகாவில் மானாமதுரை மற்றும் திருப்புவனம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒரு பகுதியில் புதியதாக துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (பகுதி அலுவலகம்) அமைப்பதற்கு அப்பகுதியில் குறைந்தபட்சம் 5,000 போக்குவரத்து வாகனங்கள் இருத்தல் வேண்டும். ஆனால், மானாமதுரை தாலுகாவிற்குட்பட்ட பகுதிகளில் 1,450 போக்குவரத்து வாகனங்களும், 17,496 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் மட்டுமே உள்ளன. எனவே, மானாமதுரையில், புதியதாக துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (பகுதி அலுவலகம்) அமைப்பதற்கு தற்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லை.

138—

சோதனைச் சாவடி

வினா எண் 7140—திரு. பி.எல். சுந்தரம்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானிசாகர் தொகுதி, திண்டுக்கல்–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, பண்ணாரி போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடிக்கு எடை மேடையுடன்கூடிய புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பண்ணாரி சோதனைச் சாவடி இயங்கிவரும் இடம் வனத் துறைக்குச் சொந்தமானதாகும். எனவே, வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் நிரந்தர கட்டடமோ, எடை மேடையோ அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

139—

போக்குவரத்து

வினா எண் 8229—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு பகுதியில் புதியதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு அப்பகுதியில் உள்ள மொத்த மக்கள்தொகை, அப்பகுதிக்கும் ஏற்கெனவே

அப்பகுதிக்குட்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் இடையே உள்ள தூரம், அப்பகுதியில் உள்ள போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை, போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை, ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை, நாள் ஒன்றுக்கு பதிவாகும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை, அரசுக்கு ஈட்டப்படும் வருவாய் மற்றும் அரசுக்கு ஏற்படும் செலவீனம் ஆகியவை கருத்திற்கொள்ளப்படுகின்றன. மேலும், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 7,500 போக்குவரத்து வாகனங்கள் அப்பகுதியில் இருத்தல் வேண்டும். ஆனால், காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் 1,915 போக்குவரத்து வாகனங்களும், 25,687 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் மட்டுமே உள்ளன. எனவே, காட்டுமன்னார்கோவிலில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் தற்பொழுது இல்லை.

140—

போக்குவரத்து

வினா எண் 13087—திரு. து. முருகேசன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு போக்குவரத்துப் பணிமனையை நகர எல்லைக்கு வெளியில் மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட செங்கல்பட்டு நகர எல்லையில், 1.95 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) காஞ்சிபுரம் மண்டலம், செங்கல்பட்டு பணிமனையிலிருந்து 49 நகரப் பேருந்துகளும், 72 புறநகரப் பேருந்துகளும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. இப்பணிமனையில் உள்ள

இட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு வேண்பாக்கம் கிராமம் புல எண் 188–ல் 2.5 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் கூடுதல் பணிமனை அமைக்க காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நிலம் கோரி, கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது. அந்நிலத்தில் பராமரிப்புக்கூடம், தொழிலாளர் ஓய்வறை, உணவகம், கழிவறை, பேருந்து கழுவும் தானியங்கி இயந்திரம் போன்ற உள் கட்டமைப்புகள் அமைக்கப்பட உள்ளன. எனவே, தற்போது இயங்கி வரும் செங்கல்பட்டு பணிமனையை நகர எல்லைக்கு வெளியில் மாற்றிட திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

141—

போக்குவரத்து

வினா எண் 16429—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை, சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒரு பகுதியில் புதியதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு அப்பகுதியில் குறைந்தபட்சம் 7,000 போக்குவரத்து வாகனங்கள் இருத்தல் வேண்டும். ஆனால், மானாமதுரை தாலுக்காவிற்குட்பட்ட பகுதிகளில் 1,450 போக்குவரத்து வாகனங்களும், 17,496 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் மட்டுமே உள்ளன. எனவே, மானாமதுரையில் புதியதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]

142—

போக்குவரத்து

வினா எண் 23326—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் அனைத்து அறைகளையும் காமிராமூலம் கண்காணிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சென்னை (கிழக்கு), சென்னை (மேற்கு), சென்னை (தெற்கு) மற்றும் சென்னை (மையம்) ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கண்காணிப்பு காமிராக்கள் முதற்கட்டமாக பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் கண்காணிப்பு காமிராக்கள் படிப்படியாக பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

143—

போக்குவரத்து

வினா எண் 28267—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, முளகுமூடு பேரூராட்சி, கோடியூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு பகுதியில் புதியதாக வட்டாரப் போக்குவரத்து அலவலகம் அமைப்பதற்கு அப்பகுதியில் உள்ள

மொத்த மக்கள்தொகை, அப்பகுதிக்கும் ஏற்கெனவே அப்பகுதிக்குட்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் இடையே உள்ள தூரம், அப்பகுதியில் உள்ள போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை, போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை, ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை, நாள் ஒன்றுக்கு பதிவாகும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அரசுக்கு ஈட்டப்படும் வருவாய் மற்றும் அரசுக்கு ஏற்படும் செலவீனம் ஆகியவை கருத்திற்கொள்ளப்படுகின்றன. மேலும், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 7,500 போக்குவரத்து வாகனங்கள் அப்பகுதியில் இருத்தல் வேண்டும். ஆனால், கோடியூர் கிராமத்தில் 70 போக்குவரத்து வாகனங்கள் மட்டுமே உள்ளன. எனவே, கோடியூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் தற்பொழுது இல்லை.

144—

காகித தொழிற்சாலை

வினா எண் 29139—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் காகித தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் காகித தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

145—

சிறப்பு பொருளாதார மண்டலம்

வினா எண் 29149—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் சுமார் 1,467 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழில் வளாகத்தினை ஏற்கெனவே உருவாக்கி இயக்கி வருகிறது. இதில் 300—க்கும் மேற்பட்ட பல்வேறு வகையான தொழில் நிறுவனங்கள் செயல்பட்டுவருகிறது.

தற்போது சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு போதிய வரவேற்பு இல்லை என்பதால், கும்மிடிப்பூண்டி தொகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) இணைந்து, கூட்டுமுயற்சி திட்டமாக கும்மிடிப்பூண்டி தொகுதியில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு தனியார் தொழில் முனைவோர்கள்/மேம்பாட்டாளர்கள் உரிய செயற்குறிப்புகளுடன் முன்வந்தால், டிட்கோ நிறுவனம் திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தை செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

146—

பேருந்து வசதி

வினா எண் 30089—திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டியிலிருந்து பெரியார் பேருந்து நிலையத்திற்கு 6 பேருந்துகள் மூலமாக 54 தனி நடைகளும், பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மாட்டுத்தாவணிக்கு 650 தனி நடைகளும் பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளது. மேலும், கம்பம், தேனி போன்ற பகுதிகளிலிருந்து உசிலம்பட்டி வழியாக மாட்டுத்தாவணிக்கு நேரடியாக 43 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது.

147—

பேருந்து வசதி

வினா எண் 30093—திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு நேரடி பயணிகள் மிகவும் குறைவாகவே உள்ளனர். உசிலம்பட்டியிலிருந்து மதுரைக்கும், உசிலம்பட்டி வழியாக மதுரைக்கு 97 தனி நடைகளும், மதுரையிலிருந்து பட்டுக்கோட்டைக்கு 16 தனி நடைகளும் தற்போது பேருந்துகள் இயக்கப்படுகின்றன. உசிலம்பட்டியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு பகுதி பகுதியாக போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

2016 *பிப்ரவரி* 20]

148—

பேருந்து வசதி

வினா எண் 30095—திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து வத்தலகுண்டு, செம்பட்டி வழியாக கோயம்புத்தூருக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டியிலிருந்து மதுரை வழியாக கோயம்புத்தூருக்கு 12 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. மதுரையிலிருந்து கோயம்புத்தூருக்கு மதுரை மற்றும் கோயம்புத்தூர் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் 128 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், உசிலம்பட்டியிலிருந்து வத்தலக்குண்டுக்கு 59 தனி நடைகளும், வத்தலக்குண்டிலிருந்து கோயம்புத்தூருக்கு 99 தனி நடைகளும் தற்போது பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, உசிலம்பட்டி பகுதி மக்கள் மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி கோயம்புத்தூருக்கு செல்ல வசதி உள்ளது. கோரிக்கையில் உள்ள வழித்தடத்தில் நேரடி பயணிகளின் அடர்வு இல்லை என்பதால், தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அப்பகுதி மக்களுக்கு போதுமானதாகும்.

149—

பேருந்து வசதி

வினா எண் 30096—திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டியிலிருந்து நிலக்கோட்டை அணைப்பட்டி வழியாக உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம்வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பட்டியிலிருந்து நிலக்கோட்டை, அணைப்பட்டி வழியாக விக்கிரமங்கலம் வரை உள்ள தட நீளம் 41.8 கி.மீ. ஆகும். நகரப் பேருந்துகள் 35 கி.மீ. வரை மட்டுமே இயக்கப்படும் என்பதால், தற்போது நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும், செம்பட்டியிலிருந்து நிலக்கோட்டைக்கும், நிலக்கோட்டையிலிருந்து அணைப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்கும் பகுதி பகுதியாக பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்படுகின்றன. எனவே, செம்பட்டியிலிருந்து நிலக்கோட்டை, அணைப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்கு பகுதி பகுதியாக இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

150—

இலவச பேருந்து அட்டை

வினா எண் 30203—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடல் உறுப்பு தானம் செய்கின்றவர்களின் வாரிசுகளுக்கு இலவச பேருந்து அட்டை வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பின்வரும் தரப்பினர்களுக்கு பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

2016 பிப்ரவரி 20]

1. இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மேலவை உறுப்பினர்கள்.

2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள்/ஊடக நபர்கள்.

3. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள் மற்றும் வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் அவர்தம் மரபுரிமையர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

4. புற்றுநோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் (காதுகேளாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள், வலிப்பு நோயாளிகள் மற்றும் பிறர்)

5. நாடகக் கலைஞர்கள்

6. எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும்

7. மாணவ மாணவியர்கள், கல்லூரிகள், தொழில்நுட்ப பயிலகங்களில் பயிலும் மாணவ மாணவியருக்கு பயணச் சலுகை வழங்கப்படுகிறது. எனவே, உடல் உறுப்பு தானம் செய்கின்றவர்களின் வாரிசுகளுக்கு இலவச பேருந்து அட்டை வழங்குவது குறித்து செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. எனினும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமைக்கேற்ப இதுகுறித்து அரசால் பரிசீலிக்கப்படும்.

151—

கிரானைட் தொழில்

வினா எண் 32584—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் கிரானைட் தொழிலை அரசே ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் கிரானைட் கற்கள் படிவம் ஏதும் இல்லை. எனவே, மேற்படி பகுதியில் கிரானைட் தொழிலை அரசே ஏற்று நடத்த வாய்ப்பில்லை.

152—

பயிற்சிப் பள்ளி

வினா எண் 32794—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, திருமூர்த்தி நகர் பகுதியில் போக்குவரத்து தொழிலாளர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர், திருப்பூர் மண்டலத்தில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளி அமைக்க உத்தேசிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மடத்துக்குளம் தொகுதி, திருமூர்த்தி நகர் பகுதியில் போக்குவரத்துத் தொழிலாளர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் செயற்குறிப்பில் இல்லை.

153—

பேருந்து வசதி

வினா எண் 32986—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) குளச்சலிலிருந்து வேளாங்கண்ணிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டம், நாகர்கோவில் மண்டலத்தில் இருந்து சமீபத்தில் குளச்சல் வழியாக களியக்காவிளை—வேளாங்கண்ணி தடத்தில் புதிய தட பேருந்து இயக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வேளாங்கண்ணி வரையிலும் கிழக்கு கடற்கரை சாலை வழியாக இயக்கப்படுகின்றது. இப்பேருந்துகளின் பயணிகளின் அடர்வு குறைவாகவே உள்ளது. இருப்பினும், தற்போது மாவட்ட தலை நகரங்களிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நீண்ட தூர தடங்களில் பேருந்து இயக்கம் மேற்கொள்ள குளிர் சாதன பேருந்துகள் அனுமதிக்கப்படும்போது கோரிக்கை பற்றி பரிசீலிக்கலாம்.

154—

பேருந்து வசதி

வினா எண் 33261—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, ஓசூர் வழியாக பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெண்ணாகரம்—பெங்களூரு (வழி) பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, ஓசூர் வழித்தடம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இரு

மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாகும். மேற்கண்ட வழித்தடத்தில் இரு மாநில அரசுக்கும் இடையே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் மட்டுமே பேருந்து இயக்கிட இயலும். பெண்ணாகரத்திலிருந்து பெங்களூரு செல்லும் நேரிடை பயணிகளின் எண்ணிக்கை சுமார் 10 முதல் 15 பேர் வரை மட்டுமே உள்ளதால், பெண்ணாகரத்திலிருந்து பெங்களூருக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

155—

காகித ஆலை

வினா எண் 33456—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

156—

காகித ஆலை

வினா எண் 33457—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கல்லுப்பட்டியில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கல்லுப்பட்டியில் காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

காகித ஆலை

வினா எண் 33459—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

158—

பேருந்து வசதி

வினா எண் 33800—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், பருத்திபாடு ஊராட்சி, சிவந்திபட்டி வழியாக பருத்திபாடு–பாளைச்சந்தை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவந்திப்பட்டியிலிருந்து–பாளைச்சந்தை வரை 5 நகரப் பேருந்துகளின்மூலம் 47 நடைகளும், பருத்திப்பாடியிலிருந்து பாளை பேருந்து நிலையம் வழியாக பாளை சந்தைக்கு 2 நகரப் பேருந்துகளின்மூலம் 18 நடைகளும் இயக்கப்படுகின்றன. சிவந்திப்பட்டி–பாளைச்சந்தை வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளின் சராசரி பயணிகளின் அடர்வு 36.70 சதவிகிதம் ஆக உள்ளது. பருத்திப்பாடு–பாளைச்சந்தை வழித்தட பேருந்துகளின் பயணிகள் அடர்வு 32.95 சதவிதிம் ஆக மட்டுமே உள்ளது. இது தவிர பருத்திப்பாடு வழியாக திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திற்கு புறநகர் பேருந்துகள் வாயிலாக 70 சுற்றுக்கள் இயக்கப்படுகின்றன. எனவே, தற்போதுள்ள பயணிகளின் அடர்வுக்கு இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

159—

உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 34751—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை. இருப்பினும், டிட்கோவுடன் இணைந்து தகுந்த தொழில்முனைவோர்கள் தேவையான நிதி முதலீட்டுகளுடன்,

2016 பிப்ரவரி 20]

செயல் குறிப்புகளுடன் காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கு முன்வந்தால், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தொழில் திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளும்.

160—

உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 36645—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் தொழில் வளாகத்தில் உணவுப் பதப்படுத்தும் தொழிலை அரசு நேரடியாகத் துவங்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தொழில்முனைவோர் யாரேனும் அங்கு தொழில் துவங்க முன்வந்தால் அரசு அவர்களை ஊக்குவிக்கும்.

161—

பேருந்து வசதி

வினா எண் 36865—திரு. மு. முருகன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூரிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிதாக குளிர்சாதன பேருந்துகள் பெறப்படும்போது முதுகுளத்தூர்–சென்னை தடத்தில் குளிர்சாதன பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். முதுகுளத்தூரிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் முதுகுளத்தூர் வழியாக சென்னைக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து வசதிகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

162—

பேருந்து வசதி

வினா எண் 36886 திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கான்சாபுரத்திலிருந்து டி. மானகசேரி வழியாக சிவகாசிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கான்சாபுரம்–சிவகாசி (வழி) டி. மானகசேரி வழித்தட தூரம் 40 கி.மீட்டர் ஆகும். 35 கி.மீட்டர் வரையே நகரப் பேருந்துகள் இயக்க இயலும். அதனால், சிவகாசியிலிருந்து டி. மானகசேரி கிராமத்திற்கு 6 தனி நடைகளும், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து டி. மானகசேரிக்கு 7 தனி நடைகளும் இயக்கப்படுகின்றன. கான்சாபுரத்திலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு 41 தனி நடைகளும், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து டி. மானகசேரி வழியாக சிவகாசிக்கு 97 தனி நடைகளும் பகுதி பகுதியாக தேவையான அளவுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது பகுதி பகுதியாக இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

2016 பிப்ரவரி 20]

163—

பேருந்து வசதி

வினா எண் 37321—திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புதிதாக குளிர்சாதன பேருந்து பெறப்படும்போது தரங்கம்பாடி–சென்னை தடத்தில் குளிர்சாதன பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். தரங்கம்பாடியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் தரங்கம்பாடி வழியாக சென்னைக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

164—

போக்குவரத்து

வினா எண் 37916—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

[2016 பிப்ரவரி 20

165—

பேருந்து வசதி

வினா எண் 40866—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையில் சுழற் வட்டப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகர் பகுதி 2 கி.மீட்டர் சுற்றளவில்தான் அமைந்துள்ளது. புதுக்கோட்டை நகரிலுள்ள பகுதிகளை இணைக்க நகரப் பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதுக்கோட்டையில் சுழற் வட்டப் பேருந்து இயக்கினால் பயணிகளின் பயன்பாடு குறைவாகவே இருக்கும். எனவே, தற்போது இயக்கப்பட்டுவரும் பேருந்துகளே போதுமானதாகும்.

166—

பணிமனை

வினா எண் 41274—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் நகரில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் நகரில் இருந்து இயக்கும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கென தனியாக பணிமனை அமைக்கும் நிலை எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

167—

பேருந்து வசதி

வினா எண் 41584—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் நகரம், அரண்மனை முதல் ஆற்றங்கரை வரை பனைக்குளம், நதிப்பாலம் வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் அரண்மனையிலிருந்து பனைக்குளம், நதிப்பாலம் வழியாக ஆற்றங்கரை வரை அரசு பேருந்து மூலமாக நாள் ஒன்றுக்கு 28 தனி நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

168—

பேருந்து வசதி

வினா எண் 43762—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து ஈரோட்டிற்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி—ஈரோடு வழித்தடம் புதிய வழித்தடம். இவ்வழித்தட நீளம் 279 கி.மீ. ஆகும். திருத்துறைப்பூண்டி—மன்னார்குடி வழித்தடத்தில் கழக பேருந்துகள்மூலம் 105 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 36

[2016 பிப்ரவரி 20

நடைகளும், ஆக கூடுதல் 141 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மன்னார்குடி–ஈரோடு வழித்தடத்தில் தினசரி 2 பேருந்துகள் இயக்கப்படுகிறது. மன்னார்குடி–தஞ்சாவூர் வழித்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள்மூலம் 108 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 59 நடைகளும், ஆக கூடுதல் 167 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர்–ஈரோடு வழித்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த 12 பேருந்துகள் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அப்பகுதி மக்களின் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

169—

பேருந்து வசதி

வினா எண் 43923—திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் நாகப்பட்டினம்–கோயம்புத்தூர் மற்றும் வேளாங்கன்னி–எர்ணாகுளம் ஆகிய தடங்களில் (கோயம்புத்தூர் வழியாக) 4 பேருந்துகள் 4 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. தரங்கம்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு செல்லும் பயணிகள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தரங்கம்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு செல்லும் நேரடி பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் புதிய பேருந்துகள் இயக்க பரிசீலனை செய்யப்படும். எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

2016 பிப்ரவரி 20]

170—

போக்குவரத்து

வினா எண் 45874—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்.

171—

காகித அட்டை தொழிற்சாலை

வினா எண் 47168—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2016 பிப்ரவரி 20

172—

பேருந்து வசதி

வினா எண் 47502—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, அச்சங்குன்றம் முதல் ஆலங்குளம் வரை கே.புதூர் வழியாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அச்சங்குன்றம்–பரங்குன்றாபுரம் விலக்குவரை லட்சுமிபுரம் வழியாக ஒரு தனியார் நகரப் பேருந்துமூலம் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பரங்குன்றாபுரம் விலக்கு–ஆலங்குளம் வரை வீ.கே.புதூர் வழியாக 12 அரசு பேருந்துகளின்மூலம் 86 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி, அச்சங்குன்றத்திலிருந்து ஆலங்குளத்திற்கு பகுதி பகுதியாக செல்லலாம். இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 36.03 சதவீதமாக உள்ளது. எனவே, தற்போதுள்ள பயணிகளின் அடர்வுக்கு இப்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

173—

பேருந்து வசதி

வினா எண் 48069—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேளாங்கண்ணியிலிருந்து திருச்செந்தூர் வரை செல்லும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தினை திசையன்விளை வரை நீட்டித்து இயக்க அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வேளாங்கண்ணியிலிருந்து திருச்செந்தூர் வரை இயக்கப்படும் பேருந்தை திசையன்விளை வரை நீட்டிப்பதற்கு பதிலாக திசையன்விளை–வேளாங்கண்ணி (வழி) திருச்செந்தூர் வழித்தடத்தில் புதிதாக 6–12–2014 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

174—

பேருந்து வசதி

வினா எண் 48134—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஆலங்குளத்திலிருந்து வீராணம், ஊத்துமலை வழியாக மதுரைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம், வீராணம், ஊத்துமலை ஆகிய இடங்களிலிருந்து சங்கரன்கோவிலுக்கு 13 பேருந்துகள்மூலம் 60 நடைகளும், சங்கரன்கோவிலிருந்து ராஜபாளையம் மற்றும் சிவகாசி வழியாக மதுரைக்கு 26 பேருந்துகளின்மூலம் 88 நடைகளும் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி ஆலங்குளம், வீராணம் மற்றும் ஊத்துமலை ஆகிய கிராம பொது மக்கள் சங்கரன்கோவில் வந்து மதுரைக்குச் செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, அப்பகுதி மக்களின் தேவைக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

[2016 பிப்ரவரி 20

175—

பேருந்து வசதி

வினா எண் 48135—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சுரண்டையிலிருந்து ஊத்துமலை வழியாக கயத்தாருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுரண்டையிலிருந்து ஊத்துமலை வழியாக அழகிய பாண்டியபுரம் வழித்தடத்தில் 4 பேருந்துகளின்மூலம் 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 26.70 சதவீதமாக உள்ளது. திருநெல்வேலி–சங்கரன்கோவில் வழித்தடத்தில் உள்ள அழகிய பாண்டியபுரம் முதல் தேவர்குளம் வரை இயக்கப்படும் பேருந்துகளின் 280–க்கும் மேற்பட்ட நடைகளில் பயணிகளின் அடர்வு 72.0 சதவிகிதமாக உள்ளது. தேவர்குளத்திலிருந்து கயத்தாரு வரை இயக்கப்படும் 26 நடைகளில் பயணிகளின் அடர்வு 33.2 சதவீதமாக மட்டுமே உள்ளது. அப்பகுதி மக்கள் பகுதி பகுதியாக இயக்கப்படும் இப்பேருந்துகளை பயன்படுத்தி சுரண்டையிலிருந்து கயத்தாருக்கு செல்லலாம். எனவே, தற்போதுள்ள பயணிகளின் அடர்வுக்கு பகுதி பகுதியாக இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

176—

பணிமனை

வினா எண் 48140—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சி, சுரண்டை வழியாக திருநெல்வேலி, புளியங்குடி, தென்காசி மற்றும் சங்கரன்கோவில் ஆகிய பணிமனைகளின்மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சுரண்டைக்கு சுமார் 21 கி.மீ. தொலைவில் அரசு போக்குவரத்துக் கழக தென்காசி பணிமனை செயல்பட்டு வருகிறது. அரசு அறிவிப்பின்படி சுரண்டைக்கு சுமார் 17.2 கி.மீ. தொலைவில் அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பாக ஆலங்குளத்தில் புதிய பணிமனை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய பணிமனை அமைப்பதற்கு சுரண்டையில் 6 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பு போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமாக எதுவும் இல்லை. மேலும், பணிமனை அமைக்க உள்கட்டமைப்பு பணிகளுக்கு சுமார் ரூ.2.00 கோடிக்கு மேல் செலவு ஏற்படும். மேலும் அரசாணை எண் 61(டி) போக்குவரத்து துறை நாள் 9–9–1992–ன்படி இரண்டு பணிமனைகளுக்கு இடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். மேலும் சுரண்டையிலிருந்தும், சுரண்டை வழியாகவும் 32 புறநகர் பேருந்துகள் மூலமாக 175 தனி நடைகளும், 58 நகரப்பேருந்துகள் மூலமாக 466 தனி நடைகளும், திருநெல்வேலி, புளியங்குடி, தென்காசி மற்றும் சங்கரன்கோவில் ஆகிய பணிமனைகளிலிருந்து தினமும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இருப்பினும் பயணிகளின் பயன்பாடு அதிகரிக்கும்பட்சத்தில் தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது குறித்து அப்போது பரிசீலிக்கப்படும்.

177—

பேருந்து வசதி

வினா எண் 48954—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, துங்காவி, ஓட்டமடம் வழித்தடத்தில் காலை, மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) (i) *உடுமலைப்பேட்டை—தாராபுரம் பிரதான சாலையில் உடுமலைப்பேட்டையிலிருந்து 10.0 கி.மீ. தொலைவில் துங்காவி அமைந்துள்ளது. தாராபுரம்—பொள்ளாச்சி பிரதான சாலையில் தாராபுரத்திலிருந்து 20.0 கி.மீ. தொலைவில் ஓட்டமடம் அமைந்துள்ளது. மேற்படி ஓட்டமடம், பொள்ளாச்சி—தாராபுரம் மற்றும் உடுமலைபேட்டை—தாராபுரம் இணைப்புச் சாலையில் உள்ளது. மேற்படி துங்காவி, ஓட்டமடம், பூளவாடி வழியாக உடுமலைப்பேட்டையிலிருந்து தினசரி 8 தனிநடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட பேருந்தின் தற்போதைய பயணிகள் சராசரி அடர்வு 40.95% ஆகும்.*

(ii) *அரசு நகரப்பேருந்து, பூளவாடியிலிருந்து உடுமலைபேட்டைவரை துங்காவி ஓட்டமடம் வழியாக தினசரி 8 தனிநடைகள் இயக்கப்படுகின்றன. மேற்படி பேருந்தின் பயணிகள் அடர்வு 49.82% என்ற குறைவான அளவில் உள்ளது.*

(iii) *அரசு புறநகர் பேருந்து, தாராபுரம்—உடுமலைபேட்டை வழித்தடத்தில் துங்காவி, ஓட்டமடம் வழியாக தினசரி 8 தனிநடைகள் இயக்கப்படுகின்றன. மேற்படி பேருந்தின் பயணிகள் அடர்வு 82.21% என்ற அளவில் உள்ளது.*

(iv) *அரசு புறநகர் பேருந்து, ருத்ரபாளையம்—திருப்பூர் வழி துங்காவி, ஓட்டமடம் வழியாக 2 தனிநடைகள் இயக்கப்படுகின்றன.*

2016 பிப்ரவரி 20]

மேற்கண்ட பேருந்தின் பயணிகள் அடர்வு 77.07% என்ற அளவில் உள்ளது.

(v) *மேலும், ஒரு தனியார் பேருந்து உடுமலைபேட்டையிலிருந்து பூளவாடிக்கு துங்காவி மற்றும் ஒட்டமடம் வழியாக தினசரி 14 தனி நடைகள் இயக்கப்படுகிறது.*

மேற்கண்டவாறு துங்காவி, ஒட்டமடம் வழித்தடத்தில் பயணிகள் அடர்வுக்கு தகுந்தவாறு போதிய பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தற்பொழுது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

178—

பேருந்து வசதி

வினா எண் 49924—திரு. சு. ரவி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், அரக்கோணத்திலிருந்து கீழ்வெங்கடாபுரம் வழியாக மகேந்திரவாடிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்திலிருந்து சாலை, அன்வர்திகான்பேட்டை வழியாக மகேந்திரவாடிக்கு தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுவே பிரதான வழித்தடமாகும். இயக்கப்படும் நடைகளில் பயணிகளின் அடர்வு 46% மட்டுமே உள்ளது. தற்போது இயக்கப்படும் நடைகளே போதுமானது. அரக்கோணத்திலிருந்து கீழ்வெங்கடாபுரம் வழியாக நெமிலி வரை தினசரி 8 நடைகள் பேருந்து இயக்கம் உள்ளது. எனவே, தற்பொழுது உள்ள பேருந்து வசதியே மக்களின் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

[2016 பிப்ரவரி 20

179—

பணிமனை

வினா எண் 50781—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், பத்மாபுரத்தில் புதிய போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு தாலுகா, பத்மாபுரம் கிராமம் ச.எண் 20/2–ல் 2.00 ஏக்கர் நிலம் 11–11–2014 அன்று வருவாய் துறைமூலம் இக்கழகத்திற்கு புதிய பணிமனை அமைக்க வேண்டி ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இப்போக்குவரத்துக் கழக இயக்குநர் குழுமத்தால் ரூபாய் 96.00 இலட்சம் செலவில் பராமரிப்புக் கூடம், கழிவறை, பாதுகாவலர் அறை, பேருந்து சுத்தம் செய்யும் மேடை, கம்பிவேலி அமைக்கும் பணி மற்றும் சமன்செய்யும் பணி ஆகிய பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அப்பணிகள் விரைவில் துவங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு புதிய பணிமனை துவக்கப்படும். மேலும், இப்பணிமனை துவங்கியவுடன் முதல் கட்டமாக 30 பேருந்துகள் இயக்கப்பட்டு படிப்படியாக பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

180—

பேருந்து வசதி

வினா எண் 50785—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சி, பொதட்டூர்பேட்டை அரசு போக்குவரத்துப் பணிமனையிலிருந்து

சென்னை, திருப்பதி, வேலூர், ஈரோடு ஆகிய இடங்களுக்கு போதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொதட்டூர்பேட்டை அரசு போக்குவரத்துக் கழக கூடுதல் பணிமனையிலிருந்து தற்போது 8 நகரத் தடங்கள், 2 மாவட்டத் தடங்கள் என 10 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவற்றின்மூலம் பொதட்டூர்பேட்டையிலிருந்து திருத்தணி, பள்ளிப்பட்டு, நகரி மற்றும் சோளிங்கர் ஆகிய அருகிலுள்ள பெரிய நகரங்களுக்கும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, திருப்பதி, ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களுக்கு திருத்தணியிலிருந்து சென்னைக்கு 62 நடைகள், வேலூருக்கு சோளிங்கர் வழியாக 66 நடைகள், திருப்பதிக்கு நகரி வழியாக 152 நடைகள் என நாள் முழுவதும் போதிய இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பொதட்டூர்பேட்டையிலிருந்து திருத்தணிக்கு 84 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. தற்போதைய பயணிகள் அடர்விற்கு இயக்கப்படும் பேருந்துகளே போதுமானவையாக உள்ளன.

181—

பேருந்து வசதி

வினா எண் 50786—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணத்திலிருந்து சோளிங்கர் வழியாக வெடியங்காடுவரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணத்திலிருந்து சோளிங்கர் வழியாக வெடியங்காடுவரை உள்ள தூரம் 40 கி.மீ. ஆகும். வெடியங்காடு

கிராமமானது சோளிங்கரிலிருந்து பொன்னை செல்லும் வழியில் பிரதான சாலையிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. தற்போதைய போக்குவரத்து தேவைக்கு திருத்தணியிலிருந்து சித்தூர் செல்லும் 6 நடைகள், வெடியங்காடு ஊருக்குள் சென்றுவர 26–11–2014 அன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

182—

பேருந்து வசதி

வினா எண் 50873—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, சிதம்பரத்திலிருந்து புவனகிரி, பு. உடையூர், தலைக்குளம், உளுத்தூர், பிரசன்னராமபுரம், அம்பாள்புரம், பின்னலூர் வழியாக வடலூர்வரை புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, சிதம்பரம்–தலைக்குளம் இடையே புவனகிரி, பு.உடையூர், பிரசன்னராமபுரம், அம்பாள்புரம், பின்னலூர் வழியாக நகரப்பேருந்துமூலம் எட்டு நடைகளிலும் சிதம்பரம்–அம்பாள்புரம், இடையே இரண்டு நடைகளிலும் பேருந்து வசதி உள்ளது. இந்த நடைகளின் சராசரி பயணிகள் அடர்வு 48.25% ஆகும்.

2. மேலும், தலைக்குளம்–பின்னலூர் மற்றும் வடலூர் வழியாக புறநகரப்பேருந்துமூலம் சிதம்பரம்–பண்ருட்டி இடையே இரண்டு நடைகளில் பேருந்து வசதி உள்ளது. இந்நடைகளின் சராசரி பயணிகள் அடர்வு 62.05% ஆகும்.

3. கோரியுள்ள வழித்தடத்தில் மேற்குறிப்பிட்டவாறு பகுதிவாரியாக பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து வசதி பொதுமக்களின் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் உள்ளது.

2016 பிப்ரவரி 20]

183—

சர்க்கரை ஆலை மேம்படுத்துதல்

வினா எண் 51480—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைக்கவும், ஆலையை சுற்றி சுற்றுச்சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஆலை இயந்திரங்களை நவீனமயமாக்கும் பணிகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன. மேலும், புதியதாக இணை மின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆலையைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டும் பணி படிப்படியாக செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

184—

பேருந்து வசதி

வினா எண் 51508—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மலைக்கிராமமான பாலமலை ஊராட்சிக்கு அரசு சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி, பாலமலைக்கிராமமானது மேட்டூரிலிருந்து 33.6 கி.மீ. தொலைவில் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. மேட்டூரில் இருந்து பாலமலை செல்லும் வழியில் 28.2 கி.மீ. தொலைவில் உள்ள கண்ணாமூச்சிவரை சமதள சாலையாகவும்,

அதன் மேற்கொண்டு 5.4 கி.மீ. வரையுள்ள சாலை மலைப்பகுதியிலும் அமைந்துள்ளது. தற்போது மேட்டூர்–கண்ணாமூச்சிவரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து மூன்றின்மூலம் 30 நடைகள், புறநகர் பேருந்துகள் இரண்டின்மூலம் 10 நடைகள் மற்றும் தனியார் பேருந்து ஒன்றின்மூலம் 4 நடைகள் என 44 நடைகள் தினசரி இயக்கப்பட்டு அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவை பூர்த்தி செய்யப்பட்டுவருகிறது. மேலும் பாலமலைச்சாலையின் அடிவாரமானது கண்ணாமூச்சி பேருந்து நிலையத்திற்கு முன்பாக 0.8 கி.மீ. தூரத்தில் வலதுபுறமாக பிரியும் மண்சாலையில் ஆரம்பிக்கின்றது. இங்கிருந்து பாலமலை கிராமம் 5.4 கி.மீ. தூரத்தில் கரடுமுரடான தடத்தில் மலைப்பகுதியில் உள்ளது. இச்சாலையானது பாலமலை அடிவாரம் முதல் மலைப்பகுதியில் உள்ள பாலமலை கிராமம் உள்ள இடம்வரை மிகவும் மோசமான நிலையில் குண்டும் குழியுமாக 16 வளைவுகளைக் கொண்ட மண் சாலையாக உள்ளது. இச்சாலையின் அகலம் 6 முதல் 7 அடி வரை மட்டுமே உள்ளதால் சிற்றுந்துகள் கூட இயக்கிட இயலாத நிலையில் உள்ளது. எனவே, இச்சாலையினை கனரக வாகனங்கள் இயக்குவதற்கு ஏற்ற சாலையாக அமைத்திடும்பட்சத்தில் பேருந்துகள் இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

185—

பேருந்து வசதி

வினா எண் 51509 திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, மேச்சேரி மற்றும் கொளத்தூர் ஒன்றியங்களுக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(i) *மேட்டூர் தொகுதி கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கனரக வாகனங்கள் இயக்க தகுதியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் அரசாணை எண் 1032 உள் (போ–சி) துறை*

2016 பிப்ரவரி 20]

நாள் 21–5–1990–இல் உள்ளபடி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் 13 நகரப் பேருந்துகள் மூலமாக 170 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர மேட்டூரில் இருந்து மைசூர், மாதேஸ்வரன்மலை, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் அந்தியூர் ஆகிய வழித்தடங்களில் இயக்கப்படும் 20 புறநகர் பேருந்துகள்மூலம் கொளத்தூர் வழியாக 62 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ii) இது தவிர, எட்டு தனியார் புறநகரப்பேருந்துகள் மேட்டூரில் இருந்து கொளத்தூர் வழியாக 40 நடைகள் இயங்கி வருகின்றன. மேலும், தனியார் மினி பேருந்துகள் இரண்டு கொளத்தூரிலிருந்து கருங்கல்லூர் மற்றும் பன்னவாடி பரிசல்துறை பகுதிக்கு தினசரி 24 நடைகள் இயங்கி வருகின்றன.

(iii) அதேபோல, மேட்டூர் தொகுதி மேச்சேரி பகுதிக்கு உட்பட்ட கனரக வாகனங்கள் இயக்க தகுதியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், 10 நகரப் பேருந்துகள்மூலம் 136 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(iv) சேலம்–மேட்டூர் (வழி) மேச்சேரி தடத்தில் ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும் மற்றும் மேட்டூர்–தருமபுரி (வழி) மேச்சேரி தடத்தில் ஒவ்வொரு 20 நிமிட இடைவெளியிலும் அரசு பேருந்து வசதி உள்ளது.

(v) மேலும், மேச்சேரி–மேட்டூர் வழித்தடத்தில் தனியார் நகரப்பேருந்துகள் இரண்டுமூலம் 26 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர மேச்சேரி பகுதியைச்சுற்றி பேருந்து வசதி அளித்திட 12 மினி பேருந்துகள்மூலம் 168 நடைகள் இயக்கிட அனுமதி உள்ளது. இதில் பயணிகள் அடர்வு குறைவின் காரணமாக 5 பேருந்துகள்மூலம் 70 நடைகள் மட்டுமே தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

(vi) எனவே, மேட்டூர் தொகுதி கொளத்தூர் மற்றும் மேச்சேரி ஒன்றியங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராமமக்களின் போக்குவரத்து தேவைக்கு மேற்காணும் பேருந்து வசதியே போக்குவரத்து தேவையினை நிறைவு செய்திடும் வகையில் உள்ளது.

[2016 பிப்ரவரி 20

186—

பேருந்து வசதி

வினா எண் 51591—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணியிலிருந்து, நகரி–நெடியம்–சொரக்காய்பேட்டை வழியாக பொதட்டூர்பேட்டைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருத்தணியிலிருந்து நகரி–நெடியம்–சொரக்காய்பேட்டை வழியாக பொதட்டூர்பேட்டைக்கு கோரப்பட்டுள்ள வழித்தடம் தமிழ்நாடு–ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையேயான இயக்க எல்லையில் உள்ளது. எனவே, இரு மாநிலங்களுக்கு இடையேயான வழித்தட ஒப்பந்தம் ஏற்படுகின்றபோது இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.

187—

பேருந்து வசதி

வினா எண் 51592—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணியிலிருந்து, வேலஞ்சேரி, சந்தானகோபாலபுரம் வழியாக புதிய தடத்தில் அரசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருத்தணியிலிருந்து வேலஞ்சேரி, சந்தானகோபாலபுரம் வழியாக சிவாடாவிற்கு பகுதி வாரியாக 8 நடைகள் இயக்கப்படுகின்றன. தற்போது இயக்கப்படும் நடைகளே இத்தடத்தின் தற்போதைய பேருந்து தேவைக்கு போதுமானதாகும்.

2016 பிப்ரவரி 20]

188—

பேருந்து வசதி

வினா எண் 51593—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணியிலிருந்து, பூனிமாங்காடுவரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருத்தணியிலிருந்து பூனிமாங்காடுவரை நான்கு பேருந்துகளை கொண்டு தினசரி 26 நடைகள் இயக்கப்படுகின்றன. பயணிகளின் பயன்பாட்டிற்கு இதுவே போதுமானதாகும்.

189—

பேருந்து வசதி

வினா எண் 51594—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டையிலிருந்து தடம் எண் 5 பேருந்தை மீண்டும் காக்களூர்வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொதட்டூர்பேட்டை–காக்களூர் வரையிலான தூரம் 3 கி.மீ. ஆகும். 8 ஆண்டுகளுக்கு முன்னர் பேருந்து இயக்கப்பட்டு பயணிகளின் பயன்பாடு குறைவு காரணமாக நிறுத்தப்பட்டது. தற்போழுது, இத்தடத்தில் தட ஆய்வு மேற்கொண்டு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2016 பிப்ரவரி 20

190—

சிப்காட் தொழிற்பேட்டை

வினா எண் 51835—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் மற்றுமொரு சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் எண்ணம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

191—

கிரானைட் தொழிற்சாலை

வினா எண் 51845—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டு பகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

தற்சமயம் சென்னைக்கு அருகேயுள்ள மணலியில் கிரானைட் பலகைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையினையும், கிருஷ்ணகிரி மாவட்டம் மாதேப்பள்ளியில் 100 சதவிகிதம் ஏற்றுமதி நோக்குடன் கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையினையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் நடத்தி வருகின்றது. மேலும், 100 சதவிகிதம் ஏற்றுமதி

2016 பிப்ரவரி 20]

நோக்குடன் ஒரு புதிய கிரானைட் கற்பலகைகள் மெருகூட்டும் தொழிற்சாலை மதுரை மாவட்டம் மேலூரில் 2013–ல் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலும் ஒரு கிரானைட் தொழிற்சாலையினை திருத்தணி தொகுதியில் நிறுவுதலுக்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

192—

பணிமனையினை நவீனப்படுத்துதல்

வினா எண் 52005—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலுள்ள கும்பகோணம் போக்குவரத்து கழக பணிமனையினை நவீனப்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட்., சிதம்பரம் கிளையானது ஏற்கெனவே நகர அளவு எண் 1/2–ல் 0.95 ஏக்கர் பரப்பளவில் அடிப்படை வசதிகளுடன் கடந்த 1973 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. மக்கள் தொகை அதிகரிப்பினை முன்னிட்டு மேற்படி கிளைக்கு அருகாமையில் நகரளவு எண் 14–ல் 1.45 ஏக்கர் பரப்பளவில் புதிய நிலம் கையகப்படுத்தப்பட்டு பராமரிப்புக் கூடம், பண்டகசாலை, உணவகம், அலுவலகம், ஓட்டுநர் நடத்துநருக்கான ஓய்வறை மற்றும் கழிவறைகள் ஆகிய வசதிகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. கிளையில் தற்போது 39 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மற்றும் 253 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இக்கிளையிலிருந்து அன்றாடம் 24 மணி நேரமும் மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தேனி, பழையார், பழனி, திருப்பூர், வேளாங்கண்ணி, நாகப்பட்டினம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது கிளையில் தானியங்கி பேருந்து கழுவும்

[2016 பிப்ரவரி 20

இயந்திரம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரம் ஆகிய நவீன இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இக்கிளையில் உறுதியான கான்கிரீட் தளம் அமைக்கும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொகை கோரப்பட்டுள்ளது. மேற்படி நிதி கிடைக்கப்பெற்றவுடன் சிமென்ட் கான்கிரீட் தளம், புதிய அலுவலகம் மற்றும் உணவகம் ஆகியவை நவீனமாக அமைக்கப்பட உள்ளன. எனவே, சிதம்பரத்திலுள்ள கும்பகோணம் போக்குவரத்துக் கழக பணிமனை நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.

193—

பேருந்து வசதி

வினா எண் 52073—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டையிலிருந்து திருப்பதிக்கு நேரடியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொதட்டூர்பேட்டையிலிருந்து திருப்பதிக்கு, பள்ளிப்பட்டு, நகரி வழியாக செல்வது குறுகிய தூர தடமாகும். இந்த தடம் ஆந்திர மாநிலத்தின் எல்லைப் பகுதியாக உள்ள தடமாகும். எனவே, இவ்வழியாக அண்டை மாநில ஒப்பந்தம் பெற்ற பிறகு பேருந்து இயக்கப்படும். தற்போது பொதட்டூர்பேட்டையிலிருந்து நகரிக்கு தினசரி 7 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

194—

பேருந்து வசதி

வினா எண் 52074—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை—காக்களூர்—நொச்சிலி—C.N. கண்டிகை வழியாக வங்கனூருக்கு புதிய வழித்தடத்தில் நகரப்பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொதட்டூர்பேட்டை—வங்கனூர் வழி காக்களூர் C.N. கண்டிகை தடத்தின் நீளம் 15 கி.மீ. ஆகும். பொதட்டூர்பேட்டை மற்றும் வங்கனூர் இரண்டுமே அங்கீகரிக்கப்பட்ட நகரங்களாக இல்லாமையால் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. எனினும் தேவையின் அடிப்படையில் இத்தடத்தை உள்ளடக்கியவாறு தற்போது ஒரு தனியார் சிற்றுந்துமூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

195—

பேருந்து வசதி

வினா எண் 52075 திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், அம்மையார்குப்பம் கிராமத்திலிருந்து பாலாபுரம் வழியாக ஜனகராஜகுப்பம், மஹான்காளிகாபுரம், பொன்னைவரை நகரப் பேருந்துகள் இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நகரப் பேருந்துகள் இயக்க இரண்டு முனைகளில் ஒரு முனையாவது அங்கீகரிக்கப்பட்ட நகரமாக இருக்க வேண்டும். கோரப்பட்ட தடத்தில் அம்மையார்குப்பம் மற்றும் பொன்னை ஆகிய இரு ஊர்களுமே அங்கீகரிக்கப்பட்ட நகரங்களாக இல்லை. நகரப் பேருந்து கோரப்பட்டுள்ள அனைத்து இடங்களிலிருந்தும் அருகே உள்ள முக்கிய நகரங்களான திருத்தணி மற்றும்

சோளிங்கருக்கு பேருந்து வசதி உள்ளது. எனவே, அம்மையார்குப்பத்திலிருந்து பாலாபுரம், சுனகராஜகுப்பம், மஹான்காளிகாபுரம் வழியாக பொன்னைக்கு தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

196—

பேருந்து வசதி

வினா எண் 52076—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டிலிருந்து கோரகுப்பம், கன்னிகாம்பாபுரம் காலனி வழியாக திருத்தணிவரை புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு, பல்ஜி கண்டிகை, கோரகுப்பம், கன்னிகாம்பாபுரம் காலனி வழியாக திருத்தணி செல்வது ஒரு சுற்று வழித்தடமாகும். இவற்றில் கோரகுப்பம் கிராமம் பள்ளிப்பட்டு—ஆர்.கே.பேட்டை பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. தொலைவுக்குள் அமைந்துள்ளது. மொத்த மக்கள் தொகை 500—க்குள் மட்டுமே. பிரதான சாலையில் மூன்று நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 26 நடைகள் இயக்கப்படுகின்றன. இவற்றில் பயணிகள் அடர்வு 52 சதவிகிதம் ஆகும். கோரகுப்பம் பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. தொலைவுக்குள் அமைந்துள்ளமையால் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதலாம்.

இதே போன்று கன்னிகாம்பாபுரம் காலனி, திருத்தணி—பள்ளிப்பட்டு வழி கே.ஜி. கண்டிகை, நொச்சிலி பிரதான சாலையிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள கிராமமாகும். மொத்த மக்கள் தொகை 500—க்குள் மட்டுமே. மேற்கூறிய திருத்தணி—பள்ளிப்பட்டு தடத்தில் மூன்று பேருந்துகள்மூலம் 22 நடைகள் இயக்கப்படுகிறது. இவற்றில் பயணிகள் அடர்வு 42,41 மற்றும் 40 சதவிகிதங்கள் என்ற அளவிலேயே உள்ளது. திருத்தணி

2016 பிப்ரவரி 20]

தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு மேற்படி பேருந்துகளே போதுமானதாக உள்ளன.

197—

பேருந்து வசதி

வினா எண் 52252—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்திலிருந்து விரிகோடு, கொல்லஞ்சி, காட்டாவிளை, நட்டாலம் வழியாக கருங்கல் ஊருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டத்திலிருந்து விரிகோடு, கொல்லஞ்சி வழியாக கருங்கல்லுக்கு தடம் எண் 88E பேருந்தின்மூலம் 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 50 சதவிகிதத்திற்கு குறைவாகவே உள்ளது. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அப்பகுதி மக்களின் தேவைக்குப் போதுமானதாகும்.

198—

பேருந்து வசதி

வினா எண் 52253—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம்–தேங்காப்பட்டணம் வழித்தடத்தில் குன்னத்தூர் சந்திப்பிலிருந்து தும்பாலிபாலோடு ஊருக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டம்–தேங்காப்பட்டணம் சாலையில் அமைந்துள்ள குன்னத்தூரிலிருந்து தும்பாலிபாலோடு ஊரானது 1.5 கி.மீ. உள்நோக்கி அமைந்துள்ளது. தும்பாலிபாலோடு சாலை, பேருந்துகள் செல்வதற்கு ஏற்றதாக இல்லை. குன்னத்தூர் வழியாக மார்த்தாண்டம்–தேங்காப்பட்டணம்வரை 21 பேருந்துகளின்மூலம் 172 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதி மக்கள், இவ்வழித்தட பேருந்துகளை முழுமையாக பயன்படுத்தி வருகின்றனர். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளன.

199—

பேருந்து வசதி

வினா எண் 52254—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்திலிருந்து களியக்காவிளை, மலையடி, கழுவன்திட்டை, மருதன்கோடு, பரக்குன்று, புத்தன்சந்தை, மூவோட்டுக்கோணம், கண்ணுமாமூடு வழியாக மணிவிளை ஊருக்கு தடம் எண் 84 எம் பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டத்திலிருந்து களியக்காவிளை, மலையடி, கழுவன்திட்டை, மருதன்கோடு, பரக்குன்று, புத்தன்சந்தை, மூவோட்டுக்கோணம், கண்ணுமாமூடு வழியாக மணிவிளைக்கு அப்பகுதியினரின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 5 பேருந்துகளின்மூலம் 40 நடைகள் இயக்கப்படுகின்றன. தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளன.

2016 பிப்ரவரி 20]

200—

பேருந்து வசதி

வினா எண் 52255—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்திலிருந்து குழித்துறை, திருத்துவபுரம், மருதங்கோடு, மேல்புறம், அண்டுகோடு வழியாக பிலாவிளைக்கு (Rt.LSS) *மீண்டும் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டத்திலிருந்து குழித்துறை, திருத்துவபுரம், மருதங்கோடு, மேல்புறம் மற்றும் அண்டுகோடு வழியாக பிலாவிளைக்கு தடம் எண் 382 M (LSS) *பேருந்து மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்து நடைகளின்போது பயணிகளின் அடர்வு குறைவாகவே உள்ளது. எனினும், இந்த பேருந்து தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றது.*

201—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52258—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தேங்காய்ப்பட்டணத்திலிருந்து குழித்துறை, களியக்காவிளை வழியாக திருவனந்தபுரம் வரை மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம் மற்றும் கேரளா மாநில தலைநகரமான திருவனந்தபுரம் இடையே இயக்கப்பட்டு வரும் தேங்காய்ப்பட்டணம்–திருவனந்தபுரம் தடப் பேருந்து தற்சமயம் 6 நடைகளும் தடங்கலின்றி இயக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோவில்–திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வெட்டுவெந்தியிலிருந்து சுமார் 11.0 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது தேங்காய்ப்பட்டணம். மார்த்தாண்டம்–வெட்டுவெந்தி–தேங்காய்ப்பட்டணம் சாலையில் சுமார் 5 நிமிட இடைவெளி நேரங்களில் நகரப் பேருந்துகள் தினம் 198 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளை பயன்படுத்தியும், வெட்டுவெந்தியில் பேருந்து மாற்றியும் நாகர்கோவில்–திருவனந்தபுரம் இடையே இயங்கும் 36 பேருந்துகளின் 216 நடைகள் இயங்கும் இருமாநில தடப் பேருந்துகளையும் பயன்படுத்தலாம். மேலும், கேரள அரசு பேருந்துகளும் கோரிக்கை வழித்தடத்தில் இயங்குகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

202—

கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 52259—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம்–பேச்சிப்பாறை–ஜீரோ பாயிண்ட்–ஆலஞ்சோலை வரை தடம் எண் 86G பேருந்தை கூடுதலாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 86G பேருந்து மார்த்தாண்டத்திலிருந்து பேச்சிப்பாறை, ஜீரோ பாயிண்ட் வரை 6 நடைகளும், மார்த்தாண்டத்திலிருந்து சிற்றார், சிலோன் காலனி வரை 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்தில் பயணிகளின் பயன்பாடு 40 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. மேலும், மார்த்தாண்டம்–ஆலஞ்சோலை தடத்தில் தேவைக்கேற்ப குறிப்பிட்ட இடைவெளியில் 7 பேருந்துகள்மூலம் 56 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

203—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52288—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியிலிருந்து பழனிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி–பழனி வழித்தடம் புதிய வழித்தடமாகும். ஏற்கெனவே, சிதம்பரத்திலிருந்து சீர்காழி வழியாக பழனிக்கு 5 தடப் பேருந்துகளின்மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்படுகின்றன. கும்பகோணம்–பழனிக்கு 2 பேருந்துகளின்மூலம் 2 நடைகளும், தஞ்சாவூர்–பழனி வழித்தடத்தில் 6 பேருந்துகளின்மூலம் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. சீர்காழியிலிருந்து பழனிக்கு செல்லும் மக்கள் பகுதி, பகுதியாக செல்லும் மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி பழனிக்கு

[2016 பிப்ரவரி 20

செல்லலாம். அப்பேருந்துகளின் பயணிகளின் அடர்வு 75 சதவீதமாகும். எனவே, தற்போதைய பயணிகளின் அடர்வுக்கு இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

204—

தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 52334—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையின்மூலம் எத்தனால் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 213, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 30–3–1989 இல் நீராதாரங்களின் கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் மாசினை ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. புவனகிரி தொகுதியில் அமைந்துள்ள சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையானது வெள்ளாறு நதிக்கு அருகில் 600 மீட்டர் தொலைவிற்குள் இருப்பதனால் அங்கு எத்தனால் தொழிற்சாலை அமைக்க மாசு கட்டுப்பாட்டு விதிமுறைகளின்படி வழி இல்லை.

205—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52560—திரு. மு. முருகன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கமுதியிலிருந்து திருப்பூர் வழியாக கோயம்புத்தூருக்கு தினசரி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கமுதியிலிருந்து மதுரைக்கு நாள் ஒன்றுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின்மூலம் 27 நடைகளும், தனியார் பேருந்துகளின்மூலம் 12 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மதுரையிலிருந்து திருப்பூருக்கு ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும், திருப்பூரிலிருந்து கோயம்புத்தூருக்கு ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கும் என பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

206—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52562—திரு. மு. முருகன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூரிலிருந்து குற்றாலத்திற்கு தினசரி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூரிலிருந்து விருதுநகருக்கு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மூலமாக 5 தனி நடைகளும், தனியார் பேருந்துகளின் மூலமாக 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. விருதுநகரிலிருந்து குற்றாலத்திற்கு அரசு பேருந்துகள் மூலமாக 12 நடைகளும், இராஜபாளையத்திலிருந்து குற்றாலத்திற்கு ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கு ஒரு முறையும் பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

[2016 பிப்ரவரி 20

207—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52565—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலிருந்து சுவாமிமலைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரத்திலிருந்தும், இராமேஸ்வரத்திலிருந்தும் கும்பகோணத்திற்கு காரைக்குடி, சுவாமிமலை வழியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், காரைக்குடியிலிருந்து சுவாமிமலை வழியாக கும்பகோணத்திற்கு அரசுப் பேருந்துகள்மூலம் 8 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கும்பகோணத்திலிருந்து சுவாமிமலைக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி சுவாமிமலைக்கு எளிதில் செல்லலாம். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

208—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52566—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலிருந்து பழமுதிர்சோலைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி மற்றும் தேவகோட்டையிலிருந்து மதுரைக்கு இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளும் மேலூர் வழியாக இயக்கப்படுகின்றன. மேலூரிலிருந்து அழகர்கோவிலுக்கு புறநகர் பேருந்துகள் மற்றும் நகர் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் மதுரையிலிருந்து அழகர்கோவிலுக்கு நகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அழகர்கோவிலிலிருந்து பழமுதிர்ச்சோலைக்கு அழகர்கோவில் நிருவாகத்தின்மூலம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவ்வாறாக கோரிக்கை தடம் முழுமைக்கும் பகுதி, பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

209—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52567—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலிருந்து திருத்தணிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியிலிருந்து திருத்தணிக்கு செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்மூலம் இயக்கப்படும் புறநகர் பேருந்து வசதியை பயன்படுத்தி திருச்சி சென்று, அதன் பிறகு திருச்சி வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து வசதியினை பயன்படுத்தி திருத்தணி செல்லலாம்.

[2016 பிப்ரவரி 20

2. ஆவுடையார் கோவிலிருந்து திருச்சி வழியாக திருத்தணிக்கு 2 பேருந்துகள்மூலம் 4 நடைகள் இயக்கப்படுகின்றன. அதன் பயணிகள் அடர்வு 51% ஆகும்.

3. நாகர்கோவிலிலிருந்து திருச்சி வழியாக திருத்தணிக்கு 2 பேருந்துகள்மூலம் 4 நடைகள் இயக்கப்படுகின்றன. அதன் பயணிகள் அடர்வு 77% ஆகும்.

4. மேற்கூறிய பேருந்து வசதியினை காரைக்குடியிலிருந்து திருத்தணி செல்லும் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

210—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52568—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலிருந்து திருப்பரங்குன்றம் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியிலிருந்து மதுரைக்கு நாள் ஒன்றிற்கு 108 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்திற்கு நகர் பேருந்துகளும், புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி காரைக்குடியிலிருந்து திருப்பரங்குன்றத்திற்கு செல்லலாம். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

211—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52569—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலிருந்து கடலூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியிலிருந்து திருச்சிக்கு நாளொன்றுக்கு 173 தனி நடைகள் அரசு பேருந்துகளின்மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், திருச்சியிலிருந்து பெரம்பலூர், திட்டக்குடி, விருத்தாசலம் வழியாக கடலூருக்கு 43 தனி நடைகள் அரசுப் பேருந்துகளின்மூலம் இயக்கப்படுகின்றன. காரைக்குடி பொதுமக்கள் திருச்சி வந்து, அங்கிருந்து கடலூர் செல்லலாம். எனவே, பகுதி பகுதியாக தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

212—

சர்க்கரை ஆலை தொடங்குதல்

வினா எண் 52578—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் போதுமான கரும்புப் பரப்பு இல்லாததால் புதியதாக சர்க்கரை ஆலை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

213—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52583—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதி, துறையூர் போக்குவரத்து பணிமனையிலிருந்து கொல்லப்பட்டி, சேனப்பநல்லூர் தா. பேட்டை வழியாக நாமக்கல் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூரிலிருந்து கொல்லபட்டி, சேனப்பநல்லூர், தாத்தையங்கார்பேட்டை வழியாக நாமக்கல் வழித்தடம் கிராமப்புற சுற்று வழித்தடமாகும். இதில் துறையூரிலிருந்து நாமக்கல்லுக்கு சேனப்பநல்லூர் வழியாக ஒரு பேருந்துமூலம் 2 நடைகளும், துறையூரிலிருந்து கொல்லப்பட்டிக்கு ஒரு பேருந்துமூலம் 10 நடைகளும், துறையூரிலிருந்து தாத்தையங்கார்பேட்டைக்கு ஒரு பேருந்துமூலம் 6 நடைகளும், துறையூர்–நாமக்கல்லுக்கு தாத்தையங்கார்பேட்டை வழியாக 35 அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின்மூலம் 130 நடைகளும் மற்றும் தனியார் பேருந்துகளின்மூலம் 60 நடைகளும் தற்போது பகுதி, பகுதியாக இயக்கப்படுகின்றன. கோரிக்கை வழித்தடம் கிராமப்புற சுற்று வழித்தடமாக உள்ளதால், இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

214—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52591—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

திருத்தணி தொகுதி, திருத்தணியிலிருந்து அடுக்கல்பட்டு, நெமிலி வழியாக அருங்குளம் வரை இயக்கப்பட்ட தடம் எண் 97 (எல்) பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருத்தணியிலிருந்து அருங்குளம் வழியாக அடுக்கல்பட்டு வரை தடம் எண் 97 (எல்) பேருந்து இயக்கப்பட்டது. அருங்குளத்திலிருந்து அடுக்கல்பட்டு, நெமிலி வழியாக சாலை சுமார் 6. கி.மீ. வரை பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ள காரணத்தினால் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது. தற்போதும் சாலை அவ்வாறே உள்ளது. சாலை சீர் செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டால் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

215—

காகித ஆலை தொடங்குதல்

வினா எண் 52666—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் சர்க்கரை ஆலை வளாகத்தினுள் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாள் ஒன்றுக்கு 1,400 மெ. டன்கள் கரும்பு அரவைத்திறன் கொண்ட சிறிய ஆலை ஆகும். நிதி மேலாண்மை மற்றும் மூலப்பொருள் தேவை அடிப்படையில் இவ்வாலையில் காகித ஆலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2016 பிப்ரவரி 20

216—

காகித அட்டை தொழில் தொடங்குதல்

வினா எண் 52724—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய வைக்கோல்களை பயன்படுத்தி திருத்துறைப்பூண்டியில் காகித அட்டை தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

தற்போது தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ரூபாய் 1,500 கோடி முதலீட்டில் ஆண்டொன்றுக்கு 2,00,000 டன் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டைப் பிரிவினை, திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா, மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவி வருகிறது. வைக்கோலில் இருந்து தயாரிக்கப்படும் கூழ், காகித அட்டை உற்பத்தி செய்வதற்கு உகந்ததாக இருக்காது. மேலும், காகித அட்டை ஆலை பயன்பாட்டிற்கு, போதுமான தண்ணீர் தொடர்ந்து வழங்க வற்றாத வளமான நீர் ஆதார நிலையும் திருவாரூரில் இல்லை. எனவே, திருவாரூர் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய வைக்கோல்களை பயன்படுத்தி திருத்துறைப்பூண்டியில் காகித அட்டை தொழில் தொடங்க இயலாது.

217—

குளிர்சாதனப் பேருந்து இயக்குதல்

வினா எண் 52868—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வாணியம்பாடியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்குவது குறித்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரத்தில் குளிர்சாதனப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் போது பரிசீலிக்கப்படும்.

218—

போக்குவரத்து பணிமனைக்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 52871— திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டிலுள்ள போக்குவரத்துப் பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டில் புதிய பணிமனை அமைக்க வேண்டி பேர்ணாம்பட்டு சர்வே எண் 376/3 இல் 1.70 ஏக்கர் நிலம் 15–3–2013 அன்று வருவாய்த் துறையினரால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்டுக்கு ஒப்படை செய்யப்பட்டு மேற்படி நிலத்தில் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் கம்பிவேலி அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அந்நிலத்தினை ரூபாய் 5.34 இலட்சம் செலவில் சமன்படுத்தும் பணியும் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

அதனைத் தொடர்ந்து ரூபாய் 10 இலட்சம் செலவில் பராமரிப்புக் கூடம் (ஒரு பகுதி) அமைக்க சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி பெறப்பட்டு அப்பணிகள் முடியும் தருவாயில்

உள்ளன. மேலும், ரூபாய் 50 இலட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் துவங்க இக்கழக குழுமத்தில் ஒப்புதல் பெற்று பராமரிப்புக் கூடப்பணிகள் சுமார் 10 சதவீத அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இதர முதல்நிலைப் பணிகளான ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் கழிப்பறை கட்டுதல் ஆகிய பணிகள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, பேர்ணாம்பட்டில் சொந்த கட்டடத்தில் புதிய பணிமனை விரைவில் துவங்க துரித நடவடிக்கை மேற்கோள்ளப்பட்டு வருகிறது.

219—

முந்திரி ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்

வினா எண் 52995—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் கிராமத்தில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

முந்திரிக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம், நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் கிராமத்திலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள கடலூர் மாவட்டம், காட்டாண்டிகுப்பத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் கூட்டுத் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

220—

மோனோ இரயில் திட்டம்

வினா எண் 53092—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) சேலம் மாநகரத்தில் மோனோ இரயில் திட்டம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரத்தில் மோனோ இரயில் திட்டம் தொடங்குவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

221—

கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்குதல்

வினா எண் 53344—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டில் புதியதாக கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டில் புதியதாக கூட்டுறவு சர்க்கரை ஆலை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

222—

குளிர்சாதன விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 53402—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) மானாமதுரையிலிருந்து பாண்டிச்சேரிக்கு குளிர்சாதன விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை–பாண்டிச்சேரி தடமானது தற்போது அமலில் உள்ள அண்டை மாநில ஒப்பந்தங்களில் இல்லாத காரணத்தால் உடனடியாக பேருந்துகளை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, அடுத்து நடைபெறும் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பரிசீலித்து, குளிர்சாதன விரைவுப் பேருந்துகள் இயக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

223—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 53403—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையிலிருந்து குற்றாலத்திற்கு மதுரை வழியாக விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடியிலிருந்து குற்றாலத்திற்கு மானாமதுரை மற்றும் மதுரை வழியாக ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. மானாமதுரை–மதுரை வழித்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்மூலம் 274 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 58 நடைகளும் மற்றும் மதுரை–செங்கோட்டை வழித்தடத்தில் குற்றாலம் வழியாக 60 நடைகளும், மதுரை–

2016 பிப்ரவரி 20]

குற்றாலத்திற்கு 10 நடைகளும் தற்போது இயக்கப்படுகின்றன. பகுதி, பகுதியாக இயக்கப்படும் மேற்கண்ட பேருந்துகளை பயன்படுத்தி மானாமதுரையிலிருந்து குற்றாலம் செல்லலாம். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

224—

சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 53614—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி–சென்னை, தி. நகருக்கு புதிய சொகுசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி மற்றும் போளூரிலிருந்து சாதாரண பேருந்துகள்மூலம் சென்னைக்கு தினசரி 130 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. சராசரியாக 10 நிமிட இடைவெளியில் இப்பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளின் சராசரி பயணிகள் அடர்வு 78 சதவீதமாக உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்துத் தேவைக்கு இப்பேருந்துகளே போதுமானவைகளாக உள்ளன. மேலும், சொகுசுப் பேருந்துகளை கொள்முதல் செய்யும்போது ஆரணியிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

225—

பேருந்து இயக்குதல்

வினா எண் 53615—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆரணியிலிருந்து சின்ன பாண்டிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி மற்றும் ஒன்றியம் ஆரணியிலிருந்து சின்ன பாண்டி கிராமம் ஆரணி–வேலூர் மார்க்கத்தில் சோமந்தாங்கல் கூட்டுச்சாலையிலிருந்து 3.5 கி.மீ. தூரத்தில் சிறு குன்றின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. சோமந்தாங்கல் கிராமத்திலிருந்து சின்ன பாண்டி செல்லும் 1.5 கி.மீ. சாலை 5 அடி குறுகிய அகலம் கொண்ட சாலையாக கனரகப் பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. சாலை அகலப்படுத்தப்பட்டால் பேருந்துகளை இயக்கும் வாய்ப்புள்ளது. தற்போது ஆரணியிலிருந்து 4 புறநகர் சாதாரண பேருந்துகள்மூலம் 24 நடைகளும் ஆக மொத்தம் 8 பேருந்துகள்மூலம் 48 நடைகள் சோமந்தாங்கல் கூட்டுச்சாலை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடங்களில் சோமந்தாங்கல் கூட்டுச்சாலை சென்றடைந்தால் சின்ன பாண்டி செல்லலாம்.

226—

பேருந்து இயக்குதல்

வினா எண் 53616—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆரணியிலிருந்து இரும்பேடு, மட்டதாரி, மைனந்தல் வழியாக கலவைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மண்டலம் ஆரணி பணிமனையைச் சார்ந்த நகரப் பேருந்துமூலம் ஆரணியிலிருந்து ஆயிரமங்கலத்திற்கு இரும்பேடு, மைனந்தல், மட்டதாரி வழியாக 2 நடைகளும், ஆரணியிலிருந்து கலவைக்கு இரும்பேடு, ச.வி. நகரம், மட்டதாரி வழியாக 6 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. இரு நகர வழித்தடங்களின் சராசரி பயணிகள் அடர்வு 36.28 விழுக்காடு மட்டுமே உள்ளது. எனவே, தற்சமயம் உள்ள பேருந்து வசதியே பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்யும்வகையில் உள்ளது.

227—

பேருந்து இயக்குதல்

வினா எண் 53920—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியத்திலுள்ள பழைய உச்சிமேடு கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

16–12–2014 முதல் ஒரு பேருந்துமூலம் தினசரி காலை மற்றும் மாலை நேரங்களில் தொட்டு இயக்கும் வகையில் தலா 1 நடைவீதம் இயக்கப்பட்டு வருகிறது. அப்பேருந்தின் பயணிகள் அடர்வு 37.53% ஆகும். பயணிகளின் அடர்விற்கேற்ப தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

228—

குளிர்சாதனப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 53921—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

கள்ளக்குறிச்சியிலிருந்து சென்னை, கோயம்புத்தூர் மற்றும் பழனிக்கு புதிய குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தில் புதியதாக குளிர்சாதனப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்போது கோரப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி—சென்னை, கோயம்புத்தூர், பழனி தடத்தில் பேருந்து இயக்கிட பரிசீலிக்கப்படும்.

229—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54069—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மார்த்தாண்டத்திலிருந்து கேரளா மாநிலம் பத்தனம்திட்டாவிற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது, நாகர்கோவிலிலிருந்து மார்த்தாண்டம் வழியாக திருவனந்தபுரத்திற்கு 36 பேருந்துகளின்மூலம் 216 நடைகள் இயக்கப்படுகின்றன. தற்போது, கோரப்பட்டுள்ள வழித்தடம், இரு மாநில வழித்தடம் என்பதால், இரு மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தங்கள் ஏற்படும்போது புதிய பேருந்து இயக்குவது குறித்து ஆய்வுக்குப்பின் பரிசீலிக்கலாம்.

230—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54070—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

குளச்சல் தொகுதி, சுவாமியார்மடம் சந்திப்பிலிருந்து திருவனந்தபுரத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, சுவாமியார் மடத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு பேருந்துகள் இயக்குவது என்பது இருமாநில வழித்தடமாகும். தற்போது, திருவனந்தபுரம்–நாகர்கோவில் இடையே இருமாநில ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுவாமியார்மடம் வழியாக 36 பேருந்துகள்மூலம் 216 தனி நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. இதே போன்று கேரள அரசுப் பேருந்துகளும் சுவாமியார் மடம் வழியாக இரு மாநில ஒப்பந்தங்களின் அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது.

231—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54071 திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, ஆளூர் ஊரிலிருந்து திருவனந்தபுரத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆளூர், நாகர்கோவிலிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நாகர்கோவில்–ஆளூர் வழித்தடத்தில் 5 பேருந்துகள்மூலம் 60 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், நாகர்கோவிலிலிருந்து 70 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருவனந்தபுரம் செல்ல 36 பேருந்துகள்மூலம் 216 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆளூர் பகுதி மக்கள் நாகர்கோவில் சென்று பேருந்து மாற்றி மேற்கண்ட

[2016 பிப்ரவரி 20

பேருந்துகளை பயன்படுத்தி திருவனந்தபுரம் செல்லலாம். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

232—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54073—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கலிலிருந்து வாடிப்பட்டிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலிலிருந்து வாடிப்பட்டி வழியாக திண்டுக்கல்லுக்கு நீண்ட தூர வழித்தடத்தில் நேரடியாக 3 பேருந்துகளின்மூலம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அப்பேருந்துகள் சுமார் 70% பயணிகளின் பயன்பாட்டுடன் இயக்கப்பட்டு வருகின்றன. கருங்கல்–குளச்சல் மற்றும் கருங்கல்–திங்கள் நகர் இடையே 8 கி.மீ. தூரமே உள்ளது. அத்தடத்தில் 7 நகரப் பேருந்துகளின்மூலம் 56 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அப்பேருந்துகள் 50% குறைவான பயணிகளின் பயன்பாட்டுடன் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன. கருங்கல் பகுதியினர் அருகாமையிலுள்ள குளச்சல் மற்றும் திங்கள் நகர் பகுதிக்குச் சென்று நீண்ட தூரப் பேருந்துகளை பயன்படுத்தி வாடிப்பட்டிக்குச் செல்லலாம். பயணிகளின் அடர்வுக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

233—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54074—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலிலிருந்து ஊட்டிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தற்போது மார்த்தாண்டத்திலிருந்து ஊட்டிக்கு தினசரி 4 பேருந்துகள் 4 நடைகள்வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், திருவனந்தபுரத்திலிருந்து ஊட்டிக்கு மார்த்தாண்டம் வழியாக 2 பேருந்துகள் 2 நடைகள் என இயக்கப்பட்டு வருகின்றன. குளச்சலிலிருந்து ஊட்டி செல்லும் பயணிகள் நகர பேருந்து வசதியை பயன்படுத்தி மார்த்தாண்டம் வந்து அதன் வழியாக ஊட்டிக்கு இயக்கப்பட்டு வரும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. தேவைப்படின் தட ஆய்வு செய்து அதனடிப்படையில் புதிய பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

234—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54075—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, குழிக்கோட்டிலிருந்து நாகர்கோவிலுக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குழிக்கோடிலிருந்து நாகர்கோவில் செல்லும் வழித்தடத்தில் 10 பேருந்துகளின்மூலம் தினமும் 88 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 54 சதவீதமாக உள்ளது. இத்தடத்தில் உள்ள பயணிகளின் அடர்விற்கு இப்பேருந்துகள் போதுமானதாகும்.

[2016 பிப்ரவரி 20

235—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54076—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, மண்டைக்காடு பகுதியிலிருந்து நாகர்கோவிலுக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, மண்டைக்காட்டிலிருந்து நாகர்கோவில் செல்ல தடம் எண் 1S மூலம் 6 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மண்டைக்காடு பகுதியிலிருந்து மாவட்டத்தின் முக்கியப் பகுதிகளான நாகர்கோவில், தக்கலை, மார்த்தாண்டம் மற்றும் திருவனந்தபுரம் தடங்களில் 26 பேருந்துகள்மூலம் 270 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. மண்டைக்காடு, நாகர்கோவில் வழித்தடத்தைப் பொறுத்தமட்டில் சுமார் 10 நிமிட இடைவெளி நேரங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகளில் பயணிகளின் அடர்வு குறைவாக உள்ளது. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

236—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54077—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் சந்திப்பு முதல் நாகர்கோவில் பேருந்து நிலையம் வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவில்–ரீத்தாபுரம் தடத்தில் தடம் எண் 5B பேருந்தின்மூலம் 4 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தடம் எண் 5/A, 5/B ஆகிய 2 பேருந்துகளின்மூலம் பாலப்பள்ளம்–நாகர்கோவில் தடத்தில், ரீத்தாபுரம் வழியாக 20 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடு குறைவாக உள்ளது. மார்த்தாண்டம்–குளச்சல் வழித்தடத்தில் ரீத்தாபுரம் வழியாக 16 பேருந்துகளின்மூலம் 160 நடைகள் இயக்கப்படுகின்றன. சமீபத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட களியக்காவிளை–வேளாங்கண்ணி பேருந்து ரீத்தாபுரம் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளை ரீத்தாபுரம் பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். அப்பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடு 50% குறைவாகவே உள்ளது. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அப்பகுதி மக்களின் தேவைக்கு போதுமானதாகும்.

237—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54078—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, ஆளூர் பகுதியிலிருந்து திற்பரப்புக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவில்–ஆளூர்–தக்கலை வழித்தடத்தில் 5 பேருந்துகளின்மூலம் தினமும் 64 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், தக்கலை–திற்பரப்பு வழியாக 5 பேருந்துகள்மூலம் 50 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட

[2016 பிப்ரவரி 20

பேருந்துகளை பயன்படுத்தி ஆளூரிலிருந்து திற்பரப்பு செல்ல பேருந்து வசதி உள்ளது. தற்போது இயக்கப்படும் பேருந்துகளே பயணிகளின் தேவைக்கு போதுமானதாகும்.

238—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54080—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, மருதூர்குறிச்சியிலிருந்து திருநெல்வேலிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மருதூர்குறிச்சியிலிருந்து நாகர்கோவில் வழித்தடத்தில் 2 பேருந்துகளின்மூலம் 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு குறைவாகவே உள்ளது. மேலும், நாகர்கோவில்–திருநெல்வேலி இடையே 155 பேருந்துகளின்மூலம் 543 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளை பயன்படுத்தி மருதூர்குறிச்சியிலிருந்து திருநெல்வேலிக்கு எளிதில் செல்லலாம். மருதூர்குறிச்சி பகுதியில் தற்போது இயங்கி வரும் பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

239—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54081—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சலிலிருந்து திருநெல்வேலி மாவட்டம் அபிசேகப்பட்டியிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சலிலிருந்து நாகர்கோவிலுக்கு 20 பேருந்துகள்மூலம் 248 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோவிலிலிருந்து திருநெல்வேலிக்கு 155 பேருந்துகள்மூலம் 543 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருநெல்வேலியிலிருந்து அபிசேகப்பட்டிக்கு 30 பேருந்துகள்மூலம் 146 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி குளச்சலிலிருந்து அபிசேகப்பட்டியிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு எளிதில் சென்று வரலாம். எனவே, தற்போதுள்ள பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

240—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54082—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், காஞ்சிரகோடு சாங்கை பகுதியிலிருந்து திங்கள் நகர் பேருந்து நிலையத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

காஞ்சிரகோடு, சாங்கை, திங்கள் நகர் இடையே 3 பேருந்துகள்மூலம் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாகர்கோவில்–மார்த்தாண்டம் மற்றும் குளச்சல்–குலசேகரம் வழியாக இயங்கும் பேருந்துகள் திங்கள் நகர் வழியாக செல்கின்றன. காஞ்சிரகோடு, சாங்கை பகுதியினர் மார்த்தாண்டம்–நாகர்கோவில் இடையே இயங்கும் பேருந்துகளை பயன்படுத்தி அழகிய மண்டபத்தில் பேருந்து மாற்றி திங்கள் நகர் செல்லலாம். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே அப்பகுதியினர் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

[2016 பிப்ரவரி 20

241—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54083—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், நட்டாலம் பகுதியிலிருந்து நாகர்கோவில் பேருந்து நிலையத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலையான நாகர்கோவில்–திருவனந்தபுரம் இடையே அமைந்துள்ள மார்த்தாண்டத்திலிருந்து கருங்கல் செல்லும் சாலையில் அமைந்துள்ளது நட்டாலம். மார்த்தாண்டம், நட்டாலம் கருங்கல் சாலையில் பகுதி வழித்தடப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நட்டாலம்–நாகர்கோவில் நேர்சாலையில் 4 பேருந்துகளின்மூலம் 38 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. நேரடியாக இயக்கப்பட்டு வரும் வழித்தட பேருந்துகளின் காலை, மாலை நேர நடைகள் தவிர பிற நடைகள் குறைந்த பயணிகளின் பயன்பாட்டுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே, அப்பகுதியினரின் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

242—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54084—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சியிலிருந்து பனச்சமூடு பகுதிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணவாளக்குறிச்சியிலிருந்து திருவனந்தபுரம் வரை 6 நடைகளும் மற்றும் களியக்காவிளையிலிருந்து வேளாங்கண்ணி வரை 2 நடைகள் என மார்த்தாண்டம் வழியாக 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்தை பயன்படுத்தி மார்த்தாண்டம் சென்று அங்கிருந்து பனச்சமூடு செல்லும் 26 பேருந்துகளின்மூலம் இயக்கப்படும் 290 நடைகளை பயன்படுத்தலாம். மணவாளக்குறிச்சி–தக்கலை பேருந்துகளை பயன்படுத்தியும் தேசிய நெடுஞ்சாலையான தக்கலை–மார்த்தாண்டம் இடையே இயங்கும் தொடர் பேருந்துகளைப் பயன்படுத்தியும் மார்த்தாண்டத்தில் பேருந்து மாற்றி பனச்சமூடு செல்லலாம். எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே, அப்பகுதியினர் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

243—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54085—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு பகுதியிலிருந்து அருமனைக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குருந்தன்கோடு–திங்கள் நகர் வழித்தடத்தில் 5 பேருந்துகளின்மூலம் 68 நடைகள் இயக்கப்படுகின்றன. மண்டைக்காடு–கடையாலுமூடு வழித்தடத்தில் இயங்கும் பேருந்துகள் திங்கள் நகர், அருமனை வழியாக இயக்கப்படுகின்றன. அப்பேருந்துகளைப் பயன்படுத்தி குருந்தன்கோடிலிருந்து திங்கள் நகரில் பேருந்தை மாற்றி அருமனைக்கு செல்லலாம். மேலும், குருந்தன்கோடு–தக்கலை இடையே இயக்கப்படும் பேருந்தை

[2016 பிப்ரவரி 20

பயன்படுத்தி தக்கலையில் பேருந்து மாற்றி அருமனை செல்லலாம். இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 50 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே, இப்பயணிகளின் அடர்வுக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

244—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54086—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, வெள்ளிச்சந்தை பகுதியிலிருந்து குலசேகரத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சலிலிருந்து திங்கள் நகர் வழியாக குலசேகரத்திற்கு 14 பேருந்துகள்மூலம் 102 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. வெள்ளிச்சந்தை பகுதியிலிருந்து திங்கள் நகருக்கு 6 பேருந்துகள்மூலம் 36 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. வெள்ளிச்சந்தை கிராமப் பகுதியாகும். நேரடியாக பயணிகளின் அடர்வு குறைவாகவே இருக்கும். வெள்ளிச்சந்தை பயணிகள் திங்கள் நகர் வந்து குலசேகரம் செல்வதற்கு 14 பேருந்துகள்மூலம் 102 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

245—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54087—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, அம்மாண்டிவிளையிலிருந்து களியக்காவிளைக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆரோக்கியபுரம்–களியக்காவிளை வழித்தடத்தில் அம்மாண்டிவிளை வழியாக 4 பேருந்துகள்மூலம் 16 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், அம்மாண்டிவிளை வழி குளச்சல் வழித்தடத்தில் 30 பேருந்துகள்மூலம் தினமும் 254 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, அம்மாண்டிவிளை பகுதியினர் களியக்காவிளை செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது.

246—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54088—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குன்னம்பாறை பகுதியிலிருந்து அழகிய மண்டபம் வழியாக குளச்சல் பேருந்து நிலையத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டத்திலிருந்து இரவிபுதூர்கடை, குன்னம்பாறை, கருங்கல் வழியாக குளச்சலுக்கு 2 பேருந்துகளின்மூலம் 50 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இரவிபுதூர்கடை, அழகிய மண்டபம் வழியாக 2 பேருந்துகளின்மூலம் 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. குன்னம்பாறை பகுதியில் தற்போது இயக்கப்படும் பேருந்துகளே பயணிகளின் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

[2016 பிப்ரவரி 20

247—

குளிர்சாதனப் பேருந்து இயக்குதல்

வினா எண் 54105—திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பேருந்து நிலையத்திலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து திருப்பதிக்கு 15 நிமிட இடைவெளியில் தமிழக மற்றும் ஆந்திர மாநில போக்குவரத்துக் கழக பேருந்துகள்மூலம் பேருந்து சேவை உள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரத்தில் குளிர்சாதனப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்போது இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

248—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 54106— திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பேருந்து நிலையத்திலிருந்து புதுச்சேரிக்கு பழைய மாமல்லபுரம் சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக விரைவு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து அடையார், திருவான்மியூர், கோவளம், கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக மட்டுமே புதுச்சேரிக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் தினசரி 52 பேருந்துகள்மூலம் 208 நடைகளை இயக்குகிறது. விஜயநகரத்திலிருந்து அடையார் 13 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. தற்போதைய தேவைக்கு பயணிகள் அடையார் சென்று புதுச்சேரிக்கு பயணிக்கலாம். இருப்பினும், கோயம்பேட்டிலிருந்து விஜயநகரம், பழைய மாமல்லபுரம் சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக புதுச்சேரிக்கு பேருந்து இயக்கிட கள ஆய்வு மேற்கொண்டு தேவையின் அடிப்படையில் பேருந்து இயக்குவது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

249—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54790—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் முதல் கூடலூர் நாதகிரி முருகன் திருக்கோயில் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சங்கரன்கோவிலிலிருந்து கரிவலம், கரிசல்குளம், கூடலூர் நாதகிரி முருகன் திருக்கோயில், ராயகிரி வழியாக சிவகிரி வரை ஒரு பேருந்துமூலம் நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய பயணிகளின் அடர்வு 43 சதவிகிதமாக உள்ளது. மேலும், திருவிழா மற்றும் பிரதி மாத கிருத்திகை தினத்தன்றும் கூடுதல் நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, தற்போதைய பயணிகளின் அடர்வுக்கு தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது.

[2016 பிப்ரவரி 20

250—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54947—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, வடக்கு காவாலக்குறிச்சி ஊராட்சி, ஊத்துமலையிலிருந்து ஆலங்குளம் வழியாக வடக்கு காவாலக்குறிச்சிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடக்கு காவாலக்குறிச்சி பொதுமக்கள், மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் காலை, மதியம், மாலை ஆகிய வேளைகளில் வடக்கு காவாலக்குறிச்சியிலிருந்து அருகாமையிலுள்ள ஊத்துமலைக்கு ரெட்சியார்பட்டி மற்றும் சுரண்டை வழியாக 1 நகரப் பேருந்துமூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்தில் தற்போதைய பயணிகளின் அடர்வு 27.93 சதவிகிதமாக உள்ளது. மேலும், ஊத்துமலையிலிருந்து குறிப்பன்குளம், நெட்டூர் வழியாக ஆலங்குளத்திற்கு 4 பேருந்துகள்மூலம் தினசரி 20 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 26.7 சதவிகிதமாக உள்ளது. இப்பேருந்துகளைப் பயன்படுத்தி வடக்கு காவாலக்குறிச்சியிலிருந்து ஊத்துமலைக்குச் செல்லலாம். தற்போதுள்ள பயணிகளின் அடர்வுக்கு இயக்கப்படும் பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

251—

சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 55157—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்–தஞ்சாவூர் வரை புதிய வழித்தடத்தில் நேரடி சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் முதல் தஞ்சாவூர் வரையிலான தடத்தின் நீளம் 363 கி.மீ. ஆகும். திருவள்ளூரில் இருந்து தஞ்சாவூருக்கு நேரடியாக பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அருகாமையிலுள்ள சென்னை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகரங்களிலிருந்து தஞ்சாவூருக்கு போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. மேற்கண்ட பேருந்து வசதியே மக்களின் தேவையினை நிறைவு செய்திடும்வகையில் உள்ளது.

252—

சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 55158 திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்–மதுரை வரை புதிய வழித்தடத்தில் நேரடி சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் வழியாக தற்சமயம் திருப்பதியிலிருந்து நாகர்கோவிலுக்கு அரக்கோணம் வழியாக இரண்டு பேருந்துகள்மூலம் தினசரி நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருவள்ளூரிலிருந்து மதுரை செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மூலமாக இயக்கப்படும் புறநகர் பேருந்துகளைப் பயன்படுத்தி

[2016 பிப்ரவரி 20

திருவள்ளூரிலிருந்து அரக்கோணம் சென்று மேற்படி பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், மேற்கூறிய பேருந்துகளின் பயணிகள் அடர்வு 77% ஆகும். ஆதலால், தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதலாம்.

253—

போக்குவரத்துப் பணிமனையை இணைத்தல்

வினா எண் 55175—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி போக்குவரத்துப் பணிமனையை வேலூர் கோட்டத்துடன் இணைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்ட பகுதி வாழ் மக்கள் பயனடையும் வகையில் 22–1–2007 அன்று திருவண்ணாமலை மண்டலம் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.

ஆரணி நகரம் திருவண்ணாமலை மாவட்டத்திற்குள் அடங்கியுள்ளது. எனவே, ஆரணி தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் வேலூர் கோட்டத்தில் இருந்த ஆரணி பணிமனை திருவண்ணாமலை மண்டலத்துடன் இணைக்கப்பட்டது.

திருவண்ணாமலை மண்டலம் துவக்கப்பட்டபோது 53 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டன. தற்போது ஆரணி தொகுதி மக்களின் கோரிக்கைக்கு இணங்க 30 கூடுதல் பேருந்துகள் ஆரணி பணிமனையில் இருந்து இயக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலான பேருந்துகள் திருவண்ணாமலைக்கும், திருவண்ணாமலை வழியாக சேலம், திருப்பூர், பெங்களூர், திருச்சி மற்றும் சென்னைக்கும் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இப்பேருந்துகளை ஆரணி பொதுமக்கள் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,

2016 பிப்ரவரி 20]

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செல்வதற்காக உபயோகித்து வருகின்றனர். இருப்பினும் வரும் காலத்தில் தேவை ஏற்படுமாயின் ஆரணி பணிமனையை வேலூர் மண்டலத்துடன் இணைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

254—

கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 55176—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களிலிருந்தும் ஆரணி நகருக்கு கூடுதல் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு 35 நகரப் பேருந்துகள்மூலம் 58 வழித்தடங்களில் 456 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நகர வழித்தடங்களின் சராசரி பயணிகள் அடர்வு 46.26 சதவீதமாக உள்ளது. மிகக் குறைவான பயணிகளே பேருந்துகளில் பயணம் செய்வதால், ஆரணி தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு மேற்படி பேருந்துகளே போதுமானவையாக உள்ளன.

255—

கூடுதல் குளிர்சாதனப் பேருந்து இயக்குதல்

வினா எண் 55201—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையிலிருந்து சென்னைக்கு கூடுதலாக குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை—சென்னை (வழி) திருப்பத்தூர், வேலூர் வழித்தடத்தின் நீளம் 262 கி.மீ. ஆகும். இத்தடத்தில் ஏற்கெனவே புறநகர் பேருந்துமூலம் ஊத்தங்கரை—சென்னை தடத்தில் நாளொன்றுக்கு 2 நடைகள் இயக்கப்படுகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 91 விழுக்காடாகும். இப்பேருந்திற்கு பயணிகளின் வசதிக்காக தினசரி முன்பதிவு செய்யப்படுகிறது. இதில் வார இறுதி நாட்களில் மட்டுமே பயணிகளின் அடர்வு உள்ளது. மற்ற நாட்களில் ஊத்தங்கரை—சென்னை செல்லும் பயணிகளின் பயன்பாடு சுமார் 60 முதல் 70 விழுக்காடுடே உள்ளது. இதைத் தவிர அரூர், பொம்மிடி, சேலத்திலிருந்து ஊத்தங்கரை வழியாக சென்னைக்கு மொத்தம் 25 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 48 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஊத்தங்கரையிலிருந்து 28.0 கி.மீ. தூரமுள்ள திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு ஒவ்வொரு 10 நிமிட இடைவெளி நேரத்தில் பேருந்து வசதியுள்ளதாலும், ஊத்தங்கரை—சென்னை தடத்திற்கு தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

256—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 55229—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம்—திருப்பதி வழித்தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தஞ்சாவூர் மற்றும் பட்டுக்கோட்டையிலிருந்து கும்பகோணம்

2016 பிப்ரவரி 20]

வழியாக திருப்பதிக்கு 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஆண்டுதோறும் திருப்பதியில் நடைபெறும் பிரமோற்சவத் திருவிழாக் காலங்களில் கும்பகோணத்திலிருந்து திருப்பதிக்கு நேரடியாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கும்பகோணத்திலிருந்து திருப்பதி செல்லும் பயணிகளுக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும். பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் கும்பகோணத்திலிருந்து திருப்பதிக்கு நேரடியாக கூடுதல் பேருந்துகள் இயக்க பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

257—

காகித தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 55559—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணியில் காகித தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருத்தணியில் காகித தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

258—

நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 55638—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து இடைக்காட்டூருக்கு புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாளொன்றுக்கு மானாமதுரையிலிருந்து இடைக்காட்டூருக்கு 3 நடைகளும், சிவகங்கையிலிருந்து இடைக்காட்டூருக்கு மானாமதுரை வழியாக 6 நடைகளும் ஆக மொத்தம் அரசுப் பேருந்துகளின்மூலம் 9 நடைகளும் மற்றும் தனியார் பேருந்துமூலம் 10 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை வழித்தடத்தில் போதுமான அளவு பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தற்போது இயக்கப்படும் பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

259—

நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 55673—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணியிலிருந்து அருங்குளம் வரை கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருத்தணியிலிருந்து அருங்குளத்திற்கு நகரப் பேருந்துமூலம் ஒரு நாளைக்கு 22 நடைகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 46 சதவீதமாகவே உள்ளது. எனவே, மேற்கூறிய பேருந்து வசதியே மக்களின் தேவைக்கு போதுமானதாக உள்ளது.

260—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 56692—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரையிலிருந்து உதகமண்டலத்திற்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து உதகமண்டலம் செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை மூலமாக இயக்கப்படும் புறநகர் பேருந்து வசதியைப் பயன்படுத்தி மதுரை சென்று அதன் பிறகு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் மதுரை வழியாக உதகமண்டலத்திற்கு இயக்கப்படும் 9 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகளின் வசதியினைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கன்னியாகுமரி, திருவனந்தபுரம், நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் ஆகிய இடங்களிலிருந்து மதுரை வழியாக 30 பேருந்துகள்மூலம் 30 நடைகள் உதகமண்டலத்திற்கு இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளின் சராசரி பயணிகளின் அடர்வு குறைவு என்பதால், தற்போதுள்ள போக்குவரத்துத் தேவைக்கு இப்பேருந்துகளே போதுமானதாக உள்ளன.

261—

புதிய தொழிற்சாலைகள் தொடங்குதல்

வினா எண் 56795—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில், புதிய தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின்வசம் இல்லை.

தகுந்த தொழில் முனைவோர்கள் தொழிற்சாலை அமைப்பதற்கு தேவையான நிதி முதலீடுகள், செயல் குறிப்புகளுடன் முன்வந்தால் அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தொழில் திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

262—

பேருந்து இயக்குதல்

வினா எண் 56873—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து போளூர்–திருவண்ணாமலை சாத்தனூர் அணைப் பகுதிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து போளூர்–திருவண்ணாமலை சாத்தனூர் அணைப் பகுதி என்பது ஒரு புதிய வழித்தடம் ஆகும். இத்தடத்தின் நீளம் 97 கி.மீ. ஆகும். ஆரணியிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்ல 20 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. திருவண்ணாமலை வந்தடைந்தால் சாத்தனூர் அணைக்கு போதிய பேருந்து வசதி உள்ளது. ஆரணியிலிருந்து சாத்தனூர் அணைக்குச் செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்விற்கேற்ப தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

263—

பேருந்து இயக்குதல்

வினா எண் 56874—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து தேவிகாபுரம், சேத்துபட்டு, அவலூர்பேட்டை, திருவண்ணாமலை வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி–திருவண்ணாமலை (வழி) தேவிகாபுரம், சேத்துபட்டு, அவலூர்பேட்டை என்பது ஒரு புதிய சுற்று வழித்தடம் ஆகும். இத்தடத்தின் நீளம் 77 கி.மீ. ஆகும். ஆனால் ஆரணியிலிருந்து திருவண்ணாமலைக்கு நேரடி வழித்தடத்தின் நீளம் 62 கி.மீ. மட்டுமே ஆகும். கோரிய வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் தேவிகாபுரம், போளூர் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய நகரங்களுடன் பகுதிவாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளன. தேவிகாபுரம், போளூர் மற்றும் சேத்துப்பட்டு வந்தடைந்தால் திருவண்ணாமலை செல்ல போதிய பேருந்து வசதி உள்ளது. எனவே, மேற்படி வழித்தடத்தில் தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

264—

பேருந்து இயக்குதல்

வினா எண் 56875—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து பெரணமல்லூர்–மழையூர்–தேசூர்–தெள்ளார்–திண்டிவனம்–பாண்டிச்சேரி வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து பாண்டிச்சேரிக்கு புறநகரப் பேருந்து ஒன்று பெரணமல்லூர், மழையூர், தேசூர், தெள்ளார், திண்டிவனம் வழியாக தினசரி 2 நடைகள் பொதுமக்கள் தேவைக்காக 11–9–2012 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

265—

கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 56877—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து திருவண்ணாமலைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து திருவண்ணாமலைக்கு தற்போது 26 புறநகரப் பேருந்துகள்மூலம் 72 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தின் சராசரி பயணிகள் அடர்வு 64.56 சதவீதமாக உள்ளது. மேலும், 5 தனியார் பேருந்துகள்மூலம் 20 நடைகள் ஆரணியிலிருந்து திருவண்ணாமலைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்துத் தேவைக்கு தற்பொழுது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

266—

கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 56879—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து ஜமுனாமரத்தூர் வரை கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி–ஜமுனாமரத்தூர் இடையே 2 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தில் பயணிகள் அடர்வு 55 சதவீதம் மட்டுமே உள்ளது. மேலும், நேரடி பயணிகள் பயணம் செய்வது மிகவும் குறைவாக உள்ளது. எனவே, தற்போதைய போக்குவரத்துத் தேவைக்கு இந்த இயக்கமே போதுமானதாக உள்ளது.

267—

பேருந்து இயக்குதல்

வினா எண் 56882—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து கணியம்பாடி வழியாக அமிர்தி வன உயிரியல் பூங்காவிற்குச் செல்ல அரசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி–அமிர்தி (வழி) கணியம்பாடி என்பது ஒரு சுற்று வழித்தடம் ஆகும். வழித்தடத்தின் நீளம் 41 கி.மீ. ஆகும். ஏற்கெனவே 34 கி.மீ. தட நீளமுள்ள ஆரணி–அமிர்தி (வழி) கண்ணமங்கலம் என்ற வழித்தடத்தில் ஒரு நகரப் பேருந்து தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

[2016 பிப்ரவரி 20

மேலும், ஆரணியிலிருந்து கணியம்பாடி செல்ல 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. வேலூர் மண்டலத்தைச் சார்ந்த 3 பேருந்துகள்மூலம் வேலூர்–அமிர்தி (வழி) கணியம்பாடி என 20 நடைகளும் திருவண்ணாமலை மண்டலத்தைச் சார்ந்த ஒரு மலைப் பேருந்துமூலம் வேலூர்–போளூர் (வழி) கணியம்பாடி, அமிர்தி என 4 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, ஆரணியிலிருந்து கணியம்பாடி சென்றடைந்தால் அமிர்தி செல்ல போதுமான பேருந்து வசதி உள்ளது. எனவே, தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

268—

கட்டணமின்றி பயணம் செய்தல்

வினா எண் 56888—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவப் பரிசோதனைக்கு மற்றும் மகப்பேறுக்கு செல்லும் பெண்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பின்வரும் தரப்பினருக்கு பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

1. இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மேலவை உறுப்பினர்கள்

2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள்/ஊடக நபர்கள்

3. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள் மற்றும் வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், அவர்தம்

மரபுரிமையர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்

4. புற்றுநோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் (காது கேளாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள், வலிப்பு நோயாளிகள் மற்றும் பிறர்)

5. நாடகக் கலைஞர்கள்

6. எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும்

7. மாணவ மாணவியர், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்களில் பயிலும் மாணவ மாணவியருக்கு பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

எனவே, மருத்துவ பரிசோதனைக்கு மற்றும் மகப்பேறுக்கு செல்லும் பெண்கள் அரசு பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்வது குறித்து செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. எனினும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமைக்கேற்ப இது குறித்து அரசால் பரிசீலிக்கப்படும்.

269—

பேருந்து இயக்குதல்

வினா எண் 57631—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி–ஆற்காடு–காஞ்சிபுரம்–வாலாஜாபாத்–ஊத்துக்காடு வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி–ஆற்காடு–காஞ்சிபுரம்–வாலாஜாபாத்–ஊத்துக்காடு வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். இத்தடத்தின் நீளம் 95 கி.மீ. ஆரணி–திருவள்ளூர் (வழி) ஆற்காடு, காஞ்சிபுரம்

என திருவள்ளூர் பணிமனையிலிருந்து ஒரு பேருந்துமூலம் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்தில் காஞ்சிபுரம் சென்றடைந்தால் ஊத்துக்காடு செல்ல பேருந்து வசதி உள்ளது. எனவே, பயணிகளின் அடர்விற்கேற்ப மேற்கண்ட பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

270—

குளிர்சாதனப் பேருந்து இயக்குதல்

வினா எண் 57861—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் நகரத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விருதுநகர்—சென்னை தடத்தில் தினசரி 4 அதிநவீன சொகுசு பேருந்துகள் 4 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதிகளை விருதுநகர் நகரத்திலிருந்து சென்னை செல்லும் பயணிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், புதிதாக குளிர்சாதனப் பேருந்து பெறப்படும்போது விருதுநகர் நகரத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

271—

கூடுதல் நேரடிப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 58092—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணியிலிருந்து திருப்பதிக்கு கூடுதலாக

2016 பிப்ரவரி 20]

நேரடிப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து திருப்பதிக்கு பேருந்து ஆற்காடு மற்றும் திருத்தணி வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தின் பயணிகள் அடர்வு 53.77 சதவீதம் மட்டுமே உள்ளது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

272—

புதிய போக்குவரத்து உட்கோட்டம் அமைத்தல்

வினா எண் 58093—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு புதிய போக்குவரத்து உட்கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு திருவண்ணாமலை மண்டலம் 22–1–2007 முதல் இயங்கி வருகிறது. இம்மண்டலத்தில் திருவண்ணாமலை–1, திருவண்ணாமலை–2, திருவண்ணாமலை–3, செங்கம், போளூர், ஆரணி, வந்தவாசி–1, வந்தவாசி–2, செய்யாறு மற்றும் கோயம்பேடு ஆகிய 10 பணிமனைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றான ஆரணி பணிமனையில் தற்போது 29 நகரப் பேருந்துகள் 48 புறநகரப் பேருந்துகள் என மொத்தம் 77 பேருந்துகள் இயக்கப்பட்டு

[2016 பிப்ரவரி 20

வருகின்றன. இப்பேருந்துகளின் சராசரி பயணிகள் அடர்வு 78.84 சதவீதம் மட்டுமே உள்ளது. எனவே, ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு புதிய போக்குவரத்து உட்கோட்டம் அமைக்கும் திட்டத்திற்கான அவசியம் எழவில்லை.

273—

அதிநவீன சொகுசுப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 58098—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியிலிருந்து சென்னைக்கு அதிநவீன சொகுசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி மற்றும் போளூரிலிருந்து புறநகரத் தடங்கள்மூலம் சென்னைக்கு 130 நடைகள் தினசரி பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான அளவில் சாதாரண மற்றும் விரைவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதிநவீன சொகுசு பேருந்துகளை கொள்முதல் செய்யும்போது மேற்படி வழித்தடத்தில் சொகுசுப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

274—

விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 60611—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி–திருப்பதி தடம், தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் தமிழ்நாடு–ஆந்திரா ஆகிய இரு மாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்கப்படும்.

275—

கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 61053—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், புச்சிரெட்டிபள்ளி முதல் திருத்தணி வரை காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புச்சிரெட்டிபள்ளி, திருத்தணியிலிருந்து பொதட்டூர்பேட்டை மார்க்கத்தில் 14 கி.மீ. தொலைவில் உள்ளது. திருத்தணியிலிருந்து பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை, சொரக்காய்பேட்டை ஆகிய இடங்களுக்கு புச்சிரெட்டிபள்ளி வழியாக விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தின் 7 நகரப் பேருந்துகளின் மூலமாக தினசரி 60 நடைகளும், 4 புறநகரப் பேருந்துகள் மூலமாக தினசரி 12 நடைகளும் தற்போது இயக்கப்படுகின்றன. மேலும், ஒரு தனியார் பேருந்து தினசரி 6 நடைகளை இயக்கி வருகிறது. இவற்றில் காலை, மாலை நெரிசல் நேரங்களில் 24 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும், காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் திருத்தணி முதல் புச்சிரெட்டிபள்ளி வரை நகரப் பேருந்துகள்மூலம் குறு நடைகள் இயக்கப்படுகின்றன. இவை தற்போதைய நெரிசல் நேரப் பேருந்துத் தேவைக்கு போதுமானதாகவே உள்ளது.

[2016 பிப்ரவரி 20

276—

பேருந்துகளின் இருக்கைகளை இடைவெளிவிட்டு அமைத்தல்

வினா எண் 61100—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இருக்கைகளை இடைவெளிவிட்டு அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசின் அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் நகர மற்றும் புறநகரப் பேருந்துகளில் மோட்டார் வாகன விதிகளுக்கு உட்பட்டு இருக்கைகள் போதுமான இடைவெளியில் அமைக்கப்பட்டு வருகிறது.

277—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 61555—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்திற்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதியில் உள்ள பர்கூர் மலைக் கிராமத்திற்கு தற்பொழுது பேருந்து வசதிகள் மட்டுமே உள்ளன.

2016 பிப்ரவரி 20]

ஈரோடு–மைசூரு வழித்தடத்தில் 2 தனி நடைகளும் அந்தியூர்–கர்கேகண்டி வழித்தடத்தில் 6 தனி நடைகளும் அந்தியூர்–மடம் வழித்தடத்தில் 2 தனி நடைகளும் என்று மூன்று வழித்தடங்களில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், இது தவிர தனியார் துறை பேருந்துகள்மூலம் 10 நடைகள் பர்கூர் பகுதிக்கு இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் அடர்வு குறைவு என்பதால் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

278—

பேருந்து இயக்குதல்

வினா எண் 61557— திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூரிலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக ஆத்தூரிலிருந்து திருப்பதிக்கு கடந்த 11–7–2008 இல் தினசரி ஒரு பேருந்து இயக்கம் தொடங்கப்பட்டு பயணிகள் அடர்வு 60 சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்ததால் பேருந்து இயக்கம் நிறுத்தம் செய்யப்பட்டது. இருப்பினும், தற்பொழுது திருப்பதி செல்லும் பயணிகள் புறநகர் பேருந்து வசதியைப் பயன்படுத்தி ஆத்தூரிலிருந்து சேலம் வந்து அங்கிருந்து திருப்பதிக்கு இயக்கப்படும் 5 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் வசதியை பயன்படுத்திகொள்ளலாம். மேலும், ஆத்தூரிலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர் வழியாக திருப்பதிக்கு பயணிக்கும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்படி தடத்தில் அரசு விரைவுப் பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

[2016 பிப்ரவரி 20

279—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 62559—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை–அன்னை வேளாங்கண்ணி கோயிலுக்கு பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, சுரண்டையிலிருந்து வேளாங்கண்ணி செல்லும் நேரடி பயணிகள் அதிகரிக்கும்பட்சத்தில் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின்மூலம் நேரடியாக பேருந்துகள் இயக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும். மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தற்போது கொல்லம்–வேளாங்கண்ணி (தென்காசி, மதுரை வழியாக) 2 பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகிறது. சுரண்டையிலிருந்து வேளாங்கண்ணி செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி மூலமாக இயக்கப்படும் புறநகர் பேருந்தை பயன்படுத்தி அருகாமையில் உள்ள தென்காசி சென்று அதன் வழியாக இயக்கப்படும் மேற்படி தடத்தை பயன்படுத்தி வேளாங்கண்ணி சென்றடையலாம். எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

280—

போக்குவரத்துப் பணிமனை தொடங்குதல்

வினா எண் 63260—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) இவ்வாண்டே தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் வாடகை இடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. பணிகள் முடிக்கப்பட்டவுடன், இவ்வாண்டே விரைவில் பணிமனை தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

281—

பதிவுத் துறைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 29129—திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் இயங்கிவரும் அரசு பதிவுத் துறைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 4, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 17–1–2014 இல் கோயம்பேடு, ஊட்டி, செய்யார், திண்டுக்கல் ஆகிய இடங்களில் 4 ஒருங்கிணைந்த பதிவுத் துறை

[2016 பிப்ரவரி 20

வளாகங்கள் மற்றும் தனித்தனியே 35 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டில் கட்டப்படும் ஒருங்கிணைந்த வளாகத்தில் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் இயங்கிவரும் புரசைவாக்கம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் ஒருங்கிணைத்து கட்டப்பட உள்ளது. அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

282—

சார்பதிவாளர் அலுவலகங்களை நவீனப்படுத்துதல்

வினா எண் 30168—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சார்பதிவாளர் அலுவலகங்களில் கண்காணிப்பு கேமரா மற்றும் ஒருங்கிணைந்த இணையதள வசதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பதிவுத் துறையில் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் 2 இணைய நெறிமுறைப் புகைப்படக் கருவிகள் கொள்முதல் செய்வதற்கு மற்றும் அதனைச் செயல்படுத்துவதற்கு உண்டாகும் செலவினத் தொகையாக மொத்தம் ரூ.12,77,82,985/– நிதி ஒதுக்கப்பட்டு, கருவிகள் நிறுவிடும் திட்டம் கடந்த 6–11–2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சிமூலம் துவக்கி வைக்கப்பட்டது.

பதிவுத் துறையில் ஒருங்கிணைந்த இணையதள வசதி மேம்பாட்டுக்காக ரூ.117.34 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு தேவையான வன்பொருள் மற்றும் மென்பொருள் கொள்முதல், அனைத்து அலுவலகங்களிலும் அகண்ட வலை இணைப்பு ஆகிய

2016 பிப்ரவரி 20]

பணிகள் ஒப்பந்தப்புள்ளிமூலம் தெரிவு செய்யப்பட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்மூலம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

283—

உற்பத்தி வரியை இரத்து செய்தல்

வினா எண் 32910—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மெழுகுவர்த்திக்கு விதிக்கப்படும் உற்பத்தி வரியை இரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

உற்பத்தி வரி மத்திய அரசினால் விதிக்கப்படுவதாகும். தமிழ்நாட்டில் மெழுகுவர்த்திக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது.

284—

மதிப்புக் கூட்டு வரியை இரத்து செய்தல்

வினா எண் 34180—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மீன்பிடி வலைகளுக்கு மதிப்புக் கூட்டு வரியை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் நான்காம் அட்டவணை, பகுதி B இல்

வரிசை எண் 28 இன்படி மீன்பிடி வலைகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து 1–1–2007 முதல் முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

285—

பதிவு அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 34249—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் மற்றும் குழித்துறை மாவட்ட பதிவு அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012 இல் ஏனையவற்றுடன் மார்த்தாண்டம் மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகம் கட்ட நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடும் செய்து ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்படி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27–7–2015 அன்று காணொலிக்காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டு தற்போது மேற்கண்ட அலுவலகங்கள் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

மேலும், குழித்துறை என்பது மார்த்தாண்டம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தின் எல்லைக்கு உட்பட்ட சிறு கிராமமாகும். அங்கு தனியே மாவட்ட பதிவு அலுவலகம் ஏதும்

2016 பிப்ரவரி 20]

இயங்கவில்லை. எனவே, அங்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

286—

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 36339—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சியரால் பதிவுத் துறைக்கு நில மாறுதல் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, துறைவசம் நிலம் தயாராக உள்ள நிலையில், அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு வரும் நிதியாண்டில் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

287—

பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 41208—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையத்திலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 42, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 12–3–2015 இல் பெத்தநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட 25 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும், 10 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 4 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் கட்டுவதற்கும் நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. பெத்தநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

288—

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 51847—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஆம். அரசாணை (நிலை) எண் 4, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 17–1–2014 இல் ஏனையவற்றுடன் பள்ளிப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் புதிய அரசுக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

289—

வணிக வரி அலுவலர்களுக்கு குடியிருப்புகள்

வினா எண் 53194—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சியில் வணிக வரி அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சியில் வணிக வரி அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது தொடர்பான கருத்துரு எதுவும் தற்பொழுது நிலுவையில் இல்லை. மேலும், அரசு அலவலர் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

290—

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்

வினா எண் 53317—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, களம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) களம்பூர் சார்பதிவாளர் அலுவலகம் 1967 ஆம் ஆண்டு முதல் 48 ஆண்டுகளாக சொந்தக் கட்டடத்தில்

இயங்கி வருகிறது. இச்சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 2012–2013 ஆம் நிதியாண்டு ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் ACC கூரை நீக்கப்பட்டு RCC கூரை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 2013–2014 ஆம் நிதியாண்டு ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு கட்டடம் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, களம்பூர் சார்பதிவாளர் அலுவலகம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

291—

வாக்காளர் எண்ணிக்கையை சமமாகப் பிரித்தல்

வினா எண் 4950—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி வட்டங்களின் வாக்காளர் எண்ணிக்கையை சமமாகப் பிரித்து அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 100 வார்டுகளின் எல்லைகள், விதிகளில் குறித்துரைக்கப்பட்ட மக்கள் தொகை, பரப்பளவு, வருமானம் போன்ற காரணிகளின் அடிப்படையில் புதிதாக நிர்ணயம் செய்யப்பட்டு, 2011 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் நாள் முதல் செயலுக்கு வருமாறு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண் 114, நாள் 25–8–2011 இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியின் வார்டுகளை வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் சமமாகப் பிரிக்க இயலாது.

2016 பிப்ரவரி 20]

292—

புதிய சத்துணவு மையக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 7124—திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சி, துரைசாமி நகர், ஜாகீர்காமன் நாயக்கன்பட்டி, பெரிய மேட்டூர் பகுதிகளில் புதிய சத்துணவு மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, துரைசாமி நகர், ஜாகீர்காமன் நாயக்கன்பட்டி, பெரிய மேட்டூர் பகுதிகளில் புதிய சத்துணவு மையக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

293—

சட்டக் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 7340—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூரில் சட்டக் கல்லூரி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

294—

சட்டக் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 8880—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

295—

புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 13316—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மடத்துக்குளம் தொகுதி, கொழுமம் ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் புதிய குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமூர்த்தி அணை தளி வாய்க்காலை நீராதாரமாகக் கொண்ட மடத்துக்குளம், சங்கரமநல்லூர், குமாரலிங்கம் மற்றும் கணியூர் பேரூராட்சிகள் மற்றும் 112 ஊரகக் குடியிருப்பிற்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியத்திலுள்ள கொழுமம் ஊராட்சி சேர்க்கப்பட்டு தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கொழுமம் ஊராட்சிக்கு புதிய குடிநீர் திட்டம் அவசியமில்லை.

296—

சட்டக் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 14678—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

[2016 *பிப்ரவரி* 20

297—

சட்டக் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 22525—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

298—

பாலப் பணிகளை விரைவுபடுத்துதல்

வினா எண் 25818—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஆனந்த இறக்கம் பாலப் பணிகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, ஆனந்த இறக்கம் பாலப் பணிகள் முடிவுற்று தற்போது மேற்படி பாலம் போக்குவரத்திற்கும் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலும் உள்ளது.

299—

சட்டக் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 27534—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் கருங்கலில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

300—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 28871—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், ஆறுமுத்தம்பாளையம் கிராம ஊராட்சி, அறிவொளி நகரில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், ஆறுமுத்தம்பாளையம் ஊராட்சி, அறிவொளி நகரில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், வாரிய விதிமுறையின்படி தற்போது பயன்பாட்டில் உள்ள மேல்நிலைத் தொட்டியின் கொள்ளளவே இக்குடியிருப்புக்கு போதுமானதாக உள்ளதால் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

301—

ஊராட்சியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 28970—திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியுடன் புது கும்மிடிப்பூண்டி, சித்தராஜ கண்டிகை, வேற்காடு பெத்திகுப்பம், தேர்வழி சிறுபுழல்பேட்டை, பெரிய ஒபலாபுரம் ஆகிய ஊராட்சிகளை இணைத்து கும்மிடிப்பூண்டி நகராட்சியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியுடன் புது கும்மிடிப்பூண்டி, சித்தராஜ கண்டிகை, வேற்காடு பெத்திகுப்பம், தேர்வழி சிறுபுழல்பேட்டை, பெரிய ஒபலாபுரம் ஆகிய ஊராட்சிகளை இணைத்து கும்மிடிப்பூண்டி நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

302—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 28986—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், கோட்டை கருங்குளம் ஊராட்சி, மிட்டாதார்குளம் மக்களுக்கு தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்ட குடிநீரை வழங்கிட தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோட்டை கருங்குளம் ஊராட்சி, மிட்டாதார்குளம் குடியிருப்பின் மக்கள் தொகை 2006 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 860 ஆகும். தற்பொழுது 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வாயிலாக உள்ளூர் நீராதாரத்தின் மூலமும், நாங்குநேரி–திசையன்விளை கூட்டுக்குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இக்குடியிருப்பின் மக்கள் தொகைக்கு இங்கு அமைந்துள்ள 60,000 லிட்டர் மேல்நிலை

தொட்டியே போதுமானதாகும். எனவே, தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்ட குடிநீர் வழங்கிட தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் தேவை எழவில்லை.

303—

மேல்நிலைப் பள்ளி துவக்குதல்

வினா எண் 29001—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, திருவான்மியூரில் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, திருவான்மியூரிலுள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 1,652 மாணவ/மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். அப்பள்ளிக்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் அரசு மேல்நிலைப் பள்ளி ஊரூர், அடையார் பள்ளியில் மாணவ/மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். எனவே, அப்பகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அரசு விதிகளின்படி தற்போது தொடங்க இயலாது.

304—

வணிக வளாகம் கட்டுதல்

வினா எண் 29471—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) சங்கரி தொகுதி, சங்கரி பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2010–11 ஆம் ஆண்டில் சங்கரி பேரூராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் காலியாக இருந்த இடத்தில் தினசரி மார்க்கெட் (19 கடைகள்) கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளதாலும், அங்கு புதிய வணிக வளாகம் கட்ட போதிய இடவசதி இல்லாததாலும், சங்கரி பேரூராட்சி பழைய பேருந்து நிலையத்தில், புதிதாக வணிக வளாகம் கட்ட இயலாது.

305—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 29602—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் கம்மம்பட்டி ஊராட்சியில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்மம்பட்டி ஊராட்சிக்கு தற்பொழுது காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்ட காடையாம்பட்டி கூட்டுக்குடிநீர்த் திட்டத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

306—

நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 29824—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் தொகுதியிலிருந்து எழும் சிவில் வழக்குகள் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், கிரிமினல் வழக்குகள் மானாமதுரை குற்றவியல் நீதிமன்றத்திலும் தற்பொழுது விசாரிக்கப்படுகின்றன. திருப்புவனத்தில் தனியாக உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

307—

நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 29829—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி வட்டத்திலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது,

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, தரங்கம்பாடி தாலுகாவிலிருந்து எழும் உரிமையியல் வழக்குகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழியிலும், குற்றவியல் வழக்குகள் குற்றவியல் நீதிமன்றம் II, மயிலாடுதுறையிலும் தற்போது விசாரிக்கப்படுகின்றன. எனவே, தரங்கம்பாடி வட்டத்திலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மீண்டும் இயக்குவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

308—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29834—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி கிராம ஊராட்சி, கிருஷ்ணாநகர் மற்றும் காந்தி நகரில் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி கிராம ஊராட்சி, கிருஷ்ணா நகரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்

தொட்டி கட்டி முடிக்கப்பட்டும், காந்தி நகரில் 2012–2013 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.7,50,000 மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டும், தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

309—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29862—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராம ஊராட்சி, புளியம்பட்டியில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, புளியம்பட்டி ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி குடியிருப்பின் மக்கள் தொகை 940 ஆகும். தற்போது இக்குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறையின்படி, தற்போது உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் கொள்ளளவே போதுமானதாக உள்ளது. எனவே, இக்குடியிருப்பிற்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

310—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29876—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், சுக்கம்பாளையம் கிராம ஊராட்சி, காளிவேலம்பட்டியில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், சுக்கம்பாளையம் கிராம ஊராட்சி, காளிவேலம்பட்டி குடியிருப்புக்கு மக்கள் தொகைக்கேற்ப 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வாரிய விதிமுறைகளின்படி, இக்குடியிருப்பில் தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் கொள்ளளவு போதுமானதாக உள்ளது. எனவே, இக்குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

311—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29928—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், நாச்சிபாளையம் கிராம ஊராட்சி, நாச்சிபாளையத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், நாச்சிபாளையம் கிராம ஊராட்சி, ஆசாத் நகரில் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் மக்கள் பங்களிப்புடன் சிறப்பு தன்னிறைவு திட்டத்தின்கீழ் 2014–ல் பணிகள் முடிக்கப்பெற்றுள்ளன.

312—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29930—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், பனிக்கம்பட்டி கிராம ஊராட்சி, பனிக்கம்பட்டி மற்றும் ரங்கசமுத்திரம் கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், பனிக்கம்பட்டி மற்றும் ரங்கசமுத்திரம் கிராமங்களில்

2016 பிப்ரவரி 20]

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே உள்ளது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

313—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29970—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சில்லரைப்புரவு ஊராட்சியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியம், சில்லரைப்புரவு ஊராட்சியில், காக்கையனூர் மற்றும் திரிகூடபுரம் ஆகிய இரண்டு குடியிருப்புகள் உள்ளன. காக்கையனூர் குடியிருப்பின் மக்கள்தொகை 1,575. இங்கு ஏற்கெனவே திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயனில் உள்ளது. திரிகூடபுரம் குடியிருப்பின் மக்கள் தொகை 416 ஆகும். இக்குடியிருப்பில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயனில் உள்ளது. மேலும், ஆய்க்குடி கூட்டுக்குடிநீர்த் திட்டம்மூலம் 50,000 லிட்டர் காக்கையனூர் குடியிருப்பிற்கும், 18,000 லிட்டர் திரிகூடபுரம் சில்லரைப்புரவு குடியிருப்பிற்கும் தாமிரபரணி ஆற்றுநீர் விநியோகிக்கப்படுகிறது. எனவே, வாரிய விதிமுறைப்படி, இவ்விரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளே இவ்வூராட்சியின் மக்கள் தொகைக்கு போதுமானதாகும்.

[2016 பிப்ரவரி 20

314—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 29986—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஊத்துமலை மற்றும் அதனை சுற்றியுள்ள 15 ஊராட்சிகளுக்கும் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஆலங்குளம் மற்றும் மானூர் ஒன்றியங்களைச் சேர்ந்த ஊத்துமலை ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 15 ஊராட்சிகளுக்கு தற்போது வாரியத்தின் பராமரிப்பிலுள்ள சங்கரன்கோவில்-ஆலங்குளம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டர் வீதம் தாமிரபரணி ஆற்று குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர், பாப்பக்குடி, மேலநீலிதநல்லூர், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 147 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் 11 ஊராட்சிகளின் குடிநீர் வசதி நிலையை நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டராக உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

315—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 29988—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி*

2016 பிப்ரவரி 20]

நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர் ஊராட்சியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், வீரகேரளம்புதூர் ஊராட்சி, வீரகேரளம்புதூர் குடியிருப்பில் திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்ட 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் பொதுமக்களின் பயனில் உள்ளன. வாரிய விதிமுறைகளின்படி இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளே போதுமானதாகும். எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

316—

கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைத்தல்

வினா எண் 31126—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் நெம்மேலியைத் தொடர்ந்து புதிதாக ஒரு கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெம்மேலியில் தற்பொழுது நிறுவப்பட்டுள்ள கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில் ரூபாய் 1,371.86 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று கூடுதலாக அமைக்கப்படும்.

மேலும், நெம்மேலி கிராமத்திற்கு அருகில் பேரூர் என்ற இடத்தில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ரூபாய் 4,070.67 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் கலந்தறிதற்குரியர் பணி நிறுவனத்துடன் (Consultancy Service) *ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.*

317—

விலையில்லா கொசுவலை வழங்குதல்

வினா எண் 31127 திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் கால்வாய் ஓடை, கூவம் ஆறு, அடையாறு போன்ற நீர்வழிப்பாதைகளின் ஓரங்களில் வசிக்கும் குடிசைவாசிகளுக்கு விலையில்லா கொசு வலை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையில் கொசுத்தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா மற்றும்

யானைக்கால் நோய்களால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க நீர்வழிப்பாதை ஓரம் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள குடிசைவாழ் மக்களுக்கு இலவசமாக கொசு வலை வழங்க சென்னை மாநகராட்சியில் 5,90,000 எண்ணிக்கை கொசு வலைகள் ரூ.9,97,10,000/– செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, 5,89,336 எண்ணிக்கை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், கொசு வலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

318—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 31548—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, திங்கள் நகர் பேரூராட்சியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திங்கள் நகர் பேரூராட்சி ஏற்ற இறக்கங்கள் நிறைந்ததும் மேடு பள்ளங்களை கொண்டதுமான நிலப்பரப்பினை உடையதாக இருப்பதால், ஒரே இடத்தில் 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட இயலாது.

319—

சட்டக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 32377—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, சேலத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இல்லை.

320—

பேருந்து நிலையம் விரிவுப்படுத்துதல்

வினா எண் 32588—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் பழைய பேருந்து நிலையத்தினை விரிவுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் பழைய பேருந்து நிலைய கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்தி நகர பேருந்து நிலையம் விரிவுபடுத்தும் பணிக்கு ரூ.8.00 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

321—

குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 32830—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதியில் குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டங்களிலும் தலைமையகத்தில் ஒரு குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்க வேண்டும் என்ற இந்திய அரசு ஆணைப்படி, சிவகங்கை மாவட்ட தலைமையகத்தில் குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் இயங்கி வருவதால், மானாமதுரை தொகுதியில் குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்க சாத்தியம் இல்லை. மானாமதுரை தொகுதியில் ஏதேனும் குடிநீர் தரம் பற்றிய சந்தேகம் இருந்தால் மாவட்ட தலைமையகத்தில் அமைந்துள்ள குடிநீர் தரப் பரிசோதனைக் கூடத்தையோ அல்லது அருகில் உள்ள இராமநாதபுரம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள மாவட்ட குடிநீர் தரப் பரிசோதனைக் கூடங்களையோ அணுகலாம்.

322—

புதிய கட்டடம்

வினா எண் 32863—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, இரணியலில் உள்ள நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்

[2016 பிப்ரவரி 20

கட்டுவதற்காக ரூ.265.43 இலட்சம் வழங்கி, அரசாணை (நிலை) எண் 132, உள் துறை, நாள் 23–2–2011–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

323—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 32875—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, கங்கான்கடை, திருமலை நகர் ஆதி திராவிடர் பகுதியில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, கங்கான்கடை, திருமலை நகர் பகுதிகளுக்கு கங்கான்கடையிலுள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இருப்பதால் புதியதாக 1.00 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியமில்லை.

324—

நீதிமன்றங்கள் அமைத்தல்

வினா எண் 32891—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

இரணியலில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.265.43 இலட்சம் வழங்கி, அரசாணை (நிலை) எண் 132, உள் துறை, நாள் 23–2–2011–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

325—

வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 32949—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், பூலாங்கிணர் ஊராட்சியில் உள்ள போயர் காலனி மற்றும் ஆதி திராவிடர் காலனியில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பூலாங்கிணர் ஊராட்சி, போயர் காலனி மற்றும் ஆதி திராவிடர் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2011–2012–ன்கீழ் ரூ.3,00,000

[2016 பிப்ரவரி 20

மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு தடுப்புச் சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு உள்ளது.

326—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 33150—திரு. பி.ஆர். மனோகர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் தொகுதி, பனப்பாக்கம், நெமிலி ஆகிய பகுதிகளுக்கு வேலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 கிராம குடியிருப்புகளுக்கு மட்டும் தேவையான குடிநீர் வழங்க வேலூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நெமிலி மற்றும் பனப்பாக்கம் ஆகிய பேரூராட்சிகள் இத்திட்டத்தில் இடம்பெறவில்லை. இப்பேரூராட்சிகளில் ஏற்கெனவே உள்ள தனி குடிநீர்த் திட்டங்கள்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பேரூராட்சிகளுக்கு வேலூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

327—

தூர்வாருதல்

வினா எண் 33450—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல், பேரூராட்சியிலுள்ள குளம் மற்றும் ஊரணிகளை தூர்வாரி தூய்மைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுவயல் பேரூராட்சியிலுள்ள குளம் மற்றும் ஊரணிகள் நபார்டு நிதியுதவி மற்றும் பொது நிதியின்கீழ் தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

328—

தலைமை நீரேற்று நிலையம் அமைத்தல்

வினா எண் 33460—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சி, காமராஜர் நகர், அக்னி பிள்ளையார் கோயில் தெரு, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய பகுதிகளில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியில் அனைத்து பகுதிகளுக்கும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 72 லிட்டர்

[2016 பிப்ரவரி 20

குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2013–14—ன்கீழ் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் புதிய நீர் ஆதாரங்கள் அமைக்க ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

329—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 33764—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவி ஊராட்சி, தாணிச்சாவுரணி கிராமம், பணிப்புலான் வயலில் தலா 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவி ஊராட்சி, தாணிச்சாவுரணி குடியிருப்பின் மக்கள்தொகை மறு ஆய்வின்படி 335 ஆகும். இங்கு 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பணிப்புலான் மக்கள்தொகை மறு ஆய்வின்படி 290 ஆகும். இங்கு 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்த காரணத்தால் 2012–13 ஆம் ஆண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட இரு

2016 பிப்ரவரி 20]

குடியிருப்புகளுக்கும் அதனதன் மக்கள்தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பயனில் உள்ளன. எனவே, காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவி ஊராட்சி, தாணிச்சாவுரணி கிராமம், பணிப்புலான் வயலில் தலா 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

330—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 34188—திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடம்பூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கடம்பூர் பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாததால் பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

331—

கழிவு கிடங்கை இடமாற்றம் செய்தல்

வினா எண் 34223—திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வத்தலக்குண்டில் இருந்து உசிலம்பட்டி பிரதான சாலையில் அமைந்துள்ள கழிவு கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், சேவும்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எல்லைப் பகுதியில், வத்தலக்குண்டு–உசிலம்பட்டி சாலையில் அமைந்துள்ள வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான கழிவு கிடங்கு, தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்திடமிருந்து அனுமதி பெற்று செயல்பட்டு வருவதால் இக்கழிவு கிடங்கினை வேறு இடத்திற்கு மாற்ற வழிவகை இல்லை.

332—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 34224—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், காணை தென்பெண்ணையாற்றில் இருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கென கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.621.00 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளும் இக்கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் பயனாளிகளாகச்

2016 பிப்ரவரி 20]

சேர்க்கப்பட்டுள்ள நிலையில் தென்பெண்ணையாற்றில் இருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

333—

குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 34623—திரு. பொன். ராஜா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சியில் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

334—

நடுநிலைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 34628—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வில்லாபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி, மண்டலம் 3, வார்டு எண் 63, வில்லாபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கு போதிய இடம் இல்லாத காரணத்தினால் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

335—

பாலம் அமைத்தல்

வினா எண் 34863—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, இறையான்குடியில் பாண்டவையாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இறையான்குடி ஊராட்சியில் பாண்டவையாற்றின் குறுக்கே இறையன்குடி, வடக்கு பனையூர் ஊராட்சிகளை இணைக்கும் வகையில் பாரத பிரதமர் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (தொகுதி VIII) (PMGSY VIII) *2013–14 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் ரூ.147.83 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி துவங்கப்பட்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.*

2016 பிப்ரவரி 20]

336—

சட்டக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 35147—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

337—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 36388—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவுநீர்

[2016 பிப்ரவரி 20

கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம், முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

338—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 36393—திரு. மு. முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

339—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 36400—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

340—

பேரூராட்சியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 36555—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 237, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 2–12–2008–ன்படி பேரூராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்திட ஆண்டு வருவாய் ரூ.4.00 கோடி வரையிலும் மற்றும் குறைந்தபட்ச மக்கள்தொகை 30,000 என இருத்தல் வேண்டும். ஆனால், ஆரூர் பேரூராட்சியின் ஆண்டு வருவாய் ரூ.215 இலட்சம் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 25,469 என்பதால், அரூர் பேரூராட்சியினை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசாணையின்படி வழிவகை இல்லை.

[2016 பிப்ரவரி 20

341—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 36653—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கடகத்தூர் ஊராட்சி, மணிபுரம் பகுதியில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கடகத்தூர் ஊராட்சியிலுள்ள மணிபுரம் மேற்படி ஊராட்சியின் கடைக்கோடி பகுதியாகும். இங்கு சுமார் 25 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதி புதியதாக தோன்றியதால் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மேலும், இப்பகுதியில் தனியாக மேல்நிலைத் தொட்டி எதுவும் கிடையாது. இப்பகுதி இதே ஊராட்சியைச் சார்ந்த கோட்டக்கொல்லை குடியிருப்பிலிருந்து சுமார் 2.0 கி.மீ. தொலைவில் உள்ளது. கோட்டக்கொல்லை குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இம்மேல்நிலைத் தொட்டியிலிருந்து மணிபுரம் 2 கி.மீ. தொலைவில் இருப்பதால் இப்பகுதிக்கு ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க தொழில்நுட்பரீதியாக இயலாது.

342—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 36657—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் மற்றும் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக, கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

343—

நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 37280—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்ற தொகுதியிலுள்ள திருப்புவனத்தில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

344—

புதிய கட்டடம்

வினா எண் 37364—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் 11 நீதிமன்றங்கள் உள்ளடக்கி, ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.1,550.47 இலட்சத்தில் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 809, உள் துறை, நாள் 8–10–2013–ல் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

345—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 37582—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் உள்ள அரசநெரிபட்டிணத்தில் கடல்நீரை குடிநீராக்கி புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 *பிப்ரவரி* 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வரும் குடியிருப்புகள் நீங்கலாக, இதர அனைத்து குடியிருப்புகளுக்கும் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள் அமைக்க விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் நிருவாக ஒப்புதல் ரூ.301.50 கோடி மற்றும் ரூ.315.70 கோடிக்கு முறையே அரசு ஆணை எண் 2, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10–1–2013 மற்றும் அரசு ஆணை எண் 11, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28–1–2013 பெறப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தற்பொழுது பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்தவுடன் திட்டப் பணிகள் நடப்பாண்டிலேயே (2013–14) செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். எனவே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் உள்ள அரசநெரிபட்டிணத்தில் கடல்நீரை குடிநீராக்கி புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் அவசியம் எழவில்லை.

346—

தண்ணீர் பரிசோதனை மையம் அமைத்தல்

வினா எண் 37912—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தண்ணீர் பரிசோதனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டங்களிலும் தலைமையகத்தில் ஒரு குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்க வேண்டும் என்ற இந்திய அரசு வரையறைகளின்படி சிவகங்கை மாவட்ட தலைமையகத்தில் ஒரு பரிசோதனைக் கூடம் இயங்கி வருவதால் மானாமதுரை தொகுதியில் குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

347—

மின் மயானம் அமைத்தல்

வினா எண் 38700—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதியில் நவீன மின் மயானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சிப் பகுதிகளில் மின் மயானம் அமைக்க போதிய இட வசதி இல்லாத காரணத்தால் மின் மயானம் அமைக்க தற்போது இயலாது.

348—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 39172—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, மேலகரம் பேரூராட்சியில் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலகரம் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள தென்காசி—குற்றாலம் மற்றும் செங்கோட்டை கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள் (இரண்டு திட்டங்கள்) மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 91 லிட்டர் வீதம் நாள்தோறும் 13,20,000 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது மேலகரம் பேரூராட்சியில் புதிதாக கூட்டுக்குடிநீர்த் திட்டம் அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

349—

தூர்வாருதல்

வினா எண் 39751—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி ஊராட்சி, கரடிவாவியில் உள்ள நந்தவனக் குட்டையைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி ஊராட்சி, கரடிவாவியில் உள்ள நந்தவனக்

குட்டையைத் தூர்வாரும் பணி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.3,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

350—

நீதிமன்றங்கள் அமைத்தல்

வினா எண் 40498—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மனாபபுரம் தொகுதி, செருப்பாலூரில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்மனாபபுரம் தொகுதி, செருப்பாலூரில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

351—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 40786—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையில் தற்போது இணைக்கப்பட்டுள்ள விரிவாக்க நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையில் தற்போது இணைக்கப்பட்டுள்ள விரிவாக்க நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளுக்கு புதுக்கோட்டை நகராட்சி, இலுப்பூர், அன்னவாசல், கீரனூர் பேரூராட்சிகள் மற்றும் 15 கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

352—

திருமண மண்டபம் அமைத்தல்

வினா எண் 41190—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரில் நவீன வசதிகளுடன்கூடிய திருமண மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரில் நவீன வசதிகளுடன்கூடிய திருமண மண்டபம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

353—

வகுப்பறைகள் கட்டுதல்

வினா எண் 41219—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) ஆம்பூர் நகராட்சி, 8–வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 2 வகுப்பறைகள் புதியதாக கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் நகராட்சி, 8–வது வார்டு பன்னீர்செல்வம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் புதியதாக 2 வகுப்பறைகள் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை.

354—

ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்

வினா எண் 41510—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, மழையூரை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை

2016 பிப்ரவரி 20]

எடுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி, மழையூரை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

355—

மின் மயானம்

வினா எண் 41872—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை நகராட்சி, 15–வது வார்டு, போஸ் நகரிலுள்ள மின் மயானத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 13–10–2014 முதல் போஸ் நகர் நவீன எரிவாயு தகன மேடை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது ரோட்டரி சேவா சங்கம், புதுக்கோட்டை அறக்கட்டளைமூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

356—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 43086—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெண்ணாகரம் தொகுதி, கோட்டூர் மலை, ஏரி மலை, அலகெட்டு ஆகிய பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கோட்டூர் மலை, ஏரி மலை மற்றும் அலகெட்டு ஆகிய மூன்று பகுதிகளுக்கு ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்க தொகுப்பு 5–ற்கான ஒப்பந்தத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோட்டூர்மலை கிராமம் கன்சால்பெயில் (பேவுஹள்ளி ஊராட்சி) உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி தரைமட்டத்திலிருந்து சுமார் 420 மீட்டர் உயரத்தில் உள்ளது. ஏரி மலை மற்றும் அலகெட்டு மலைக் கிராமங்கள் சிங்காடு (கணபதி ஊராட்சி) தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி தரைமட்டத்திலிருந்து சுமார் 460 மீட்டர் உயரத்தில் உள்ளன. தொழில்நுட்ப வடிவமைப்பின்படி நான்கு இடைநிலை தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குழாய்கள் அமைப்பதற்கும், கட்டுமானப் பணிகளுக்கான தளவாடச் சாமான்கள் எடுத்துச் செல்வதற்கும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் மின்பாதை அமைப்பதற்கும் சாலை வசதி இல்லாத காரணத்தினால் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

357—

நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 43302—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

358—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 43459—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

359—

சாலையோர பூங்காக்கள் அமைத்தல்

வினா எண் 43465—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) மதுரை முக்கிய பெரிய சாலைகளில் சாலையோர பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய பெரிய சாலைகளில் சாலையோர பூங்காக்கள் மற்றும் போக்குவரத்து திட்டுக்கள் ஏற்கெனவே தனியார் மற்றும் பொது பங்களிப்புடன் அமைக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றது.

360—

கலையரங்கம் அமைத்தல்

வினா எண் 43802—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 10–வது வார்டு, கல்லத்தியில் கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி பகுதி, 10–வது வார்டு, கல்லத்தியில் கலையரங்கம் அமைப்பதற்கு தகுதியான பேரூராட்சிக்கு சொந்தமான இடங்களோ அரசு புறம்போக்கு நிலங்களோ வருவாய்த் துறை ஆவணங்களின்படி ஏதுமில்லை. எனவே, மூலைக்கரைப்பட்டி

2016 பிப்ரவரி 20]

பேரூராட்சி, வார்டு எண் 10, கல்லத்தியில் கலையரங்கம் அமைக்க வழிவகை இல்லை.

361—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 43812—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 11–வது வார்டு, அரசனார்குளத்தில் புதியதாக தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளில் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டி பராமரிக்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. எனவே, மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, 11–வது வார்டு, அரசனார்குளத்தில் புதியதாக தொடக்கப் பள்ளி துவக்குவதற்கு வழிவகை இல்லை.

362—

கலையரங்கம் அமைத்தல்

வினா எண் 43813—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 11–வது வார்டில் அரசனார்குளத்தில் கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதிக்கு உட்பட்ட மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 11–வது வார்டு அரசனார்குளத்தில் கலையரங்கம் கட்டுவதற்கு தகுதியான பேரூராட்சிக்கு சொந்தமான இடங்களோ அரசு புறம்போக்கு நிலங்களோ வருவாய்த் துறை ஆவணங்களின்படி ஏதுமில்லை. எனவே, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, வார்டு எண் 11, அரசனார்குளத்தில் கலையரங்கம் அமைக்க வழிவகை இல்லை.

363—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 44121—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 பிப்ரவரி 20]

364—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 44124—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

365—

சொந்தக் கட்டடம்

வினா எண் 45551—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், எஸ். வெள்ளாகுளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு புதியதாக சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், எஸ். வெள்ளாகுளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு பள்ளிக் கல்வித் துறைமூலம் செயல்படுத்தப்படும் திட்டமான சர்வ சிக்ஷ அபியான் (SSA) *திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் 6 புதிய வகுப்பறை கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தற்போது கட்டடங்கள் மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளன.*

366—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 46150—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி பேரூராட்சிக்கு நாங்குநேரி–திசையன்விளை கூட்டுக்குடிநீர்த் திட்டம்மூலம் கூடுதல் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி பேரூராட்சியின் மக்கள் தொகை 6,640 ஆகும். தினசரி 70 லிட்டர் வீதம் 4,64,800 லிட்டர் குடிநீர் வழங்க வேண்டும். ஆனால், நாங்குநேரி–திசையன்விளை கூட்டுக்குடிநீர்த் திட்டம் வாயிலாக 7.00 இலட்சம் லிட்டரும், உள்ளூர் நீராதாரம் வாயிலாக 1.00 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் 8.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு

வருகிறது. தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவு போதுமானதாக உள்ளது.

367—

கழிப்பிட வசதி

வினா எண் 46679—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பேருந்து நிலையத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கு தனி கழிப்பிட வசதி அமைத்து தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் ஆண், பெண், குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் அரசு மானியத்துடன் முக்கிய பகுதிகளில் (பேருந்து நிலையம உட்பட) கழிப்பிட வசதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

368—

ஊராட்சியை இணைத்தல்

வினா எண் 47645—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, இளையநயினார்குளம் தெற்கூரிணை உதயத்தார் ஊராட்சியுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ராதாபுரம் தொகுதி, இளையநயினார்குளம் தெற்கூரிணை உதயத்தார் ஊராட்சியுடன் இணைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

369—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 48027—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், ஒச்சந்தட்டு–கலங்காதான்கோட்டை ஊராட்சி சாலையை நெடுஞ்சாலை துறை சாலையாக மாற்றம் செய்து அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், ஒச்சந்தட்டு–கலங்காதான்கோட்டை

2016 பிப்ரவரி 20]

ஊராட்சி ஒன்றிய சாலையின் மொத்த நீளம் 0/0–3/600 கி.மீ. (3.6 கி.மீ.) ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ள மேற்கண்ட சாலையின் மொத்த நீளத்திற்கும் தற்போதுதான் புனரமைக்கப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் சாலையின் இருபுறமும் விளைநிலங்கள் உள்ளதால் சாலையினை அகலப்படுத்திட இயலாத சூழ்நிலை உள்ள காரணத்தினால் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்திட வேண்டிய கேள்வி எழவில்லை. தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பராமரிப்பிலேயே வைத்திருக்கப்படும்.

370—

நீதிமன்றங்கள் அமைத்தல்

வினா எண் 48419—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்திற்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்திற்கு மாவட்ட உரிமையியல், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க வகை செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

[2016 பிப்ரவரி 20

371—

ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்

வினா எண் 50080—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து மழையூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து மழையூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியத்தை ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

372—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 50095—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் கடல்நீரை குடிநீராக மாற்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டும் உள்ளூர் நீராதாரங்கள் மூலமாகவும் தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கடல்நீரை குடிநீராக மாற்றி வழங்குவதற்கான அவசியம் எழவில்லை.

373—

வீடுகள் பழுதுபார்த்தல்

வினா எண் 50120—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் 14 ஊராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர் காலனியில் பழுதான குழும வீடுகளை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட 2014–2015 ஆம் ஆண்டிற்கான

வழிகாட்டு நெறிமுறைகளில் இன்னபிறவற்றுடன் இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் உட்பட அரசு திட்டங்களின்கீழ் 31–12–2004 வரை கட்டப்பட்ட வீடுகளை வரையறுக்கப்படாத கூறு நிதியிலிருந்து ஒரு வீட்டிற்கு ரூ.50,000/–க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

374—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 50809—திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதி, ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியின் மக்கள் தொகை 10,320 ஆகும். இப்பேரூராட்சிக்கு தற்போது கடனா நதியில் அமைந்துள்ள நீர் உறிஞ்சிக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்ட குடிநீர்த் திட்டத்தின் மூலமும், கடனா நதியில் அமைந்துள்ள உறைகிணற்றினை நீராதாரமாகக் கொண்ட குடிநீர்த் திட்டத்தின் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விரு திட்டங்கள் பேரூராட்சியின்மூலம் பராமரிக்கப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 முதல் 80 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வாரிய விதிமுறைகளின்படி இது

2016 பிப்ரவரி 20]

போதுமான அளவாகும். எனவே, இப்பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

375—

சாலைகள் அமைத்தல்

வினா எண் 51410—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 35–வது வட்டம், எருக்கஞ்சேரி அண்ணா சாலை வடக்கு உட்புறத்தில் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

எருக்கஞ்சேரி அண்ணா சாலை வடக்கு உட்புறத்தில் சாலைகள் அமைக்க ரூ.37.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

376—

சாலை அமைத்தல்

வினா எண் 51413—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 35–வது வட்டம், கண்ணதாசன் நகர், 1–வது பிளாக், 2–வது பிரதான சந்தில் புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 35–வது வட்டம், கண்ணதாசன் நகர், 1–வது பிளாக், 2–வது பிரதான சந்தில் ரூ.12.23 இலட்சத்தில் புதியதாக தார்சாலை அமைக்கப்பட்டுவிட்டது.

377—

சாலைகள் அமைத்தல்

வினா எண் 51446—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 45–வது வட்டம், அன்னை சத்யா நகரில் புதிய சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

ஆம். சென்னை மாநகராட்சி மண்டலம் 4 பகுதி–11, 45–வது வட்டம், அன்னை சத்யா நகர் ஒன்று முதல் ஐந்து தெருவிற்கு புதிய கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி ரூ.65.22 இலட்சம் மதிப்பீட்டில் 6–2–2014 அன்று துவங்கப்பட்டு 14–9–2014 அன்று முடிக்கப்பட்டது.

378—

சாலைகள் அமைத்தல்

வினா எண் 51452—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) பெரம்பூர் தொகுதி, 45–வது வட்டம், பி.வி. காலனி, 8–வது தெருவில் புதிய சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை மாநகராட்சி மண்டலம்–4, பகுதி–11, 45–வது வட்டம், பி.வி. காலனி, 8–வது தெருவில் புதிய சாலைகள் அமைக்கும் பணி ரூ.26.91 இலட்சம் மதிப்பீட்டில் 6–2–2014 அன்று துவங்கப்பட்டு 14–9–2014 அன்று முடிக்கப்பட்டது.

379—

குடிநீர்த் தொட்டி அமைத்தல்

வினா எண் 51720—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சிக்கு கூடுதலாக பத்து இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சியில் மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக 10.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

[2016 பிப்ரவரி 20

380—

குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 51721—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதியில் குடிநீர் தரப்பரிசோதனைக்கூடம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சியில் போதுமான குடிநீர் தர பரிசோதனைக் கருவிகள் உள்ளதால் புதிதாக குடிநீர் தரப்பரிசோதனைக்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

381—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 51756—திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கூடுதல் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதிக்கு காடையாம்பட்டி காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கூடுதல் குடிநீர் வழங்க வழிவகை இல்லை.

382—

ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்

வினா எண் 51759—திரு. சி. கிருஷ்ணன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியத்தை ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

383—

ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்

வினா எண் 51859—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2016 பிப்ரவரி 20

திருவள்ளூர் மாவட்டம், திருவேலங்காடு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கனகம்மா சத்திரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பது, தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசால் பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருவள்ளூர் மாவட்டம், திருவேலங்காடு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கனகம்மா சத்திரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

384—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 51954 திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சி பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு

அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

385—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 51955—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, கங்கை கொண்டான் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், கங்கை கொண்டான் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

386—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 51956—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

387—

பேரூராட்சியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 52319—திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதி, அவினாசி பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருவாய் குறைவாக உள்ளதால், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அவினாசி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த இயலாது.

2016 பிப்ரவரி 20]

388—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 52380—திரு. து. முருகேசன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

389—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 52397—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு

அகற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பூர்வாங்கப் பணி நடைபெற்று வருகிறது.

390—

பேரூராட்சியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 52625—திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் மக்கள் தொகை மற்றும் வருவாய் குறைவாக உள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி அப்பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த இயலாது.

391—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 52628—திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பேரூராட்சியில் சாத்தனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் பேரூராட்சியில் சாத்தனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

392—

கூட்டுக்குடிநீர்த் திட்டம்

வினா எண் 52629—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டத்தை ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் பேரூராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 29,120 ஆகும். இப்பேரூராட்சிக்கு தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போதைய மக்களின் குடிநீர் தேவைக்கு இது போதுமானது.

புளோரைடால் பாதிக்கப்பட்ட தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கென பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்பொருட்டு, பிரத்யேகமான ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பெற்று தற்பொழுது குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த போளூர் பேரூராட்சியினை பயனாளியாகச் சேர்க்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2016 பிப்ரவரி 20

393—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 53241—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமூர்த்தி அணையிலிருந்து தாராபுரம் பகுதிக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமூர்த்தி அணையிலிருந்து தாராபுரம் பகுதிக்கு தனி குடிநீர்த் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

394—

பசுமை வீடுகள் திட்டம்

வினா எண் 53246—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியிலுள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கு பசுமை வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பசுமை வீடுகள் கட்டும் திட்டம் கிராமப்புற ஊராட்சிகளுக்கு மட்டுமே பொருந்தும். இத்திட்டம், பேரூராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படவில்லை.

2016 பிப்ரவரி 20]

395—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 53252—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

396—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 53308—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும்

[2016 பிப்ரவரி 20

மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

397—

மின்விசை இறைப்பான் அமைத்தல்

வினா எண் 53310—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சி, சாவடி தெருவில் புதிய ஆழ்துளை கிணறுடன்கூடிய சிறிய மின்விசை இறைப்பான் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சி, சாவடி தெருவில் புதிய ஆழ்துளை கிணறுடன்கூடிய சிறிய மின்விசை இறைப்பான் ஏற்கெனவே அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

398—

மின்விசை இறைப்பான் அமைத்தல்

வினா எண் 53311—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சி, 3–வது வார்டு சி.எஸ்.ஐ. கல்லறைத் தோட்டத்தின் அருகில் புதிய ஆழ்துளை கிணறுடன்கூடிய சிறு மின்விசை இறைப்பான் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். போளூர் பேரூராட்சி, 3–வது வார்டு சி.எஸ்.ஐ. கல்லறைத் தோட்டத்தின் அருகில் புதிய ஆழ்துளை கிணறுடன்கூடிய சிறு மின்விசை இறைப்பான் 2014–15 ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட உள்ளது.

399—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 53793—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து திருவள்ளூரிலுள்ள மணவாள நகர் பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து திருவள்ளூரிலுள்ள மணவாள நகர் பகுதிக்கு குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

400—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 53796—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

கும்பகோணம் தொகுதி, தாராசுரம், திருநாகேஸ்வரம், சோழபுரம் ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, தாராசுரம், திருநாகேஸ்வரம், சோழபுரம் ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

401—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 56382—திரு. எஸ்.ஆர். பாத்திபன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்று திட்டமாக கழிவுநீர் மேலாண்மை திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

402—

சட்டக் கல்லூரி

வினா எண் 58760—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

403—

கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 29286— திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, மாங்கோட்டை மேலப்பட்டி கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, மாங்கோட்டை மேலப்பட்டியில் புதிய கால்நடை மருந்தக கட்டடம் கட்ட 2014–

2015 நபார்டு XIX திட்டத்தின்கீழ் ரூ.22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் துவங்கப்பட்டு பணிகள் முடிக்கப்படும்.

404—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 29568— திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மாதேமங்களம் ஊராட்சி, குட்டூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மாதேமங்களம் ஊராட்சி, குட்டூர் கிராமத்திற்கு அருகில் மிட்டாரெட்டி அள்ளி மற்றும் நல்லம்பள்ளி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்களும், தருமபுரியில் ஒரு கால்நடை பெரு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், குட்டூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000 குறைவாக இருப்பதாலும் (அதாவது 3,673 அலகுகள்) குட்டூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், கால்நடை கிளை நிலையம் துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது குட்டூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

405—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 29569—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், எச்சனஅள்ளி ஊராட்சி, காலேகவுண்டனூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், எச்சனஅள்ளி ஊராட்சி, காலேகவுண்டனூர் கிராமத்திற்கு அருகில் பண்டஅள்ளி மற்றும் பி. அக்ராகரம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. காலேகவுண்டனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000–க்கும் அதிகமாக (அதாவது 5,863 அலகுகள்) உள்ளதால் காலேகவுண்டனூரில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. கால்நடை கிளை நிலையம்/மருந்தகம் தோற்றுவிக்க வரும் ஆண்டுகளில் அரசின் செயற்குறிப்பில் இடம் பெறும்பட்சத்தில் காலேகவுண்டனூர் கிராமத்தினையும் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

406—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 29570—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பேட்றஅள்ளி ஊராட்சி, ஓசஅள்ளிபுதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பேட்றஅள்ளி ஊராட்சி, ஓசஅள்ளிபுதூர் கிராமத்திற்கு அருகில் இண்டூர் மற்றும் பாப்பராப்பட்டி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள்

[2016 பிப்ரவரி 20

செயல்பட்டு வருவதாலும், ஓசஅள்ளிபுதூர் கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக (அதாவது 2,643 அலகுகள்) உள்ளதாலும், ஓசஅள்ளிபுதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, ஓசஅள்ளிபுதூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

407—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 29577—திரு. சு. ரவி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி, மூதூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி, மூதூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

408—

கால்நடை கிளை மருத்துமவனை அமைத்தல்

வினா எண் 29584—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கல் ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கல் ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

409—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 29796 திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், டி. கிருஷ்ணாபுரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, டி. கிருஷ்ணாபுரத்திற்கு அருகில் (1.5 கி.மீ.) எம். கல்லுப்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், டி. கிருஷ்ணாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதாலும், (அதாவது 2,388 அலகுகள்) டி. கிருஷ்ணாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம்/கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே விவசாயிகள், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

410—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 30022—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு விருத்தாசலம் ஒன்றியம், முகாசப்பரூர் மற்றும் நல்லூர் ஒன்றியம், சேதுவராயன்குப்பம் ஆகிய பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

(1) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு கிராமத்தில் 18–1–2013 முதல் கால்நடை கிளை நிலையம் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. எனவே, இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(2) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், முகாசப்பரூர் கிராமத்திற்கு அருகில் மங்கலம்பேட்டையில் ஒரு கால்நடை மருந்தகமும், தொரவலூரில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(3) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், சேதுவராயன்குப்பம், கூதங்குடியில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. எனவே, இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

நடைமுறையிலுள்ள வழிகாட்டுதலின்படி, கால்நடை மருத்துவமனைகள் நேரடியாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

2016 பிப்ரவரி 20]

411—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 30023—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, டி.கோபுராபுரம், மாத்தூர், விஜயமாநகரம் ஆகிய பகுதிகளில் முழுநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாத்தூர், டி.கோபுரபுரம் ஆகிய இரண்டு கிராமங்களில் ஏற்கெனவே காலை 8–00 முதல் 12–00 நண்பகல் மற்றும் 3–00 முதல் 5–00 பிற்பகல் வரை கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருவதாலும், விஜயமாநகரின் அருகில் மாத்தூர் கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும், விஜயமாநகரில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக உள்ளதாலும், டி.கோபுராபுரம், மாத்தூர் மற்றும் விஜயமாநகரம் ஆகிய பகுதிகளில் முழுநேர கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

412—

கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 30033—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, ஜல்லிபட்டி, எலையமுத்தூர், மலையாண்டி கவுண்டனூர் மற்றும் பூலாங்கிணர் கிராமங்களில் ஊரக கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013–2014 ஆம் ஆண்டு நபார்டு XIX திட்டத்தின்கீழ் கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசாணை (நிலை) எண் 103, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப 2) துறை, நாள் 20–5–2014–ன் வழி ரூ.99 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், மடத்துக்குளம் தொகுதி, மலையாண்டிகவுண்டனூர் மற்றும் பூலாங்கிணர் கிராமங்களில் உள்ள ஊரக கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடம் கட்ட நபார்டு XIX திட்டத்தின்கீழ் தலா ரூ.22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் கட்டடப் பணிகள் தொடங்கப்படும்.

ஜல்லிப்பட்டி, எலையமுத்தூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஊரக கால்நடை மருந்தக கட்டடங்களை கட்ட 2014–2015 நபார்டு XIX திட்டத்தின்கீழ் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

413—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 30828—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அத்திமலைப்பட்டில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியம், அத்திமலைப்பட்டி கிராமத்தினைச் சுற்றி கீழ்நகர், காட்டுக்காநல்லூர் ஆகிய இரண்டு

கால்நடை மருந்தகங்களும், வெட்டியாந்தொழுவத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. அத்திமலைப்பட்டியில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கு குறைவாக உள்ளதால், (அதாவது 3,593 அலகுகள் மட்டும்) அத்திமலைப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும், நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி செயற்குறிப்பில் புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து அத்திமலைப்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

414—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 31515—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், இராமகிருஷ்ணாபுரம் ஊராட்சி, காரியாண்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், இராமகிருஷ்ணாபுரம் ஊராட்சி. காரியாண்டி கிராமத்திற்கு அருகில் நாங்குநேரி மற்றும் மூலக்கரைப்பட்டியில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், பரப்பாடியில் ஒரு ஊரக கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், காரியாண்டி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000–க்கும் அதிகமாக உள்ளதாலும் (அதாவது 5,612 அலகுகள்) காரியாண்டியில் கிளை

நிலையம் துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டுகளில் அரசின் செயற்குறிப்பில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம் பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து காரியாண்டி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

415—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 31516—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கள்ளிகுளம் ஊராட்சி, கள்ளிகுளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கள்ளிகுளம் ஊராட்சி, கள்ளிகுளம் கிராமத்திற்கு அருகில் ஏர்வாடி, செங்களாக்குறிச்சி, சிங்கிகுளம் மற்றும் களக்காடு ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்களும், பத்மனேரியில் ஒரு ஊரக கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், கள்ளிகுளம் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் கால்நடை அலகுகள் 3,000–க்கு அதிகமாக உள்ளதால், (அதாவது 4,110 அலகுகள்) கள்ளிகுளத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம் பெறும்போது கள்ளிகுளத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

416—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 31527—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராமையன்பட்டி கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருநெல்வேலி மாவட்டம், ராமையன்பட்டி கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

417—

கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

வினா எண் 32208—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, திங்கள் சந்தை கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் திங்கள் சந்தை பகுதிக்கு

[2016 பிப்ரவரி 20

அருகில் பரசேரி, குளச்சல், குருந்தன்கோடு, திக்கனம்கோடு ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்களும், கடற்கரையில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால், திங்கள் சந்தை கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமயையாக தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

418—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 32209—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நெட்டான்கோட்டில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) குளச்சல் தொகுதி, நெட்டான்கோட்டில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

419—

கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைத்தல்

வினா எண் 32210—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, சேனம்விளையில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) குளச்சல் தொகுதி, சேனம்விளையில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

420—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 32677—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், குக்குண்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், குக்குண்டி கிராமத்திற்கு அருகில் ஆற்காடு, அத்தித்தாங்கள், மேல்விஷாரம், பூட்டுத்தாக்கு மற்றும் சக்கரமல்லூர் ஆகிய ஐந்து கால்நடை மருந்தகங்களும், கரிக்கந்தாங்களில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால், குக்குண்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், குக்குண்டி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000—க்கும் அதிகமாக உள்ளதால் (அதாவது 5,761 அலகுகள்) கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி புதிய கால்நடை மருந்தகம் துவக்கும் திட்டம் இடம் பெறும்போது, குக்குண்டி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

[2016 பிப்ரவரி 20

421—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 33871—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி கிராமம் சர்வே எண் 228/8–ல் அரசு ஒதுக்கிய அரசு புறம்போக்கு நிலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி கிராமம் சர்வே எண் 228/8–ல் அரசு கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்ட சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைத் தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத் துறையில் நபார்டு வங்கியின் (XX திட்டத்தின்கீழ்) நிதியுதவியுடன் ரூ.80.05 கோடி செலவில் 227 புதிய கால்நடை நிலைய கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன்பிறகு கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

422—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 33874—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டம், மஞ்சைநாயக்கணள்ளி ஊராட்சி கடமடையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டம், மஞ்சைநாயக்கணள்ளி ஊராட்சி, கடமடை கிராமத்திற்கு அருகில் பெண்ணாகரம் மற்றும் சின்னம்பள்ளி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், கடமடை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000–க்கு குறைவாக உள்ளதாலும் (அதாவது 2,742 அலகுகள்) கடமடையில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், அருகிலுள்ள கால்நடை நிலையங்களின் தூரத்தினை கணக்கில் கொண்டு, கால்நடை கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது கடமடையில் கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

423—

கால்நடை கிளை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 33963—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, உரிகம் கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, உரிகம் கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் (கிளை நிலையம்) அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

424—

கால்நடை கிளை மையம் அமைத்தல்

வினா எண் 34407—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, பளுகல், உண்ணாமலைகடை ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) விளவங்கோடு தொகுதி, பளுகல், உண்ணாமலைகடை ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை மையங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

425—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 34504—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் ஒன்றியம், ஆட்கொண்டார்குளம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் ஒன்றியம், ஆட்கொண்டார்குளம் கிராமத்தில் கால்நடை அலகுகள் 2,000–க்கும் குறைவாக இருப்பதால் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

426—

பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைத்தல்

வினா எண் 34852—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஆடு வளர்ப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அபிஷேகப்பட்டியில், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் புதியதாக கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டுள்ளது. எனவே, சங்கரன்கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆடு வளர்ப்போர் தங்களது தேவைக்கு தகுந்தவாறு பயிற்சிகளை மேற்கொள்ள மேற்படி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தினை அணுகலாம். எனவே, ஒரே மாவட்டத்தில் கூடுதலாக மற்றொரு ஆடு வளர்ப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2016 பிப்ரவரி 20

427—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 35866—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் புல எண் 228/8, 228/9–ல் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், குள்ளம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தக கட்டடம் கட்டுவதற்கு அரசிராமணி கிராமம் சர்வே எண் 228/8–ல் 0.34 ஏக்கர் அரசு புறம்போக்கு தரிசு நிலத்தினை கால்நடை பாரமரிப்புத் துறைக்கு நிலம் மாறுதல் செய்து கொடுக்க சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள தரிசு நிலத்தினை சங்கரி வட்டாட்சியர் மற்றும் பஞ்சாயத்து உதவி இயக்குநர் ஆகியோர்கள் அடங்கிய குழு ஆய்வு செய்து, மேற்படி நிலத்தில் குள்ளம்பட்டி கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு பரிந்துரை செய்துள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை பெற்றதும் பரிசீலிக்கலாம். மேலும், சங்கரி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களும் இந்நிலத்தினை கால்நடை மருந்தகம் கட்டலாம் என பரிந்துரை செய்துள்ளார். மேற்படி சர்வே எண்ணில் குள்ளம்பட்டி கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டினால் பொதுமக்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

428—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 35949—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) சீர்காழி தொகுதி, ஆரப்பள்ளம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சிக்கு அருகில் கொள்ளிடம், மாதானம், எடமனல், முதலைமேடு ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், ஆரப்பள்ளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதாலும் (அதாவது 2,369 அலகுகள்) ஆரப்பள்ளம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், கால்நடை நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரத்தின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் அரசின் செயற்குறிப்பில் புதிய கால்நடை கிளை நிலையம் துவங்கும் திட்டம் இடம் பெறும்பொழுது ஆரப்பள்ளம் கிராமத்தையும் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

429—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 36023—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஏலவம்பட்டியில் புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஏலவம்பட்டி கிாமத்திற்கு அருகில் தாரமங்கலம், மாட்டையாம்பட்டி மற்றும் ஜலகண்டாபுரம் ஆகிய மூன்று

கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், ஏலவம்பட்டி கிராமத்ினை சுற்றியுள்ள கால்நடை அலகுகள் 5,000–க்கு குறைவாக உள்ளதாலும் (அதாவது 1,717 அலகுகள்) ஏலவம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. வரும் ஆண்டுகளில் கால்நடை அலகுகள் அதிகரிக்கும் பட்சத்தில் ஏலவம்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

430—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 36024—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், இ.புதுப்பாளையம் ஊராட்சி, நாயக்கன்வளவில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சங்கரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், இ.புதுப்பாளையம் ஊராட்சி, நாயக்கன்வளவில் கால்நடை கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) அரசின் செயற்குறிப்பில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம் பெறும்போது பரிசீலிக்கப்படும்.

431—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 36029—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) அந்தியூர் தொகுதி, விராலிக்காட்டூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, விராலிகாட்டூர் கிராமத்திற்கு அருகில் சென்னம்பட்டி, வெள்ளித்திருப்பூர் மற்றும் அம்மாப்பேட்டை ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும் குருவரெட்டியூரில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும் விராலிகாட்டூர் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000—க்கும் குறைவாக உள்ளதாலும் (அதாவது 2,419 அலகுகள்) விராலிகாட்டூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் அருகிலுள்ள கால்நடை நிலையங்களின் தூரத்தினை கணக்கில்கொண்டு, வரும் நிதியாண்டுகளில் கால்நடை அலகுகள் அதிகரிக்கும்பட்சத்தில் விராலிக்காட்டூர் கிராமத்தினையும் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து கால்நடை கிளை நிலையம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

432—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 36069— திரு. ம. குணசேரகன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தலில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் கிராமத்திற்கு அருகில் மானாமதுரை, மேலப்பசலை மற்றும் மேநெட்டூர் ஆகிய மூன்று கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. வேதியரேந்தல் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால் (அதாவது 3,424 அலகுகள்) வேதியரேந்தலில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. வரும் நிதியாண்டில் அரசின் செயற்குறிப்பில் புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம் பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து வேதியரேந்தல் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

433—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 36102—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி, பாப்பம்பாடியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி, பாம்பம்பாடி கிராமத்தினைச் சுற்றி மாட்டையாம்பட்டி, வெள்ளாளபுரம் மற்றும் தாரமங்கலம் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், பாப்பம்பாடி கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள

காலநடைகளின் அலகுகள் 5,000–க்கு குறைவாக உள்ளதாலும், (அதாவது 2,210 அலகுகள்) பாப்பம்பாடியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

434—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 36126—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், சித்தாம்பாடி ஊராட்சி, சித்தாம்பாடி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் மேல் உள்ளதால் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) 2014–2015 ஆம் ஆண்டின் அரசின் செயற்குறிப்பில் 50 புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கும் திட்டம் உள்ளது. இக்கிராமம் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

493—

மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 49614—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சியிலிருந்து 1.5 கி.மீ. தொலைவில் சின்னக்கோனூர் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் கோனூர் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை மருந்தகத்தின் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

494—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 49615—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேட்டூரில் ஏற்கெனவே கால்நடை

மருத்துவமனை இயங்கி வருவதால், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் நிலை எழவில்லை. எனவே, அப்பகுதி விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு மேட்டூர் கால்நடை மருத்துவமனைமூலம் அளிக்கப்படும் சிசிச்சையினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

495—

மருந்தகங்கள் அமைத்தல்

வினா எண் 49616—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் புதிய கால்நடை மருந்தகங்கள் மற்றும் ஊரக கால்நடை மருந்தகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் செட்டியூர், குமரவேல்கோட்டை, சின்னதண்டா, சத்யாநகர், காவேரிகிராஸ் ஆகிய இடங்களில் 5 கால்நடை மருந்தகங்களும், மேட்டூரில் ஒரு கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய கால்நடை மருந்தகங்கள் மற்றும் ஊரக கால்நடை மருந்தகங்கள் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

496—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 49617—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2016 பிப்ரவரி 20

சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க தற்போது நடவடிக்கை ஏதுமில்லை.

497—

கால்நடை மருத்துவமனை துவக்குதல்

வினா எண் 49618—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் புதிய நடமாடும் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கொளத்தூர், குமரவேல்கோட்டை, செட்டியூர், சின்னதண்டா, காவேரிகிராஸ், சத்யாநகர் ஆகிய 6 கால்நடை மருந்தகங்களும், மேட்டூரில் ஒரு கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கொளத்தூர் ஒன்றியத்தில் புதிய நடமாடும் கால்நடை மருந்தகம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையத்தின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

498—

கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 49927—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், சின்ன இளந்தகுளம் கிராமத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், சின்ன இளந்தகுளம் கிராமத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க சாத்தியக்கூறு இல்லை.

499—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 50186 திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், அரசக்குழி ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், அரசக்குழி ஊராட்சிக்கு அருகில் விருத்தாசலம், வி.குமாரமங்கலம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், அரசக்குழி கிராமத்தினை சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கு குறைவாக இருப்பதாலும் (அதாவது 1,714 அலகுகள் மட்டும்) அரசக்குழி

[2016 பிப்ரவரி 20

கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

500—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 50187—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், சேப்ளாநத்தம் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், சேப்ளாநத்தம் ஊராட்சிக்கு அருகில் வடலூர், மந்தாரக்குப்பம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், சேப்ளாநத்தம் கிராமத்தினை சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கு குறைவாக இருப்பதாலும் (அதாவது 651 அலகுகள் மட்டும்) சேப்ளாநத்தம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

2016 பிப்ரவரி 20]

பட்டியல் 8

1—

கால்நடை மருந்தகம்

வினா எண் 50188—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரியகோட்டிமலையில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரியகோட்டிமலைக்கு அருகில் கம்மாபுரம், வி. சாத்தப்பாடி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், பெரியகோட்டிமலையைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கு குறைவாக இருப்பதாலும் (அதாவது 1,600 அலகுகள் மட்டும்), பெரியகோட்டிமலையில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

2—

கால்நடை மருந்தகம்

வினா எண் 50189—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், அகர ஆலம்பாடி ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியம், அகர ஆலம்பாடி ஊராட்சிக்கு அருகில் வீரமுடையாநத்தம், சேத்தியாதோப்பு, மேல்வளையமாதேவி ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், அகர ஆலம்பாடியைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 559 அலகுகள்), அகர ஆலம்பாடி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

3—

கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 50190—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், சி. கிரணூர் ஊராட்சியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி. கிரணூர் ஊராட்சிக்கு அருகில் கருவேப்பிலங்குறிச்சி, காவனூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றது. சி. கிரணூர் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதால் (அதாவது 1,714 அலகுகள்), சி. கிரணூர் கிராமத்தில் உள்ள

2016 பிப்ரவரி 20]

கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

4—

கால்நடை மருந்தகம்

வினா எண் 50219—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, வெள்ளநத்தம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, வெள்ளநத்தம் கிராமத்திற்கு அருகில் கொடுவை, வேலம்பட்டி, புத்தேரிசால் ஆகிய இடங்களில் மூன்று கால்நடை மருந்தகங்களும், பொங்கலூரில் ஒரு கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. வெள்ளநத்தம் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் அதிகமாக உள்ளதாலும் (அதாவது 5611 அலகுகள்), வெள்ளநத்தம் கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.–க்கு அதிகமாக உள்ளதாலும், வெள்ளநத்தம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, புதிய கால்நடை மருந்தகம் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து வெள்ளநத்தம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

[2016 பிப்ரவரி 20

5—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 50249—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், மயிலாடும்பாறை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், மயிலாடும்பாறை ஊராட்சிக்கு அருகில் விடியங்காடுபுதூரில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், மயிலாடும்பாறை கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 125 அலகுகள் மட்டும்), மயிலாடும்பாறை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையத்தின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

6—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 50250—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், நொச்சிலி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், நொச்சிலி கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அரசாணை (நிலை) எண் 148, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.2) துறை, நாள் 8–12–2004–ன்வழி அமைக்கப்பட்டு 29–12–2004 முதல் செயல்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது இம்மருந்தகம் முன்னுரிமை அடிப்படையில் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

7—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 50252—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கம்மம்பட்டி ஊராட்சி, கஸ்தூரி கோம்பையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கம்மம்பட்டி ஊராட்சி, கஸ்தூரி கோம்பையில் கிராமத்திற்கு அருகில் தொப்பூரில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. கஸ்தூரி கோம்பை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால் (அதாவது 2,618 அலகுகள்), கஸ்தூரி கோம்பையில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், கால்நடை நிலையங்களின் தூரத்தினைக் கணக்கிட்டு

பார்க்கும்பொழுது கஸ்தூரி கோம்பை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடைக் கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது கஸ்தூரி கோம்பையில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

8—

நடமாடும் கால்நடை மருந்தகம்

வினா எண் 50281—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரையில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மண்டலம், மதுரை கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவு அரசாணை (நிலை) எண் 1412, வேளாண்மைத் துறை, நாள் 9–6–1981–ன்படி துவக்கப்பட்டு 10–6–1982 முதல் நன்கு இயங்கி வருகிறது.

9—

கால்நடை மருந்தகம்

வினா எண் 50284—திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, பெரியகுத்தகை ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, பெரியகுத்தகை ஊராட்சிக்கு அருகில் தேத்தாக்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், வேதாரண்யத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. பெரியகுத்தகை ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால் (அதாவது 2,969 அலகுகள் மட்டும்), பெரியகுத்தகை ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், அவ்வூரில் மழைக்காலங்களில் கடல்நீர் உட்புகுவதால் அங்குள்ள கால்நடை வளர்ப்போர் வேதாரண்யம் மற்றும் தேத்தாக்குடி கால்நடை நிலையங்களுக்குச் செல்வதற்கு சிரமமாக உள்ளதால் அங்கு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடைக் கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை அடிப்படையில் பெரியகுத்தகை ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

10—

கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 50287—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், திம்மாம்பேட்டை ஊராட்சியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 15, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.3) துறை, நாள் 15–2–2012–ன்வழி,

[2016 பிப்ரவரி 20

வாணியம்பாடி தொகுதி, நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், திம்மாம்பேட்டை ஊராட்சியிலுள்ள கால்நடைக் கிளை நிலையம் ஏற்கெனவே ஊரகக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, 23–5–2012 முதல் செயல்பட்டு வருகிறது.

11—

கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 50288—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், குருசிலாபட்டு ஊராட்சியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், குருசிலாபட்டு ஊராட்சிக்கு அருகில் மாடவளம், மிட்டூர், பொம்மிகுப்பம் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும், பூகுளத்தில் ஒரு ஊரகக் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. குருசிலாபட்டு கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் அதிகமாக இருப்பதால் (அதாவது 5,554 அலகுகள்), குருசிலாபட்டு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து குருசிலாபட்டியில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

12—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 50289—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 *பிப்ரவரி* 20]

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டியப்பனூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டியப்பனூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருவதால் மற்றுமொரு புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்க வாய்ப்பு இல்லை.

13—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 50290—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டியப்பனூர் பெருமாபட்டு ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சியில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 50304—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது அரசின் செயற்குறிப்பில் திட்டம் ஏதுமில்லை.

15—

நடமாடும் மருத்துவக் குழு

வினா எண் 50604 திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகம் முழுவதும் கிராமங்களிலுள்ள கால்நடைகளுக்கு நடமாடும் மருத்துவக் குழுமூலம் செய்யப்படும் சேவையை அனைத்து குக்கிராமங்களுக்கும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகம் முழுவதும் உள்ள குக்கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளின் கால்நடைகளுக்கு ஏற்படும் நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கேற்றவாறு ஏற்கெனவே செயல்பட்டுவரும் நடமாடும் கால்நடை மருந்தகங்களின்மூலம் அனைத்து விதமான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே, அவற்றின்மூலம் அளித்துவரும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. கால்நடைகளின் பெருக்கத்திற்கேற்ப இனிவரும் காலங்களில் இச்சேவையை விரிவுபடுத்துவதற்கு அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படும்.

2016 பிப்ரவரி 20]

16—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 50732—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குரல்குட்டை கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குரல்குட்டை கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

17—

கால்நடை மருந்தகம்

வினா எண் 50752—டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் தொகுதி, தொரப்பாடியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 20, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.1) துறை, நாள்

26–2–2009–ன்படி வேலூர் தொகுதி, வேலூர் மண்டலம், வேலூர் கோட்டம், அல்லாபுரத்தில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இக்கால்நடை மருந்தகப் பகுதியில் போதிய இடவசதி இல்லாததால் அருகிலுள்ள தொரப்பாடியில் புதிய கால்நடை மருந்தகம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்நுழைவு அனுமதியும் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18—

கால்நடை ஆராய்ச்சி மையம்

வினா எண் 50761— திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், பனிக்கம்பட்டி கிராம ஊராட்சியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்கும் பணியை விரைவில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நல்ல தரம்வாய்ந்த சோதனை சாலைப் பொருள் (Good Laboratory Product) மற்றும் உயிர் பாதுகாப்பு சோதனைச் சாலை—II (Bio-Security Laboratory-II) தரத்தில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் புதியதாக கோழி நோய் ஆராய்ச்சிக்கூடம் நிறுவுவதற்காக, அரசாணை (நிலை) எண் 188, வேளாண்மை (A.P.1) துறை, நாள் 31–8–2012–ன்வழி ரூ.262.45 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டதன் அடிப்படையில், ரூ.260.00 இலட்சம் மதிப்பீட்டில், மேற்கண்ட கோழி நோய் ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்தினை அமைக்கும் பணி தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்மூலம் விரைவில் துவங்கப்பட உள்ளது.

2016 பிப்ரவரி 20]

19—

பகுதிநேர கால்நடை மருத்துவமனை

வினா எண் 50768—திரு. க. தினகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, பீடம்பள்ளி ஊராட்சி, நடுப்பாளையத்தில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நடுப்பாளையத்திற்கு அருகில் பாப்பம்பட்டி, காஞ்சிகோனாம்பாளையம், சிங்காநல்லூர் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும் இருகூரில் ஒரு ஊரகக் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், நடுப்பாளையம் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதாலும் (அதாவது 1,843 அலகுகள் மட்டும்), நடுப்பாளையம் கிராமத்தில் புதியதாக பகுதிநேர கால்நடை மருத்துவமனை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

20—

கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 51054—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழவந்தான் தொகுதி, அய்யங்கோட்டை கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை நிலையங்களை நவீனப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது அரசின் கொள்கை முடிவின்படி, சோழவந்தான் தொகுதி, அய்யங்கோட்டை கால்நடைக் கிளை நிலையம் நவீனப்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

21—

கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 51055—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழவந்தான் தொகுதி, முடுவார்பட்டி கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழவந்தான் தொகுதி, முடுவார்பட்டி கிராமத்தில் 19–2–2010 அன்று கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, 5–1–2012 முதல் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், இக்கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட 3–6–2014 அன்று முடுவார்பட்டி ஊராட்சி மன்றத்தில் இடம் ஒதுக்கீடு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசின் கொள்கை முடிவின்படி, புதிய கட்டடங்கள் கட்டும் திட்டம் இடம்பெறும்போது முடுவார்பட்டி கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

22—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51124—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், நெமிலி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், நெமிலி ஊராட்சிக்கு அருகில் வேலஞ்சேரி, அருங்குளம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்களும், பூனிமாங்காட்டில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், நெமிலி கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 1,990 அலகுகள் மட்டும்), நெமிலி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

23—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51126—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கரிம்பேடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், கரிம்பேடு ஊராட்சிக்கு அருகில் பள்ளிப்பட்டில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், கரிம்பேடு கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 55 அலகுகள் மட்டும்), கரிம்பேடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையத்தின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

24—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51127—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், சாமந்தவாடா கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், சாமந்தவாடா கிராமத்திற்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் நெடியம் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், சாமந்தவாடா கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் இக்கால்நடை மருந்தகத்தின் சேவையுடன் சேர்த்து அருகில் செயல்படும் கால்நடை மருந்தகத்தின் சேவையையும் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

2016 பிப்ரவரி 20]

25—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51128—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், பொன்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், பொன்பாடி ஊராட்சிக்கு அருகில் முருக்கம்பட்டு, மத்தூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், பொன்பாடி கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 55 அலகுகள் மட்டும்), பொன்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

26—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51129—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், நல்லாட்டூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், நல்லாட்டூர் கிராமத்திற்கு அருகில் வேலஞ்சேரியில் ஒரு கால்நடை மருந்தகமும், பூனிமாங்காட்டில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், நல்லாட்டூர் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 52 அலகுகள் மட்டும்), நல்லாட்டூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

27—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51140—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், சூரியநகரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், சூரியநகரம் கிராமத்திற்கு அருகில் திருத்தணி, மாத்தூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், சூரியநகரம் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 207 அலகுகள் மட்டும்), சூரியநகரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை

அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

28—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51141—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், பெருகுமி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி ஊராட்சி ஒன்றியம், பெருகுமி கிராமத்திற்கு அருகில் திருத்தணி, மாத்தூர், கீச்சலம் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், பெருகுமி கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 98 அலகுகள் மட்டும்), பெருகுமி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

29—

நடமாடும் கால்நடை மருந்தகம்

வினா எண் 51142—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருத்தணியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைத்து செயல்படுத்த வாகனம் வழங்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

30—

வெள்ளாடுகள் பற்றிய அறிவியல் ஆராய்ச்சி மையம்

வினா எண் 51207—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதியில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியில் வெள்ளாடுகள் பற்றிய அறிவியல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதியில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியில் வெள்ளாடுகள் பற்றிய ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

31—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 51642—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, குருவிக்குளம் ஒன்றியம், பெருங்கோட்டூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, குருவிக்குளம் ஒன்றியம், பெருங்கோட்டூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,176 உள்ளதால் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. 2014–2015 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் 50 புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்கும் திட்டம் உள்ளது. எனவே, இக்கிராமம் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

32—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

வினா எண் 52481—திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 261, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.2) துறை, நாள் 22–12–2014–ன்படி, 2014–2015 நபார்டு XX திட்டத்தின்கீழ் 226 கால்நடை நிலையக் கட்டடங்கள் கட்ட ரூ.61 கோடியே 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நபார்டு RIDF-XX 2014–2015 திட்டத்தின்கீழ் இடம் தேர்வு செய்யப்பட்டு, ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் துவங்கப்படும்.

33—

கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம்

வினா எண் 52488—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் நகராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.14.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டப்பட்டு, 1–3–2014 முதல் இம்மருத்துவமனை புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

34—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 52509—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, கோவிந்தாபுரம் ஊராட்சி, கனவாய்புதூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, கோவிந்தாபுரம் ஊராட்சி, கனவாய்புதூர் கிராமத்திற்கு அருகில் வள்ளிப்பட்டு,

2016 பிப்ரவரி 20]

ஜாப்ராபாத், முல்லை, ஆலங்காயம் ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்களும், வாணியம்பாடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், கனவாய்புதூர் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதாலும் (அதாவது 2,001 அலகுகள் மட்டும்), கனவாய்புதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

35—

கால்நடை மருந்தகம்

வினா எண் 52513—திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் ஊராட்சிக்கு அருகில் ஏலாக்குறிச்சி, கல்லகுடி, காமரசவல்லி, சுண்டக்குடி ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. கோவிலூர் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் அதிகமாக உள்ளதால் (அதாவது 5,043 அலகுகள்), கோவிலூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் துவக்க சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை அடிப்படையில் சேர்த்து கோவிலூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

36—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 52733—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், அனாதிமங்கலம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், அனாதிமங்கலம் ஊராட்சியில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) இக்கிராமம் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

37—

கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 52734—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டு ஒன்றியம், வடமாதிமங்கலம் கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், வடமாதிமங்கலம் கிராமத்திற்கு அருகில் களம்பூர்,

கேளூர், முடையூர் மற்றும் கொம்மனந்தல் ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. வடமாதிமங்கலம் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் அதிகமாக உள்ளதால் (அதாவது 5,512 அலகுகள்), வடமாதிமங்கலம் கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடைக் கிளை நிலையங்களை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

38—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 52777—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், மேளபூடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், மேளபூடி கிராமத்திற்கு அருகில் பொதட்டூர்பேட்டை, நொடியம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், மேளபூடி கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 46 அலகுகள் மட்டும்), மேளபூடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

[2016 பிப்ரவரி 20

39—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 53109—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, காத்திருப்பு ஊராட்சி மற்றும் சுற்றியுள்ள பகுதிக்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காத்திருப்பு ஊராட்சி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடை அலகுகள் 3,000-க்கும் குறைவாக உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

40—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 53113—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், கல்லணை, தூம்பக்குளம், அரசப்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், கல்லணை, தூம்பக்குளம், அரசப்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை

அலகுகள் 3,000–க்கும் குறைவாக உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

41—

கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 53129—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிப்பேட்டையிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தினை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், அத்திமாஞ்சேரிப்பேட்டையில் செயல்பட்டு வந்த கால்நடைக் கிளை நிலையம் அரசாணை (நிலை) எண் 15, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.3) துறை, நாள் 15–2–2012–ன்படி, ஏற்கெனவே ஊரகக் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்பட்டு, 29–5–2012 முதல் செயல்பட்டு வருகின்றது. வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

42—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 53130—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பாத்தகுப்பம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பாத்தகுப்பம் கிராமத்திற்கு அருகில் அத்திமாஞ்சேரி, பொதட்டூர்பேட்டை ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், பாத்தகுப்பம் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் (அதாவது 48 அலகுகள் மட்டும்), பாத்தகுப்பம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்தி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளலாம்.

43—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 53145—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க தற்போது நடவடிக்கை ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

44—

கால்நடைத் தீவன வங்கி

வினா எண் 53527—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கால்நடைத் தீவன வங்கி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) 2014 ஆம் ஆண்டு சென்னை தவிர தமிழ்நாடு முழுவதும் ஒரு தீவன கிடங்கிற்கு ரூ.10 இலட்சம் வீதம் 125 உலர் தீவனக் கிடங்குகள் ரூ.12.5 கோடி செலவிலும், 60 கூடுதல் உலர் தீவனக் கிடங்குகள் ரூ.6 கோடி செலவிலும், மொத்தமாக 185 தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கால்நடை வளர்ப்போருக்கு கிலோ ரூ.2 வீதம் மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பசுந்தீவன வங்கி இவ்வாண்டு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டு, விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 100 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு மந்தைவெளி நிலத்தில் துவங்கப்படவுள்ளது. அதன் வெற்றியைப் பொறுத்து மற்ற மாவட்டங்களில் வரும் ஆண்டுகளில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கேள்வி எழாது

45—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 53529—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) போளூர் தொகுதி, சந்தவாசல் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியம், சந்தவாசல் கிராமத்திற்கு அருகில் படவேடு, கேளூர், வாழியூர், களம்பூர் ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், சந்தவாசல் கிராமத்தில் கால்நடை மருந்தகம் இயங்கி வருவதால் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 53530—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, மன்சுராபாத் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்பட் ஊராட்சி ஒன்றியம், மன்சுராபாத் கிராமத்திற்கு அருகில் பூதமங்கலம் கால்நடை மருந்தகமும், பாடகம், நம்பேடு ஆகிய இரண்டு ஊரகக் கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மன்சுராபாத் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக இருப்பதாலும் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

வினா எண் 53531—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, திரிசூர் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, திரிசூர் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட "நபார்டு" RIDF XX (2014–2015) திட்டத்தின்கீழ் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கட்டடப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

48—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 53556—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, மிட்டப்பள்ளி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மிட்டப்பள்ளி கிராமத்தினைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக

உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 53832—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குறிச்சாம்பட்டி, நவநீதகிருஷ்ணபுரம், மேலக்கலங்கல் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறிச்சாம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், குறிச்சாம்பட்டி ஊராட்சிக்கு அருகில் ஊத்துமலை, வெண்ணிலிங்கபுரம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்களும், கீழக்கலங்கலில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. குறிச்சாம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை மருத்துவமனை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

நவநீதகிருஷ்ணபுரம்: நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சிக்கு அருகில் ஊத்துமலை கால்நடை மருந்தகமும், கீழக்கலங்கலில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. நவநீதகிருஷ்ணபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை மருத்துவமனை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]

மேலக்கலங்கல்: மேலக்கலங்கல் ஊராட்சிக்கு அருகில் ஊத்துமலையில் ஒரு கால்நடை மருந்தகமும், கீழக்கலங்கலில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேலக்கலங்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை மருத்துவமனை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

கால்நடை மருத்துவமனைக்கு தண்ணீர் வசதி

வினா எண் 54134—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி கால்நடை மருத்துவமனைக்குப் போதிய தண்ணீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி கால்நடை மருத்துவமனைக்கு 2012–2013 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் ரூ.6.00 இலட்சம் செலவில் ஆழ்குழாய் மோட்டார் வசதி செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

51—

கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர்

வினா எண் 54136—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி கால்நடை மருத்துவமனைக்கு 2015–2016 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், ஆரணி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய சுற்றுச்சுவர் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

52—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 54137—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஒன்றியம், அரையாலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்கு அருகில் விண்ணமங்கலம், நரசிங்கபுரம், களம்பூர் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும், ஆரணியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், காமக்கூரில் ஒரு ஊரகக் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதால், அரையாலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

53—

மாவட்ட கால்நடைப் பண்ணை

வினா எண் 54153—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) திருத்தணி தொகுதியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதியில் இருந்து சுமார் 158 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் கால்நடைகள், ஆட்டினங்கள், பன்றிகள் மற்றும் குதிரைகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்பொழுது திருத்தணி தொகுதியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க திட்டம் இல்லை.

54—

24 மணிநேர கால்நடை மருந்தகம்

வினா எண் 54154—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், K.G. கண்டிகையில் 24 மணிநேரமும் இயங்கும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், K.G. கண்டிகையில் அரசாணை (நிலை) எண் 119, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.3) துறை, நாள் 5–8–1998–ன்படி K.G. கண்டிகையில் உள்ள கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்பட்டு, 22–7–1998 முதல் செயல்பட்டு வருகின்றது. மேலும், அக்கால்நடை மருந்தகம் காலை 8–00 மணி முதல் 12–00 மணி வரையிலும்,

மாலை 3–00 மணி முதல் 5–00 மணி வரையிலும் முழுநேரமாகச் செயல்பட்டு வருவதால், அவற்றின்மூலம் அளிக்கப்படும் சேவை போதுமானதாகக் கருதப்படுகிறது.

55—

கால்நடை மருந்தகம்

வினா எண் 54155—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

சுற்றுலாத் தலம்

வினா எண் 33037—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, திருமூர்த்தி நகர் அணை அமணலிங்கேஸ்வரர் ஆலயம் அருவி உள்ள பகுதிகளை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறைமூலம் எந்தவொரு பகுதியினையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் சுற்றுலாத் துறையின்மூலம் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்படுகின்றன.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, திருமூர்த்தி மலை அடிவாரத்தில், திருமூர்த்தி அணையின் கரையில் அமைந்துள்ள அமணலிங்கேஸ்வரர் ஆலயம் அருவி உள்ள பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்கென தனியாக இட வசதி இல்லை. அனைத்து இடங்களும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. திருக்கோயிலுக்கு தேவையான நிலத்தை பெறுவதற்காக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P. No. 17185/2007—ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும், வனத் துறைமூலம் மலைவாழ் மக்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ள 34 தற்காலிகக் கடைகள் வாகனங்கள் வந்து திரும்பிச் செல்ல இடையூறாக உள்ளதால், திருக்கோயில் சார்பாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதாக திருக்கோயில் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறைமூலம் ரூ.8.45 இலட்சம் மதிப்பீட்டில் (சுற்றுலாத் துறை பங்கு ரூ.4.23 இலட்சம் + அறநிலையத் துறை பங்கு ரூ.4.22 இலட்சம்) ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கீழ்க்காணும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:

1. திருமூர்த்தி பஞ்சலிங்க நீர் வீழ்ச்சிக்கு செல்லும் பாதையில் பாதுகாப்பு இரும்பு கம்பி அமைத்தல்

2. பழுதடைந்த இரும்பு பாலத்தை சீர் செய்தல்

3. பாதையினைச் செப்பனிடுதல்

198—

சுற்றுலாத் தலம்

வினா எண் 33195—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, கடையக்குடி அணைக்கட்டு பூங்காவினை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறைமூலம் எந்தவொரு பகுதியினையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் சுற்றுலாத் துறையின்மூலம் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, கடையக்குடி ஹோல்ஸ் ஓர்த் அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலாத் துறைமூலம் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

199—

படகு குழாம்

வினா எண் 36711—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகத்தில் படகு குழாம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகத்தில் படகு குழாம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

200—

சுற்றுலாத் தலம்

வினா எண் 41432—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, முட்டம் கடற்கரைப் பகுதிகளை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரையில் 2004–2005 ஆம் நிதியாண்டில் மத்திய அரசு சுற்றுலாத் துறை நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தங்கும் விடுதிகள் மற்றும் உணவகம் கட்டப்பட்டு முட்டம் கிராமப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், 2005–2006 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரைப் பகுதிகளின் புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட மத்திய அரசு நிதியுதவி ரூ.10.00 இலட்சத்தில், பெண்கள் மற்றும் ஆண்களுக்கான உடைமாற்றும் அறை, கடற்கரையில் உள்ள குடில்களைப் புனரமைத்து இரும்பு வேலியமைத்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநிலத்தின் எந்தவொரு பகுதியும் சுற்றுலாத் தலமாக அரசால் அறிவிக்கப்படுவதில்லை. கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரையில் மேலும் அடிப்படை வசதிகள் செய்வது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

201—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 50399—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் உள்ள ஆயிரம் ஜன்னல் வீட்டை புதுப்பித்து, அப்பகுதியில் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ஐந்து விளக்கு ரோட்டின் அருகே அமைந்துள்ள ஆயிரம் ஜன்னல் வீடு, தனியாருக்கு சொந்தமான வீடாகும். அந்த வீட்டில் அதன் உரிமையாளர்கள் மற்றும் உறவினர்கள் வசித்து வருகிறார்கள். தனியாருக்கு சொந்தமான வீடாக இருப்பதால், அந்த ஆயிரம் ஜன்னல் வீட்டை சுற்றுலாத் துறை நிதிமூலம் புதுப்பித்து அடிப்படை வசதிகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

202—

கம்பிவட கார்

வினா எண் 51565—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காடு தொகுதி, ஏற்காட்டில் கேபிள் கார் வசதியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் ஏற்காடு சிறந்த கோடை வாசஸ்தலமாக திகழ்கிறது.

2016 பிப்ரவரி 20]

சேலத்திலிருந்து 32 கி.மீ தொலைவில் 20 கொண்டை ஊசி வளைவுகளை கொண்டுள்ளது. ஏற்காட்டில் அண்ணா பூங்கா, சிறுவர் பூங்கா, பகோடாபாயிண்டு, ஜென்ஸ் சீட், லேடிஸ் சீட், சேர்வராயன் கோயில் மற்றும் அண்ணாமலையார் கோயில் ஆகியவை பார்க்க வேண்டிய இடங்கள் ஆகும்.

2. தமிழ்நாட்டில் உள்ள கோடை வாசஸ்தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏலகிரி, ஏற்காடு மற்றும் கொல்லிமலை ஆகிய இடங்களில் கம்பிவட கார் அமைப்பது குறித்து தமிழ்நாடு நகர கட்டமைப்பு வளர்ச்சி நிதி லிமிடெட் (Tamil Nadu Urban Infrastructure Finance Service Ltd) *மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

203—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 51781—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, ஏற்காடு அடிவாரப் பகுதியில் அமைந்துள்ள குறுவம்பட்டி உயிரியல் பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சேலத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் ஏற்காடு அடிவாரத்தில் குருவம்பட்டி வன உயிரியல் பூங்கா அமைந்துள்ளது. மான், மயில், யானை, பறவைகள், முதலை மற்றும் பாம்பு வகைகள் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு உள்ளன. உயிரியல் பூங்கா முழுவதும் வனத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் 200 முதல் 300 வரையிலான சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பார்வையிடுகிறார்கள். தற்போது சுற்றுலாப் பயணிகளின் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் மின் வசதிகள் போதிய அளவில் உள்ளன. அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை புரியும் காலங்களில் சுற்றுலாத் துறையின்மூலம் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

204—

புதிய தொடக்கப் பள்ளி

வினா எண் 30005—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், ப.கொத்தனூர் காலனியில் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், ப.கொத்தனூர் காலனியில் தொடக்கப் பள்ளி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

205—

சமுதாயக் கூடம்

வினா எண் 31509—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கடம்போடு வாழ்வு ஊராட்சி ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான

2016 பிப்ரவரி 20]

நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. 2012–2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயக் கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 3 சமுதாயக் கூடங்களும் கட்டுவதற்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கடம்போடு வாழ்வு ஊராட்சி ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் அமைக்க போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

206—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32382—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, அரூர் பேரூராட்சி, 16–வது வார்டு அருகே பட்டு வளர்ச்சி துறைக்குச் சொந்தமான நிலத்தை அப்பகுதியில் உள்ள ஏழை ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச காலி வீட்டுமனைப் பட்டாவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் நகரம், பட்டு வளர்ச்சித் துறை நிலம், பட்டு வளர்ச்சித் துறை பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால், மேற்படி நிலத்தை ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாவாக மாற்ற இயலாது.

207—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 32684—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வானவாடி ஜே.ஜே. நகர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாய நலக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமுதாயநலக் கூடங்கள் கட்ட வேண்டி அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் பொது மக்கள்/சமுதாய அமைப்புகளிடமிருந்தும் பெறப்படுவதுடன் சட்டமன்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சமுதாயநலக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு சமுதாயநலக் கூடம் கூட கட்டி கொடுக்கப்பட முடியாத நிலை உள்ளது. எனினும் ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயநலக் கூடத்திற்கான இட வசதி மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயநலக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயநலக் கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 3 சமுதாயநலக் கூடங்களும் கட்ட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே ஆதி திராவிடர் காலனி பகுதியில் தாட்கோமூலம் சமுதாய நலக்கூடம் கட்ட போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது.

208—

மாணவர் விடுதி

வினா எண் 32692—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டையில் ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக கல்லூரி மாணவர்களுக்கு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டையில் ஆதி திராவிடர் நலக் கல்லூரி மாணவர் விடுதி 2013 ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, புதுக்கோட்டையில் கல்லூரி மாணவர் விடுதி புதிதாக துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

209—

புதிய கட்டடம்

வினா எண் 33883—திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவில்பட்டி தொகுதி, தெற்கு திட்டங்குளம் ஊராட்சி, ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

கோவில்பட்டி தொகுதி, தெற்கு திட்டங்குளம் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியானது தனியாருக்குச் சொந்தமான பள்ளியாகும். ஆதி திராவிடர் நலத் துறைக்குச் சொந்தமானது அன்று. எனவே, ஆதி திராவிடர் நலத் துறையால் புதிய பள்ளிக் கட்டடம் கட்ட இயலாது.

210—

தங்கும் விடுதி

வினா எண் 33949—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தக்குடியில் அரசு பள்ளி மாணவ மாணவியருக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் தங்கும் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதியில் ஏற்கெனவே 8 ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்பட்டு வருவதால் கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தக்குடியில் புதிதாக விடுதி துவங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

211—

தங்கும் விடுதி

வினா எண் 33950—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்க்கலைக்காடு ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவ மாணவியருக்கு தங்கும் விடுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதியில் ஏற்கெனவே 8 ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்பட்டு வருவதால் தற்போது புதிதாக விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

212—

தங்கும் விடுதி

வினா எண் 33951—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்ரவயலில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவ, மாணவியருக்கு தங்கும் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே 8 ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்பட்டு வருவதால் தற்போது புதிதாக விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

213—

மாணவியர் விடுதி

வினா எண் 35137—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், குமராட்சி கிராமத்தில் புதிய ஆதி திராவிடர் விடுதி

[2016 பிப்ரவரி 20

18–1–2013 முதல் தொடங்கப்பட்டு இயங்கி வருவதால் புதிதாக விடுதி துவங்க அவசியம் எழவில்லை.

214—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 35142—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம் ம.கொளக்குடி ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் சமுதாயநலக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமுதாயநலக் கூடங்கள் கட்ட வேண்டி அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் பொதுமக்கள்/சமுதாய அமைப்புகளிடமிருந்தும் பெறப்படுவதுடன் சட்டமன்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சமுதாயநலக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு சமுதாயநலக் கூடம்கூட கட்டி கொடுக்கப்பட முடியாத நிலை உள்ளது. எனினும் ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயநலக் கூடத்திற்கான இடவசதி மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயநலக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயநலக் கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 3 சமுதாயநலக் கூடங்களும் கட்ட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, ஆதி திராவிடர் காலனி பகுதியில் தாட்கோமூலம் சமுதாயநலக் கூடம் கட்ட போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது.

2016 பிப்ரவரி 20]
215—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 35144—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம் ம.உடையூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் சமுதாயநலக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமுதாயநலக் கூடங்கள் கட்ட வேண்டி அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் பொதுமக்கள்/சமுதாய அமைப்புகளிடமிருந்தும் பெறப்படுவதுடன் சட்டமன்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சமுதாயநலக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு சமுதாயநலக் கூடம்கூட கட்டி கொடுக்கப்பட முடியாத நிலை உள்ளது. எனினும் ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயநலக் கூடத்திற்கான இடவசதி மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயநலக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயநலக் கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 3 சமுதாயநலக் கூடங்களும் கட்ட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, ஆதி திராவிடர் காலனி பகுதியில் தாட்கோமூலம் சமுதாய நலக்கூடம் கட்ட போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது.

[2016 பிப்ரவரி 20

216—

தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

வினா எண் 35620—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பழங்குடியினருக்காக தொழிற்பயிற்சி நிறுவனங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (D) எண் 21, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 28–1–2013–ன்படி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி பழங்குடியின மாணவ/மாணவிகள் பயன்பெறும் வகையில் இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைமூலம் ரூ. 24.50 கோடி மதிப்பீட்டில் 1. கருமந்துறை, 2.கொல்லிமலை, 3. ஜமுனாமரத்தூர், 4. ஆனைக்கட்டி, 5. கூடலூர் ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி நிறுவனங்களை 2013–2014 முதல் துவக்கி செயல்படுத்திட அரசு உரிய செயல்முறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

217—

மாணவியர் விடுதி

வினா எண் 36134—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், சி.முட்லூரிலுள்ள அரசு கலைக் கல்லூரிக்கு ஆதி திராவிடர் நலத் துறைமூலம் மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 *பிப்ரவரி* 20]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சி.முட்லூர் கிராமத்தில் உள்ள கல்லூரியில் பயின்று வரும் மாணவியர்களுக்காக ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிதம்பரம் அரசு நந்தனார் பள்ளி வளாகத்தில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, புதிய ஆதி திராவிடர் நல விடுதி அமைக்க அவசியம் எழவில்லை.

218—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 39301—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, மாதானம் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதானம் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவது குறித்து தேவையின் அடிப்படையிலும், அரசின் நிதிநிலைமைக்கேற்பவும் பரிசீலிக்கப்படும்.

219—

மாணவியர் விடுதி

வினா எண் 41090—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளி ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் ஏற்கெனவே ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகள் உள்ளன. எனவே, புதிதாக ஆதி திராவிடர் நல விடுதி துவங்கிட அவசியம் எழவில்லை.

220—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 41097—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், நல்லாடை ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் நலத் துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, நல்லாடை ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவது குறித்து தேவையின் அடிப்படையிலும் அரசின் நிதி நிலைமைக்கேற்பவும் பரிசீலிக்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

221—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 41098—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவிடைமருதூர் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அணைக்குடியிலுள்ள ஆதி திராவிட நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அணைக்குடி கிராமத்தில் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளி ஏதும் இல்லை. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் அணைக்குடி கிராமம் உள்ளது. இங்கு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளி உள்ளது. இப்பள்ளியில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணாக்கர்கள் பயின்று வருவதால் இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

222—

இன்வெர்ட்டர் கருவி பொருத்துதல்

வினா எண் 41325—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்திலுள்ள அனைத்து அரசினர் ஆதி திராவிடர் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் விடுதிகளில் சீரான மின்சாரம் வழங்க இன்வெர்ட்டர் கருவி பொருத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்திலுள்ள அனைத்து அரசினர் ஆதி திராவிடர் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் விடுதிகளில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் இன்வெர்ட்டர் கருவி பொருத்துவதற்கு அவசியம் எழவில்லை.

223—

விடுதிகள் அமைத்தல்

வினா எண் 41336—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, தலைவாசல் ஒன்றியம், ஊனத்தூர் மற்றும் கெங்கவல்லி ஒன்றியம், வீரகனூர் ஆகிய பகுதிகளில் ஆதி திராவிடர் விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் ஒன்றியத்தில் ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக மாணவ/மாணவியர் விடுதி இயங்கி வருவதால் புதியதாக விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

224—

உண்டி உறைவிட தொடக்கப் பள்ளி

வினா எண் 42316—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

225—

சமுதாயநலக் கூடம்

வினா எண் 42348—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான் விடுதி ஊராட்சி, அதிரான் விடுதி ஆதி திராவிடர் காலனியில் சமுதாயநலக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமுதாயநலக் கூடங்கள் கட்ட வேண்டி அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் பொது மக்கள்/சமுதாய அமைப்புகளிடமிருந்தும் பெறப்படுவதுடன் சட்டமன்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சமுதாயநலக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக்கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு சமுதாயநலக் கூடம் கூட கட்டி கொடுக்கப்பட முடியாத நிலை

உள்ளது எனினும் ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடத்திற்கான இட வசதி மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கு 10 சமுதாயக்கூடங்களும், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 3 சமுதாயக்கூடங்களும் கட்ட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, ஆதி திராவிடர் காலனி பகுதியில் தாட்கோமூலம் சமுதாய நலக்கூடம் கட்ட போதுமான நிதி, தேவையான இடம் ஆகியவற்றின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது.

226—

புதிய தொடக்கப் பள்ளி

வினா எண் 43695—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கருப்பக்கோன் தெரு, ஆதி திராவிடர் காலனியில் புதிய தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக புதிய பள்ளிகள் எதுவும் துவக்கப்படுவதில்லை. அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகவே புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. அதனடிப்படையில் புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கருப்பக்கோன் தெரு, ஆதி திராவிடர் காலனியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்குவது குறித்து பள்ளிக்கல்வித் துறையுடன் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

227—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 48475—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெறும் பட்சத்தில் ஆய்வு செய்யப்பட்டு, நிலம் கையகம் செய்தபின், தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

228—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 48815—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகர் மற்றும் மடத்துக்குளம் வட்டம், பெருமாள்புதூர் உண்டு உறைவிட தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகர் மற்றும் மடத்துக்குளம் வட்டம், பெருமாள்புதூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப் பள்ளிகளில் போதிய இடவசதி இல்லாததாலும், மாணாக்கர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள காரணத்தாலும் மேற்கண்ட பள்ளிகளை நிலை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

229—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 48816—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அம்மாபட்டி ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிபட்டி ஊராட்சிக்குட்பட்ட அம்மாபட்டி ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியில் போதிய இடவசதி இல்லாததாலும், மாணாக்கர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள காரணத்தாலும் மேற்கண்ட பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]

230—

தொடக்கப் பள்ளி தொடங்குதல்

வினா எண் 50292—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு அவினாசிபாளையம் கிராம ஊராட்சி, சின்ன வேலாயுதம்பாளையம் ஆதி திராவிடர் காலனியிலுள்ள குழந்தைகளுக்கு சின்ன வேலாயுதம்பாளையத்தில் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு அவினாசிபாளையம் கிராம ஊராட்சி, சின்ன வேலாயுதம்பாளையம் ஆதி திராவிடர் காலனியிலுள்ள குழந்தைகளுக்கு சின்ன வேலாயுதம்பாளையத்தில் தொடக்கப் பள்ளி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

231—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 51615—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, மாதானம் ஊராட்சியிலுள்ள அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதானம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவது குறித்து தேவையின் அடிப்படையிலும், அரசின் நிதிநிலைமைக்கேற்பவும் பரிசீலிக்கப்படும்.

232—

உண்டி உறைவிட தொடக்கப் பள்ளி

வினா எண் 51663—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, மூங்கில் ஊரணி பகுதியில் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, மூங்கில் ஊரணி பகுதியில் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

233—

மாணவியர் விடுதி

வினா எண் 53570—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக ஓர் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, உத்தங்கரையில் ஏற்கெனவே அரசு ஆதி திராவிடர் நல பெண்கள் விடுதி உள்ளது. அதே விடுதியில் கூடுதல் அறைகள் கட்டினால் போதுமானது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

234—

மாணவியர் விடுதி

வினா எண் 56281—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பேரூராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பேரூராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் ஏற்கெனவே மாணவர் விடுதியும் மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. இதில், முறையே 55 மாணவர்களும், 55 மாணவிகளும் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இவ்விரு விடுதிகளும், அலங்காநல்லூர் பேரூராட்சியிலேயே இயங்கி வருவதாலும், விடுதி சேர்க்கையின்போது விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதாலும், அலங்காநல்லூர் பேரூராட்சி பகுதி ஆதி திராவிடர் இன மாணவர்களுக்கு இவ்விரு விடுதிகளுமே போதுமானதாக உள்ளன. எனவே, புதிய

[2016 பிப்ரவரி 20

மாணவர் விடுதி அமைக்க அவசியமில்லை என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

235—

மீன் பதனிடும் தொழிற்கூடம்

வினா எண் 29550—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், காவேரிபட்டி, கோனேரிபட்டி, குள்ளம்பட்டி ஆகிய பகுதிகளில் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட பகுதிகளில் உள்நாட்டு மீன்பிடிப்பில் மீன் இனங்கள் உயர்ரக மீன்கள் மற்றும் மீன் உற்பத்தி போன்றவை குறைவாக உள்ள காரணத்தால் உள்நாட்டு மீன்களை பதப்படுத்தி, பதப்படுத்தப்பட்ட மீன் பொருட்களை தயாரிப்பதற்கு ஏதுவாக மீன்பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. கடலோர மாவட்டங்களில் மட்டும் மீன்பதனிடும் பூங்காக்கள் அரசு தனியார் பங்களிப்புடன் அமைக்க அரசு தற்பொழுது திட்டமிட்டு அதற்குரிய செயல்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆகையால், சங்கரி சட்டப்பேரவை தொகுதியில் உள்ள அரசிராமணி காவேரிபட்டி, கோனேரிப்பட்டி, குள்ளம்பட்டி ஆகிய கிராமங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

236—

மீன் வளர்ப்பு

வினா எண் 29788—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) பெரியகுளம் தொகுதி, சோத்துப்பாறை அணையில் மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதியில் உள்ள சோத்துப்பாறை அணை பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பு மஞ்சளாறு வடிநிலக் கோட்டம் கட்டுப்பாட்டில் உள்ளதால் மீன் துறை வாயிலாக மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ள வழிவகை இல்லை.

(ஆ) எழாது.

237—

படகு கட்டும் தளம்

வினா எண் 30940—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் படகு கட்டும் தளம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் படகு கட்டும் தளம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

238—

மீன் பதனிடும் பூங்கா

வினா எண் 32215—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) குளச்சல் தொகுதி, குளச்சலில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சலில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

239—

கடல் உணவு பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 32884—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதியில் கடல் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் கட்டுமானப் பணி முடிவுற்று அத்துறைமுகம் பயன்பாட்டிற்கு வரும்போது கடல் உணவுப் பதப்படுத்தும் நிலையம் அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

240—

கடல்சார் ஆராய்ச்சி மையம்

வினா எண் 38183—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் கடல்சார் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் கடல்சார் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அரசிடம் இல்லை.

241—

மீன் இறங்குதளம்

வினா எண் 42953—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கடியப்பட்டணம் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கடியப்பட்டணம் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

242—

மீன் இறங்குதளம்

வினா எண் 42954—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

243—

மீன் இறங்குதளம்

வினா எண் 42955—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

244—

மீன் இறங்குதளம்

வினா எண் 42956—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், புத்தன் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், புத்தன் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

245—

மீன் இறங்குதளம்

வினா எண் 42957—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முள்ளூர் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், முள்ளூர் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

246—

மீன் இறங்குதளம்

வினா எண் 42959—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

247—

மீன் இறங்குதளம்

வினா எண் 42960—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், வள்ளவிளை மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், வள்ளவிளை மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

248—

மீன் இறங்குதளம்

வினா எண் 42961—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி காலனி மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

249—

மீன் இறங்குதளம்

வினா எண் 42963—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மிடாலம் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மிடாலம் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

250—

மீன் இறங்குதளம்

வினா எண் 43693—திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, மூக்கையூரில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகளை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வின் அடிப்படையில், விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உரிய நிதி ஒப்பளிப்புடன் மூக்கையூரில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

251—

மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 46780—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பகுதி மீனவ கிராமங்களில் உள்ள மீன்பிடி படகுகள் கோரையாற்றில் நிறுத்தப்பட்டு மீன்பிடிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கோரையாற்றின் ஆழம் (1 அடி முதல் 1.5 அடி வரை) மிக குறைவாகவே உள்ளதால் திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

252—

பசுமை வீடுகள்

வினா எண் 46781—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஜாம்பானோடையிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாகவும் மற்றும் 3 சென்ட் நிலம் உள்ள மீனவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு மீன் வளத் துறையால் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம், ஜாம்பானோடையிலுள்ள மீனவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடுகள் கட்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

253—

மீனவர் ஓய்வுக்கூடம்

வினா எண் 51169—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி, ராஜாக்கமங்கலம்துறையில் மீனவர் ஓய்வுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராஜாக்கமங்கலம் ஊராட்சியில் உள்ள ராஜாக்கமங்கலம்துறையில் 1999–2000 ஆம் ஆண்டு ஊராட்சி

[2016 பிப்ரவரி 20

நிதியின்மூலம் ஏற்கெனவே மீனவர் ஓய்வுக்கூடம் ஒன்று கட்டப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, கூடுதலாக ஒரு ஓய்வுக்கூடம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

254—

நவீன மீன் விதைப்பண்ணை

வினா எண் 53861—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டை பேரூராட்சியில் நவீன மீன் விதைப்பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டையில் மீன் வளத் துறை சார்ந்த மீன்குஞ்சு வளர்ப்பு மையம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

255—

மீன் இறங்குதளம்

வினா எண் 55417—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், கீரைகாரனூர் ஊராட்சியில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், கீரைக்காரனூர் ஊராட்சியில் மீன் இறங்குதளம் அமைத்திடும் திட்டம் அரசின் செயல்பாட்டில் இல்லை. உள்நாட்டு மீன்வளத்தின் நீர்வள ஆதார சூழலில் இது சாத்தியமில்லை.

256—

விலையில்லா மீன்பிடி பரிசல்

வினா எண் 55911—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அணையில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விலையில்லா மீன்பிடி பரிசல் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணையில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விலையில்லா மீன்பிடி பரிசல் வழங்கிடும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

257—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 32502—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலத்திலுள்ள தொழில்நுட்ப பூங்காவினை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலத்திலுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

258—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 34367—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

259—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 34371—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

260—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 34878—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

261—

மென்பொருள் தொழிற்பூங்கா

வினா எண் 35237—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் தொழிற்பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

262—

கணினித் தமிழை மேம்படுத்துதல்

வினா எண் 35754—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கணினித் தமிழை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கணினித் தமிழை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. கணினித் தமிழை மேம்படுத்தும்பொருட்டு பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டங்களை வகுத்து நெறிப்படுத்த உயர்நிலைக் குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

263—

மின்னணுக் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு

வினா எண் 52246—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மின்னணுக் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின்னணுக் கழிவு கொள்கையின்படி, இந்தக் கொள்கையை செயல்படுத்துவதன் பொறுப்பு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடையது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மின்னணுக் கழிவு மேலாண்மை குறித்து நிறைய விழிப்புணர்வு செயல்பாடுகளை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் மின்னணுக் கழிவு மேலாண்மை குறித்து அண்ணா பல்கலைக்கழக ஆய்வக அறிஞர், பேராசிரியர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனம், தேசிய மெட்டலர்ஜிக்கல் ஆய்வக அறிஞர் அடங்கிய குழு உருவாக்கப்பட்டது. மேலும், முக்கிய பயனீட்டாளர்கள், அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில் அமைப்பு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சென்னை துறைமுகம் ஆகிய அலுவலர்களின் பரிந்துரையின்பேரில் மின்னணுக் கழிவு மேலாண்மை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

264—

மின்காந்த அலைகளைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 55636—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செல்போன்கள்மூலம் வெளிப்படும் மின்காந்த அலைகளால் உடலுக்கு ஏற்படும் தீமைகளை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செல்போன்கள் மற்றும் செல்போன் கோபுரங்களிலிருந்து வெளியாகும் மின்காந்த அலைகளை கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகளை மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை வெளியிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.

265—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28735—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், வேலம்பாளையம் கிராம ஊராட்சி, அண்ணாநகர் மேற்கு மற்றும் கிழக்கு மந்தை புறம்போக்கில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், வேலம்பாளையம் கிராமம், க.ச.76/1 மந்தைப் புறம்போக்கினை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து 104 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

266—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28921—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் கிராம ஊராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் கிராம ஊராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நத்தம் காலியிடம் ஏதுமில்லை என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

267—

நில அளவை பயிற்சி மையம்

வினா எண் 28960—திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் நில அளவை பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் ஏற்கெனவே நில அளவை பயிற்சி மையம் அமைக்கப்பட்டு பணியாளர்களுக்கு நில அளவை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, கும்மிடிப்பூண்டியில் புதியதாக நில அளவை பயிற்சி நிலையம் தோற்றுவிக்கும் நிலை எழவில்லை.

268—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28968—திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சி, வட்டாட்சியர் அலுவலகம் பின்புறம் உள்ள புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்கோட்டை வட்டம், ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் பின்புறம் உள்ள நிலம் 404/1ஏ வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான அரசு விதைப் பண்ணை நிலமாகும். எனவே, அங்கு யாருக்கும் பட்டா வழங்க இயலாது.

269—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 29470—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி வட்டம், சங்கரி கிராமம், புல எண் 162/1—ல் கச்சேரி என வகைபாடு செய்யப்பட்ட நிலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், வேளாண்மை தகவல் மையம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சார் கருவூல அலுவலகம், சிறைச்சாலை, வேளாண்மை அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வளாகத்தில் 1.00.0 ஹெக்டேர் நிலத்தில் புதிய ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் கட்ட முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய பிரேரணைகள் கூடுதல்

2016 பிப்ரவரி 20]

தலைமைச் செயலாளர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் வழியாக அரசுக்கு வரப்பெற்றவுடன், சங்கரி தொகுதியில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

270—

புதிய வட்டம் உருவாக்குதல்

வினா எண் 29596—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 118, வருவாய் [வ.நி.1 (1)] துறை, நாள் 28–2–2011–ல் புதிய முத்துப்பேட்டை வட்டம் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

271—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 29815—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.202.86 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 357, வருவாய்த் துறை, நாள் 10–10–2012–ல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

272—

தனி வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 30139—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்டத்திற்கு உடுமலையில் தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர்) அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திற்குத் தனியாக ஆதி திராவிடர் நல வட்டாட்சியர் அலுவலகம் துவங்க ஆதி திராவிடர் நலத் துறை ஆணையர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியரால் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன என திருப்பூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் தெரிவித்துள்ளார்.

2016 பிப்ரவரி 20]

273—

பட்டா

வினா எண் 31605—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

5 ஆண்டுகளுக்கு மேல் நத்தம் புறம்போக்கில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்கும் திட்டம்மூலம் தமிழகத்தில் உள்ள பயனாளிகள் அனைவருக்கும் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

நத்தம் புறம்போக்கு என்பது வீட்டுமனைக்கு ஒப்படை செய்ய உகந்த நிலம். எனவே, அதில் ஒப்படை செய்ய தடையில்லை. 5 ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து, வீடு கட்டி வசிப்பவர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு வரன்முறைப்படுத்தி வீட்டுமனை ஒப்படை வழங்கப்படுகிறது. ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்தி வீட்டுமனை ஒப்படை வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ், நத்தம் புறம்போக்கில் வசிப்பவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

274—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 31684—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், திருமணி எம்.ஜி.ஆர். நகரில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யார் ஒன்றியம், திருமணி கிராமம், எம்.ஜி.ஆர். நகர், ச.எண் 416/4–ல் 55 நபர்கள் கூரை வீடு கட்டி வசித்து வருகிறார்கள். மேற்படி இடம் பெரிய ஏரி என்ற நீர்நிலை புறம்போக்கு என்பதாலும், அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20–1–1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29–4–2003–ன்படி, ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவின்படியும் நீர்நிலைப் புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், உச்ச நீதிமன்றத்தில் நீர்நிலைப் புறம்போக்குகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவதை எதிர்த்து சிவகாசி வரி செலுத்துவோர் சங்கம் தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளதாலும், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

275—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32267 திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியத்தில் உள்ள மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி கிராமத்தில் கோடந்தூர், தளிஞ்சி,

பொறுப்பார் செட்டில்மென்ட்டுகளும், திருமூர்த்தி நகர் கிராமத்தில், திருமூர்த்தி நகர், குருமலை, வசம்பகுளம், சேலையூத்து, பூச்சிகொட்டான்பாறை செட்டில்மென்ட்டுகளும், ஜல்லிப்பட்டி கிராமத்தில் ஈசல்தட்டு, ஆட்டுமலை செட்டில்மென்ட்டுகளும் உள்ளன. கல்லாபுரம் கிராமத்தில் உள்ள கரட்டுப்பதி மற்றும் திருமூர்த்தி கிராமத்திலுள்ள திருமூர்த்தி நகர் செட்டில்மென்ட் தவிர, இதர செட்டில்மென்ட் அனைத்தும் ரிசர்வ் வனப் பகுதிகளாகும். வனப் பகுதியில் இவர்கள் வசித்து வருவதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. ஆண்டியகவுண்டனூர் கிராமம், அமராவதி நகர்ப் பகுதியில் புல எண் 656/2—ல் 27 மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு 31—3—2015—க்குள் பட்டா வழங்கப்பட்டுவிடும்.

276—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 32915—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

277—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 33142—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி வடக்கு எம்.ஜி.ஆர். ஆதி திராவிடர் காலனி, புல எண் 92/V2 மற்றும் தாமரைப்பட்டி புல எண் 419/2ஏ–ல் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி வடக்கு எம்.ஜி.ஆர். ஆதி திராவிடர் காலனி புல எண் 92 மற்றும் தாமரைப்பட்டி புல எண் 419/2ஏ–ல் காலியாக உள்ள மனையிடங்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்து, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

278—

புதிய வட்டம் அமைத்தல்

வினா எண் 33156—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்க, அரசால் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளை நிறைவு செய்யாத நிலையில், இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு வட்டம் தோற்றுவிக்க இயலாது.

2016 பிப்ரவரி 20]

279—

தனி வட்டம் அமைத்தல்

வினா எண் 33174—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம், அஞ்செட்டியை மையமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம், அஞ்செட்டியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் குறிப்பிட்டுள்ள அளவுகோல்கள் பூர்த்தி செய்யவில்லை என்பதால், அஞ்செட்டியில் புதிய வட்டம் துவக்க வாய்ப்பில்லை.

280—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 33390—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் வசிக்கும் நலிந்த நாடக நடிகர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டத்தில் நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு காரைக்குடி உள் வட்டம், கழனிவாசல் குரூப்பில் புல எண் 259,

[2016 பிப்ரவரி 20

நத்தம் காலியிடத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 100 நபர்களில், விதிமுறைகளைப் பின்பற்றி தகுதியான நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

281—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

வினா எண் 33455—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், சருகுணி பிர்க்காவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை வட்டத்தில் சருகுணி வருவாய் ஆய்வாளருக்கு திருவேகம்பத்து கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் உள்ளது.

282—

பட்டா

வினா எண் 34626—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, அனுப்பானடி, அம்பேத்கர் காலனி மற்றும் கீழ்மதுரை காலனி பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கிழக்கு மதுரை கிராமம், புல எண் 2597/1–ன் மொத்த விஸ்தீரணம் 33.92 ஏக்கர் நிலம் கிராமக் கணக்குகளில் 'பெரிய கண்மாய்' என பதியப்பட்டுள்ளது. இப்புலத்தில் சுமார் 1,266 நபர்கள் வீடு கட்டி வசித்து வருகின்றனர். இப்புலம் கிராமக் கணக்குகளில் கண்மாய் என்று நீர்நிலை புறம்புகல் என பதியப்பட்டுள்ளதால், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

283—

கிராம நிருவாக அலுவலகம்

வினா எண் 34732—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கீரைப்பாளையம் ஒன்றியம், கூடலையாத்தூர் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவலக்குடி வருவாய்க் கிராமத்தில் அடங்கியுள்ள உட்கடை கிராமம் கூடலையாத்தூர் எனவும், காவலக்குடி வருவாய்க் கிராமத்திற்கும், உட்கடை கிராமமான கூடலையாத்தூர் கிராமத்திற்கும் சேர்த்து காவலக்குடியில் கிராம நிருவாக அலுவலகம் கட்டப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, கூடலையாத்தூர் கிராமத்திற்கு தனியாக கிராம நிருவாக அலுவலகம் தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

284—

பட்டா

வினா எண் 35690—திரு. பி.ஆர். மனோகர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாலாஜா வட்டம், சோளிங்கர் ஒன்றியம், பாண்டியநல்லூர் ஊராட்சி, காமதேனு நகரில் உள்ளவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் ஒன்றியம், பாண்டியநல்லூர் ஊராட்சி, காமதேனு நகர், சர்வே எண் 158பி/1, தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கு புல வரைபடத்தில் உள்ள பரப்பிற்கும், அனுபோகத்தில் உள்ளதற்கும் முரண்பாடுகள் காணப்படுவதால், புதியதாக நில அளவை ஆவணங்கள் தயார் செய்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

285—

பட்டா

வினா எண் 36391—திரு. மு. முருகன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி வட்டம், கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் பகுதியில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், பெரியகுளம் குரூப் கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் பகுதிகளில் புல எண் 572/

5பி1, விஸ்தீரணம் 0.17.0 எக்டேர் 572/6ஏ விஸ்தீரணம் 0.18.0 எக்டேர் மற்றும் 572/5பி2 விஸ்தீரணம் 0.18.0 எக்டேர் ஆக மொத்தம் 0.53.0 எக்டேர் இடமானது கிராமக் கணக்கில் சர்க்கார் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசு என தாக்கலாகியுள்ளது. மேற்படி இடத்தில் சுமார் 54 மீனவ குடும்பங்கள் சுனாமி திட்டத்தின்கீழ் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர்.

மேற்படி இடம் சர்க்கார் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசாக உள்ளதால், கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

286—

புதிய வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 36402—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, அரூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து இது குறித்து செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் அரசளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

287—

தனி வட்டம்

வினா எண் 36669—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

ஆனைமலை ஒன்றியத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குவது தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன்மொழிவுகள் வரப்பெற்றுள்ளன. உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்குப் பின்னர், மேற்படி வட்டம் உருவாக்குவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

288—

இலவச பட்டா

வினா எண் 37687—திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை வடக்கு தொகுதி, கடச்சனேந்தல் அந்தனேரி கண்மாய் பகுதியிலுள்ள மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தொகுதி, கடச்சனேந்தல் அந்தனேரி பகுதியானது, கிராம கணக்குகளில் பீ.பீ. குளம் கண்மாய் என வகைபாடு செய்யப்பட்டுள்ளதாலும், மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதாலும், அதிக விலைமதிப்புள்ள இடமாக இருப்பதாலும், இப்புலத்தில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]

289—

இயற்கை பேரிடர் நிவாரணம்

வினா எண் 37748—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் இயற்கை பேரிடரினால் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளுக்கு அதிக நிதி வழங்க அரசு முன்வருமா?

விடை

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் குடிசைகளுக்கு மத்திய அரசின் மாநில பேரிடர் நிவாரண நிதி வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ரூ.3,000/- நிவாரணமாக வழங்கப்பட வேண்டும். ஆனால், இயற்கைச் சீற்றங்களால் முழுமையாக பாதிக்கப்படும் குடிசைகளுக்கு ரூ.5,000/- மற்றும் பகுதியாக பாதிக்கப்படும் குடிசைகளுக்கு ரூ.2,500/- நிவாரணமாக தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி, ஒரு சேலை, ஒரு வேட்டி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்படுகின்றன. இயற்கைச் சீற்றங்களால் முழுமையாக பாதிக்கப்பட்ட பக்கா வீடுகளுக்கு (Pucca) ரூ.35,000/-, கச்சா வீடுகளுக்கு (Kutcha) ரூ.10,000/-, மிகவும் பாதிப்படைந்த பக்கா வீடுகளுக்கு (Pucca) ரூ.5,000/- மற்றும் கச்சா வீடுகளுக்கு (Kutcha) ரூ.2,500/- நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

290—

வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 38000—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் புதிய வருவாய் வட்டத்திற்கு கண்ணாடிப்புதூர் கிராமம் புல எண் 152/எ மற்றும்

154/எ4–ல் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 309, வருவாய்த் துறை, நாள் 12–8–2013–ன்படி திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சர்க்கார் கண்ணாடிப்புதூர் கிராமம், ச.எண் 152/ஏ, 154/4–ல் 0.33.0 ஹெக்டேர் நிலத்தில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

291—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 38464—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

292—

பட்டா

வினா எண் 38541—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரம் நகராட்சி, பல்லவர் மேடு பகுதியிலுள்ள மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் வட்டம் மற்றும் நகரம், பல்லவர் மேடு, பிளாக் எண் 7, வார்டு எண் 3, நகர அளவை எண் 390/1–ல் 4.20 ஏக்கர் நிலம் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்திற்குச் சொந்தமான பட்டா நிலமாகும்.

மேற்படி புலம் பட்டா நிலம் என்பதால், நில எடுப்பு செய்யப்பட வேண்டும். நில உரிமையாளரான இந்து சமய அறநிலையத் துறையினர் வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பு ஆகியவற்றின் உயர் மதிப்பில் 150 சதவீதத்தை வழங்க கோருகின்றனர். இதுகுறித்து நில மதிப்பு நிர்ணயம் செய்து, தகுதியுள்ள அருந்ததியர் இன மக்களுக்கு மனைப் பட்டா வழங்க ஆதி திராவிடர் நலத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

293—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 41228—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், சோலூர் 4–வது வார்டில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் வட்டம், சோலூர் கிராமம், புல எண் 65 மற்றும் 66 ஆகிய புலங்களில் மொத்தப் பரப்பு 0.71.0 ஏர்ஸ் ஆகும். இது ஓடை புறம்போக்கு என கிராம கணக்குகளில்

வகைபாடு செய்யப்பட்ட இடமாகும். இதில் சுமார் 36 நபர்கள் வீடுகட்டி வசித்து வருகின்றனர். மேற்படி இடம் ஏற்கெனவே 4—வது வார்டு எனவும், தற்போது இது 6—வது வார்டு எனவும் உள்ளது. மேற்படி இடம் நீர்நிலை புறம்போக்கு என்பதால், வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு தடை செய்யப்பட்ட இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

294—

புதிய மாவட்டம் உருவாக்குதல்

வினா எண் 41451—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி, கிணத்துகடவு, வால்பாறை, தொண்டாமுத்தூர், உடுமலை, மடத்துக்குளம் ஆகிய தொகுதிகளை இணைத்து பொள்ளாச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பிரித்து பொள்ளாச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

295—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 41561—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கவிநாடு மேற்கு ஊராட்சி, மறவப்பட்டியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், மறவப்பட்டி கிராமத்தில் சுமார் 30 வீடுகளில் ஆதி திராவிட இன மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் வசிக்கும் வீட்டிற்கு வீட்டுமனைப் பட்டா உள்ளது. ஒரே வீட்டில் இரண்டு, மூன்று குடும்பங்களாக வசிக்கும் மக்களுக்கு அக்கிராமத்தின் அருகில் வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான அரசு புறம்போக்கு நிலம் இல்லாததால் 27–3–1997–ல் சுமார் 25 நபர்களுக்கு புதுக்கோட்டை வட்டம், பெருங்களூர் கிராமத்தில் புல எண் 572/2–ல் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் நிலமெடுப்பு செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது பட்டா வழங்கக்கூடிய தகுதியான நபர்கள் யாரும் இல்லை.

296—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 43076—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், பெத்தவேப்பம்பட்டு ஊராட்சி, இடையன்பள்ளம் கிராமத்தில் அரசு நத்தம் புறம்போக்கில் வசித்துவரும் பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், பெத்தவேப்பம்பட்டு ஊராட்சி, இடையன்பள்ளம்

கிராமம், சர்வே எண் 278/2, கிராம நத்தம் புறம்போக்கில் மொத்தம் 38 நபர்களில், 26 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 நபர்கள், மனை மதிப்பு செலுத்தும்பட்சத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

297—

வட்டம் இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 43240—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, விளவங்கோடு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது 4 வட்டங்கள் உள்ளன. அதில் எந்தவொரு வட்டத்தினை பிரிப்பதனாலும், அதில் உட்பட்ட ஊராட்சி ஒன்றியம் இரண்டு வட்ட எல்லைக்குள் சேர வாய்ப்புள்ளது. இது அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் வழங்கப்பட்ட வட்டங்கள் பிரித்தல் தொடர்பான அளவுகோல்களுக்கு எதிர்மறையாக உள்ளது. எனவே, பத்மனாபபுரம் வருவாய்க் கோட்டத்திற்குட்பட்ட விளவங்கோடு வட்டத்தைப் பிரிக்க வழிவகை இல்லை.

298—

வட்டம் பிரித்தல்

வினா எண் 43243—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தினைப் பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தைப் பிரித்து, புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, நாள் 9–6–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படி, புதிய வட்டத்தில் குறைந்த அளவு 30 வருவாய் கிராமங்கள் இருக்க வேண்டும். மக்கள்தொகை குறைந்தபட்சம் 1,00,000–மும், பரப்பளவு குறைந்த அளவு 250 சதுர கிலோ மீட்டரும் இருக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்பிபடி 4 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட கீழ்க்காணும் 3 வட்டங்கள் உள்ளன. அவை 1. அகஸ்தீஸ்வரம், 2. கல்குளம் மற்றும் 3. விளவங்கோடு. இவ்வட்டங்களைப் பிரித்து புதிய வட்டங்கள் உருவாக்கும்பொருட்டு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன்மொழிவுகள் பெற்று, மேற்படி முன்மொழிவுகள் அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே, அரசால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இருப்பினும், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தினைப் பிரித்தல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

299—

பட்டா

வினா எண் 43454—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டாம்பட்டி (R.S.) ஓடை புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரும் மக்களுக்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்குவது குறித்து அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டாம்பட்டி தரப்பு சாமாண்டஅள்ளி கிராம புல எண் 317 பரப்பு 1.22.5 ஹெக்டேர் ஓடை புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 14 நபர்கள் வில்லை மற்றும் தார்சு வீடுகட்டி வசித்து வருகின்றனர். மேற்படி புலம் கிராமக் கணக்குகளில் ஓடை என தாக்கலாகியுள்ளதால், அரசாணை எண் 41, வருவாய்த் துறை, நாள் 20–1–87 மற்றும் அரசாணை எண் 712, வருவாய்த் துறை, நாள் 29–7–1997–ன்படி, மேற்படி (ஓடை) நீர்நிலை புறம்போக்கு நிலங்கள் அரசால் தடை விதிக்கப்பட்ட இனம் என்பதால் மேற்படி புலத்தில் வீடு கட்டி வசித்துவரும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விதிகளில் இடமில்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

300—

வருவாய்க் கோட்டம் அமைத்தல்

வினா எண் 43558—திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாடனை வட்டத்தினை இரண்டாகப் பிரித்து, ஆர்.எஸ். மங்களத்தை தலைமையிடமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகமும், திருவாடனையை தலைமையிடமாகக் கொண்டு வருவாய்க் கோட்டமும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் கோட்டத்தில் இராமேஸ்வரம்–1, இராமநாதபுரம்–2, திருவாடனை–3 என 3 வட்டங்கள் உள்ளன. தற்போதைய இராமநாதபுரம் கோட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி

அமைந்துள்ளது. ஆனால், மக்கள்தொகை மற்றும் பரப்பளவு அடிப்படையில் திருவாடனை வட்டத்தை திருவாடனை மற்றும் ஆர்.எஸ். மங்களம் என இரு வட்டங்களாகப் பிரித்திட அரசாணையின்படி வழிவகை இல்லை. மேலும், திருவாடனையை தலைமையிடமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைப்பதற்கு காரணிகள் ஏதுமில்லை.

301—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 44068—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரிலுள்ள பிற்பட்ட முஸ்லீம்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்ட வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு புறம்போக்கு நிலங்களில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் வசித்து வருபவர்களின் விண்ணப்பத்தின்பேரில் விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

302—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 44075—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலுள்ள உலமாக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள உலமாக்களின் விண்ணப்பங்கள் வரப்பெறும் பட்சத்தில் தகுதியான புறம்போக்கு புலமாக இருப்பின் மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

303—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 44385—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சி, தார்வழி II–பகுதியில் 30 ஆண்டுகளாக வசிக்கும் இருளர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம் மற்றும் நகரம், தார்வழி–2, வார்டு–B, பிளாக்–I, டி.எஸ்.எண் 6, அரசு புறம்போக்கில் இருளர் இன மக்கள் வசித்துவரும் புலமானது ஒதுக்கப்பட்ட காடுகளாக (Forest Margin Condition) உள்ளது. ஒதுக்கப்பட்ட காடுகளுக்கு பட்டா வழங்க தடையுத்தரவு உள்ளதால், மேற்படி இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

304—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 47358—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகரம், 31–வது வட்டம், அரசு மருத்துவமனைக்கு பின்புறம் அகழிமேட்டில் வசித்து வருபவர்களுக்கு பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி சட்டமன்ற (தொகுதி) ஆரணி வட்டம் மற்றும் நகரம், 31–வது வட்டம், அரசு மருத்துவமனைக்கு பின்புறம் ஆரணி C/5 பிளாக், T.S.No.3, C/3 பிளாக், T.S.No.2 அகழி புறம்போக்கில் ஆக்ரமணம் செய்யப்பட்டு கூரைவீடு, ஓட்டுவீடு, மெத்தை வீடு கட்டி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிலர் அனுபவித்து வருகின்றனர். அகழி புறம்போக்கு நீர்நிலை புறம்போக்கு என்பதாலும் அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20–1–1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29–4–2003–ன்படி ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதாலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவின்படியும் நீர்நிலைப் புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், உச்ச நீதிமன்றத்தில் நீர்நிலைப் புறம்போக்குகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவதை எதிர்த்து சிவகாசி வரி செலுத்துவோர் சங்கம் தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளதாலும், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

305—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 47459—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், மொரப்பந்தாங்கல் மதுரா ஒண்டி குடிசையிலுள்ள 13 வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி சட்டமன்றத் தொகுதி, ஆரணி வட்டம், மொரப்பந்தாங்கல் மதுரா ஒண்டி குடிசை கிராமத்தில் வண்டிப்பாதை புறம்போக்கில் சர்வே எண் 91–ல் 13 நபர்கள் வீடுகள் கட்டி ஆக்கிரமணம் செய்துள்ளனர். மேற்படி இடத்தினை ஊர் பொதுமக்கள் வழிப்பாதையாக பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி, நிலத்தில் வீடுகள் கட்டி ஆக்கிரமணம் செய்துள்ள 13 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க கிராமத்தில் ஆட்சேபணை உள்ளதால் பட்டா வழங்க இயலவில்லை.

306—

வருவாய் வட்டம் அமைத்தல்

வினா எண் 47647—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, திசையன்விளையை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 279, நாள் 9–6–2003–ன்படி புதிய வட்டம் அமைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை திசையன்விளை வட்டம் பூர்த்தி செய்யாததால், புதிய திசையன்விளை வருவாய் வட்டம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

307—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 48425—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட நொளம்பூர் கிராமம், கிராம நத்தத்தில் (ச.எண் 265/3) வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தில் உள்ள கிராம நத்தம் நிலங்களில் வசித்துவரும் தகுதியுள்ள மக்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின்படி தனி வட்டாட்சியர் (நத்தம் நிலவரித் திட்டம்), அம்பத்தூர் அலுவலகத்தின்மூலம் ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

308—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 48426—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரவாயல் வட்டத்திற்குட்பட்ட சர்வே எண் 128/3–ல் வசித்து வரும் மக்களுக்கு பட்டா மற்றும் போரூர் லட்சுமி நகர் விஸ்தரிப்புப் பகுதிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

போரூர் கிராமத்தில் புல எண் 128–ல் 1, 2 உட்பிரிவுகள் மட்டுமே உள்ளது. 128/3 இல்லை. மேலும், லஷ்மிநகர் விஸ்தரிப்பு முழுவதும் பட்டா நிலமாகும். இந்த நகரை ஒட்டியுள்ள பகுதியில் புல எண் 143–குளம் மற்றும் புல எண் 17–மேய்க்கால் புறம்போக்கு வகைகளாக உள்ளன. இப்பகுதி மாநகராட்சி எல்லைக்குட்பட்டுள்ளதால், (நகர்ப்புற எல்லை) ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்க வழிவகை இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

309—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 48434—திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி, 92—வது வட்டம், டாக்டர் அம்பேத்கர் தெரு, காந்தி தெரு, சியோன் தெரு, பாரதிதாசன் நகர் ஆகிய பகுதிகளிலுள்ள கிராம நத்தத்தில் வசிக்கும் மக்களக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி, 92—வது வட்டம், டாக்டர் அம்பேத்கர் தெரு, காந்தி தெரு, சியோன் தெரு, பாரதிதாசன் நகர் ஆகிய பகுதிகள் நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் வருவதால் நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதிவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

310—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 48435—திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, சென்னை மாநகராட்சி, 148—வது வட்டம், CDN *நகர், சர்வே எண் 296, 298/1, 298/2, 299/1, 300, 302, 303, 310, 311, 312 மற்றும் 22/2—ல் உள்ள மக்களுக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

மதுரவாயல் தொகுதி, சென்னை மாநகராட்சி, 148—வது வட்டம், CDN *நகர், புல எண் 296, 298/1, 298/2, 299/1, 300, 302, 303, 310, 311, 312 மற்றும் 22/2 ஆகிய புல எண்கள் கிராம கணக்குகளில்*

2016 பிப்ரவரி 20]

நகர்ப்புற நில உச்சவரம்பு திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடங்களில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

311—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 48438—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரவாயல் தொகுதி, சென்னை மாநகராட்சி, 147—வது வட்டம், ஸ்ரீதேவி நகரில் வசிக்கும் 115 குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

மதுரவாயல் தொகுதி, சென்னை மாநகராட்சி, 147—வது வட்டம், ஸ்ரீதேவி நகர் மதுரவாயல் வட்டம் மற்றும் கிராமம், புல எண் 375/1 மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாடு கொண்ட நிலமாகும். மேற்படி பகுதி நகர்ப்புற விஸ்தரிப்பு எல்லைக்கு உட்பட்ட பகுதி என்பதால் பட்டா வழங்க வழிவகை இல்லை.

312—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

வினா எண் 49085—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசாணை (நிலை) எண் 288, வருவாய்த்

துறை, நாள் 25–5–2007–ன்படி ரூ.140 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

313—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

வினா எண் 49349—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கீழ்பாவூர் ஒன்றியம், திப்பணம்பட்டி ஊராட்சி, திப்பணம்பட்டியில் கிராம நிருவாக அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திப்பணம்பட்டி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. கட்டடத்தில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்யும்பொருட்டு அரசாணை (நிலை) எண் 420, வருவாய் (வ.2(1)) துறை, நாள் 22–9–2014–ன்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது பாமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. பராமரிப்புப் பணிகள் நடப்பு நிதியாண்டு மார்ச் 2015–க்குள் நிறைவுபெறும்.

314—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

வினா எண் 50079—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, வாகவாசல் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி, வாகவாசல் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டு உள்ளது. இதில் தற்பொழுது புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, புதிய கட்டடம் கட்டத் தேவையில்லை.

315—

வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடம்

வினா எண் 50359—திரு. து. முருகேசன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு வருவாய் கோட்ட வளாகத்தில் புதிய வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு உருவாய் கோட்ட வளாகத்தில் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் சென்ற ஆண்டு ரூ.19.00 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

316—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 51363—திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, மணம்தவிழ்ந்தபுத்தூர், வீரப்பார் ஊராட்சிகளில் உள்ள ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

பண்ருட்டி தொகுதி, மணம்தவிழ்ந்தபுத்தூர், வீரப்பெருமாநல்லூர் ஊராட்சிகளில் உள்ள ஏரிகளில் செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டது. தற்போது மேற்படி கிராம ஏரிகளில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

317—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 51411—திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, 35—வது வட்டம், எத்திராஜ் சாலை, பவித்ரா மருத்துவமனை பின்புறம் அண்ணாசாலை குறுக்கே அரசு நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 35—வது வட்டம், எத்திராஜ் சாலை, பவித்ரா மருத்துவமனை பின்புறம் அண்ணாசாலை குறுக்கே கோயில் மற்றும் அதனுள் அமைந்துள்ள குளம் தவிர வேறு எந்த ஆக்கிரமணமும் இல்லை. அண்ணாசாலை தெருவின் குறுக்கே முன்பு இருந்த சில ஆக்கிரமிப்புகள் ஏற்கெனவே அகற்றப்பட்டுவிட்டன. எனவே, தற்போது அண்ணா சாலை குறுக்கே எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லை.

318—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 51453—திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

பெரம்பூர் தொகுதி, 45–வது வட்டம், பி.வி. காலனி, 18–வது தெரு, 24–வது தெரு சந்திப்பில் உள்ள அரசு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 45–வது வட்டம், பி.வி. காலனி, 18–வது தெரு, 24–வது தெரு சந்திப்பில் உள்ள அரசு நிலத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

319—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51702—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சி, வார்டு எண் 2, வண்ணாங்காடு மற்றும் தூதனூர் காட்டுவளவு மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், எடங்கணசாலை பேரூராட்சி, வார்டு எண் 1 மற்றும் 2 கிராம நத்தம் சர்வே எண் 333/13, 243/10, 44/4 மற்றும் 184/4 ஆகியவற்றில் குடியிருந்து வரும் 24 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அதே கிராம சர்வே எண் 333/12, 244/9, 44/1 மற்றும் 184/1–ல் உள்ள நிலங்கள் கைத்தறி மற்றம் துணிநூல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலமாகும். இந்நிலத்தில் சுமார் 30 குடும்பங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அத்துறையின் இசைவினைப் பெற்ற பின்பு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

320—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 51735—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் தெற்கு வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியில் திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் கட்ட ரூ.232.00 இலட்சம் 2014–2015 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

321—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51755—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பூமலூர் கிராமம், சின்னியம்பாளையம்புதூரில் விடுபட்டுள்ள 60 குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பூமலூர் கிராமம், மஜரா சின்னியம்பாளையம்புதூரில் புல எண் 375/3 மந்தை புறம்போக்கு பூமியாகும். மேற்படி பூமியினை நத்தமாக மாற்றி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் ஒரு

2016 பிப்ரவரி 20]

முறை சிறப்புத் திட்டத்தின்கீழ் 30 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வீட்டுமனைப் பட்டா வழங்க அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் பரிந்துரையின்பேரில் 31–3–2015–க்குள் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

322—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51843—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், எஸ்.வி.ஜி. புரத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் பல ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு வட்டம், எஸ்.வி.ஜி.புரம், கிராம நத்தம் புல எண் 117, 163 மற்றும் 200–ல் 5 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா தயார் செய்யப்பட்டு மேற்கண்ட நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது. மேலும், மேற்கண்ட பகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வருபவர்களுக்கு ஒரு முறை வரன்முறைப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

323—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51844—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிப்பேட்டை நெற்குன்றம் மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணித் தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிபேட்டை நெற்குன்றம் பகுதியானது கிராமப் புல எண் 43/1—ன்படி ஒதுக்கப்பட்ட காடு என வகைப்பாடு செய்யப்பட்ட நிலம் ஆகும். இப்பகுதி வனத் துறையின்கீழ் வருவதாலும், ஆட்சேபகரமான நிலம் என்பதாலும், மேற்கண்ட நிலத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

324—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51852—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டு பஜார் தெருவில் பல ஆண்டுகளாக வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம், எண் 3, புதுப்பட்டு மதுரா பள்ளிப்பட்டு பேரூராட்சியில் உள்ள பஜார் வீதி மற்றும் சுற்றியுள்ள பொதுமக்கள் அனைவரும் வசித்துவரும் வீடுகள் மாடி வீடுகளாகவும், தளம் வீடுகளாகவும், வியாபாரக் கடைகளாகவும் உள்ளன. மேற்படி, பொதுமக்கள் அனுபவத்தில் உள்ள இடங்கள் 7 சென்ட்டுகளுக்கு அதிகமாக உள்ளதாலும், நடைமுறையிலுள்ள அரசாணையின்படி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் 2

2016 பிப்ரவரி 20]

சென்ட்டுக்கு மேல் இருக்கும் இடத்திற்கு அரசு நிர்ணயிக்கும் நில கட்டணத் தொகையைப் பெற்றுக் கொண்டு பட்டா வழங்கலாம் என்பதாலும், மேற்கண்ட இடத்தில் வசித்து வருபவர்கள் அரசு நிர்ணயித்த தொகையினை செலுத்த மறுப்பதாலும், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

325—

கிராம நிருவாக அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 51871—திரு. க. தினகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் தொகுதி, போகம்பட்டி கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், சூலூர் தொகுதி, போகம்பட்டி கிராம நிருவாக அலுவலகம் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கட்டப்பட்டதால் புதிய அலுவலகம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

326—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51876—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, சங்குரனி பகுதியில் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் சங்குரனி பகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகரம், வார்டு எண் 2, பிளாக் எண் 22, டி.எஸ்.எண் 2266/1, விஸ்தீரணம் 1..4731.5 சதுர மீட்டர், டி.எஸ்.எண் 2266/2, விஸ்தீரணம் 0.0377.0 சதுர மீட்டர் மற்றும் டி.எஸ்.எண் 2266/3, விஸ்தீரணம் 0.1372.5 சதுர மீட்டர் அமைந்துள்ளது. இந்நிலம் நகரளவை ஆவணங்களில் சங்கரன் ஊரணி என தாக்கலாகியுள்ளது. சங்கரன் ஊரணி என்பது மருவி சங்குரனி என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் 35 துப்புரவுத் தொழிலாளர்கள் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளதால் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் சங்குரனி பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

327—

கிராம நிருவாக அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 51907—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், மிட்டூர் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், மிட்டூர் கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அடுத்து வரும் நிதியாண்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2016 பிப்ரவரி 20]

328—

புதிய வட்டம் உருவாக்குதல்

வினா எண் 51926—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூரை தனி வட்டமாக உருவாக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி வட்டத்தினைப் பிரித்து மேல்மலையனூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது.

329—

கிராம நிருவாக அலுவலகம் அமைத்தல்

வினா எண் 51930—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை, தெள்ளார் ஒன்றியம், நல்லூர் ஊராட்சியிலிருந்து கொண்டியாங்குப்பம் ஊராட்சிக்கு தனியாக கிராம நிருவாக அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளார் உள்வட்டத்தில் உள்ள நல்லூர் வருவாய் கிராமத்தின் குழு கிராமம், கொண்டியாங்குப்பம் கிராமம் ஆகும். கிராமத்திற்கிடையே 4 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. கொண்டியாங்குப்பத்தில் மொத்த மக்கள்தொகை 1803 ஆகும்.

நல்லூர் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலக அரசு கட்டடம் உள்ளது. எனவே, கொண்டியாங்குப்பம் கிராமம், மதுரா கிராமம் என்பதால் கிராம நிருவாக அலுவலர் கட்டடம் கட்டுவதற்கு முகாந்திரம் ஏதுமில்லை.

330—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 51940—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வடகாடுபட்டியில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தென்கரை உள்வட்டம், வடகாடுபட்டி கிராமத்தில் 120 குடும்பங்கள் வீடுகட்டி பல வருடங்களாக வசித்து வருவதாகவும், மேற்படி வீடுகள் மண்ணாடிமங்கலம் ஒதுக்கப்பட்ட காடுகள் மற்றும் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியாகும் என்பதாலும், மேற்கண்ட வீடுகளுக்குப் பட்டா வழங்குவதற்கு வனத் துறையினரிடமிருந்து தடையில்லாச் சான்று கிடைக்கப்பெறவில்லை என்பதாலும், மேற்கண்ட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகைகள் இல்லை.

331—

புதிய கோட்டம் அமைத்தல்

வினா எண் 51957—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தை மையமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 279, நாள் 9–6–2003–ன்படி புதிய கோட்டம் அமைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை புவனகிரி வட்டம் பூர்த்தி செய்யாததால், புதிய புவனகிரி வருவாய் கோட்டம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

332—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 52244—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, சென்னிமலைபாளையம் பகுதியிலுள்ள மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், மஜரா சென்னிமலைபாளையத்தில் நத்தம் புல எண் 302 பூமியில் 3 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க முன்மொழிவு தயார் செய்யப்பட்டு வருகிறது. 31–3–2015–க்குள் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

333—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 52676—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 91, வருவாய் (வ.நி.2(1)) துறை, நாள் 25–2–2014–ன்படி சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான நிருவாக அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

334—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 53303—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் நல்ல நிலையில் இருப்பதால் புதிய அலுவலகம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

335—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 53322—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, வெண்மணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் அருகில் வசிக்கும் 20 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, வெண்மணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் அருகில் வசிக்கும் 20 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் இடம் சர்வே எண் 134 என்பது குளம் புறம்போக்கு ஆகும். அரசாணை எண் 41, வருவாய்த் துறை, நாள் 20–1–1987–ன்படி நீர்வழி புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பினை வரன்முறை செய்ய தடையாணை விதித்துள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

336—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 53332—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலுள்ள காந்தியார் வீதி, சிந்தன் நகர், ராஜீவ்காந்தி நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலுள்ள காந்தியார் வீதி, சிந்தன் நகர், ராஜீவ்காந்தி நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு மனைப் பட்டா வழங்க

[2016 பிப்ரவரி 20

பரிசீலனை செய்யப்பட்டதில், காட்டுமன்னார்கோவில் வட்டாட்சியரின் அறிக்கையின்படி மனைப்பட்டா கோரும் இடம் (வடவாறு வண்டிப்பாதை) நீர்நிலைப் புறம்போக்கில் உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

337—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 53678—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, அகழி மேட்டுப்பகுதியில் வீடுகட்டி வசிக்கும் அனைவருக்கும் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி வட்டம் மற்றும் நகரம் சி–3, பிளாக் T.S. No.2 *பள்ளிக்கூட தெருவில் வசிக்கும் சுமார் 42 நபர்கள் வீடு கட்டி நிரந்தரமாக வசித்து வருகின்றார்கள். அரசு ஆணை (நிலை) எண் 41, வருவாய் [நிமு–1(2)] துறை, நாள் 20–1–1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29–4–2003–ன்படி நீர்நிலைப் புறம்போக்கு இடத்தில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்ற தடையாணை உள்ளதாலும், உயர் நீதிமன்றம் மதுரை கிளை மற்றும் உயர் நீதிமன்றம், சென்னை ஆகியவற்றின் தடையாணைகள் மற்றும் சிவகாசி வரி செலுத்துவோர் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளதாலும் தற்போது ஆரணி நகரம் அகழி மேட்டுப் பகுதியில் வீடு கட்டியவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.*

338—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 53699—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜாப்ராபாத் ஊராட்சியிலுள்ள இஸ்லாமிய மக்களுக்கு அரசு புறம்போக்கு இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜாப்ராபாத் வருவாய் கிராம கணக்குகளை பரிசீலனை செய்வதில் புல எண் 1/ஏ1–ல் பரப்பு 1.65.5 எக்டேர் பட்டா எண் 742–ன்படி பட்டேல் அபிராபேகம் என உள்ளது. புல எண் 3–ல், 1 முதல் 60 வரை 2.08.5 ஏர்ஸ் சர்க்கார் மனைகள் என பதியப்பட்டுள்ளது. மேலும், மேற்படி புலங்களில் செங்கல்பட்டு நில வரித் திட்ட வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் எஸ்.ஆர்.எண் 969/70, விபிஜ 30/63, நாள் 6–2–1975–ன்படி இரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(2) மேலும், புல எண் 17–ல், 1 முதல் 50 வரை உட்பிரிவு செய்யப்பட்டு சர்க்கார் மனைகள் என கிராம கணக்கில் உள்ளன. மேற்காணும் புலங்களை வாணியம்பாடி வட்டாட்சியர் தல ஆய்வு மேற்கொண்டதில் சுமார் 250 முதல் 300 நபர்கள் வரை வீடுகட்டி வசித்து வருகிறார்கள் என தெரிவித்துள்ளார். எனவே, மேற்காணும் சூழ்நிலையில் புதிதாக யாருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

339—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 53754—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை நகராட்சி, வார்டு எண் 21–ல், வைரநாச்சி ஊரணிக் கரையிலுள்ள மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம் மற்றும் வடக்கு வட்டம், தொண்டைமான் நகரில் வார்டு எண் 21, பிளாக் எண் 34, டி.எஸ்.எண் 2197–ல் 142 சென்ட் (0.5746.5 சதுர மீட்டர்) இடம் நகரக் கணக்குப் பதிவேடுகளில் ஊரணி என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலம் நீர்நிலை என வகைபாடு செய்யப்பட்டுள்ளதாலும், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான தடை விதிக்கும் அரசாணைகள், உச்ச மற்றும் உயர் நீதிமன்ற ஆணைகள் அமலில் இருப்பதாலும், மேற்கண்ட இடங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

340—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 53789—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பொம்மராஜிப்பேட்டை, மலைப் பகுதிகளில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம், மேளப்பூடி மதுரா பொம்மராஜிப்பேட்டைக்குட்பட்ட புல எண் 358/3–ல் பாறை புறம்போக்கு நிலத்தில் வசித்துவரும் 20 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா தயார் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

2016 பிப்ரவரி 20]

341—

பாதுகாப்பு இல்லம் கட்டுதல்

வினா எண் 55561—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதியில் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்கள் தங்குவதற்கு பாதுகாப்பு இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருத்தணி வட்டம், இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் கடலோரப் பகுதியில் அமையவில்லை. அதனால் இயற்கை இடர்பாடுகளால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதால் திருத்தணி தொகுதியில் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லம் கட்டும் வினா எழவில்லை.

342—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 55828—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி மலையாண்டிபட்டினம் கிராமத்தில் வீட்டுமனை இல்லாத குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி கிராமம், மஜரா மலையாண்டிபட்டினம் கிராமத்தில்

[2016 பிப்ரவரி 20

நத்தம் காலியிடம் ஏதுமில்லை. எனவே, பட்டா வழங்க வழிவகை இல்லை.

343—

பேரிடர் பாதுகாப்பு மையம்

வினா எண் 56538—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பேரிடர் பாதுகாப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கடற்கரையிலிருந்து சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால் மானாமதுரை தொகுதியில் பேரிடர் பாதுகாப்பு மையம் அமைக்க தேவை எழவில்லை.

344—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

வினா எண் 58123—திரு. சு. ரவி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் உள்ள கிராம

2016 பிப்ரவரி 20]

நிருவாக அலுவலகக் கட்டடம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, அவ்வலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

345—

கிராம நிருவாக அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 60085—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் நகர், உசிலம்பட்டி சாலையிலுள்ள கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் நகர், உசிலம்பட்டி சாலையிலுள்ள கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

346—

வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 62847—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் 1985 ஆம் வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. 2014–2015 ஆம் நிதி ஆண்டில்

[2016 பிப்ரவரி 20

ரூ.5,00,000/– செலவில் புதுப்பிக்கப்பட்டு, தற்போது கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

347—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 63584—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கும் நிலையில் உள்ளது.

348—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 63655—டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், எட்டிமடை கிராமத்திலுள்ள அமிர்தா கல்வி நிலையத்தின் அருகிலுள்ள இரயில்வே மேம்பாலத்தின்கீழ் வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், எட்டிமடை அமிர்தா கல்வி நிலையத்தின் அருகிலுள்ள இரயில்வே

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேம்பாலத்தின்கீழ் வருவாய்த் துறைக்குச் சொந்தமான க.ச. எண் 139 மற்றும் 290 ஆகிய சாலைகளில் தனிநபர் மற்றும் பொதுமக்கள் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. க.ச. எண் 139 மற்றும் க.ச. எண் 290 ஆகிய இரண்டு சாலைகளும் 'நீர்நிலைப் புறம்போக்கு' ஆகும் என்பதாலும், மேற்படி இரண்டு சாலைகளை இணைக்கும் தரைப்பாலம் அமைந்துள்ள க.ச. எண் 155/2 சாலையானது இரயில்வே துறைக்குக் கட்டுப்பட்டது என்பதாலும் இவைகளில் பாதை ஏதும் அமைத்துத் தர இயலாது.

349—

திரைப்படக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 29546—**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலத்தில் அரசு திரைப்படக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், மைய தொழில்நுட்பப் பயிலகத்தில் ஒரு பிரிவாக 1945–ல் ஆரம்பிக்கப்பட்டு, 1959–ல் திரைப்பட தொழில்நுட்பப் பயிற்சி சிறப்பு நிறுவனமாக உயர்வு பெற்று கடந்த 50 ஆண்டு காலமாக இந்நிறுவனம் தேசிய அளவில் திறமை வாய்ந்த மாணவர்களை, கலைநயம் மிக்க வல்லுனர்களாக உருவாக்கி பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்பட துறைப் பாடங்களையும் மாணவர்களுக்கு கற்றுத் தந்து கொண்டிருக்கிறது.

சேலத்தில் அரசு திரைப்படக் கல்லூரி துவங்குவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

350—

மணிமண்டபமும் ஆய்வரங்கமும் அமைத்தல்

வினா எண் 30121—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளவங்கோடு தொகுதி, காப்புக்காட்டில் தொல்காப்பியருக்கு மணிமண்டபமும், ஆய்வரங்கமும் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

விளவங்கோடு தொகுதி, காப்புக்காட்டில் தொல்காப்பியருக்கு மணிமண்டபமும், ஆய்வரங்கமும் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

351—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 33860—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் தமிழ் கவிஞர் முடியரசனாருக்கு சென்னையில் சிலையும், காரைக்குடியில் மணிமண்டபமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் தமிழ் கவிஞர் முடியரசனாருக்கு சென்னையில் சிலையும், காரைக்குடியில் மணிமண்டபமும் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

352—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 33861—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடியில் கணிதமேதை இராமானுஜ அய்யங்காருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடியில் கணிதமேதை இராமானுஜ அய்யங்காருக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

353—

நினைவு மண்டபம், சிலை அமைத்தல்

வினா எண் 34470—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் நகரில் மனுநீதி சோழனுக்கு நினைவு மண்டபம், சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'மனுநீதி சோழனுக்கு அவர் பிறந்த பூமியிலேயே இந்த அரசால் நினைவு மண்டபம் எழுப்பப்படும், கட்டப்படும்' என அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, மனுநீதி சோழனுக்கு திருவாரூரில் நினைவு மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

354—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 35357—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்க பாடுபட்ட திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்க பாடுபட்ட திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 *பிப்ரவரி* 20]

355—

நினைவுச் சின்னம் அமைத்தல்

வினா எண் 37475—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சலில் அனந்த பத்மநாப நாடாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சலில் அனந்த பத்மநாப நாடாருக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

356—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 37486—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விடுதலைப் போராட்ட வீரரான திரு. பி. ராமமூர்த்தி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விடுதலைப் போராட்ட வீரரான திரு. பி. ராமமூர்த்தி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2016 பிப்ரவரி 20

357—

திரைப்பட நகர் அமைத்தல்

வினா எண் 37713—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் திரைப்பட நகர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் உள்ள செட்டியார் வீடுகளில் தற்போது படப்பிடிப்பு நடந்து வருகிறது. இந்நிலையில் காரைக்குடியில் புதிய திரைப்பட நகர் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

358—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 38040—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வியாளர் பாண்டித்துரை தேவருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்வியாளர் பாண்டித்துரை தேவருக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

359—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 40681—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராமநாதபுரத்தில் மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதிக்கு மணிமண்டபம் மற்றும் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம் மற்றும் உள்வட்டம், பட்டிணம்காத்தான் குரூப் மற்றும் கிராமம், பெருந்திட்ட வளாகம், புல எண் 320–ல் விஸ்தீரணம் 3.02.0 ஹெக்டேர் நிலத்தில் தற்போது 320/3 என உட்பிரிவு செய்து 0.00.5 ஹெக்டேர் நிலம் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் சிலை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்சமயம் விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் 8 அடி உயர வெண்கலச் சிலை பீடத்தில் பொருத்தப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரத்தில் மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

360—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 42333—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதியில் கணித மேதை இராமானுஜத்திற்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதியில் கணித மேதை இராமானுஜத்திற்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

361—

தேசபக்தி தினமாக அறிவித்தல்

வினா எண் 45967—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தேசிய தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த நாளை தேசபக்தி தினமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு ஆண்டுதோறும் ஜனவரி 23 ஆம் தேதி சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து மலர் அலங்காலம் செய்து, மலர் தூவி மரியாதை செய்யும் நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டு வரும் நிலையில் தேசிய தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த நாளை தேசபக்தி தினமாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

362—

நினைவு மண்டபம் அமைத்தல்

வினா எண் 47681—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரையில் சிறந்த பின்னணி பாடகர் திரு. டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு அவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையில் சிறந்த பின்னணி பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

363—

நினைவு மண்டபம் அமைத்தல்

வினா எண் 47690—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அமரர் கிருபானந்தவாரியாருக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அமரர் கிருபானந்தவாரியாருக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

364—

கலைஞர்களுக்கு தனி நல வாரியம் அமைத்தல்

வினா எண் 48862—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்ட புகைப்படம் மற்றும் காணொளி ஒளிக்காட்சி கலைஞர்களுக்கு தனி நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்ட புகைப்படம் மற்றும் காணொளி காட்சி கலைஞர்களுக்கு தனி நல வாரியம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

365—

நினைவு மண்டபம் அமைத்தல்

வினா எண் 48863—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலத்தில் வாழப்பாடி திரு. ராமமூர்த்தி அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சேலத்தில் வாழப்பாடி திரு. ராமமூர்த்தி அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

366—

படப்பிடிப்பு அரங்கு கட்டுதல்

வினா எண் 49707—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலத்தில் டி.ஆர். சுந்தரம் அவர்களின் நினைவாக படப்பிடிப்பு அரங்கு கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சேலத்தில் டி.ஆர். சுந்தரம் அவர்களின் நினைவாக படப்பிடிப்பு அரங்கு கட்டுவது தொடர்பான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

367—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 51185—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரியில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, கிரீன்வேஸ் சாலையில் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டு, ஆதி திராவிடர் நலத் துறைமூலம் முறையாக

[2016 பிப்ரவரி 20

பராமரிக்கப்பட்டு வருவதால், கன்னியாகுமரியில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

368—

மணிமண்டபம் கட்டுதல்

வினா எண் 51674—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களுக்கு முழு உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களுக்கு முழு உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

369—

திருவுருவச் சிலை அமைத்தல்

வினா எண் 53868—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் பாரதரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் பாரதரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

370—

மணிமண்டபம் அமைத்தல்

வினா எண் 55580—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையில் விடுதலைப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

சென்னையில் விடுதலைப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

371—

சிலை திறந்து வைத்தல்

வினா எண் 56510—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தேசிய நெடுஞ்சாலையின் அருகிலுள்ள கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் சிலையை திறந்து வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்றம் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதியன்று பொது சாலைகள், நடைபாதைகள், சாலையோரங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் இடங்கள் ஆகியவற்றில் சிலைகள் அல்லது கட்டடங்கள் அமைப்பதற்கு மாநில அரசாங்கங்கள் அனுமதியளிக்கக்கூடாது என்று தடை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், சுசீந்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் சிலையை திறந்து வைப்பது தொடர்பாக உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

372—

திருவுருவச் சிலை அமைத்தல்

வினா எண் 59776 திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் சுவாமி விவேகானந்தர் நினைவுத் தூண் உள்ள இடத்தில் விவேகானந்தர் திருவுருவச் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் சுவாமி விவேகானந்தர் நினைவுத் தூண் உள்ள இடத்தில்

2016 பிப்ரவரி 20]

விவேகானந்தர் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

373—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 34834—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பனம்பட்டி விளக்கு சாலையில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பனம்பட்டி விளக்கு சாலையில் ஆவின் பாலகம் அமைப்பதற்கு நாளிதழ்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. எனவே, அதற்கான விண்ணப்பங்கள் பெறும்பட்சத்தில் பனம்பட்டி கிராமத்தில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

374—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 34835—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்கலைக்காட்டில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்கலைக்காட்டில் ஆவின் பாலகம் அமைக்கப்பட ஏதுவாக பாலகப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. கொள்முதல் செய்யப்பட்டவுடன் பீர்கலைக்காட்டில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

375—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 34840—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தர் குடியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தர் குடியில் ஆவின் பாலகம் அமைக்க நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படும்பட்சத்தில் அங்கு ஆவின் பாலகம் அமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

376—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 35632—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்*

2016 பிப்ரவரி 20]

அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியத்தில் மொத்தம் 26 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் நாளொன்றுக்கு 2,750 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இச்சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பால் அருகில் உள்ள காரைக்குடி பால் பண்ணையில் குளிரூட்டப்படுகிறது. தற்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள கற்களத்தூர் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் காரைக்குடி பால் பண்ணையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கற்களத்தூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் சொந்த இடத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP) மூலம் 5000 லிட்டர் கொள்ளளவில் தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டு சிவங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தினால் தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

377—

ஆவின் விற்பனை நிலையம் அமைத்தல்

வினா எண் 36138—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை, பேரூராட்சியில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையினை அதிகரிக்கும் நோக்கத்தில் முகவர்கள் நியமனம் கோரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தகுதிவாய்ந்த முகவர்கள் தேர்வு செய்யப்பட்ட பின்னர் காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க விழுப்புரம், கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

378—

பால் கூட்டுறவுச் சங்கத்தினை சீரமைத்தல்

வினா எண் 37716—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி, செஞ்சையிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை சீரமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்கடி நகர்ப்புறத்தில், செஞ்சை பகுதியில் செயல்பட்டு வந்த காரைக்குடி பால் வழங்கும் சங்கமானது அதில் பணிபுரிந்த பணியாளர்களுடன், வி.ஆர்.டி. 793, சிவங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடன் 1–6–1994 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டுள்ளது. காரைக்குடி பால் வழங்கும் சங்க எல்லையிலிருந்து செஞ்சை பகுதியில் தற்போது பால் உற்பத்தி எதுவும் இல்லை என்பதால் இதனை புனரமைக்க தேவை ஏதும் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

379—

பால் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைத்தல்

வினா எண் 38035—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள நலிவடைந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் 66 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்ற நிலையில் இருந்த 57 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளதாகவும், கலைக்கப்பட்டுள்ள சங்கங்களைப் புதுப்பித்து செயல்படுத்த ஆர்வமுள்ள பால் உற்பத்தியாளர்கள் முன் வருகின்றபொழுது இவற்றை புத்துயிரூட்டி செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

380—

பால் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 38381—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கே. அய்யம்பாளையம் ஊராட்சி, முத்தாண்டிபாளையத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, சிபிடி 304, முத்தாண்டிபாளையம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 23–10–1991 அன்று பதிவு செய்யப்பட்டு, 1–11–1991 முதல் செயல்பட்டு வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி சங்க கட்டட நிதியாக ரூ.73,862.62 மட்டுமே உள்ளது. சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை இல்லாததாலும், சொந்தக் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான நிதிவசதி இல்லாததாலும் கட்டடம் கட்டுவதற்கு தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

381—

பால் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 41311—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், குமாரமங்கலம் கிராமத்தில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், குமாரமங்கலம் கிராமத்தில் தற்போது TPD *164, குமாரமங்கலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு நாளொன்றிற்கு தோராயமாக 100 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.*

2016 பிப்ரவரி 20]

382—

பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 41410—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மானுப்பட்டி மற்றும் பாப்பான்குளம் ஆகிய பகுதிகளில் கூடுதல் வசதியுடன்கூடிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, மானுப்பட்டி மற்றும் பாப்பான்குளம் ஆகிய பகுதிகளில் கூடுதல் வசதியுடன் கூடிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

383—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 41411—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, நல்லெண்ணகவுண்டன்புதூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, நல்லெண்ணகவுண்டன்புதூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

384—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 43709—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கும்பகோணம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கும்பகோணம் நகரைச் சுற்றிலும் சுமார் 15 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள கிராமங்களிலிருந்து தினசரி சுமார் 10,000 லிட்டர் பாலை சேகரம் செய்து சங்கத்தின் உள்ளூர் பால் விற்பனை போக எஞ்சிய பாலை சங்கத்தில் நிறுவப்பட்டுள்ள பால் குளிரூட்டும் இயந்திரங்கள்மூலம் குளிரூட்டி, தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, கும்பகோணத்தில் தனியாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

385—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 45932—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

386—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 48797—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மைவாடி ஊராட்சி, மைவாடி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மைவாடி ஊராட்சி, மைவாடி கிராமத்தில் ஏற்கெனவே சிபிடி 383 மைவாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 12–11–1992 அன்று பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது. எனவே, அங்கு மீண்டும் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY

[2016 பிப்ரவரி 20

387—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 48798—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மைவாடி ஊராட்சி, ராஜாவூர் கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், மைவாடி ஊராட்சி, ராஜாவூர் கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 27–2–2014–ல் பதிவு செய்யப்பட்டு 16–3–2014 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

388—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 48799—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மைவாடி ஊராட்சி, போளரப்பட்டி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மைவாடி ஊராட்சி, போளரப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 31–3–1988–ல் பதிவு செய்யப்பட்டு 27–5–1988 முதல் செயல்பட்டு வருகிறது.

389—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைத்தல்

வினா எண் 49283—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டத்திற்கென தனியாக மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கென தனியே ஒரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

390—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 49460—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 *பிப்ரவரி* 20

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கண்ணாமூச்சி ஊராட்சி பகுதியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கண்ணாமூச்சி ஊராட்சி பகுதியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட குறைந்தபட்சம் ரூ.9.00 இலட்சம் தேவைப்படும். அதற்கான நிதி தற்போது மேற்கண்ட சங்கத்தில் இல்லாததால் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

391—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 50220—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சி, கவுண்டம்பாளையத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சி, கவுண்டம்பாளையத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்

2016 பிப்ரவரி 20]

சங்கத்திற்கு தற்போது சொந்தமாக அடிமனை இல்லாததாலும், சொந்தக் கட்டடம் கட்ட போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும் இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

392—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 50306—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சி, கொடுவாயில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ராமம்பாளையம் என்ற இடத்தில் கொடுவாயிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையம் நிறுவப்பட்டு சுமார் 3,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. மேலும், கொடுவாயில் கிராமத்தில் பால் கூட்டுறவுச் சங்கம் ஏதும் செயல்படாத நிலையில் கொடுவாயில் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

393—

பால் தரப் பரிசோதனையில் ஐ.எஸ்.ஐ. முறை

வினா எண் 50597—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பால் தரப் பரிசோதனையில் ஐ.எஸ்.ஐ. முறையை அமல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் பால் தரப் பரிசோதனையில் திருத்தப்பட்ட ரிச்மான்ட் பார்மூலா (Richmond Formula) *தற்போது பயன்படுத்தப்பட்டு வருவதால், ஐ.எஸ்.ஐ. பார்மூலா ஒன்றிய/பிரதான சங்கங்களில் அமல்படுத்தப்படுவதில்லை.*

394—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 51143—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி பகுதியில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருத்தணி பகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் தேவை தற்சமயம் இல்லை.

395—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 52433—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பூமலூர் ஊராட்சி, பள்ளிபாளையத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) பல்லடம் தொகுதி, பூமலூர் ஊராட்சி, பள்ளிபாளையத்தில் சிபிடி 495 பள்ளிபாளையம் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 30–12–1997–ல் பதிவு செய்யப்பட்டு, 22–1–1998 முதல் செயல்பட்டு வருகிறது. அச்சங்கத்திற்கு தற்போது சொந்தமாக அடிமனை நிலம் ஏதும் இல்லாததாலும், சொந்தக் கட்டடம் கட்ட போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும் தற்போது சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

396—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 52489—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க சங்கரன்கோவில் நகராட்சி நிருவாகம் இடம் ஒதுக்கீடு செய்யாததால் அங்கு ஆவின் பாலகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது ஏதுமில்லை.

397—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 52755—திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாமக்கல் தொகுதி, சேலம் மாவட்டம் ஆவின் பாலகத்தை இரண்டாகப் பிரித்து நாமக்கல் மாவட்டத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) நாமக்கல் தொகுதி, சேலம் மாவட்டம் ஆவின் பாலகத்தை இரண்டாகப் பிரித்து நாமக்கல் மாவட்டத்தில் ஆவின் பாலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

398—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 52872—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016 *பிப்ரவரி* 20]

399—

பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் உற்பத்தி நிலையம் அமைத்தல்

வினா எண் 52881—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் நவீன பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் உபபொருட்கள் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, நகரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு 3 ஏக்கர் இடவசதி உள்ளது. 2014–2015 ஆம் கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பில் 71 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில் வருங்காலங்களில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

473—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 33872—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், இருகாளூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், இருகாளூர் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

474—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 33889—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், சிந்தாமணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம் சிந்தாமணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை.

475—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 33947—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 6–வது வார்டு, நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 6–வது வார்டு, நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 30 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். 1.60 சென்ட் இடவசதி உள்ளது. 8 கி.மீ. சுற்றளவில் 4 அரசு நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

476—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 33960—திரு. டி இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பாலத்தோட்டனப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, பாலத்தோட்டனப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியானது அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி (ப.க.2 (2))த் துறை, நாள் 2–7–2013–ன்படி அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

477—

புதிய தொடக்கப் பள்ளி

வினா எண் 33969—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு, முதுரா பாலம்பட்டு மலைவாழ் மக்களுக்குப் புதிய தொடக்கப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய தொடக்கப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு, முதுரா பாலம்பட்டு குடியிருப்பு பகுதி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

478—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 34424—திரு. க. தினகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், கம்பாளப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், கம்பாளப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கருத்துருக்கள் பெறப்படாததால் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது பரிசீலிக்க இயலாது.

479—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 34426—திரு. க. தினகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், வடவள்ளி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், வடவள்ளி ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளி எதுவும் செயல்படாததால் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

480—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 34427—திரு. க. தினகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், ஜெ. கிருஷ்ணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 5 கி.மீ. தொலைவிற்குள் செம்மஞ்சேரி அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. எனவே, சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், ஜெ. கிருஷ்ணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

481—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 34429 திரு. க. தினகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையம் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையம் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க. 2 (2) துறை, நாள் 2–7–2013–ன்படி மேல்நிலைப் பள்ளியாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

[2016 பிப்ரவரி 20

482—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 34430—திரு. க. தினகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், பூரண்டாம்பாளையம் ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், பூரண்டாம்பாளையம் ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

483—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 34460—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விளக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி,

திருத்துறைப்பூண்டி தொகுதி, விளக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியில் பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. போதிய இடவசதி இல்லை. 5 கி.மீ.–க்குள் ஒரு மேல்நிலைப் பள்ளி உள்ளது. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

484—

ஆங்கில வழிக் கல்வி

வினா எண் 35150—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 204, பள்ளிக் கல்வித் துறை, நாள் 5–10–2013–ல் 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழிப் பிரிவு தொடங்கிட ஆணையிடப்பட்டு, அதனடிப்படையில் தற்போது அப்பள்ளியில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழியில் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

485—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35169—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்திலுள்ள தாமரைக்கரை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்திலுள்ள தாமரைக்கரையில் அரசு நடுநிலைப் பள்ளி உள்ளது. நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்னரே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும்.

486—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 35173—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலத்தில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி நேரடியாக அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க இயலாது. தாரமங்கலத்தில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லாத நிலையில் சங்கரி தொகுதி, தாரமங்கலத்தில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2016 பிப்ரவரி 20]

487—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35178—திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், மாயனூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளில் வரையறை செய்யப்பட்டதனைக் காட்டிலும் பத்தாம் வகுப்பில் குறைந்த அளவில் மாணவர் எண்ணிக்கை உள்ளது. 5 கி.மீ.–க்குள் ஒரு மேல்நிலைப் பள்ளி உள்ளது. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், மாயனூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

488—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35310—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, அகரஒரத்தூர் ஊராட்சி, வேர்க்குடியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி அரசு நடுநிலைப் பள்ளியை நேரடியாக மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது. உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட பின்னரே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, கீழ்வேளூர் தொகுதி, அகரஒரத்தூர் ஊராட்சி வேர்க்குடியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

489—

நூலகக் கட்டடம்

வினா எண் 35316—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரிலுள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரிலுள்ள கிளை நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். காலிமனை பெறப்பட்டதும், கீழ்வேளூர் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2016 பிப்ரவரி 20]

490—

நவீன எண்ணியல் நூலகம்

வினா எண் 35616—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை திருவொற்றியூரில் நவீன எண்ணியல் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதி, திருவொற்றியூர் கிளை நூலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.82.00 இலட்சமும் நூலகத் துறையின் சார்பில் ரூ.9.90 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.91.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையின்மூலம் பணிகள் முடிவடைந்துள்ளது. இக்கட்டடதத்திற்கு நன்கொடைகாக ரூ.42 இலட்சம் பெறப்பட்டதில் நூலகம் கணினிமயமாக்கப்பட்டு பிற பணிகள் நடைபெற்று வருகிறது.

491—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35947—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டம், எருக்கூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 *பிப்ரவரி* 20

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டம், எருக்கூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

492—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35955—திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யூர் தொகுதி, கடப்பாக்கம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செய்யூர் தொகுதி, கடப்பாக்கம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வித் (ப.க. 2(2) துறை, நாள் 22–9–2014–ன்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டுவருகிறது.

493—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35967—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாநகராட்சி மணிமேகலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மதுரை மாநகராட்சி மணிமேகலை உயர்நிலைப் பள்ளியில் போதிய இடவசதி இல்லை. பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளியைச் சுற்றி 8 கி.மீ.–க்குள் 2 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

494—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35969—திரு. அ. பாப்பாசுந்தரம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கரூர் மாவட்டம், தோகமலை ஒன்றியம், தோகமலையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஏற்கெனவே உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். கரூர் மாவட்டம், தோகமலை ஒன்றியம், தோகமலையில் இருபாலர் அரசு மேல்நிலைப் பள்ளி மட்டும்தான் செயல்பட்டுவருகிறது. அப்பள்ளியிலிருந்து பெண்களுக்கென்று தனியாக உயர்நிலைப் பள்ளி துவங்குவதற்கு கருத்துரு பெறப்படும்பட்சத்தில் பரிசீலிக்கப்படும்.

495—

பள்ளியை மீண்டும் துவக்குதல்

வினா எண் 35971—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கோட்டைப்பட்டி சிற்றூராட்சி, கோட்டைப்பட்டி கிராமத்திலுள்ள அரசு தொடக்கப் பள்ளியை மீண்டும் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கோட்டைப்பட்டி சிற்றூராட்சி, கோட்டைப்பட்டி கிராமத்திலுள்ள அரசு தொடக்கப் பள்ளி 10 ஆண்டுகளுக்கு முன்னர் மாணவர்கள் வருகையின்மைக் காரணமாக மூடப்பட்டது. தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கோட்டைப்பட்டி சிற்றூராட்சி, கோட்டைப்பட்டி கிராமத்திலுள்ள குடியிருப்புப் பகுதி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியை மீண்டும் துவங்குவதற்கு வாய்ப்பு இல்லை.

496—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35987—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, துத்திப்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, துத்திப்பட்டில் அரசு உயர்நிலைப் பள்ளி என்று எதுவும் செயல்படவில்லை. அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளி மட்டுமே செயல்பட்டு வருகிறது. நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத்தான் தரம் உயர்த்த இயலும். நேரடியாக மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

497—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 35988—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கலிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி குடியாத்தம் தொகுதி, எர்தாங்கலிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. 3.5 ஏக்கர் இடவசதி பெற்றுள்ளது. 10 ஆம் வகுப்பில் 89 மாணவர்கள் உள்ளனர். இப்பள்ளிக்கு அருகில் 5 கி.மீ. தொலைவில் ஆறு அரசு மேல்நிலைப் பள்ளிகளும், ஒரு அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தேவை மற்றும் நிதிநிலையின் அடிப்படையில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

[2016 பிப்ரவரி 20

498—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 36028—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அந்தியூர் தொகுதி, ரெட்டிப்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை அந்தியூர் தொகுதி, ரெட்டிப்பாளையம் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

499—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 36077—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஊராட்சி, பைத்தூர்–தவளப்பட்டி அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை

2016 பிப்ரவரி 20]

ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஊராட்சி, பைத்தூர்—தவளப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

500—

புதிய பள்ளி துவக்குதல்

வினா எண் 36099—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சி, 14—வது வார்டு பாப்பாப்பட்டி, காட்டுவளவில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சி, 14—வது வார்டு பாப்பாப்பட்டி, காட்டுவளவு நிறைவு செய்யாததால், இப்பகுதியில் தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

பட்டியல் 9

1—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36181—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், அத்தமணஞ்சேரி ரெட்டிப்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், அத்தமணஞ்சேரி ரெட்டிப்பாளையம் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

2—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36232—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர்–சிட்லிங் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி அரூர்–சிட்லிங் அரசு உயர்நிலைப் பள்ளியில் போதிய மாணவர்கள் இல்லை. பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. ஆய்வக வசதிகள் இல்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

3—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36238—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தொண்டியக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தொண்டியக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

4—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36245—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வானமாதேவி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை காட்டுமன்னார்கோவில் தொகுதி, வானமாதேவி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

5—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36248—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூர் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூர் நடுநிலைப் பள்ளியை நேரடியாக மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது. உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்னரே, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும்.

6—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36249—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, கருப்பட்டி நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, சோழவந்தான் தொகுதி, கருப்பட்டி

நடுநிலைப் பள்ளியை நேரடியாக மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலாது. உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்னரே, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலும்.

7—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 36759—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை ஊராட்சி ஒன்றியம் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பகுதியில் தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

8—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 36760—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி, ஆவுடையானூர் ஊராட்சியில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு தொடக்கப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தென்காசி, ஆவுடையானூர் ஊராட்சி நிறைவு செய்யாததால் இப்பகுதியில் தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

9—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 36763—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, பாவூர்சத்திரம், த.பி.சொக்கலால் அரசு மேல்நிலைப் பள்ளியில் சர்வதேச தரத்துடன்கூடிய விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, பாவூர்சத்திரம், த.பி.சொக்கலால் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சர்வதேச தரத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

10—

விளையாட்டு மைதானம்

வினா எண் 36764—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சி, வேதம்புதூர் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சி, வேதம்புதூர் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

11—

சொந்தக் கட்டடம்

வினா எண் 36789—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி பேரூராட்சியிலுள்ள பொது நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியிலுள்ள கிளை நூலகம் 21–2–1962 முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆனால், இந்த இடம் இந்திய தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தி பணிக்காக கையகம் செய்யப்பட உள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலரால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, விக்கிரவாண்டி (மே) கிராமம் புல எண் 662/2–ல் சார்பதிவாளர் அலுவலகம் என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ள 0.72.5 ஹெக்டேர் நிலத்தில் 0.06.5 ஹெக்டேர் நிலத்தை இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட பொது நூலகத்

துறைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலம் பொது நூலகத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டவுடன் விக்கிரவாண்டி கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

தரம் உயர்த்துதல்

வினா எண் 36853—திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கீழப்பெரும்பள்ளத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கீழப்பெரும்பள்ளத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியானது அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வித் (ப.க.2(2)) துறை, நாள் 2–7–2013–ன்படி அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

13—

தரம் உயர்த்துதல்

வினா எண் 37099—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, குமாரத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, குமாரம் என்னும் ஊரில் தொடக்கப் பள்ளி மட்டுமே உள்ளது. அப்பள்ளியை நேரடியாக உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலாது. ஒரு தொடக்கப் பள்ளியை முதற்கட்டமாக நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்திய பின்பே அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும்.

14—

புதிய கட்டடம்

வினா எண் 37526—திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யத்திலுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வேதாரண்யம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு புதிதாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

15—

உயர்நிலைப் பள்ளி

வினா எண் 37740—திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24–5–1997–ல் பள்ளிகளை தரமுயர்த்துதல் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்குதல் குறித்து அரசால் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் 5 கி.மீ. சுற்றளவிற்குள் 1 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் 6 நடுநிலைப் பள்ளிகள் அமைந்துள்ளதாலும், மகளிர் பள்ளிக்கென பொதுமக்கள் பங்குத்தொகை ஏதும் செலுத்தாததாலும், தற்போதைய நிலையில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க இயலாத நிலை உள்ளது.

16—

தரம் உயர்த்துதல்

வினா எண் 38171—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சி, அங்கராயன்குளம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சி, அங்கராயன்குளம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நிறைவு செய்யாததால் இப்பள்ளியை தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை.

17—

தொடக்கப் பள்ளி

வினா எண் 38172—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சி, புல்லுகாட்டுவலசையில் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சி, புல்லுகாட்டுவலசை பகுதியில் ஏற்கெனவே, ஒரு பள்ளி இயங்கி வருவதால் புதியதாக ஒரு தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

18—

நூலகம்

வினா எண் 38175—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, ராஜீவ் நகர் மற்றும் அருந்ததியர் காலனி பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, ராஜீவ் நகர் மற்றும் அருந்ததியர் காலனி பகுதிகளில் பகுதி நேர நூலகம் திறக்க உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்து வழங்குமாறு சிவநாடானூர் ஊராட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன் அங்கு பகுதி நேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19—

புதிய கட்டடம்

வினா எண் 38335—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரம் ஔவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, பாவூர்சத்திரம் ஔவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான கட்டடங்கள் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

20—

புதிய கட்டடம்

வினா எண் 38336—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குறும்பலாப்பேரி கிராம உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, அயன் குறும்பலாப்பேரி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

21—

தரம் உயர்த்துதல்

வினா எண் 38390—திரு. மு. முருகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி ஊராட்சி, வாலிநோக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி ஊராட்சி, வாலிநோக்கம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த

பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. 5.46 ஏக்கர் இடவசதி பெற்றுள்ளது. இப்பள்ளியை சுற்றி 8 கி.மீ. தொலைவிற்குள் மேல்நிலைப் பள்ளிகள் ஏதும் செயல்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 46 மாணவர்கள் உள்ளனர். எனவே, தேவை மற்றும் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு வரும் காலங்களில் இப்பள்ளியை தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

22—

தொடக்கப் பள்ளி

வினா எண் 39237—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரியில் உள்ள ஊராட்சி ஒன்றியம் நிறைவு செய்யாததால் இப்பகுதியில் தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

23—

தரம் உயர்த்துதல்

வினா எண் 39238—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குற்றாலத்திலுள்ள பேரூராட்சி தொடக்கப் பள்ளியை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தென்காசி தொகுதி, குற்றாலத்திலுள்ள பேரூராட்சி தொடக்கப் பள்ளி நிறைவு செய்யாததால் இப்பள்ளியை தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை.

24—

விளையாட்டு மைதானம்

வினா எண் 39242—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலகரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, மேலகரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

25—

விளையாட்டு மைதானம்

வினா எண் 39948—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, தி.கல்லுப்பட்டி ஒன்றியம், வன்னிவேலம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, தி.கல்லுப்பட்டி ஒன்றியம், வன்னிவேலம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

26—

நவீன நூலகம்

வினா எண் 40676—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலைக் கிராமத்தில் நவீன நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலைக் கிராமத்திலுள்ள கிளை நூலகம், ஊராட்சிக்கு சொந்தமான இலவசக் கட்டடத்தில் 252 சதுர அடியில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சியர்மூலம் காலிமனை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலிமனை பெறப்பட்டவுடன் இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டி, நவீனமயமாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

தரம் உயர்த்துதல்

வினா எண் 41315—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், அகரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், அகரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தவில்லை. போதுமான மாணவர்கள் எண்ணிக்கை இல்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த தற்போது இயலாது.

28—

தரம் உயர்த்துதல்

வினா எண் 41378—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், பைங்குளத்திலுள்ள கிளை நூலகத்தை தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், பைங்குளம் ஊர்ப்புற நூலகம் 15–12–2014 முதல் முழுநேர கிளை நூலகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

29—

உயர்நிலைப் பள்ளி

வினா எண் 41714—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, கருக்காகுறிச்சி பகுதிக்கு அரசு உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கு வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, கருக்காகுறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த, தேவையான நிலப்பரப்பு இல்லாதது, பொதுமக்கள் பங்கு தொகை செலுத்தாதது, நடுநிலைப் பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை போதுமான அளவு இல்லாதது, இப்பள்ளிக்கு அருகில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருவது ஆகிய காரணங்களால் புதுக்கோட்டை தொகுதி, கருக்காகுறிச்சி பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

30—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 41772—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை இராயப்பேட்டையில் இயங்கி வந்த உருது ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை இராயப்பேட்டை உருது ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடர்ந்து செயல்படும் நிலையே தற்போதும்

உள்ளது. 2014–2015 ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையில் மாணவர்கள் சேர்ந்தால் உருது ஆசிரியர் பயிற்சிப் பள்ளி செயல்பட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

31—

புதிய தொடக்கப் பள்ளி

வினா எண் 42025—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், பருத்திபாடு ஊராட்சி, ஆணையப்புரத்தில் புதிய தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நாங்குநேரி ஒன்றியம், பருத்திபாடு ஊராட்சி, ஆணையப்புரம் நிறைவு செய்யாததால் இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

32—

தரம் உயர்த்துதல்

வினா எண் 42026—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, நாகல்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, நாகல்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நிறைவு செய்யாததால் இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

33—

தரம் உயர்த்துதல்

வினா எண் 42033—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், செங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை பாளையங்கோட்டை ஒன்றியம், செங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

34—

தரம் உயர்த்துதல்

வினா எண் 42034—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், சீவலப்பேரி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பாளையங்கோட்டை ஒன்றியம், சீவலப்பேரி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் போதிய மாணவர்கள் எண்ணிக்கை இல்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

35—

நூலகம்

வினா எண் 42043—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, வேப்பன்குளத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, வேப்பன்குளத்தில் பகுதிநேர நூலகம் திறக்க உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்து வழங்க அவ்வூராட்சி மன்றத் தலைவருக்கு கடிதம்

அனுப்பப்பட்டுள்ளது. நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன் பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36—

இசைக் கல்லூரி

வினா எண் 42334—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதியில் அரசு இசைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதியில் அரசு இசைக் கல்லூரி துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

தேர்வு மையம்

வினா எண் 42351—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், டி.முருங்கப்பட்டி மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், டி.முருங்கப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 2014–2015 ஆம் கல்வியாண்டில் தேர்வு மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2016 பிப்ரவரி 20]

38—

புதிய கட்டடம்

வினா எண் 42969—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, கோதையாறு அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கோதையாறு அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

39—

புதிய கட்டடம்

வினா எண் 42970—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு வட்டம், முஞ்சிறை அரசு மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த ஓட்டுக் கட்டடத்தை மாற்றி புதிய கட்டடம் கட்டவும், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், முஞ்சிறை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித்

திட்டம் பகுதி XI–ன்கீழ், 23 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 2 கழிப்பறைகள், குடிநீர் வசதி மற்றும் 200 மீ. சுற்றுச்சுவர் ஆகிய அடிப்படை வசதிகளை ரூ.192.26 இலட்சத்தில் செய்ய அரசாணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

40—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 42989—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்மூலம் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XII–ன்கீழ், அடிப்படை வசதிகள் செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

41—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 42990—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, பனைக்குளம் ஊராட்சி, திருமலைவாடி உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பனைக்குளம் ஊராட்சி திருமலைவாடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம், ஆக மொத்தம் ரூ.30 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு பெற்று 6 வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

42—

தரம் உயர்த்துதல்

வினா எண் 43468—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கட்டிமேடு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கட்டிமேடு உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வி (ப.க2(2)) துறை, நாள் 22–9–2014–ன்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

43—

தரம் உயர்த்துதல்

வினா எண் 43496—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, அரசு நடுநிலைப் பள்ளியை நேரடியாக மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலாது. உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய பின்னரே மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலும். எனவே, காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த தற்போது இயலாது.

44—

தரம் உயர்த்துதல்

வினா எண் 43499—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பிலியன் குடியிருப்பு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பிலியன் குடியிருப்பு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

45—

தேர்வு மையம்

வினா எண் 43685—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) அரக்கோணம் வட்டம், நெமிலி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2013–2014 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சா்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2013–2014 ஆம் கல்வியாண்டில் தேர்வு மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

46—

நூலகம்

வினா எண் 43686—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை அனுப்பானடியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சா்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை அனுப்பானடியில் 20–10–1965 முதல் கிளை நூலகம் செயல்பட்டு வருகின்றது.

47—

தரம் உயர்த்துதல்

வினா எண் 43708—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

குளச்சல் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை குளச்சல் அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

48—

தரம் உயர்த்துதல்

வினா எண் 45897—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி மேலாயூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மானாமதுரை தொகுதி, இளையான்குடி மேலாயூர் அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

49—

சொந்தக் கட்டடம்

வினா எண் 45899—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு அரசால் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

** உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி இருக்க வேண்டும்*

** உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்ட காலியிடத்தை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் பதவி பெயரில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்*

** தேர்வு செய்யப்பட்ட காலியிடம் நத்தம் புறம்போக்கு நிலமாக இருப்பின் அவ்விடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு வருவாய்த் துறையின் அனுமதி பெறவேண்டும்.*

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் 1–11–1989 முதல் 800 சதுர அடி பரப்பளவில் உள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்கு 2 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் 8 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அலுவலகம் இயங்கி வரும் வாடகைக் கட்டடத்தில் குடிநீர் வசதி கழிவறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் உள்ளன.

இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 92 பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேலும், அலுவலக உபயோகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டவுடன் விதிகளின்படி பரிசீலனை செய்யப்படும்.

[2016 பிப்ரவரி 20

50—

சொந்தக் கட்டடம்

வினா எண் 46300—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, வார்டு எண் 4–ல் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, வார்டு எண் 4–ல் செயல்படும் கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை வழங்க மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. காலிமனை கிடைக்கப்பெற்றவுடன் பொதுப் பணித் துறையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

51—

தரம் உயர்த்துதல்

வினா எண் 46302—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி பேரூராட்சியிலேயே அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி

ஆகியன உள்ளன. எனவே, நாங்குநேரி பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

52—

கான்கிரீட் கட்டடம்

வினா எண் 46306—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, ராஜாக்கள்மங்களம் ஊராட்சி, திருவேங்கடநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியிலுள்ள பழுதடைந்துள்ள ஓட்டு கட்டடத்திற்கு பதிலாக கான்கிரீட் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, ராஜாக்கள்மங்களம் ஊராட்சியில் உள்ள திருவேங்கடநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு போதுமான கட்டடம் உள்ளது. இப்பள்ளிக்கு புதியதாக கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

53—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 46773—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் அமைந்துள்ள கோட்டூர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், ஒரு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் நான்கு சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், ஆக மொத்தம் ஆறு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

54—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47198—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் நகராட்சி, மணிநகரிலுள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மேட்டுப்பாளையம் தொகுதி, மணிநகரிலுள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

55—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47199—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் நகராட்சி, சங்கர் நகரிலுள்ள பகவான் மகாவீர் நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மேட்டுப்பாளையம் நகராட்சி, சங்கர் நகரிலுள்ள பகவான் மகாவீர் நகராட்சி நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

56—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47200—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரமடை ஒன்றியம், காரமடையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள

[2016 பிப்ரவரி 20

நிபந்தனைகளை காரமடை ஒன்றியம், காரமடையில் உள்ள நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

57—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47201—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை ஒன்றியம், தேக்கம்பட்டியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை காரமடை ஒன்றியம், தேக்கம்பட்டியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

58—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47202—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை ஒன்றியம், கோபனாரியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை காரமடை ஒன்றியம், கோபனாரியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

59—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47268—திரு. சோழன். சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கோவிலூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, காரைக்குடி தொகுதி, கோவிலூர் அரசு உயர்நிலைப் பள்ளி போதிய இடவசதி பெறவில்லை. பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

60—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 47270—திரு. சோழன். சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டான் உயர்நிலைப் பள்ளிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டான் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு போதுமான குடிநீர் வசதிக்காக 2,000 லிட்டர் கொள்ளளவுள்ள தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பள்ளிக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

61—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47300—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், தச்சூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், தச்சூர் உயர்நிலைப் பள்ளியை தரம் உயர்த்திட பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படவில்லை. எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

62—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47301—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், அரையாளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை ஆரணி தொகுதி, அரையாளம் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

63—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47302—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், சுபான்ராவ்பேட்டை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை

[2016 பிப்ரவரி 20

ஆரணி தொகுதி, சுபான்ராவ் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

64—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47664—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, பிச்சன்கோட்டகம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்துறைப்பூண்டி தொகுதி, பிச்சன்கோட்டகம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

65—

சிலை அமைத்தல்

வினா எண் 47680—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மகாகவி பாரதியாருக்கு சிலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, நிதியுதவி பெறும் சேதுபதி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் மார்பளவு சிலை 11–12–1966 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை பள்ளி நிருவாகத்தால் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

66—

தரம் உயர்த்துதல்

வினா எண் 47723—திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, கீரணத்தம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை கவுண்டம்பாளையம் தொகுதி, கீரணத்தம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

67—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48848—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, பழவாத்தாங்கட்டளை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை கும்பகோணம் தொகுதி, பழவாத்தாங்கட்டளை நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

68—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48850—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, அசூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை கும்பகோணம் தொகுதி, அசூர் நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

69—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48889—திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, வானகரம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மதுரவாயல் தொகுதி, வானகரம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 11 சென்ட் நிலம் மட்டுமே உள்ளது. இப்பள்ளியில் 10 ஆம் வகுப்பில் 80 மாணவர்கள் உள்ளனர். எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

70—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48918—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, கொட்டியாம்பூண்டி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை விக்கிரவாண்டி தொகுதி, கொட்டியாம்பூண்டி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

[2016 பிப்ரவரி 20

71—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48920—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, அத்தியூர் திருக்கை ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, அத்தியூர் திருக்கை ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொது மக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு 8 ஏக்கர் இடவசதி உள்ளது. 10 ஆம் வகுப்பில் 113 மாணவர்கள் உள்ளனர். இப்பள்ளிக்கு அருகில் அரசு மேல்நிலைப் பள்ளி–அன்னியூர்–5 கி.மீ. தொலைவிலும், அரசு மேல்நிலைப் பள்ளி–பனமலைப்பேட்டை–6 கி.மீ. தொலைவிலும், அரசு மேல்நிலைப் பள்ளி–கெடார்–6 கி.மீ. தொலைவிலும் உள்ளன. எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில் வருங்காலங்களில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

72—

தரம் உயர்த்துதல்

வினா எண் 49273—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, பொன்னன் விடுதி ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, பொன்னன் விடுதி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வகுப்பறைகள் உள்ள நிலையில் கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

வினா எண் 49452—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதியில் அமைந்துள்ள மேச்சேரி, சேலம் மாவட்டத்தில் உள்ளது. சேலம் மாவட்டத்தில் ஒரு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனமும், ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், இரண்டு அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், 06 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. எனவே, மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

74—

மண்டல நூலகம்

வினா எண் 49496—திரு. து. முருகேசன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரத்தில் மண்டல நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரத்தில் மாவட்ட மைய நூலகம் 16–12–1960–ல் துவங்கப்பட்டு, 12,750 சதுர அடி கொண்ட சொந்தக் கட்டடத்தில் போதுமான இடவசதியுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, செங்கல்பட்டில் மண்டல நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

தரம் உயர்த்துதல்

வினா எண் 49514—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சி, ஆவுடையானூர் பாளையம் ஆ.பொன்னுசாமி நாடார் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சி, ஆவுடையானூர் பாளையம் ஆ.பொன்னுசாமி நாடார் அரசு

2016 பிப்ரவரி 20]

உயர்நிலைப் பள்ளி, அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வி (ப.க.2(2)) துறை, நாள் 22–9–2014–ன்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

76—

தரம் உயர்த்துதல்

வினா எண் 49607—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் திப்பிராஜபுரம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கும்பகோணம், திப்பிராஜபுரம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 77 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பள்ளிக்கு 8 கி.மீ. தொலைவில் 5 அரசு மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

77—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50198—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

78—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50199—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, தாரமங்கலம்–ஜலகண்டாபுரம் சாலையில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, தாரமங்கலம்–

ஜலகண்டாபுரம் சாலையில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

79—

தொடக்கப் பள்ளி

வினா எண் 50212—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சி, சின்னவேலாயுதம் பாளையத்தில் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சி, சின்னவேலாயுதம் பாளையம் நிறைவு செய்யாததால் இப்பகுதியில் தொடக்கப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

80—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50229—திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, மணம்தவிழ்ந்த புத்தூர் ஊராட்சியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை பண்ருட்டி தொகுதி மணம்தவிழ்ந்த புத்தூர் ஊராட்சியிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

81—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண் 50233—திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சியில் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டியில் செயல்பட்டு வரும் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து தனியாக மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்கப்பட்ட பின்னரே, அம்மகளிர் உயர்நிலைப் பள்ளியினை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முடியும். மேற்படி பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, தனியாக அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் பெறப்படவில்லை.

82—

மகளிர் உயர்நிலைப் பள்ளி

வினா எண் 50245—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், ஸ்ரீகாளிகாபுரத்தில் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், ஸ்ரீகாளிகாபுரத்தில் செயல்பட்டு வரும் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, தனியாக மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைப்பது தொடர்பான கருத்துருக்கள் ஏதும் அரசளவில் பெறப்படவில்லை.

83—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50246—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், நெடியத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், நெடியத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பில் 76 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பள்ளிக்கு 8 கி.மீ. சுற்றளவில் இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

[2016 பிப்ரவரி 20

84—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50699—திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கல் உயர்நிலைப் பள்ளிக்கு பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு 3.5 ஏக்கர் இடவசதி உள்ளது. இப்பள்ளியில் 10 ஆம் வகுப்பில் 89 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பள்ளிக்கு அருகில் 5 கி.மீ. தொலைவிற்குள் 6 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், ஒரு அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது. எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில் வருங்காலங்களில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

85—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50707—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 88 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

86—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50745—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், பழைய நல்லூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், பழைய நல்லூரில் உள்ள நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

87—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50746—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், தாண்டவராய சோழகன்பேட்டையில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், தாண்டவராய சோழகன்பேட்டையில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 88 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பள்ளிக்கு 34 சென்ட் இடவசதி மட்டுமே உள்ளது. இப்பள்ளிக்கு 8 கி.மீ. சுற்றளவில் 3 அரசு மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

88—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50747—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் சம்மந்தகார தெருவில் உள்ள நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி சிதம்பரம் சம்மந்தகார தெருவில் உள்ள நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 14 சென்ட் நிலம் மட்டுமே உள்ளது. இப்பள்ளியில் 10 ஆம் வகுப்பில் 12 மாணவர்கள் மட்டுமே பயின்று வருகின்றனர். எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

89—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50748—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், வேளங்கிப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், வேளங்கிப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 38 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பள்ளிக்கு 19.5 சென்ட் இடவசதி மட்டுமே உள்ளது. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாத நிலை உள்ளது.

90—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50749—திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 8.9 சென்ட் இடவசதி உள்ளது. 10 ஆம் வகுப்பில் 46 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

91—

கட்டடம்

வினா எண் 50767—திரு. க. தினகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, இருகூரில் நூலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதியில் உள்ள இருகூர் கிளை நூலகம் 2,834 சதுர அடி கொண்ட

காலிமனையில் 1,571 சதுர அடியில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு இயங்கி வந்தது. இக்கட்டடம் மேம்பாலம் கட்டும் பணிக்காக நெடுஞ்சாலை துறையினரால் இடிக்கப்பட்டதால் 13–12–2011 முதல் வாடகையில்லா இலவச கட்டடத்திற்கு கிளை நூலகம் மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேற்படி இருகூர் கிளை நூலகத்திற்கு சொந்தமான மொத்தம் 2,834 சதுர அடி கொண்ட காலிமனையில் மேம்பாலம் கட்டும் பணிக்காக நெடுஞ்சாலை துறையினரால் 950 சதுர அடி எடுத்துக் கொள்ளப்பட்டது போக, மீதமுள்ள காலிமனை 1884 சதுர அடியில் தற்போதுள்ள சூழலுக்கு ஏற்ப நவீன வசதிகளுடன் கட்டடம் கட்ட திருத்திய வரைபடம் பொதுப் பணித் துறைமூலம் பெறப்பட்டு, இதற்கான மதிப்பீடு வழங்குமாறு பொதுப் பணித் துறையிடம் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெறப்பட்டவுடன் நவீன வசதிகளுடன்கூடிய கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

92—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50770 திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், லட்சுமியாபுரத்திலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், லட்சுமியாபுரத்திலுள்ள அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

93—

தரம் உயர்த்துதல்

வினா எண் 50771—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, தம்பிபட்டியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, தம்பிபட்டியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

94—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

வினா எண் 51155—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், வங்கனூரில் புதியதாக அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், வங்கனூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து

2016 பிப்ரவரி 20]

மகளிரைப் பிரித்து, தனியாக மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்கிட அரசாணை (நிலை) எண் 66, பள்ளிக் கல்வி (பக 5) துறை, நாள் 21–5–2014–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

95—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 51158—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசுப் பள்ளிகளில் மாவட்ட விளையாட்டு அரங்கங்கள் அமைப்பது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வரம்புக்குட்பட்டதாகும். எனவே, திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

96—

தரம் உயர்த்துதல்

வினா எண் 51172—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாங்கோடு ஊராட்சி, வெள்ளாங்கோடு (இருப்புசிதறால்) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாங்கோடு ஊராட்சி, வெள்ளாங்கோடு (இருப்புசிதறால்) அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு ½ ஏக்கர் இடவசதி மட்டுமே உள்ளது. 10 ஆம் வகுப்பில் 44 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

97—

தரம் உயர்த்துதல்

வினா எண் 51192—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, சங்கராமநல்லூர், குமரலிங்கம், பெரியவாளவாடி, ஜல்லிப்பட்டி, தளி ஆகிய பகுதிகளில் உள்ள கிளை நூலகங்களை முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, பெரியவாளவாடி, ஜல்லிப்பட்டி மற்றும் தளி ஆகிய கிளை நூலகங்கள் 5–2–2015 முதல் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை முழுநேர நூலகமாக செயல்பட்டு வருகின்றது. சங்கராமநல்லூர் மற்றும் குமரலிங்கம் ஆகிய கிளை நூலகங்களின் பயன்பாடு தற்போது குறைவாக உள்ளது. இக்கிளை நூலகங்களின்

2016 பிப்ரவரி 20]

பயன்பாட்டினைப் பொறுத்து எதிர்காலத்தில் முழுநேர நூலகமாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

98—

தரம் உயர்த்துதல்

வினா எண் 51193—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, சாமராயபட்டி, பாப்பான்குளம், தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள ஊர்ப்புற நூலகங்களை கிளை நூலகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, சாமராயபட்டி, பாப்பான்குளம், தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள ஊர்ப்புற நூலகங்களை கிளை நூலகங்களாகத் தரம் உயர்த்தும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

99—

சுற்றுச் சுவர்

வினா எண் 51221—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஊராட்சி ஒன்றியம், எறும்பூர் ஊராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், எறும்பூர் ஊராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XII–ல் 6 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 3 கழிப்பறைகள், 1 குடிநீர் வசதி, 500 மீட்டர் சுற்றுச்சுவர் ஆகிய அடிப்படை வசதிகள் செய்ய ரூ.127.750 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள ஒப்புதல் அளித்து அரசாணை (நிலை) எண் 156, பள்ளிக் கல்வி (ப.க.4 (2))த் துறை, நாள் 8–10–2014–ல் ஆணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

100—

நூலகம்

வினா எண் 51226—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, ஆளப்பான்குழி பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, ஆளப்பான்குழி (ஆனைக்குழி) பகுதியில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு உரிய நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன் அங்கு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

101—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 52499—திரு. மு. முருகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) கமுதி ஒன்றியம், பேரையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கமுதி ஒன்றியம், பேரையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேவையான வகுப்பறைகள் உள்ளதால் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

102—

புதிய கட்டடம்

வினா எண் 52510—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியிலுள்ள அரசு பொது நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியில் செயல்படும் கிளை நூலகம் சொந்தக் கட்டடத்தில் அனைத்து வசதியுடன் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. இதில் இணைப்புக் கட்டடம் கட்டுவதற்காக வேலூர் பொதுப் பணித் துறையினரால் புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2016 பிப்ரவரி 20

103—

ஆய்வகக் கட்டடங்கள்

வினா எண் 52726—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் ஒன்றியம், அத்திமூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் ஒன்றியம், அத்திமூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப தேவையான வகுப்பறைகள் உள்ளதால் கூடுதல் வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

வகுப்பறைக் கட்டடங்கள்

வினா எண் 52728—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டு ஒன்றியம், சூசைநகர் செயின்ட் ஜோசப் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களை சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

105—

உள் விளையாட்டு அரங்கம்

வினா எண் 52732—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் ஒன்றியம், களம்பூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுப் பள்ளிகளில் இறகு பந்து விளையாட்டு அரங்கம் அமைப்பது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வரம்புக்கு உட்பட்டதாகும். எனவே, போளூர் ஒன்றியம், களம்பூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

[2016 பிப்ரவரி 20

106—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 52759—திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுப் பள்ளிகளில் விளையாட்டு அரங்கம் அமைப்பது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வரம்புக்கு உட்பட்டதாகும்.

(2) நாமக்கல் தொகுதி, நாமக்கல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2.5 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. இதில் உள் விளையாட்டு மைதானமும் இருக்கிறது. எனவே, விளையாட்டு அரங்கம் அமைக்க போதிய இடவசதி இல்லாத காரணத்தால் விளையாட்டு அரங்கம் கட்ட இயலாத நிலை உள்ளது.

107—

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்

வினா எண் 52783—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், சொரக்காய்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், சொரக்காய்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான வகுப்பறைகள் உள்ளதால் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

108—

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்

வினா எண் 52785—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பெரியநாகபூண்டியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பெரியநாகபூண்டியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப போதுமான வகுப்பறைகள் உள்ளன. எனவே, இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

109—

கலையரங்கம்

வினா எண் 52840—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயல் ராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளிக்குக் கலையரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களை சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

110—

தரம் உயர்த்துதல்

வினா எண் 52876—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள ஏமப்பேரில் உள்ள கிளை நூலகத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள ஏமப்பேரில் 9-10–2013 முதல் பகுதிநேர நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தினை நேரடியாகக் கிளை நூலகமாக தரம் உயர்த்த வழிவகையில்லை.

111—

தரம் உயர்த்துதல்

வினா எண் 52878—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, மேலநீவிதநல்லூர் ஒன்றியம், கூடவாச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை சங்கரன்கோவில் தொகுதி, மேலநீவிதநல்லூர் ஒன்றியம், கூடவாச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

112—

உள் விளையாட்டு அரங்கம்

வினா எண் 52904—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு நகரில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசுப் பள்ளிகளில் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வரம்புக்குட்பட்டதாகும். எனவே, ஆற்காடு நகரில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

113—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53126—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிப்பேட்டையிலுள்ள சுந்தரேசர் நகர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், அத்திமாஞ்சேரிப் பேட்டையிலுள்ள சுந்தரேசர் நகர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 0.98 சென்ட் இடவசதி மட்டுமே உள்ளது. 10 ஆம் வகுப்பில் 90 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

114—

விளையாட்டுத் திடல் சீரமைத்தல்

வினா எண் 53128—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பொதட்டூர் பேட்டையிலுள்ள அரசு பள்ளிகளுக்கு சொந்தமான விளையாட்டுத் திடலை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, பொதட்டூர் பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பயன்பாட்டில் இருந்து வரும் சுமார் 3.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் கல்லாங்குத்து என்ற வகைப்பாட்டின்கீழ் உள்ளது. சார்ந்த பள்ளியின் பெயரில் நில உரிமை தொடர்பான உரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் மேற்படி இடத்தினை பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றம் செய்ய வருவாய்த் துறையிடம் கோரப்பட்டுள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்ட உடன், விளையாட்டு மைதானம் சீரமைக்கும் பணி பள்ளி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

115—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53566—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், செங்கழநீர்பட்டி, நடுப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், செங்கழநீர்பட்டி, நடுப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளிகளைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

[2016 பிப்ரவரி 20

116—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53567—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மூங்கிலேரி ஊராட்சி, கொட்டாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மூங்கிலேரி ஊராட்சி, கொட்டாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

117—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53842—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 50 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, உயர்நிலைப் பள்ளியை

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

118—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53844—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பூங்குளம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பூங்குளம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வி (ப.க 2 (2) துறை, நாள் 22–9–2014–ன்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

119—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53845—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, நாட்டறம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், திம்மாம்பேட்டை ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வாணியம்பாடி தொகுதி, நாட்டறம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், திம்மாம்பேட்டை ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

120—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53846—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, நாட்டறம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தும்பேரி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி வாணியம்பாடி தொகுதி, நாட்டறம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தும்பேரி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. 10 ஆம் வகுப்பில் 126 மாணவர்கள் உள்ளனர். இப்பள்ளிக்கு 12 ஏக்கர் இடவசதி உள்ளது. இப்பள்ளிக்கு அருகாமையில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஏதும் செயல்படவில்லை. எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில் வருங்காலங்களில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

121—

சொந்தக் கட்டடம்

வினா எண் 53847—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியில் உள்ள கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியில் செயல்படும் ஆலங்காயம் கிளை நூலகம் 2,000 சதுர அடி கொண்ட காலிமனையில் 1,500 சதுர அடியில் 24–11–2010–ல் ரூ.8.20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் நாளிதழ் மற்றும் பருவ இதழ் பிரிவு, குறிப்புதவி நூல்கள் பிரிவு மற்றும் நூல் இரவல் வழங்கும் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்படுகின்றன.

122—

உதவி தொடக்கக் கல்வி அலுவலகம்

வினா எண் 54125—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஆலங்காயத்தில் உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஆலங்காயம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு புதிதாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

சொந்தக் கட்டடம்

வினா எண் 54144—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டையில் அரசு உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், ஆர்.கே.பேட்டை உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு புதிதாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

124—

சொந்தக் கட்டடம்

வினா எண் 54145—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், பள்ளிப்பட்டில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு புதிதாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

125—

அரசு நடுநிலைப் பள்ளி

வினா எண் 54170—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, நவநீதகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் அரசு நடுநிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தென்காசி தொகுதி, நவநீதகிருஷ்ணாபுரம் ஊராட்சி நிறைவு செய்யாததால் இப்பகுதியில் நடுநிலைப் பள்ளி துவங்க வாய்ப்பு இல்லை.

126—

நூலகக் கட்டடம்

வினா எண் 54177—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகரில் 32–வது வார்டில் பொது நூலகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி நகரில் 32–வது வார்டில் நூலகம் திறக்க உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்து வழங்க தென்காசி நகராட்சி மாமன்ற உறுப்பினருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன், அங்கு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

127—

சுற்றுச் சுவர்

வினா எண் 54736—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கீழ வீராணம் ஊராட்சி, ஏந்தலூர் கிராம அரசு தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, கீழ வீராணம் ஊராட்சி, ஏந்தலூர் கிராம அரசு தொடக்கப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

128—

தரம் உயர்த்துதல்

வினா எண் 54759—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள ஏமப்பேர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள ஏமப்பேர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 1 ஏக்கர் 52 சென்ட் இடவசதி உள்ளது. 10 ஆம் வகுப்பில் 102 மாணவர்கள் உள்ளனர். எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20]

129—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 55349—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப தேவையான வகுப்பறைகள் உள்ளன. எனவே, இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

130—

தரம் உயர்த்துதல்

வினா எண் 55618—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், நொச்சிலி கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், நொச்சிலி கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்

பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 1.5 ஏக்கர் இடவசதி மட்டுமே உள்ளது. 10 ஆம் வகுப்பில் 70 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

131—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 55620—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருத்தணியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய வகுப்பறைகள் உள்ளன. எனவே, இப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது குறித்த தேவை எழவில்லை.

132—

தரம் உயர்த்துதல்

வினா எண் 55724—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, சொக்கநாதபுரம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, சொக்கநாதபுரம் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு 6.60 ஏக்கர் இடவசதி உள்ளது. 10 ஆம் வகுப்பில் 98 மாணவர்கள் உள்ளனர். எனவே, தேவை மற்றும் அரசின் நிதிநிலையின் அடிப்படையில் வருங்காலங்களில் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

133—

தரம் உயர்த்துதல்

வினா எண் 55725—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, ஏத்தாபூரிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஏத்தாபூரிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.1 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு 1.57 ஏக்கர் இடவசதி மட்டுமே உள்ளது. 10 ஆம் வகுப்பில் 97 மாணவர்கள் உள்ளனர். இப்பள்ளிக்கு அருகாமையில் 6 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

[2016 பிப்ரவரி 20

134—

தரம் உயர்த்துதல்

வினா எண் 55835—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், ஆரியபாளையம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், ஆரியபாளையம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு 8 ஏக்கர் இடவசதி உள்ளது. 10 ஆம் வகுப்பில் 50 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பள்ளிக்கு அருகில் 8 கி.மீ. சுற்றளவில் 3 அரசு மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது.

135—

ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

வினா எண் 55894—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவக்க அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மேட்டூர் தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், ஒரு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இரண்டு அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஆறு சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆக மொத்தம் பத்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. எனவே, மேட்டூர் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

136—

தரம் உயர்த்துதல்

வினா எண் 56284—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, அய்யங்கோட்டை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, அய்யங்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளி அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வி (ப.க.2(2)) துறை, நாள் 22–9–2014–ன்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

137—

தரம் உயர்த்துதல்

வினா எண் 56486—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, தேவிகோடு ஊராட்சி, தேவிகோடு அரசு பி.எப்.எம். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, தேவிகோடு ஊராட்சி, தேவிகோடு அரசு பி.எப்.எம். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. 10 ஆம் வகுப்பில் 21 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தற்போது இயலாத நிலை உள்ளது.

138—

அரசு இசைக் கல்லூரி

வினா எண் 57892—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதியில் அரசு இசைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதியில் அரசு இசைக் கல்லூரி துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

139—

தேக்கு மரத் தோட்டங்கள்

வினா எண் 8970—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி வாய்க்கால் பகுதிகளில் தேக்கு மரத் தோட்டங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். படுகை நிலங்களில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்த்தல் திட்டத்தின்கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.15.46 இலட்சங்கள் செலவில் தாமிரபரணி வாய்க்கால் பகுதிகளில் 33,000 தேக்கு மரக் கன்றுகள் 165 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது.

140—

சொந்தக் கட்டடம்

வினா எண் 21619—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வனச் சரக அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் டெரிடோரியல் வனச் சரகம் ஏதும் இல்லை. சமூக வனச் சரகம் மட்டுமே உள்ளது. இதற்காக சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

141—

மரக் கன்றுகள் நடுதல்

வினா எண் 30016—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2016 பிப்ரவரி 20

(அ) அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் வனத் துறைமூலம் மரக் கன்றுகள் நட்டு பராமரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் வனத் துறைமூலம் மரக் கன்றுகள் நட்டு பராமரிக்க பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு 2004–2005 ஆம் ஆண்டு முதல் 2012–2013 ஆம் ஆண்டு வரையில் இலவசமாக 19,28,448 மரக் கன்றுகள் மொத்தம் ரூ.265.46 இலட்சம் செலவிலும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.41.23 இலட்சம் செலவில் 4.76 இலட்சம் மரக் கன்றுகள் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

142—

வன உயிரின சரணாலயம்

வினா எண் 39287—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல், தேனி மாவட்டங்களிலுள்ள பகுதிகளை உள்ளடக்கி கொடைக்கானலில் வன உயிரின சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள வனப் பகுதிகளை உள்ளடக்கி, கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம் அமைவதாக அரசாணை (நிலை) எண் 143, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 5) துறை, நாள் 20–9–2013–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

143—

மலை வளத்தைப் பாதுகாத்தல்

வினா எண் 47703—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாறைகள் மற்றும் மலை வளத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாறைகள் மற்றும் மலை வளத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

144—

சந்தன மரங்கள் வளர்த்தல்

வினா எண் 53850—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலைப் பகுதியில் சந்தன மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 22, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 20–2–2015–ல் சந்தன மரங்கள் வளர்க்க ஆணை வெளியிடப்பட்டு, வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலைப் பகுதியில் சந்தன மரங்கள் வளர்க்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

145—

பிளாஸ்டிக் கழிவுகள்

வினா எண் 33913—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊட்டி, குன்னூர் போன்ற சுற்றுலா வனப் பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் கொட்டுவதைத் தடை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஊட்டி, குன்னூர் போன்ற சுற்றுலா வனப் பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் கொட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த மாவட்ட நிருவாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும், வனத் துறையும் இணைந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மேலும், சுற்றுலா பயணிகளால் ஆங்காங்கே போடப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் வனத் துறையினரால் அவ்வப்போது அப்புறப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

நீலகிரி தெற்கு கோட்டத்திற்குட்பட்ட வனப் பகுதிகளில் பிளாஸ்டிக் பொருட்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சோதனை சாவடிகளில் இவை சோதனையிடப்பட்டு அப்புறப்படுத்தப்படுகின்றன. சாலை ஓரங்களில் சுற்றுலாப் பயணிகளால் போடப்படும் குப்பைகள், சூழல் சுற்றுலாக் குழுக்கள்மூலம் அவ்வப்போது அகற்றப்படுகின்றன.

146—

சலவை ஆலைகளைப் பிரித்தல்

வினா எண் 35205—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) திருப்பூரிலுள்ள சாய மற்றும் சலவை ஆலைகளில், சலவை ஆலையைப் பிரித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூரில் சலவைத் தொழில்முனைவோர், சாயத் தொழில்முனைவோர் மற்றும் சலவை மற்றும் சாயத் தொழில்முனைவோர் எனத் தாங்களாக பிரிந்து தொழில் செய்து வருகின்றனர். சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் தனித் தனியேதான் இயங்கி வருகின்றன. எனவே, மேற்படி மூன்று வகையான தொழிற்சாலைகளை வாரியம் பிரிப்பதில்லை. மாண்புமிகு உயர் நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்கள் 1013 & 1068/2010, நீதிப் பேராணை எண் 29791/2003–ன்கீழ் 28–1–2011 அன்று வழங்கிய உத்தரவின்படி திருப்பூரில் உள்ள சாய பட்டறைகள் அல்லாமல் சலவை பட்டறைகளும் கழிவு நீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை (Zero Liquid Discharge) அடைவதற்கான அமைப்பினை நிறுவி இயக்க வேண்டும் என ஆணையிட்டுள்ளது. மேலும், மேற்படி மூன்று வகையான தொழிற்சாலைகளும் வாரியத்தின் இசைவாணை வேண்டி விண்ணப்பிக்கின்றன. தொழிற்சாலையானது வாரியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால், இசைவாணைகள் வழங்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் சிவப்பு வகை தொழிற்சாலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து சலவைத் தொழிற்சாலைகளும் பூஜ்ய கழிவு நீர் முறைகளை கையாள வேண்டும். இவற்றுள் சலவைத் தொழிற்சாலைகளுக்கு என்று தனிப்பட்ட கழிவு நீர் சுத்திகரித்து வெளியேற்றும் முறைகள் கிடையாது.

147—

தொழிற்சாலைக் கழிவுகள்

வினா எண் 35392—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) ஸ்ரீபெரும்புதூர் வனப் பகுதியில் தொழிற்சாலைகளின் கழிவுகளைக் கொட்டுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் வனப் பகுதியில் தொழிற்சாலை கழிவுகள் கொட்டப்படுவதாக இதுவரை எந்தப் புகாரும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் பெறப்படவில்லை. மேலும், ஸ்ரீபெரும்புதூர் வனப் பகுதியில் உள்ள காப்புக்காடுகள் அனைத்தும் வனச் சரகரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் வனப் பகுதியில் தொழிற்சாலையின் கழிவுகள் ஏதும் கொட்டப்படவில்லையென அறியப்பட்டது. எனினும், காப்புக்காடுகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு இதுகுறித்து தக்க அறிவுரை வழங்கப்பட்டு கழிவுகள் ஏதும் காப்புக் காட்டிற்குள் கொட்டாமல் வனப் பகுதி பாதுகாக்கப்பட்டு வருகிறது.

148—

சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 36111—திருமதி ர. சுபா: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், கெங்கவல்லி ஒன்றியம் பகுதிகளிலுள்ள சேகோ தொழிற்சாலைக்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம் மற்றும் கெங்கவல்லி ஒன்றியம் பகுதிகளில் சேகோ

தொழிற்சாலைகள் தனிப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்றது. இதனால் குடிநீர் ஆதாரங்கள் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழ்நாடு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகின்றது. இப்பகுதிகளில் உள்ள சேகோ தொழிற்சாலைகள் அனைத்தும் தனிப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருவதால் அரசுமூலம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

149—

கழிவுநீர்

வினா எண் 44801—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டம், கிருதுமால் நதியில் சாயப்பட்டறை கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் தாலுகா, எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புலியூர் மற்றும் பொட்டப்பாளையம் கிராமங்களில் மட்டும் துணிகளுக்கு சலவை செய்யும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. புலியூர் மற்றும் பொட்டப்பாளையம் கிராமங்களில் அமைந்துள்ள துணி வெளுக்கும் 6 தொழிற்சாலைகளில் 3 தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான இசைவாணை மட்டும் பெற்றுள்ளது. அவற்றில் ஒன்று இயக்கத்தில் இல்லை. மீதமுள்ள இரண்டு தொழிற்சாலைகள் இயங்குவதற்கான அனுமதி பெறாமல் இயங்கியமையால் அவற்றின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மூடுவதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டும் டீசல் ஜெனரேட்டர்மூலம் இயங்கிய ஒரு தொழிற்சாலையின் வளாகத்தை மூடித் திரையிட (Seal) ஆணை

பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாணையானது மாவட்ட நிருவாகத்திற்கு அனுப்பப்பட்டு, அதை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயக்குவதற்கு இசைவாணை பெற்றுள்ள மூன்று தொழிற்சாலைகளில் ஒன்று இயக்கத்தில் இல்லை. மீதமுள்ள இரண்டு தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மறுசுழற்சி நிலையங்கள் அமைத்து இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளின் செயல்பாடுகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

150—

கழிவுநீர்

வினா எண் 47265—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கோவிலூரிலுள்ள கெமிக்கல் கம்பெனியிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கோவிலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கும் தி/ள். டிசிபி லிமிடெட் என்ற தொழிற்சாலையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், தொழிற்சாலை இயக்கத்தில் இருப்பதும், தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர் சூரிய ஒளியில் ஆவியாகும் தொட்டிகள்மூலம் ஆவியாக்கப்படுவதும் கண்டறியப்பட்டது. தொழிற்சாலையின் பின்பக்க சுவரில் விரிசல் ஏற்பட்டு கழிவுநீர் பெரியகண்மாயில் கலப்பது கண்டறியப்பட்டு அதன் நீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்ததில் அது வாரியம் வரையறை செய்துள்ள அளவிற்கு மேல் இருப்பது கண்டறியப்பட்டது. கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகளில் கழிவுநீர் கசிவு ஏற்படாமல் இருக்குமாறும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை முறையாக

இயக்கவும், தொழிற்சாலைகளில் மழைநீர் கால்வாய் அமைத்து, முறையாக சேமித்து தொழிற்சாலையிலுள்ள தோட்டத்திற்கு உபயோகப்படுத்துமாறும் தொழிற்சாலையின் வளாகத்திற்குள் மழைநீர் தேங்காவண்ணம் பார்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பொருள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க, 1974 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் பிரிவு 33 ஏ—ன்கீழ் தொழிற்சாலையின்மீது நடவடிக்கை மேற்கொள்ள வாரிய தலைமை அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 20—1—2014 அன்று தொழிற்சாலை பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்தாய்வில் தொழிற்சாலையின் சுற்றுச்சுவர்களை பலப்படுத்தவும், வாரியம் வழிகாட்டுதல் நடைமுறைகளை கடைபிடிக்கவும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. கழிவுநீரினால் பொதுமக்கள் பாதிப்படைவதைத் தடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருவதுடன் இத்தொழிற்சாலையின் இயக்கத்தை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

151—

சுற்றுச்சூழல் பாதிப்பு

வினா எண் 48868 திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் சுமார் 223 பெரிய, நடுத்தர மற்றும் சிறிய வகை தொழிற்சாலைகள் உள்ளன.

[2016 பிப்ரவரி 20

மேற்கண்ட தொழிற்சாலைகளின் காற்று மாசு தடுப்புச் சாதனங்களின் செயல்பாடுகள் பற்றி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் மாதந்தோறும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் வாரிய ஆய்வகத்தின்மூலம் வருடம் ஒரு முறை காற்று தர ஆய்வு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், காற்று மாசின் தரத்தை கண்காணிக்க ஏதுவாக புகை போக்கி மற்றும் தொழிற்சாலை வளாகத்தினுள் சென்சார்கள் (Sensor) பொருத்தப்பட்டு அவை வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள CARE AIR CENTRE உடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கண்ட தொழிற்சாலையில் இருந்து வெளியாகும் காற்றின் தரத்தை வாரிய தலைமை அலுவலகத்தில் இருந்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுவதுடன் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் காற்றின் தரம் வாரியம் நிர்ணயித்த அளவீட்டை விட கூடுதலாக இருப்பின் அத்தொழிற்சாலைமீது நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆகியவற்றின்கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

152—

இரசாயன தொழிற்சாலைகள்

வினா எண் 48871—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர், பி.என்.பட்டி பகுதி சிப்காட் தொழிற்சாலைகளிலுள்ள இரசாயன தொழிற்சாலைகளினால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பி.என்.பட்டி கிராமத்தில், சிட்கோ தொழிற்பேட்டையில் சிறிய வகை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

2016 பிப்ரவரி 20]

இத்தொழிற்பேட்டையில் மெக்னீசியம் சல்பேட் என்னும் உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பிரதானமாக செயல்படுகின்றன. இதன் உற்பத்தியின்பொழுது வெளியாகும் அமிலப் புகையை கட்டுப்படுத்த இத்தொழிற்சாலைகள் வழிப்பான் (Scrubber) எனப்படும் மாசு தடுப்பு சாதனங்களை நிறுவி இயங்கி வருகின்றன. மேற்படி மெக்னீசியம் சல்பேட் தயாரிக்கும்போது உருவாகும் திடக் கழிவுகள் உலர்த்தப்பட்டு நுண் உரமாக (Micro Nutrients) விற்கப்படுகிறது. அடுப்பில் இருந்து உருவாகும் சாம்பல் விவசாயத்திற்கு உரமாக பயன்படுத்துவதற்கு (Soil Conditioner) எடுத்து செல்லப்படுகிறது.

மேட்டூர் காவேரி ஆற்றிலிருந்து மாதந்தோறும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வு அறிக்கைகளின்படி காவேரி நீரின் தன்மை இந்திய தர நிர்ணய ஆணையம் வரையறுத்துள்ள குடிநீருக்கான அளவீட்டிற்குள் உள்ளது. மேலும், மேட்டூர் நகரில் ஆகஸ்ட் 2013 ஆம் ஆண்டு முதல் இராமன் நகர் குடியிருப்பு பகுதி மற்றும் சிட்கோ தொழிற்பேட்டை ஆகிய இரு இடங்களில் காற்று தர ஆய்வுமானி பொருத்தப்பட்டு வாரம் இரு நாட்கள் (24 மணி நேரம்) தொடர்ந்து மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வில் இராமன் நகர் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டை பகுதியில் காற்றின் தரம் வாரியம் நிர்ணயித்த அளவீட்டிற்குள் உள்ளது அறியப்பட்டது.

மேட்டூர், பி.என்.பட்டி பகுதி சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

153—

சுற்றுச்சூழல் மாசு

வினா எண் 49249—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் செட்டிசாவடி பகுதியில் மாநகரின் குப்பைகளை சேகரிப்பதால் அப்பகுதியில் இயங்கும் திடக் கழிவு மேலாண்மை தொழிற்சாலைமூலம் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி பகுதியில் நாளொன்றுக்கு சுமார் 350 டன் திடக் கழிவுகள் உருவாகின்றன. இத்திடக் கழிவை சேலம், செட்டிசாவடி கிராமத்தில் உள்ள தி/ள். சேலம் இன்டக்ரேடட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் என்னும் நிறுவனம் மேலாண்மை செய்து வந்தது. கடந்த 16–3–2014 அன்று இந்நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டு அங்கு இருந்த திடக் கழிவுகள் மற்றும் இயந்திரங்கள் அனைத்தும் எரிந்து விட்டன. இந்நிறுவனம் தற்போது இயக்கப்படவில்லை. எனவே, மாநகராட்சிப் பகுதியில் உற்பத்தியாகும் திடக் கழிவுகள் தற்காலிகமாக மேற்படி இடத்திற்கு அருகாமையில் தரம் பிரிக்கப்பட்டு கான்கிரீட் தளத்தின்மீது கொட்டப்பட்டு விண்ட் ரோஸ் (wind rose) *முறையில் உரமாக்கப்படுகிறது. மீதமுள்ள கழிவுகள்* secured land fill *எனும் அமைப்பில் கொட்டப்படுகிறது. புதிதாக திடக் கழிவுகள் மேலாண்மை நிறுவனம் இயக்க மாநகராட்சியால் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

154—

புகை

வினா எண் 52432—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பல்லடம் தொகுதி, அனுப்புபட்டி ஊராட்சி S.F.No.262–*ல் உள்ள கண்ணப்பன் அயரன் ஸ்டீல் கம்பெனியிலிருந்து வெளியேறும் புகையினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

பல்லடம் தொகுதி, அனுப்புபட்டி ஊராட்சியில் உள்ள தி/ள். கண்ணப்பன் அயரன் ஸ்டீல் நிறுவனம், உற்பத்தி செய்வதற்கான

2016 பிப்ரவரி 20]

இசைவாணையினை *30–6–2015* வரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து பெற்று இயங்கி வருகின்றது. இத்தொழிற்சாலை உற்பத்தியின் பொழுது ஏற்படும் காற்று மாசினை தடுக்க மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை அமைத்துள்ளது. மேலும், இந்நிறுவனத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் காற்று மாசுக் கட்டுப்பாடு கருவிகளை தொடர்ச்சியாக இயக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

155—

தேன் சுத்திகரிப்பு தொழிற்சாலை

வினா எண் 37355—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் தேன் சுத்திகரிப்பு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சி தேன் பதப்படுத்தும் நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இச்சுத்திகரிப்பு மையத்தில் நாகர்கோவிலில் கொள்முதல் செய்யப்படும் பச்சை தேன் சுத்திகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, அக்மார்க் முத்திரையுடன் தமிழகமெங்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சி என்ற இடத்திற்கு அருகில் உள்ள மார்த்தாண்டத்தில் தனியாக மற்றுமொரு தேன் சுத்திகரிப்பு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

156—

வங்கிக் கடன்

வினா எண் 41479—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பனைவெல்லம் உற்பத்திக்கு வங்கிக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பனைவெல்லம் உற்பத்தி தொழில் செய்வோர்க்கு வங்கிக் கடன் பெறுவதற்கு மாவட்ட கதர் கிராமத் தொழில் அலுவலகம்மூலம் விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை திட்ட அறிக்கையுடன் மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ள தெரிவு குழு ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் வங்கிக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற்ற பயனாளிகளுக்கு விளிம்பு தொகை மானியம் பொது பிரிவினருக்கு 25 சதவீதமும், நலிந்த பிரிவினருக்கு 35 சதவீதமும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

157—

கதர் கிராமத் தொழில் மையம்

வினா எண் 52897—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, திருமலாபுரத்திலுள்ள கதர் கிராமத் தொழில் மையத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, திருமலாபுரத்தில் உள்ள கதர் கிராமத் தொழில் மையம், இராமநாதபுரம் மாவட்ட சர்வோதய சங்கத்தை சேர்ந்த மையமாகும். இந்த மையம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினை சார்ந்தது அல்ல. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, திருமலாபுரத்தில் உள்ள கதர் கிராமத் தொழில் மையத்தை வாரியத்தின்மூலம் செயல்படுத்த இயலாது.

158—

பனை சர்க்கரை ஆலை

வினா எண் 53572—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரில் மாவட்ட பனைவெல்லம் கூட்டுறவு சம்மேளனம்மூலம் பனை சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரில் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம் மூலமாக பனஞ்சீனி ஆலை அமைக்க மாநில அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

159—

சொந்தக் கட்டடம்

வினா எண் 55356—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையிலுள்ள காதிகிராப்ட் விற்பனை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் இயங்கிவந்த கதர் அங்காடி, விற்பனை குறைவு மற்றும் தொடர் நட்டத்தால் 2000 ஆம் ஆண்டு மூடப்பட்டது. எனவே, அங்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

160—

வங்கிக் கடன்

வினா எண் 55598—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் மருத்துவத் துறைக்கான பேண்டேஜ்கள், எம்பிராய்டரி துணிகள் தயாரிக்க கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மருத்துவத் துறைக்கான பேண்டேஜ்கள், எம்பிராய்டரி துணிகள் தயாரிக்க கடன் உதவி கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

2016 பிப்ரவரி 20]

161—

சொந்தக் கட்டடம்

வினா எண் 28778—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரியின் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு 100 மாணவியர் தங்கும் வகையில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், மேலும், விடுதிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு அவற்றில் சூரிய ஒளிமூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவி மற்றும் 1 கிலோவாட் திறனுள்ள சூரிய ஒளி போட்டோ ஹோல்டிக் பவர் பிளாண்ட் நிறுவுவதற்கும் அரசாணை (நிலை) எண் 8, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை, நாள் 4–2–2013 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

162—

விடுதி

வினா எண் 30239—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்பபாபுரம் ஒன்றியம், முதுனை, நல்லூர், வேப்பூர், இருப்பு மற்றும் மங்கலம்பேட்டை ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, கம்பபாபுரம் ஒன்றியம், வேப்பூர், இருப்பு ஆகிய பகுதிகளில் 8 கி.மீ.–க்குள் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. மற்ற பகுதிகளான முதனை, நல்லூர், மங்கலம்பேட்டை ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் விடுதிகள் கட்டுவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

163—

ஆண்கள் விடுதி

வினா எண் 30242—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், ஆலடியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் ஆண்கள் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், ஆலடியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் ஆண்கள் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

164—

மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவி

வினா எண் 30400—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் நல விடுதிகளில் சூரிய ஒளி சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவியை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் 103 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகளுக்கு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைமூலம் 1 கிலோவாட் திறனுள்ள சூரிய ஒளி போட்டோ வோல்டிக் பவர் பிளாண்ட் பொருத்துவதற்கு ஆணையிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

165—

சிறப்பு வகுப்புகள்

வினா எண் 30839—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதியிலுள்ள மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சு பயிற்சி சிறப்பு வகுப்புகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 175 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி/பாலிடெக்னிக்/ஐ.டி.ஐ/விடுதிகளில் தங்கிப் பயிலும் 10,272 மாணவ மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த சிறப்பு பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

166—

மாணவர்களின் எண்ணிக்கை

வினா எண் 32642—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை வட்டத்திலுள்ள அரசு கலைக் கல்லூரி விடுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011–2012 ஆம் ஆண்டிற்கான இத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர்

2016 பிப்ரவரி 20]

மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர் எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு சேர்ப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்து, அரசாணை (நிலை) எண் 115, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 16–12–2011–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி தற்போது கூடுதலாக மாணவ மாணவிகள் விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

167—

நலக் குழு

வினா எண் 33021—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுபான்மையினரின் பிரச்சினைகளை தீர்வு காண மாவட்ட அளவில் நலக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏற்கெனவே மாநில சிறுபான்மையினர் ஆணையம், தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வாணையம் 1–1–2013 முதல் திருத்தியமைக்கப்பட்டு, புதிய தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாணையம் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொண்டு வரும் நிலையில் தனியாக மாவட்ட அளவில் சிறுபான்மையினர் நலக் குழு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

168—

விடுதி

வினா எண் 33022—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, கப்பியரை பேரூராட்சி, கருங்கல் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, கப்பியரை பேரூராட்சி, கருங்கல் பகுதியில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் பூட்டேற்றி என்னும் இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி இயங்கி வருவதால், மேற்கொண்டு கருங்கல் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி தேவையில்லை.

169—

விடுதி

வினா எண் 33496—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தக்குடி அரசுப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கு விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, அனுமந்தக்குடி கிராமத்தில் புதிதாக மாணவ மாணவியர் விடுதி துவங்கினால் போதுமான மாணவ மாணவியர் சேர வாய்ப்பு

இல்லை என்பதால், அனுமந்தக்குடி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதி துவங்க தேவை எழவில்லை.

170—

விடுதி

வினா எண் 34366—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலத் துறை கல்லூரி மாணவ மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் வட்டத்தில் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி துவங்க அரசாணை (நிலை) எண் 134, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1)த் துறை, நாள் 28–11–2012–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

171—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 36572—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

172—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 37139—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மல்லி கஸ்பா மல்லியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மல்லி கஸ்பா மல்லியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

173—

மாணவ மாணவியர் விடுதி அமைத்தல்

வினா எண் 37774—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனியாக விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

174—

மாணவியர் விடுதி அமைத்தல்

வினா எண் 41609—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

175—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 43539—திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியிலுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

176—

கல்வி உதவித் தொகை

வினா எண் 44194—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் சார்பாக ஏழை முஸ்லீம் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்மூலம் ஏழை முஸ்லீம் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

177—

மருத்துவக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 44199—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தமிழகத்தின் வக்ஃப் வாரியத்தின் சார்பாக மருத்துவக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்மூலம் மருத்துவக் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

மாணவியர் விடுதி அமைத்தல்

வினா எண் 46312—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, பாரதிதாசன் மாதிரி உறுப்புக் கல்லூரிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டியில் இயங்கி வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்படுவதால், திருத்துறைப்பூண்டி தொகுதி, பாரதிதாசன் மாதிரி உறுப்புக் கல்லூரிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மாணவியர் விடுதி அமைக்கும் அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

179—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 48097—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, குமணன்தொழு கிராமத்தில் சீர்மரபினர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, குமணன்தொழு கிராமத்தில் சீர்மரபினர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

180—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 48102—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, குழியிறையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, குழியிறையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2016 பிப்ரவரி 20]

181—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 48103—திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருமயம் தொகுதி, அரிமழம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, அரிமழம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

182—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 52324—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2016 *பிப்ரவரி* 20

183—

மாணவர் விடுதி அமைத்தல்

வினா எண் 54731—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, காரப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதி, காரப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

184—

மாணவியர் விடுதி அமைத்தல்

வினா எண் 54732—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல

2016 பிப்ரவரி 20]

மாணவியர் விடுதி அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது எதும் இல்லை.

185—

முதுநிலை மற்றும் ஆராய்ச்சி கல்விகள் துவக்குதல்

வினா எண் 2073—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி கல்விகளை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் முதுகலை பட்டப் படிப்புகள் மகப்பேறியல் துறையில் மூன்று இருக்கைகளும் (O&G 3 seats), *மயக்கவியல் துறையில் நான்கு இருக்கைகளும்* (Anaesthesia 4 seats) *இந்திய மருத்துவக் குழுவின் அனுமதி பெறப்பட்டு, 2013–2014 ஆம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கை நடைபெறுகின்றது.*

186—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 5414—முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராம மக்கள் அனைவரும் சிறந்த மருத்துவ வசதி பெறும் வகையில் 5 ஊராட்சிகளுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஒரு ஊராட்சியின் குறைந்தபட்ச மக்கள் தொகை 1000 முதல் 2000 வரை உள்ளது என்று கணக்கிட்டால், ஐந்து ஊராட்சிகளின் மக்கள் தொகை 10,000 வரைதான் இருக்க வாய்ப்புள்ளது. எனவே ஐந்து ஊராட்சிகளுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் நடைமுறையில் இல்லை.

187—

மருத்துவமனை நவீனப்படுத்துதல்

வினா எண் 6236—திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனையை மேம்படுத்தி நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனை 483 படுக்கைகள் கொண்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு வெளிநோயாளிகள் 2617 நபர்களும், உள்நோயாளிகள் 471 நபர்களும் சிகிச்சை பெறுகின்றனர். மாதமொன்றுக்கு 29000 ஆய்வக பரிசோதனைகள்

மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 552 பிரசவங்களும், 324 சிசேரியன்களும் நடைபெறுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 708 எக்ஸ்ரே, 1056 ஸ்கேன் எடுக்கப்படுகிறது. மேலும் 638 பெரிய அறுவை சிகிச்சைகளும், 1370 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகிறது. தற்போது போதுமான அனைத்து வசதிகளுடனும் அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அப்பகுதி மக்களின் நலன் கருதி முதலமைச்சரின் அறிவிப்பின்படி மேற்படி மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட்டு, கூடுதல் கட்டடம், உபகரணங்கள் மற்றும் கூடுதல் வசதிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக மருத்துவர்கள் செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு ஒப்பளிக்கப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்பட்டு அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

188—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11010—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணிகண்டம் வட்டம், சோமரசம்பேட்டை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், சோமரசம்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது தொடர்பாக, ஏற்கெனவே அரசு ஆணை (நிலை) எண்224, மக்கள் நல்வழ்வு மற்றும் குடும்ப நலத் (எல்–1) துறை, நாள் 14-9-2011–ல் ஆணை வெளியிடப்பட்டு, 13-2-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

[2016 பிப்ரவரி 20

189—

அவசர ஊர்தி

வினா எண் 21856—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு புதிய அவசர ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இயங்கி வந்த அவசர ஊர்தி சேவை தற்பொழுது சுகாதாரத் திட்ட நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, மாநிலத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் இலவச "108 ஆம்புலன்ஸ்" சேவையாக செயல்பட்டு வருகிறது. மேலும் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் ஒரு அவசரகால ஊர்தி நல்லமுறையில் செயல்பட்டு வருவதாலும், மேலும் அப்பகுதியில் 108 அவசர கால ஊர்தியின் சேவை செயல்பட்டு வருவதாலும், மேலும் ஒரு புதிய அவசரகால ஊர்தியின் தேவை எழவில்லை.

190—

உயர் சிறப்பு பாடப் பிரிவுகள் துவக்குதல்

வினா எண் 22368—திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் DM (Cardiology), M.Ch (Urology) *உயர் சிறப்பு பாடப் பிரிவுகள் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் நரம்பியல் துறையில் ஒரு இருக்கையுடன் (DM Neurology 1 seat) *சிறப்பு முதுகலை*

(Super Speciality) *மருத்துவப் படிப்பு இந்திய மருத்துவக் குழுவின் அனுமதி பெறப்பட்டு, 2015–2016 ஆம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. மேலும், தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில்* DM (Cardiology), M.Ch (Urology) *போன்ற உயர் சிறப்பு பாடப் பிரிவுகள் துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதும் இல்லை.*

191—

மருத்துவமனை தரம் உயர்த்துதல்

வினா எண் 26530—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, ஆதனக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

192—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 29070—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண்58, இடுவம்பாளையம், ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இடுவம்பாளையம் கிராமம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. அங்கு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. இக்கிராமத்திலிருந்து ஏழு கிலோ மிட்டர் தொலைவில் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், இடுவம்பாளையம் துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

193—

சூரியசக்தி மின் உற்பத்தி

வினா எண் 29091—திரு. பி.ஆர். மனோகர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மின் ஆக்கி அல்லது சூரிய சக்தி சார்ந்த மின் உற்பத்தி வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் சுகாதாரப்பகுதி மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் வட்டத்தில் உள்ள பாணாவரம் ஆரம்ப சுகாதார நிலையம் இரத்த சேமிப்பு வங்கி வசதியுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். அதே வட்டாரத்தில் காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். மேலும் மின்னாக்கி, அறுவை அரங்குகள் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருவதாலும், காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அறுவை அரங்கு ஒப்பளிப்பு செய்யப்படாததாலும் காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மின்னாக்கி அல்லது சூரியசக்தி மின் உற்பத்தி வசதி வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

194—

மருத்துவமனை உட்கட்டமைப்பு மேம்படுத்துதல்

வினா எண் 29092—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி மருத்துவமனையில் உட்கட்டமைப்பு மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையாக தற்போது செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்வி மருத்துவமனைக்கு சமமாக இம்மருத்துவமனை சகல

வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இம்மருத்துவமனை உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்த அவசியம் இல்லை.

195—

புற்று நோயாளிகளுக்கு தனி வார்டு

வினா எண் 29218—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் அரசு மருத்துவமனையில் புற்று நோயாளிகளுக்கு தனி வார்டு அமைத்து மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்று நோயாளிகளுக்கு தனி வார்டு அமைத்து மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு 26.2.2009 முதல் புற்று நோயாளிகள் பிரிவு செயல்பட்டு வருகிறது.

196—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 29223—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, ஏ. மாத்தூர் மற்றும் தொண்டைமான் ஊரணி பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஏ.மாத்தூர் மற்றும் தொண்டைமான் ஊரணி கிராமங்கள் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 87.066. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், ஏ.மாத்தூர் மற்றும் தொண்டைமான் ஊரணி கிராமங்களிலிருந்து எட்டு கிலோ மிட்டர் தொலைவில் வாராப்பூர் மற்றும் பெருமகலூர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், ஏ. மாத்தூர் மற்றும் தொண்டைமான் ஊரணி கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

197—

மருத்துவமனை தரம் உயர்த்துதல்

வினா எண் 29233—திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை பெரியார் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டத்திற்கான மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை நாகப்பட்டினத்தில் 445 படுக்கை வசதிகளுடனும் மற்றும் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடனும் செயல்பட்டு வருகிறது. பொதுவாக மாவட்ட தலைமை மருத்துவமனை மாவட்ட தலைமையகத்தில்தான் அமைக்கப்படும். மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக உயர்த்தப்பட்டால், மாவட்டத்தில் அடுத்த பெரிய அரசு மருத்துவமனையின் செயல்பாட்டின் அடிப்படையில் மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். எனவே, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

198—

மூலிகைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 29366—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், செட்டிபட்டி சந்தை பேட்டையில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) டாம்ப்கால் நிறுவனம் இந்திய மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள், மூலிகைக் கூந்தல் தைலம் போன்ற மருந்துகள் தயாரிப்பில் முழு கவனம் செலுத்தி வருவதால், சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், செட்டிபட்டி சந்தை பேட்டையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

199—

செவிலியர் பயிற்சிப் பள்ளி துவக்குதல்

வினா எண் 29392—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் செவிலியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் ஒரு அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியும், அரசு தலைமை மருத்துவமனை, திருப்பூரில் மற்றொரு அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியும் இயங்கி வருகின்றன. சங்கரி தொகுதி சேலம் மற்றும் திருப்பூர் மாவட்டத்திற்கு மிக அருகில் இருப்பதால் அங்கு தனியாக அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

200—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 29393—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், வெள்ளூற்றுப் பெருமாள் கோயில் அருகே துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப்பகுதியில் 2,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. வெள்ளூத்துப்பெருமாள் கோயில் கிராமத்தின் மக்கள் தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், வெள்ளூத்துப்பெருமாள் கோயில் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

201—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்கள்

வினா எண் 29622—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவிலும் மருத்துவர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி சுகாதார மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள இந்தூர், லாலிகம் மற்றும் பந்தள்ளி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களும், தொப்பூரில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், நல்லம்பள்ளி மற்றும் பாளையம்புதூர் ஆகிய இடங்களில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அரசு விதிகளின்படி, பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டு

2016 பிப்ரவரி 20]

பணிபுரிந்து வருகிறார்கள். இது தவிர, பாளையம்புதூர் நடமாடும் மருத்துவக் குழுவிற்கு ஒரு மருத்துவர் ஒப்பளிக்கப்பட்டு அம்மருத்துவ பணியிடமும் நிரப்பப்பட்டு மருத்துவர் பணிபுரிந்து வருகிறார். மேலும், மகப்பேறு சேவைகளை வழங்க 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகிறார்கள். அவசர அழைப்பின்பேரில் மருத்துவ அலுவலர்கள் இரவு நேரங்களில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கி வருகிறார்கள்.

202—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 29633—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஊராட்சியை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வரகூர் கிராமம், திமிரி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,32,147. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதால், வரகூரை மையமாகக் கொண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2016 பிப்ரவரி 20

203—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 30219—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ விருத்தாசலம் தொகுதி, வேப்பூரில் 24 மணி நேரமும் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர பிரசவ சேவையுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற நிலையில், அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

204—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 30221—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ விருத்தாசலம் தொகுதி, இருப்பு, முகாசாப்பரூர், மாத்தூர், டி.கோபுராபுரம் மற்றும் விஜயமாநகரத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இருப்பு, முகாசாப்பரூர், மாத்தூர், டி.கோபுராபுரம் மற்றும் விஜயமாநகரம் ஆகிய கிராமங்கள் விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இருப்பு மற்றும் மாத்தூர் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,28,764. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், டி. கோபுராபுரம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் மாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோமீட்டர் தொலைவில் விருத்தாசலம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், விஜயமாநகரம் கிராமத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் மாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், முகாசாப்பரூர், டி.கோபுராபுரம் மற்றும் விஜயமாநகரம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

205—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 30272—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியம், வேடப்பட்டியில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. வெள்ளூத்து வேடப்பட்டி கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், வேடப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

206—

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

வினா எண் 30227—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், மாறுப்பட்டி மற்றும் மடத்துக்குளம் ஒன்றியம், வேடப்பட்டியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற

அடிப்படையிலும், மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மாறுப்பட்டி கிராமம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. மாறுப்பட்டி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில், அமராவதிநகர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வேடப்பட்டி கிராமம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தினச் சார்ந்தது. வேடப்பட்டி கிராமத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் மடத்துக்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கணியூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றன. எனவே, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மாறுப்பட்டி கிராமம் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

207—

பல்நோக்கு நவீன சிறப்பு மருத்துவமனை

வினா எண் 30381—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பல்நோக்கு நவீன சிறப்பு மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது 256 படுக்கை வசதிகள் கொண்ட பல சிறப்பு பிரிவுகளைக் கொண்ட அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, 174 படுக்கை வசதி

கொண்ட சங்கரன்கோவில் அரசு தாலுகா மருத்துவமனை உள்ளிட்ட மொத்தம் 1,074 படுக்கை வசதிகள் கொண்ட 14 அரசு மருத்துவமனைகள் மக்களுக்கு சிறப்பாக மருத்தவ சேவை அளித்து வருகின்றன. அதுமட்டுமன்றி, அம்பாசமுத்திரம் மற்றும் களக்காடு ஆகிய இடங்களில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் அரசு மருத்துவமனைகளுடன் களக்காட்டில் தொற்றுநோய் மருத்துவமனையும், அம்பாசமுத்திரத்தில் நடமாடும் மருத்துவப் பிரிவும் கூடுதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கூடுதல் வசதிகளுடன் அனைத்து துறை வாரியான சிறப்புப் பிரிவுகள் அடங்கிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இம்மாவட்டத்திலும் அருகிலுள்ள கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் மேலும் ஒரு பல்நோக்கு நவீன சிறப்பு மருத்துவமனையை இம்மாவட்டத்தில் அமைக்க அவசியம் எழவில்லை.

208—

தீக்காயப் பிரிவு

வினா எண் 30383 திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் தமிழகத்தில், தீக்காய சிகிச்சைக்காக ஏதேனும் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியில் நவீன வசதியுடன்கூடிய புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தேசிய தீக்காய தடுப்புத் திட்டம் (National Programme for Prevention of Burns injuries) என்ற மத்திய அரசு திட்டத்தின்கீழ் தென்தமிழகம் உட்பட தமிழகத்திலுள்ள சில மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும், மாவட்ட தலைமை

மருத்துவமனைகளும் தீக்காய சிகிச்சைக்காக புதிய கட்டடம் மற்றும் கருவிகள் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மருத்துவமனைகள் பற்றிய விவரம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் இறுதி முடிவு மற்றும் நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

209—

அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 30874—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் அரசு மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பொதுவாக, வட்ட மருத்துவமனைகள் அந்தந்த வட்டத்திற்கான தலைமையிடத்திலேயே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. குளச்சல் அரசு மருத்துவமனை கல்குளம் வட்டத்தில் செயல்படுகிறது. இந்த வட்டத்திற்கான வட்ட மருத்துவமனை பத்மநாபபுரத்தில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக சிறப்பாகச் செயல்படுகிறது. எனவே, குளச்சல் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

210—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 31353—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 பிப்ரவரி 20

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், தேவநல்லூர் ஊராட்சி, மேலதேவநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டம், களக்காடு ஊராட்சி ஒன்றியம், மேலதேவநல்லூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

211—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 31354— திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கன்னிகுளம் ஊராட்சி, மேலத்துவரங்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. மேலத்துவரங்குளம் கிராமம், களக்காடு ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,09,140. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே

போதுமானதாக உள்ளதாலும், மேலத்துவரங்குளம் கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் சிங்கிகுளம் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோமீட்டர் தொலைவில் களக்காடு அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும் மேலத்துவரங்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

212—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 32628—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, ஜெயமங்கலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. ஜெயமங்கலம் கிராமம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,60,000. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், ஜெயமங்கலம் கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவிற்குள் மேல்மங்கலம் மற்றும் வைகை அணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும், ஜெயமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2016 பிப்ரவரி 20

213—

தாய் சேய் நல விடுதியைத் தரம் உயர்த்தல்

வினா எண் 32783—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, அரூர் வட்டம், வேப்பம்பட்டி ஊராட்சியிலுள்ள தாய் சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வேப்பம்பட்டி கிராமம், அரூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,71,151. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வேப்பம்பட்டி கிராமத்திலிருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவில் தீர்த்தமலை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அரூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், வேப்பம்பட்டி ஊராட்சியிலுள்ள தாய் சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2016 பிப்ரவரி 20]

214—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 33036—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை, எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எரிசனம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

215—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 33200—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, விராச்சிலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், விராச்சிலை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க

[2016 பிப்ரவரி 20

அரசு ஆணை (நிலை) எண் 46, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–14–II(2) துறை, நாள் 17–02–2014–ல் ஆணை வெளியிடப்பட்டு, 21–02–2014 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

216—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 33214—திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வானகரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வானகரம் கிராமம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. வானகரம் கிராம மக்கள்தொகை 30,000–க்கு குறைவாக இருப்பதாலும், வானகரம் கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் போரூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், வானகரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]

217—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 33215—திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

218—

அரசு மருத்துவமனை தரம் உயர்த்துதல்

வினா எண் 33231—திரு. பி.ஆர். மனோகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் ஒன்றியம், கரடிகுப்பம் ஊராட்சியில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கரடிகுப்பம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தில் பொன்னை பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கரடிகுப்பம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

219—

சுகாதார மையத்தைத் தரம் உயர்த்தல்

வினா எண் 33236—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு பகுதி நேர சுகாதார மையத்தினை முழுநேர சுகாதார மையமாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

2016 பிப்ரவரி 20]

அமைக்கப்படுகின்றன. முனுகப்பட்டு கிராமம், செய்யார் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 89,421. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. மேலும், முனுகப்பட்டு கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் மேல்சீசமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், முனுகப்பட்டு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், முனுகப்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

220—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 33503—திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கூரத்தாங்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கூரத்தாங்குடி கிராமம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை

72,934. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டு வரும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கூரத்தாங்குடி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வலிவலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், கூரத்தாங்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

221—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 33504—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, கொத்தாங்குடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கொத்தாங்குடி ஊராட்சி, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 75,445. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும்,

2016 பிப்ரவரி 20]

கொத்தாங்குடி ஊராட்சியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஆலத்தம்பாடி ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் திருக்குவளை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், கொத்தாங்குடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

222—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 34358—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர் தெற்கு ஒன்றியம், அரிசிபெரியாங்குப்பம், எம். புதூரில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. கடலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக அரசு ஆணை (நிலை) எண் 61 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம்சிஏ1) துறை நாள் 17–2–2011–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் கடலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

223—

சித்த மருத்துவமனை

வினா எண் 34360—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரையிலுள்ள சித்தா மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மதுரையிலுள்ள சித்தா மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

224—

மருத்துவமனைகள்

வினா எண் 34364—திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவில்பட்டி சுகாதார மாவட்டம், வில்லிச்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப

சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. வில்லிச்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், கீழ ஈரால் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துவதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வில்லிச்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

225—

கட்டடங்கள்

வினா எண் 34379—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலத்தம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆலத்தம்பாடி அரசு சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் ரூ.9.90 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, அந்தக் கட்டடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் 16–5–1999 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், அறுவை அரங்கம் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.3.30 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 7–12–2012–லிருந்து பயன்பாட்டில் உள்ளது. 2009–2010 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்மூலம் பிரசவ முன் கவனிப்பு அறை ரூ.6.60 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 30–3–2014-லிருந்து பயன்பாட்டில் உள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2016 பிப்ரவரி 20

226—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34388—திரு. க. தினகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், கள்ளப்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கள்ளப்பாளையம் ஊராட்சி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 70,466. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், கள்ளப்பாளையம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

227—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34389—திரு. க. தினகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 20]

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், ஜல்லிபட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஜல்லிபட்டி ஊராட்சி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 70,466. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், ஜல்லிபட்டி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

228—

அரசு மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 34391—திரு. க. தினகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையம் ஊராட்சியில் அரசு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையத்தைச் சுற்றி கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சின்னவரம்பசேரி, சந்திராபுரத்தில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பல்லடம் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும், சூலூர் தொகுதியில் இருகூர் (கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்), சோமனூர் (கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்) போன்ற மேம்படுத்தப்பட்ட (அரசு ஆரம்ப சுகாதார நிலையம்) மற்றும் வகராயப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுமட்டுமல்லாமல், பல்வேறு பிரிவு மருத்துவ வசதிகளைக் கொண்ட அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, பொள்ளாச்சி 29 கி.மீ. தொலைவில் இயங்கி வருகிறது. எனவே, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் அரசு மருத்துவமனையும் போதிய எண்ணிக்கையில் சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையம் ஊராட்சியைச் சுற்றிலும் செயல்பட்டு வருவதால் புதிதாக அரசு மருத்துவமனை அமைக்க அவசியம் எழவில்லை.

229—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34392 திரு. க. தினகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், இடையர்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்

பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற வரையறைப்படியும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இடையர்பாளையம் ஊராட்சி, சுல்தான்பேட்டை ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 70,466. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, அங்கு செயல்பட்டுவரும் இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், இடையர்பாளையம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

230—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34393—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், புதுமடம் ஊராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், புதுமடம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று செவிலியர்களுடன்கூடிய பிரசவ சேவை விரிவுப்படுத்தப்பட்டு, 24x7 மணி நேரமும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

231—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 34515—திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், மல்லிகைப்பட்டு ஊராட்சியை மையமாகக் கொண்ட துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையம் அமைக்கப்படவேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மல்லிகைப்பட்டு கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், மல்லிகைப்பட்டு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

232—

அரசு மருந்தகம்

வினா எண் 34519—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலுள்ள வட்ட தலைநகர்களில் 24 மணி நேரமும் இயங்கும் அரசு மருந்தகம் (Government Medical Shop) *அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்ட மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனை மற்றும்

2016 பிப்ரவரி 20]

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின்மூலம் தனியாரிடம் மருந்துகள் வாங்க விலைப்புள்ளி கோரப்பட்டு, மிகக் குறைந்த விலையில் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம்மூலம் கொள்முதல் மேற்கொண்டு அரசு மருத்துவமனைகளுக்கு 24 மணிநேரமும் மருத்துவ சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வட்ட தலைநகர்களில் 24 மணி நேரம் இயங்கும் அரசு மருந்தகங்கள் (Government Medical Shops) *அமைக்க தேவை தற்போது எழவில்லை.*

233—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34521—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீழ்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். திருவாலி கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவாலி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

234—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34522—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். பெருந்தோட்டம் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், பெருந்தோட்டம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

235—

இலவச அமரர் ஊர்தி

வினா எண் 34525—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அந்தியூர் தொகுதி, அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு இலவச அமரர் ஊர்தி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அந்தியூர் தொகுதி, அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு இலவச அமரர் ஊர்தி வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2016 பிப்ரவரி 20]

236—

சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 34527—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

237—

மூலிகைப் பண்ணை

வினா எண் 34531—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரிக்கு மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் அரசினர் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கென்று

சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் 5 ஏக்கர் தனி நிலத்தில் மூலிகைத் தோட்டம் பராமரிக்கப்படுகிறது. இது தவிர, கல்லூரி வளாகத்தில் 1.5 ஏக்கர் பரப்பளவில் மூலிகைத் தோட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) முதல் வினாவிற்கான பதிலின் அடிப்படையில் தேவை எழவில்லை.

238—

சித்த மருத்துவக் கல்லூரி

வினா எண் 34534—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

239—

புற்றுநோய் சிகிச்சை மையம்

வினா எண் 34536—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கெனவே சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், அங்கு புற்றுநோய் சிகிச்சை மையம் தனியே அமைப்பதற்கான கருத்துரு ஏதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

240—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 35711—திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

241—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 35719—திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், போந்தூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. போந்தூர் கிராமம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,24,420. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், போந்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

242—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 35720—திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதி, கயப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப

2016 பிப்ரவரி 20]

சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. பெரியகயப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில், இடைக்கழிநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரியகயப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

243—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 35750—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, அத்திப்பட்டு ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதியுடைய மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அத்திப்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில், மீஞ்சூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அத்திப்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

244—

பல் மருத்துவ மேற்படிப்பு

வினா எண் 35753—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பல் மருத்துவத்தில் மருத்துவ மேற்படிப்பிற்கான இடங்களை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரியில் 2012–2013 ஆம் ஆண்டு மொத்தம் 38 முதுகலை பட்டப் படிப்பிற்கான இருக்கைகள் இருந்தன. 2013–2014 ஆம் ஆண்டு MDS (Oral Medicine and Radiology) *3–லிருந்து 5 ஆகவும், 2014–2015 ஆம் ஆண்டு* MDS (Public Health Dentistry) *1–லிருந்து 3 ஆகவும் உயர்த்தப்பட்டு, மொத்தம் 42 இருக்கைகளாக உயர்த்தப்பட்டது. 2015–2016 ஆம் கல்வி ஆண்டில் பல் மருத்துவ முதுகலை பட்ட மேற்படிப்பின் எண்ணிக்கையை தற்போதுள்ள மொத்தம் 42 எண்ணிக்கையிலிருந்து 57 ஆக உயர்த்துவதற்கு மத்திய அரசின் சுகாதாரத் துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, இந்திய பல் மருத்துவக் குழுமத்தின் ஆய்வு எதிர்நோக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்ட மேற்படிப்பு பிரிவுக்கு இந்திய பல் மருத்துவக் குழுமத்தின் அனுமதி பெறப்பட்டவுடன் மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.*

245—

பல் மருத்துவப் பிரிவு

வினா எண் 36603—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

வட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பல் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள அனைத்து வட்ட மருத்துவமனைகளில் ஏற்கெனவே பல் மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது. பல் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள வட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

246—

இதய சிகிச்சைப் பிரிவு

வினா எண் 36708—திரு. க. தினகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சூலூர் அரசு பொது மருத்துவமனையில் இதய சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இதய சிகிச்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே அளிக்கப்பட்டு வருகிறது. கோவை மாவட்டம், சூலூர் அரசு மருத்துவமனைக்கு இதய சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக அருகிலுள்ள கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

[2016 பிப்ரவரி 20

247—

அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 36815—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, பொன்னேரி அரசு மருத்துவமனையை மாவட்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அரசு மருத்துவமனையில் தற்போது 88 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருவதுடன், சராசரியாக தினசரி 600 முதல் 700 நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், இம்மருத்துவமனை அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட பொது மருத்துவமனை செயல்பட்டு வருவதால், மேற்கண்ட மருத்துவமனையை மாவட்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட தற்போது அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

248—

அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 36875—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாடிப்பட்டி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அரசு மருத்துவமனை 48 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 791 வெளிநோயாளிகளும், 45 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டு நல்லமுறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

249—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37105—திரு. மு. முருகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகுளத்தூர் வட்டம், வளநாடு கிராமத்தினை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

அமைக்கப்படுகின்றன. வளநாடு கிராமம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 93,334. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளதாலும், வளநாடு கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் தேரிருவேலி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் வளநாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

250—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 37122—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில், இலால்பேட்டை பேரூராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, இலால்பேட்டை பேரூராட்சியில் தற்பொழுது இலால்பேட்டை (கிழக்கு), இலால்பேட்டை (மேற்கு) மற்றும் கொள்ளிமலை ஆகிய மூன்று துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இலால்பேட்டை பேரூராட்சியில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2016 *பிப்ரவரி* 20]

251—

கூடுதல் கட்டடம் கட்டுதல்

வினா எண் 37123—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் சுகாதாரப்பகுதி மாவட்டம், காட்டுமன்னார் கோவில் ஊராட்சி ஒன்றியம், அரசு மருத்துவமனை ஏதுமில்லை. ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, தேசிய ஊரக நலத்திட்டத்தின்மூலம் தடுப்பூசி அறை புதிதாக கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

252—

புற்றுநோய் விழிப்புணர்வு

வினா எண் 37163—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நுரையீரல் புற்றுநோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) நுரையீரல் புற்றுநோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் அரசால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

253—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37191—திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, ஆசூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற வரையறைப்படியும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஆசூர் ஊராட்சி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,30,024. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானவையாக உள்ளன. மேலும், ஆசூர் ஊராட்சியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் விக்கிரவாண்டி ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர்

2016 பிப்ரவரி 20]

தொலைவில் விக்கிரவாண்டி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் ஆசூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

254—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37199—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, புழல் மற்றும் மாதவரம் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. புழல் ஊராட்சி, புழல் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. புழல் ஊராட்சியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் நாரவாரிக்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், மாதவரம் பகுதியில் மாதவரம் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், மாதவரம் மற்றும் புழல் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

255—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37215—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, நரிப்பள்ளிப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் ஊராட்சி ஒன்றியம், நரிப்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை (நிலை) எண் 46, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எண் 2) துறை நாள் 17–02–2014–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

256—

தரம் உயர்த்துதல்

வினா எண் 37288—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலுள்ள மகாத்மா காந்தி மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உள்ள மகாத்மா காந்தி அரசு மருத்துவமனை 86 படுக்கைகள் கொண்ட

மருத்துவமனையாக பின்வரும் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது:

1. ஆண்கள் மருத்துவப் பிரிவு

2. பெண்கள் மருத்துவப் பிரிவு

3. ஆண்கள் அறுவை சிகிச்சைப் பிரிவு

4. பெண்கள் அறுவை சிகிச்சைப் பிரிவு

5. குழந்தைகள் நலப் பிரிவு

6. மகப்பேறு பிரிவு

7. மகப்பேறுக்குபின் கவனிக்கும் பிரிவு

இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 716 வெளிநோயாளிகளும், 82 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இம்மருத்துவமனையில் 2 அறுவை அரங்குகள், எக்ஸ்ரே, ஆய்வகம், ஸ்கேன், இரத்த வங்கி, பிணவறை, போதுமான உபகரணங்கள் போன்ற வசதிகளும் உள்ளன. இம்மருத்துவமனை தற்போது தேவையான அனைத்து நவீன வசதிகளுடன் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், காரைக்குடியில் உள்ள மகாத்மா காந்தி அரசு மருத்துவமனை சிவகங்கை மாவட்டத்திற்கான மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

257—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37294—திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் பேரூராட்சி, ஏ.கோம்பையில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற நியதியில் துணை சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. ஏ.கோம்பை கிராம மக்கள்தொகை 1,026. ஏ.கோம்பை கிராமத்திலிருந்து 2.5 கிலோ மீட்டர் தொலைவில் குப்பம்பட்டி துணை சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், ஏ.கோம்பை மக்கள்தொகை குறைவாக இருப்பதாலும், அய்யலூர் பேரூராட்சி, ஏ.கோம்பை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

258—

முதுகலை பட்டப்படிப்பு

வினா எண் 37552 திரு. ஜே.ஜி.பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரியில் புதிய முதுகலை பட்டப்படிப்புகள் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்புகள் பொது மருத்துவத் துறையில் மூன்று இருக்கைகளும் (General Medicine 3 seats) *மயக்கவியல் துறையில் இரண்டு இருக்கைகளும்* (Anaesthesia 2 seats) *இந்திய மருத்துவக் குழுவின் அனுமதி பெறப்பட்டு 2013–2014 ஆம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.*

2016 பிப்ரவரி 20]

259—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37556—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டம், காஞ்சிரங்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. காஞ்சிரங்குளம் கிராமம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இக்கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் விராதனூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் காஞ்சிரங்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

260—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37562—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, பழையனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பழையனூரில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

261—

தரம் உயர்த்துதல்

வினா எண் 37580—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரம் தொகுதி, பரந்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதியுடைய மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் வாலாஜாபாத் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், அதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பரந்தூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2016 பிப்ரவரி 20]
262—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37797—திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு ஒன்றியம், வானவன்மகாதேவி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வானவன்மகாதேவி கிராமம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 76,445. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வானவன்மகாதேவி கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நாலுவேதபதி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் வானவன்மகாதேவி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

263—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 37799—திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வைத்தியலிங்காபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வைத்தியலிங்காபுரம் கிராமம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,12,816. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வைத்தியலிங்காபுரம் கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும் வைத்தியலிங்காபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

264—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 37807—திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

அரியலூர் மாவட்டம், அரியலூரில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில் ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாமல் உள்ள இதர மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

265—

தரம் உயர்த்துதல்

வினா எண் 38079—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், களப்பால் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கோட்டூர்

ஊராட்சி ஒன்றியத்தில் திருமாக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், அதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள களப்பால் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

266—

தரம் உயர்த்துதல்

வினா எண் 38119—திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரம் தொகுதி, பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதியுடைய மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. பெரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புக்குழி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

267—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38121—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையனூர் ஊராட்சியில் 30 படுக்கைகள் வசதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மாடியனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆவுடையனூர் ஊராட்சியில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாடியனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் அரியப்பபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மாடியனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

268—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38137—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், திசைவிளக்கு ஊராட்சி, தொப்பப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 20

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தொப்பப்பட்டி கிராமம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,20,616. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், தொப்பப்பட்டி கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இகாட்டூர் மற்றும் வெள்ளாபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தொலைவில் தாரமங்கலம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகள்மூலம் மக்களுக்கு தேவையான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருவதால், அக்கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் அவசியம் இல்லை.

269—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38221—திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், திருமழபாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திருமழபாடி கிராமம், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,22,142. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும் மற்றும் திருமழபாடி கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் திருமானூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், திருமழபாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

270—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 38234 திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, மடத்தூரில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற

[2016 பிப்ரவரி 20

அடிப்படையிலும், மலைப்பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மடத்தூர் கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கு குறைவாக இருப்பதால், மடத்தூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

271—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38235—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சிவநாடானூர் ஊராட்சி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,81,772. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சிவநாடானூர் ஊராட்சியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் பாவூர்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், சிவநாடானூர்

2016 பிப்ரவரி 20]

ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

272—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38236—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, பட்டாக்குறிச்சி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற வரையறைபடியும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பட்டாக்குறிச்சி ஊராட்சி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,24,112. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பட்டாக்குறிச்சி ஊராட்சியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பாவூர்சத்திரம் மற்றும் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், ஏழு கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், பட்டாக்குறிச்சி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2016 பிப்ரவரி 20

273—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38237—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், சில்லரைபுரவு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. சில்லரைபுரவு ஊராட்சி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலையில் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் சில்லரைபுரவு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

274—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38239—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திருச்சிற்றம்பலம் ஊராட்சி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,30,633. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், திருச்சிற்றம்பலம் ஊராட்சியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் சுந்தரபாண்டியபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தொலைவில் சுரண்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

275—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38241—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஆயிரப்பேரி ஊராட்சி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், ஆயிரப்பேரி ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், ஆயிரப்பேரி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

276—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38243—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குணராமநல்லூர் ஊராட்சி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், குணராமநல்லூர் ஊராட்சியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், குணராமநல்லூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

277—

தரம் உயர்த்துதல்

வினா எண் 39544—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கரன்கோவில் தொகுதி, மேலநீலித்தநல்லூர் ஒன்றியம், வன்னிக்கோனேந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப

சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. வன்னிக்கோனேந்தல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மேலநீலித்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. மேலநீலித்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேந்தமரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வன்னிக்கோனேந்தல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

278—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 39641—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. மேலப்பாவூர் ஊராட்சி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் பாவூர்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையமும், இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் சுந்தரபாண்டியபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் சுரண்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால் மேலப்பாவூர்

2016 பிப்ரவரி 20]

ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

279—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 39643—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழ்வெள்ளக்கால் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?
(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அணியாபுரம் கிராமம், மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 96,983. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், அணியாபுரம் கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், அணியாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

373—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53040—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரணமல்லூர் ஒன்றியம், கொழப்பலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப

சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கொழப்பலூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. அந்த ஊராட்சி ஒன்றியத்தில், பெரணமல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொழப்பலூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

374—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53041—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் ஒன்றியம், சந்தவாசல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சந்தவாசல் கிராமம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,65,234. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், சந்தவாசல் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில்

2016 பிப்ரவரி 20]

ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், சந்தவாசல் கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்தவோ, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கோ சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

375—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53042—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டு ஒன்றியம், பெரணம்பாக்கம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பெரணம்பாக்கம் கிராமம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,10,522. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பெரணம்பாக்கம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் சேத்துப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், பெரணம்பாக்கம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2016 பிப்ரவரி 20

376—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53043—திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியம், திருசூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் ஒன்றியத்தில் போளூர் அரசு மருத்துவமனை 78 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். மேலும், இந்த ஒன்றியத்தில் களம்பூரில் 30 படுக்கை வசதிகள் கொண்ட அரசு மேம்படுத்தப்பட்ட/பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது. திருசூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டரில் 30 படுக்கைகள் கொண்ட களம்பூர் அரசு பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் 15 கிலோ மீட்டரில் போளூர் அரசு மருத்துவமனையும் சிறப்பாக செயல்பட்டு வருவதால், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

377—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53044—திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியம், வெண்மணி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற நியதியில் துணை சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. வெண்மணி கிராம மக்கள்தொகை 258. வெண்மணி கிராமத்தின் மக்கள்தொகை 5,000–க்கும் குறைவாக இருப்பதால், வெண்மணி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

378—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53358—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வாவிடமருதூர் கிராமம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,08,464. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அலங்காநல்லூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் முடுவார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், வாவிடமருதூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

379—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53359—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, முடுவார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. முடுவார்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் அலங்காநல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடனும் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முடுவார்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2016 பிப்ரவரி 20]

380—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53361—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்க்கலைக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் புதுவயல் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

381—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53362—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், சண்முகநாதபட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. சண்முகநாதபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தேவக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. தேவக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் திருவேகம்பத்து கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சண்முகநாதபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

382—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53385—திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, மேலநீலிதநல்லூர் ஒன்றியம், பனவடலிசத்திரத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பனவடலிசத்திரம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 87,168. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பனவடலிசத்திரம் கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் வன்னிக்கோனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையமும், ஏழு கிலோ மீட்டர் தொலைவில் குருக்கள்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், பனவடலிசத்திரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

383—

மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53622—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் செயல்பட்டு வந்த மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கு அடுத்த நிலையில் மக்களின் அதிக பயன்பாட்டில் இருந்த 126 படுக்கை வசதிகள் கொண்ட செய்யாறு அரசு வட்ட மருத்துவமனை திருவண்ணாமலை மாவட்டத்திற்கான மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனை என்ற அடிப்படை தற்சமயம் நடைமுறையில் உள்ளது. எனவே, ஆரணி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

384—

இரத்த சுத்திகரிப்புப் பிரிவு அமைத்தல்

வினா எண் 53905—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் அரசு மருத்துவமனையில் இரத்த சுத்திகரிப்பு (டயாலிசிஸ்) பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூர் அரசு மருத்துவமனை 110 படுக்கை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வரும் வட்ட மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சுமார் 1,435 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், சுமார் 87 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மேலும், நாளொன்றிற்கு சுமார் 2 பிரசவங்களும், 1 அறுவை சிகிச்சை

பிரசவமும் நடைபெற்று வருகிறது. மேலும், இம்மருத்துவமனைக்கு இரத்த சுத்திகரிப்புக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதால் அவர்கள் மேல் சிகிச்சைக்காக வேலூரில் இருக்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் மாவட்ட தலைமை மருத்துவமனை வாலாஜாவிற்கும், திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, தற்போது வேலூர் அரசு மருத்துவமனையில் இரத்த சுத்திகரிப்புப் பிரிவு தொடங்க அவசியம் எழவில்லை.

385—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53915—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், குடியநல்லூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குடியநல்லூர் ஊராட்சி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,34,950. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், குடியநல்லூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2016 பிப்ரவரி 20

386—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53916—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், கூத்தக்குடியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கூத்தக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் தியாகதுருகம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கூத்தக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

387—

மாவட்ட தலைமை மருத்துவமனைக்குக் கட்டடம்

வினா எண் 53918—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு 300 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை 124 படுக்கை வசதிகளுடனும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடனும், சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தேசிய ஊரக நல குழுமத்தின்மூலம் 3.3 கோடி செலவில் புதிதாக 3 பிரிவுகள், அறுவை அரங்கங்கள் உட்பட கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கூடுதல் 60 படுக்கை வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 1,300 நபர் வெளி நோயாளிகளாகவும், சுமார் 150 நபர் உள் நோயாளிகளாகவும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். தற்போது இம்மருத்துவமனை போதுமான வசதிகளுடன் இயங்கி வருகிறது.

388—

சுகாதார நிலையத்தைச் சீரமைத்தல்

வினா எண் 53926—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை ஒன்றியம், செலுகையில் உள்ள சுகாதார நிலையத்தைச் சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை சுகாதார மாவட்டம், தேவக்கோட்டை ஒன்றியம், மொன்னிகார்மாங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செலுகை துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. செலுகை துணை சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்திலும், நல்ல நிலையிலும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2016 பிப்ரவரி 20

389—

அரசு பொது மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53930—திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் அரசு பொது மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் அரசு பொது மருத்துவமனை 192 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக அனைத்து சிறப்புப் பிரிவுகளுடனும், அனைத்து வகையான உபகரணங்களுடனும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 134 உள் நோயாளிகளும், 1,156 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிடக் குறைவான நோயாளிகளே சிகிச்சைக்கு வருவதால் இம்மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

390—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53935—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, மேலஉரப்பனூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 பிப்ரவரி 20]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மேலஉரப்பனூர் கிராமம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,02,830. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், மேலஉரப்பனூர் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், மேலஉரப்பனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

391—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53936—திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், வாகைகுளத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வாகைகுளம் கிராமம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,02,830. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், வாகைகுளம் கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், மூன்றரை கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும், வாகைகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

392—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53964—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், திருமால்ராஜிபேட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்

பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திருமால்ராஜிபேட்டை கிராமம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,03,248. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், திருமால்ராஜிபேட்டை கிராமத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் வெளியகரம் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் பள்ளிப்பட்டு அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் திருமால்ராஜிபேட்டை கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

393—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 53965—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், சமத்துவபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சமத்துவபுரம் கிராமம், ஆர்.கே. பேட்டை

ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,00,541. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சமத்துவபுரம் கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் வெங்கனூர் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஆர்.கே. பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும் சமத்துவபுரம் கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

394—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53966—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், எஸ்.வி.ஜி. புரத்தில் துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. எஸ்.வி.ஜி. புரம் ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,00,541. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப

2016 பிப்ரவரி 20]

சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், எஸ்.வி.ஜி. புரம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பீரகுப்பம் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் வெங்கனூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், எஸ்.வி.ஜி. புரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

395—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53967—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், சி.ஜி.என். கண்டிகையிலுள்ள துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சி.ஜி.என். கண்டிகை கிராமம், ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,00,541. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சி.ஜி.என். கண்டிகை கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் வெங்கனூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், சி.ஜி.என். கண்டிகை கிராமம் துணை சுகாதார நிலையத்தை

[2016 பிப்ரவரி 20

ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

396—

பாம்புக் கடிக்கு தனிப்பிரிவு அமைத்தல்

வினா எண் 53968—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், அம்மையார்குப்பத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாம்புக் கடிக்கு சிகிச்சை அளிக்க தனிப்பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆர்.கே. பேட்டை ஒன்றியம், அம்மையார்குப்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில் சோளிங்கர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் விஷ முறிவு மையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விஷ முறிவுக்கான முதலுதவி சிகிச்சை உடன் கொடுக்கப்பட்டு இரண்டாம் பராமரிப்பு மருத்துவமனைக்கு (Secondary Care Hospital) *108 ஆம்புலன்ஸ் மூலமாக மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, அம்மையார்குப்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாம்புக் கடி சிகிச்சை அளிக்க தனிப்பிரிவு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

397—

மருத்துவமனைகளில் நாய்க்கடி மருந்து வழங்குதல்

வினா எண் 54526—திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர், களம்பூர், சேத்துப்பட்டு ஆகிய

2016 பிப்ரவரி 20]

பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளுக்கு போதிய நாய்க்கடி மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள களம்பூர், சேத்துப்பட்டு ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான அளவு நாய்க்கடி மருந்து இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

398—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 54720—திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குன்னத்தூர் கிராமம், மத்தூர் ஊராட்சி

ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,07,940. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், குன்னத்தூர் கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் காரப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், குன்னத்தூர் கிராம துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

399—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 54721—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, மிட்டப்பள்ளி கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மிட்டப்பள்ளி கிராமம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,64,073. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், மிட்டப்பள்ளி

2016 பிப்ரவரி 20]

கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் சிங்காரப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், மிட்டப்பள்ளி கிராம துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

400—

'சீமாங்' மையம் அமைத்தல்

வினா எண் 54722—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்படும் 'சீமாங்' மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை அரசு மருத்துவமனை 24 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு உட்பட 74 படுக்கை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மருத்துவமனையாகும். இங்கு மாதமொன்றிற்கு சராசரியாக 23 பிரசவங்களே நடைபெறுகின்றன. எனவே, இங்கு 24 மணிநேரமும் செயல்படும் 'சீமாங்' மையம் அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

401—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54724—திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், அத்திப்பாடி ஊராட்சி, அத்திப்பாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

[2016 பிப்ரவரி 20

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அத்திப்பாடி கிராமம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,64,073. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், அத்திப்பாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

402—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54794—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, நாட்றாம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், திம்மாம்பேட்டை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு

மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திம்மாம்பேட்டை ஊராட்சி, நாட்றாம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,05,504. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூனறு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், திம்மாம்பேட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

403—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54796—திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டியப்பனூர் ஊராட்சியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஆண்டியப்பனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது.

404—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54806—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சப்பெருமாள்பட்டி ஊராட்சியிலுள்ள ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பச்சப்பெருமாள்பட்டி ஊராட்சி, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,06,609. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பச்சப்பெருமாள்பட்டி ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், பச்சப்பெருமாள்பட்டி ஊராட்சியில் உள்ள மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

405—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54807—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2016 பிப்ரவரி 20]

(அ) ஆண்டிபட்டி தொகுதி, கடமலைமயிலை ஒன்றியத்தில் உள்ள மலைக் கிராமமாகிய குமணன்தொழுவில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குமணன்தொழு கிராமம், க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 83,494. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், குமணன் தொழு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

406—

ஸ்கேன் வசதி

வினா எண் 54809—திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே, இசிஜி, சி.டி.ஸ்கேன் போன்ற அனைத்து வகையான உபகரணங்கள் உள்ளன. மேலும், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கவேண்டிய நோயாளிகள் அருகில் இருக்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் அம்மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கும் அவசியம் தற்போது எழவில்லை.

407—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54861—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குறிஞ்சான்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குறிஞ்சான்பட்டி ஊராட்சி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,28,615. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், குறிஞ்சான்பட்டி ஊராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் சுரண்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், குறிஞ்சான்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

408—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54921—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, வாடியூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வாடியூர் ஊராட்சி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின்

மக்கள்தொகை 1,28,615. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வாடியூர் ஊராட்சியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் சுரண்டை ஆரம்ப சுகாதார நிலையமும், ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், வாடியூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

409—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54922—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, வடக்கு காவலாக்குறிச்சி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வடக்கு காவலாக்குறிச்சி ஊராட்சி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,28,615. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப அங்கு செயல்பட்டுவரும் நான்கு

2016 பிப்ரவரி 20]

ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், வடக்கு காவலாக்குறிச்சி ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உக்கிரன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் நெட்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், வடக்கு காவலாக்குறிச்சி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

410—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54923—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சீவலபுரம் கரடியடைப்பு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. சீவலாபுரம் கரடியடைப்பு ஊராட்சி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,28,615. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக

உள்ளதாலும், சீவலாபுரம் கரடியடைப்பு ஊராட்சியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் வன்னிகோனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், சீவலாபுரம் கரடியடைப்பு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

411—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54924 திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலமருதப்பபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மேலமருதப்பபுரம் ஊராட்சி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,28,615. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், மேலமருதப்பபுரம் ஊராட்சியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு

2016 பிப்ரவரி 20]

வருவதாலும், மேலமருதப்பபுரம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

412—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54925—திரு.ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சி, மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 87,168. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், நவநீதகிருஷ்ணபுரம் ஊராட்சியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் குருக்கள்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், நவநீதிகிருஷ்ணபுரம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2016 பிப்ரவரி 20

413—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54926—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, மேலவீராணம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மேலவீராணம் ஊராட்சி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,28,615. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், மேலவீராணம் ஊராட்சியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் நெட்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தொலைவில் வீராணம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதாலும், மேலவீராணம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

414—

யோகா இயற்கை சிகிச்சை மையம்

வினா எண் 54932—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் யோகா இயற்கை சிகிச்சை மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் யோகா மற்றும் இயற்கை வாழ்க்கை முறை நோய் சிகிச்சை பிரிவுகள் 18 அரசினர் நவீன மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 31 அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் ரூபாய் 9.60 கோடி செலவில் ஏற்படுத்த விதி 110 இன்கீழ் அறிவிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 257, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இம(2)2) துறை, நாள் 5–11–2013ல் ஆணை வெளியிடப்பட்டு, தற்போது இப்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது அரசு மருத்துவமனைகளில் யோகா இயற்கை சிகிச்சை மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

415—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 55163—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பள்ளிபட்டு ஒன்றியம், கரிம்பேடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கல்லாநத்தம் ஊராட்சி, ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,16,204. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், கல்லாநத்தம் ஊராட்சியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் தென்னங்குடிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும், ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஆத்தூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டுவருவதாலும் கல்லாநத்தம் ஊராட்சியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(474 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் உரை)

தந்தை பெரியாரின் துணிவாகி, பேரறிஞர் அண்ணாவின் அறிவாகி, மக்கள் திலகத்தின் கனிவாகி, இயலார்க்கு இறை தந்த கொடையாகி, பாரதியின் பாட்டுக்குப் பொருளாகி, பாவேந்தன் கூற்றுக்கு வடிவாகி, உலகத்து உலவுகின்ற தமிழினத்தை இமைக்குள் விழியாக்கி, தம் உயிராய்க் காக்கின்ற தமிழினத்துக் கவசமாகி, ஒப்பிட்டுச் சொல்வதற்கு நிகரில்லா தலைவியாகி, மக்களால் நான், மக்களுக்காக நான், மக்களோடு நான் என்ற மாதவத்தில் வாழுகிற மாதரசி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் வணக்கத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு முறை விபத்தில் பாதிக்கப்பட்டு நான் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவ உதவி செய்து, "உற்ற துயர் அத்தனையும் காற்றாய்ப் பறந்து போகும், கவலைப்படாதீர்கள், நான் காப்பேன்" என்று ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, எனக்கும், என்னுடைய குடும்பத்திற்கும் ஆதரவு அளித்தது குறித்து, ஏற்கெனவே நான் இந்த அவையில் பேசியதை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுக்கூர்கிறேன்.

கருவிலே உயிர் கொடுத்தவர் என்னைப் பெற்ற தாய். பொது வாழ்விலே எனக்கு உயிர் கொடுத்தவர் அன்புத் தாய், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த ஏழைத் தொண்டனுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த உதவிகளால், இன்றைக்கு மறு ஜென்மம் பெற்று, உயிர் வாழ்கிறேன். உங்களோடு சுவாசிக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை மலர்ப் பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

13-5-2011, சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தமிழக மக்களுக்குக் கொண்டாட்டமான நாள். 16-5-2011 அன்று பொறுப்பேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழகத்தை ஏழரைக் கோடி தமிழர்களுக்கும் சொந்தமாக்கித்

தந்தார்கள். தமிழினம் தாளாத துன்பத்தில் தவிக்கும்போதெல்லாம், அன்பால் அரவணைத்துக் காக்கும் தாயுமானவராய், தமிழகம் காத்திட அன்னையின் கரங்களில் அதிகாரம் தந்து, அபாயம் போக்கும் உபாயம் தந்தான் இறைவன். "தானே" புயல் தாக்கிய காலத்திலும், சுனாமி சூறையாடிய நேரத்திலும், மழையும், காற்றும் ஆபத்தாய் வந்தபோதும், ஈகைத் தாயே இமையாய் நின்று, இவ்வுலகை இரட்சிப்பார் என்பதாலே, கருணை கொண்ட தாயின் கரங்களில், ஆட்சித் தேரை மக்கள் தந்தனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்தது. நாட்கள் ஏழு, நாடிகள் ஏழு, ரிஷிகள் ஏழு, நதிகள் ஏழு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் இட்ட கையெழுத்துகள் ஏழு. எங்கள் அம்மா கையெழுத்து, ஏழரைக் கோடி தமிழருக்கு ஏற்றம் தரும் தலையெழுத்து, பாசத் தாயின் பச்சை மை கையெழுத்து, வளமை, பெருமை, மேன்மை எனும் நன் "மை" கள் தரும் கையெழுத்து. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திட விலையில்லா அரிசி, ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையுடன் திருமாங்கல்யத்திற்குத் தங்கம், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை உருவாக்கம், பெண் அரசு ஊழியர்களுக்கு 6 மாத பேறுகால விடுப்பு, முதியோர் உதவித் தொகை ஐநூறு, ஆயிரமென, மீன்பிடித் தடைக்கால நிதி உதவி ஆயிரம் ஈராயிரமென மொத்தத்தில் ஏழு ஆணைகள். சூழ வரும் பகையை இரு விரல் காட்டி எதிர்கொள்ளும் அதிசயம் மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு நன்மையையும் ஈகையினால் இரட்டிப்பாக்கித் தருவேன் என்கிற இன்னொரு அர்த்தமும், இரு விரல் காட்டுவதில் புதைந்திருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. மக்கள் மனங்களும் மகிழ்ந்தன. செங்கோலைப் பிடித்த செந்தமிழ்த் தாய் செம்மைத் திட்டங்கள் தினம் தந்திட்டார். ஆக்கத் திட்டங்கள் அன்றாடம், அதிவேக செயல்கள் பலவாகும். பூக்கத் தொடங்கியது தமிழகம், பூலோக சொர்க்கமாய் மாறத் தொடங்கியது. பதினான்காவது சட்டமன்றப் பேரவையும் கூடியது. புனித ஜார்ஜ் கோட்டையிலே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே மீண்டும் சட்டமன்றப் பேரவைக் கூட்டங்கள் நடைபெறுவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 5 ஆண்டுகளில் இந்தப் பேரவை நிறைவேற்றிய அலுவல்களை சுருக்கமாகத் தொகுத்தளிக்க விரும்புகிறேன்.

2016 பிப்ரவரி 20]

பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் 11 கூட்டத் தொடர்கள் 2011 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாள் தொடங்கி இன்று, 20-2-2016 வரை நடைபெற்றுள்ளன.

இந்த 11-வது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 20-1-2016 முதல் 23-1-2016 வரையிலும், இரண்டாவது கூட்டம் 16-2-2016 முதல் இன்று வரையிலும் மொத்தம் 9 நாட்கள் நடைபெற்றுள்ளன.

20-1-2016 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

16-2-2016 அன்று இடைக்கால நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளிக்கப்பட்டது.

5 ஆண்டுகளுக்கும் சேர்த்து, பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாட்கள் உட்பட)	— 197
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள்	— 3
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	— 918 மணி 31 நிமிடங்கள்
ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானங்களின்மீது விவாதமும் பதிலுரையும் நடைபெற்ற மொத்த நாட்கள்	— 22
உரையாற்றிய உறுப்பினர்கள்	— 158
உரையாற்றிய நேரம்	—58 மணி நேரம்
மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம்	—7 மணி 28 நிமிடம்

பன்மொழி வித்தகம், பல்கலைப் புத்தகம், பார் போற்றும் சித்திரம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரவை கூடிய நாட்களில் பெரும்பாலான நாட்கள் கலந்துகொண்டு, விரல் நுனியில் தகவல்களை வைத்துக் கொண்டு, உரையாற்றும் உறுப்பினர்கள் தெளிவு பெறுகின்ற வகையில், அவர்களுக்கு நிறைவு அளிக்கும் முறையில், ஆணித்தரமாக, உடனுக்குடன்,

[2016 பிப்ரவரி 20

புள்ளிவிவரங்களோடு பதில் அளித்தது, ஏனைய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்தது. மக்களின் பெருத்த பாராட்டுதல்களைப் பெற்றது. எத்தகைய பொருள் குறித்த விவாதமானாலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அவ்வப்போது ஆணித்தரமாக விளக்கம் அளித்தது அனைவரையும் வியக்க வைத்தது. விழி விரியச் செய்தது.

சட்டமன்ற நடவடிக்கைகள், சீராக, செம்மையாக, அமைதியாக நடைபெறும் வகையிலும், சட்டமன்ற மாண்புகள், மரபுகள், ஜனநாயகப் பண்புகள் மற்றும் நெறிமுறைகள் பேணிப் பாதுகாக்கப்படும் வகையிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற பாகுபாடின்றி, மக்கள் பிரச்சினைகளை எடுத்து வைக்கும் உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பளித்து, அவை நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்பதைக் கொள்கையாகக் கொண்டவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைகளையும், சீரிய ஜனநாயகப் பண்புகளையும், உயரிய மாண்பினையும், கருத்தில் கொண்டு, ஜனநாயக நெறிப்படி, விதிப்படி, இந்தப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைத்து விவாதங்களிலும் பங்கேற்று உரையாற்ற பெருமளவு வாய்ப்புகளும், அதிக நேரமும் வழங்கப்பட்டுள்ளன. நேரத்தின் அருமை கருதி அந்த விவரங்களைச் சொல்லவில்லை.

எதிர்க்கட்சியினர் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தந்து அவையில் ஆரோக்கியமான விவாதம் நடைபெற மாண்புமிகு அம்மா அவர்கள் உதவியுள்ளார்கள் என்பதற்கு நிறையச் சான்றுகளைக் குறிப்பிடலாம்.

ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கக் கூடாது என்ற பேரவை விதியை, நடைமுறையில் தானே கடைபிடித்து, அனைவருக்கும் வழிகாட்டியாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கியுள்ளார்கள். 1-4-2013 அன்று அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள்பற்றி ஒரு கருத்து தெரிவித்ததாக அவையில் ஒரு நீண்ட விவாதம் எழுந்ததையடுத்து, ஆதாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்பதற்காக, மறுநாள் அது தொடர்பான ஆதாரங்களை அவைக்குக் கொண்டு வந்து,

அண்ணல் காந்தி அவர்கள் தெரிவித்த கருத்துகளைத் தெளிவுபடவும் ஆணித்தரமாகவும் விளக்கினார்கள்.

நிதி அலுவல்கள்

நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, 2010-2011 ஆம் ஆண்டின் மொத்த மதிப்பீட்டு அளவோடு ஒப்பு நோக்குகையில், 2016-2017 ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பீடு, இரு மடங்காக உயர்ந்துள்ளது. தமிழக அரசின் வரவு-செலவின் மொத்த மதிப்பீடு ஒரு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது மாண்புமிகு அம்மா அவர்களது நல்லாட்சியில்தான்.

வரவு-செலவுத் திட்டங்களின்மீது பொது விவாதமும் பதிலுரையும் நடைபெற்ற நாட்கள்	— 26
பங்கேற்ற உறுப்பினர்கள்	— 177
உரையாற்றிய நேரம்	— 67 மணி 9 நிமிடம்
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	— 6 மணி 5 நிமிடம்
மானியக் கோரிக்கைகள், விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	— 112
உரையாற்றிய உறுப்பினர்கள்	— 840
உரையாற்றிய நேரம்	— 231 மணி 40 நிமிடம்
மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	— 138 மணி 10 நிமிடம்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	— 6 மணி 46 நிமிடம்
கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்	— 7
உரையாற்றிய உறுப்பினர்கள்	— 49
உரையாற்றிய நேரம்	— 14 மணி 31 நிமிடம்

[2016 பிப்ரவரி 20

வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட):

வரப்பெற்றவை	—	19,106
அனுமதிக்கப்பெற்றவை	—	16,557
அவையில் முன்மொழியப்பெற்றவை	—	3,519

வினாக்கள்—விடைகள்:

23-5-2011-ல் இப்பேரவைக் கூட்டம் தொடங்கியது முதல் 5 ஆண்டுகளில் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	—	66,497
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	—	188
அனுமதிக்கப்பெற்றவை	—	43,060
உடுக்குறியிட்டவை	—	13,678
உடுக்குறியிடாதவை	—	29,239
குறுகிய கால வினா	—	143
அனுமதி மறுக்கப்பெற்றவை	—	23,437

உடுக்குறியிட்ட வினாக்கள்:

அவையில் விடையளிக்கப்பட்டவை	—	1853

அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

[illegible]	[illegible]	[illegible]
1.	திரு. ம. குணசேகரன் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	தலா 33
2.	திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி	30
3.	திரு. ரா. சரத்குமார்	29
4.	திரு. சோழன் சித. பழனிச்சாமி	28
5.	திரு. சி. சண்முகவேலு	27

2016 பிப்ரவரி 20]

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்து முதல் நிலையில் இருப்பவர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் 120 வினாக்களுக்கு விடையளித்துள்ளார்.

அடுத்தபடியாக, 109 வினாக்களுக்கு விடையளித்துள்ளவர் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள்	—	153
வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள்	—	117
நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் — 31 மணி 49 நிமிடம்		
குறுகிய கால வினாக்கள்	—	2
உடுக்குறியிடாத வினாக்கள்: அவைமுன் வைக்கப்பெற்றவை	—	6,389
உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்	—	4,433
மொத்த துணை வினாக்கள்	—	4,477

வினாக்கள்-விடைகள் நேரத்தில் நடைபெற்ற ஒருசில நிகழ்வுகள் என் மனதில் நிழலாடுகின்றன.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு திரைப்படப் பாடலைக் குறிப்பிட்டு, அதை நினைவுபடுத்திப் பாட இயலாமல் போனபோது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உடன், “அவனுக்கென்ன தூங்கிவிட்டான், அகப்பட்டவன் நானல்லவா” என்ற பாடல் அது என்று கூறியது மட்டுமல்லாமல், அது “பெரிய இடத்துப் பெண்” என்ற படத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடல் என்பதையும் சேர்த்து தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அபார நினைவாற்றலுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

நம்முடைய அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன்

[2016 பிப்ரவரி 20

அவர்கள் அவையில் பேசும்பொழுது "நேற்று இரவு நான் திருச்சியிலிருந்து புகை வண்டியிலே சென்னைக்கு வந்தேன்" என்று குறிப்பிட்டவுடன், "இந்தக் காலத்தில் ஏது புகை வண்டி? நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்காக தனியாக ஒரு பழைய புகை வண்டியை திருச்சியிலிருந்து விட்டார்களா என்று தெரியவில்லை" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டது, அவர்களது sense of humour-க்கு ஒரு சான்றாக அமைந்ததோடு, ஒவ்வொரு வார்த்தையையும் எந்த அளவுக்கு கூர்ந்து கவனிக்கிறார்கள் என்பதற்கும் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு நேர்வுகளில் அவை நடவடிக்கைகள் சீரிய முறையிலும், செம்மையாகவும் நடைபெற உதவியதோடு, அவை நிகழ்வுகள் ஈடுபாடு கொண்டதாக அமைய பெருமளவு உதவியுள்ளார்கள்.

சிறப்புக் கவன ஈர்ப்பு

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை	— 35
உரையாற்றிய உறுப்பினர்கள்	— 159
உரையாற்றிய நேரம்	— 7 மணி 4 நிமிடம்
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	— 18 மணி 11 நிமிடம்

சிறப்புக் கவன ஈர்ப்பு ஒன்றில் பேச உறுப்பினரை நான் அழைக்கையில், இந்திய கம்யூனிஸ்டு கட்சி என்று அவசரத்தில் நான் குறிப்பிட்டு அழைத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் பேசியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் என்று திருத்தினார்கள். ஏற்கெனவே நான் சொன்னபடி, அவை நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனிப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதற்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டு.

2016 பிப்ரவரி 20]

தகவல் கோரல்

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்ட நேர்வுகள்	—	59
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	135
உரையாற்றிய நேரம்	—	3 மணி 2 நிமிடம்
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	—	7 மணி 26 நிமிடம்

மாசியின் மகத்துக்குள்ளே, மாசிலா மகளாய்ப் பிறந்து, பங்குனி உத்திர மதியால், ஆடிப் பெருக்கென திட்டங்கள் தந்த, தையெனும் மகளாய் ஆகி, வரும் வைகாசி பெறும் சரித்திரப் புகழைப்போல, சரித்திரம் படைத்து நிற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சீர்மிகு சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என பல்வேறு ஆதாரங்களுடன் 19-4-2012 அன்று மிக விளக்கமாக எடுத்துரைத்தார்கள். தனி ஒரு மனிதராக, இன்னல்களை எதிர்த்து நின்று, இணையில்லா ஆட்சி செய்யும் சித்திரை நிலவாய், சீர்மிகு தமிழர் வாழ்வை முன்னிறுத்தி நேர்மையில் ஆட்சி செய்து, சரித்திரத்தில் நிலை பெறும் மாண்புமிகு அம்மா அவர்களின் தெளிவுரையினால் நாடெங்கும் மகிழ்ச்சி. ஆலயங்களில் ஆனந்த எழுச்சி. இதுவல்லவோ தமிழ் குலமகளின் ஆட்சி என அனைவரும் மகிழ்ந்ததே இதற்குச் சாட்சி.

கவன ஈர்ப்புகள்

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை	—	3,097
கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை	—	1,317
அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை	—	44
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	98
உரையாற்றிய நேரம்	—	3 மணி 52 நிமிடம்
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	—	8 மணி 57 நிமிடம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 பிப்ரவரி 20

அரசினர் சட்டமுன்வடிவுகள்

வரப்பெற்றவை — 170

நிறைவேற்றப்பெற்றவை — 170

தமிழ் ஆண்டுத் தொடக்கமாக சித்திரை முதல் நாளை மீண்டும் கொள்வதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவு, 23-8-2011 அன்றும், தமிழர்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடையான வேட்டி அல்லது இந்திய பாரம்பரிய உடைகளை அணிந்து வருவோருக்குத் தடை விதிப்பதைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு 12-8-2014 அன்றும் நிறைவேற்றப்பெற்றன. இதுபோன்று, நல்ல இதயங்களோடு இணைந்து நாட்டு மக்களுக்கு நலம் பயக்கும் சிறப்புமிக்க பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்கள் அவையிலே நடந்துகொள்வதே அவை உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு பாடமாக அமையும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அரசின் தரப்பில் அவைமுன் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு, வாக்கெடுப்பிற்கு விடப்படும் நேரங்களில், பேரவைத் தலைவர், "ஏற்போர் 'ஆம்' என்க" எனக் கூறுகின்றபோது, ஒவ்வொரு முறையும் மாண்புமிகு அம்மா அவர்கள், தவறாது, 'ஆம்' என்று உரக்கச் சொல்வதைக் கவனித்து நான் ஆச்சரியப்பட்டுள்ளேன். அந்த அளவிற்கு சட்டமன்ற நடவடிக்கைகளில் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளவர் என்பதற்காக இதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நான் பெற்ற பெண்ணுக்கு எனது பெயரே முதலெழுத்து, பெண் மகவு பிறந்தாலோ பிறந்தவுடன் வைப்பு நிதி, சிசுக் கொலைகள் என்னும் அடிமுட்டாள்தனங்களை அடியோடு ஒழித்திட்ட சாதனை, மங்கையர்க்கு மண உதவி, தாலிக்குத் தங்கம், அம்மிக் குழவியோடு மல்லுக்கட்டிய கற்காலம் தவிர்க்க இல்லத்துப் பெண்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், ஃபேன், ஆணுக்கு நிகரே பெண்ணென அறிவிப்புச் செய்யும் வண்ணம் மகளிர் காவல் நிலையம், பெண் கமாண்டோ, சத்தியத்தின் கோட்டில் நின்று, சாண் அளவும் விலகாது, சமத்துவம் என்னும் தலையாய நோக்கோடு, மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மகளிர் உறுப்பினர்களை 50 விழுக்காடாக அதிகரிப்பதற்கான சட்டமுன்வடிவு

நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு வழிவகுத்துத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியை பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், அவை நடவடிக்கைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுப்பதற்கு இன்னும் ஓர் உதாரணம், சட்டமுன்வடிவினை வாக்கெடுப்பிற்கு விடுகையில், நான் "ஏற்போர் 'ஆம்' என்க" என்று மட்டும் சொல்லிவிட்டு, "மறுப்போர் 'இல்லை' என்க" என்று சொல்லாமல், "ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்" என்று குறிப்பிட்டேன். இதைக் கூர்ந்து கவனித்த மாண்புமிகு அம்மா அவர்கள் "மறுப்போர் 'இல்லை' என்க" என்று சொல்லுங்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். மதியம் 2-00 மணி ஆனவுடன், பேரவையின் அலுவல்களை நீட்டிப்பது குறித்து பேரவைத் தலைவரின் அறிவிப்பு வருகிறதா என்பதைக்கூட கண்ணும் கருத்துமாகக் கவனிக்க அவர்கள் தவறியதில்லை.

அரசினர் தனித் தீர்மானங்கள்

வரப்பெற்றவை	—	18
நிறைவேற்றப்பெற்றவை	—	18

மாண்புமிகு அம்மா அவர்களது நல்லாட்சியில், இப்பேரவையில், மிக முக்கிய பொருள்கள் தொடர்பாக, பேரவையின் கருத்தையும், நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தும் 18 அரசினர் தனித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாநிலத்தில் சட்டமன்ற மேலவை தேவையில்லை என வலியுறுத்தும் தீர்மானம் 7-6-2011 அன்று நிறைவேற்றப்பட்டது.

கடல் எல்லை பிரித்தாலும், உறவாலும், உணர்வாலும் ஒன்றான ஈழத் தமிழினத்தை இரக்கமின்றி அழித்திட்ட சிறுமதியர்கள் கூட்டத்தை தண்டிக்க, போர்க்குற்ற விசாரிப்பும், பொருளாதாரத் தடையும் வேண்டுமென இன்னும் இன்னுமாய், அனல் பறக்க ஆவேசம் காட்டி, அகிலத்தை உற்று நோக்க வைத்த வெற்றித் திருமகளின் அறிவுத் தீர்மானங்கள் 8-6-2011, 27-3-2013, 24-10-2013, 12-11-2013 மற்றும் 16-9-2015 ஆகிய நாட்களில் நிறைவேற்றப்பட்டன. இலங்கையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களை விடுவிக்க உதவிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கும் தீர்மானம், 5-12-2014 அன்று நிறைவேற்றப்பெற்றது.

[2016 பிப்ரவரி 20

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால், சம்ஹாரம் நிஜம் என்று சங்காக முழங்கும் சாதுர்யம், போர்ப் பரணி பாடும் புரட்சி, மாண்புமிகு அம்மா அவர்களின் வீரத்திற்குப் பின்னே அணிவகுக்குது தமிழகமே.

காவேரி மீட்ட கம்பீரம், கச்சத் தீவுக்கு போரிடும் நெஞ்சுரம் மாண்புமிகு அம்மா அவர்களின் கச்சத் தீவு குறித்த தீர்மானங்கள் 9-6-2011, 3-5-2013 மற்றும் 5-12-2014 ஆகிய நாட்களில் நிறைவேற்றப்பெற்றன.

முன்னாள் பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களது கொலை வழக்கில் மூவர் பெற்ற தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு கோரும் தீர்மானத்தை 30-8-2011 அன்று முன்மொழிந்து, அத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் முழுமுதற்காரணமாக விளங்கியுள்ளார்கள்.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் இழிவான சமுதாயக் கொடுமையை முற்றிலுமாக ஒழிக்க, 1993 ஆம் ஆண்டு மத்திய சட்டத்திற்குத் தேவையான திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவருமாறு மத்திய அரசைக் கோரும் தீர்மானம் 10-9-2011 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தியாவிலேயே முதன் முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசுதான் நிறைவேற்றி, வரலாறு படைத்துள்ளது. காவேரிக்கு கால் விலங்கு பூட்டிட கர்நாடகம் முனைந்தாலும், முல்லைப் பெரியாறில் முட்டுக்கட்டைப் போட்டிட கேரளம் அலைந்தாலும், தாயிருக்கப் பயமில்லை, தண்ணீருக்குப் பங்கமில்லை என்றே, சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, முல்லைப் பெரியாறு இனி இல்லை தகராறு என்றே, முல்லைப் பெரியாறு உரிமையை முன்னின்று மீட்டெடுத்த தீர்மானம் 15-12-2011 அன்றும், அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்வதற்குக் காரணமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பாராட்டும், 152 அடியாக உயர்த்தக் கோரும் தீர்மானமும் 4-12-2014 அன்றும் நிறைவேற்றப்பெற்றன.

மேகதாதுவில் கர்நாடக அரசும், பாம்பாற்றில் கேரள அரசும் அணை கட்ட அனுமதி வழங்கக் கூடாதென தமிழினம் காத்திடும் தாயின் தீர்மானம் 5-12-2014 அன்றும் நிறைவேற்றப்பெற்றது.

வறண்ட காவேரியை அகண்ட காவேரியாக ஆக்கிட, தலைக் காவேரியை தமிழகம் அழைத்து வர, பொன்னி நதி மீட்பதற்கு 84 மணி நேரம், துளி நீரும் பருகாது புண்ணியவதி போராட்டம், காவேரிக்கு உயிர் கொடுக்க தன்னுயிரைப் பணயம் வைத்திட்ட சிங்கநிகர்த் தாயின் மற்றுமொரு சீர்மிகு தீர்மானம் 27-3-2015 அன்று நிறைவேற்றப்பெற்றது. கழனி திருத்தி, உழவு புரிவோர் காலமெல்லாம், வளம் பெற காவேரி நதிநீர்ப் பிரச்சினையில், நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தியவர் சோழ நாடு காத்திட்ட சொக்கத் தங்கம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு A, B, C, D அறியா பாமரர்களையும், M.G.R. என்னும் மூன்றெழுத்து ஆங்கிலத்தை அறிய வைத்த, புரட்சித் தலைவர் அவர்களின் திருப்பெயரைச் சூட்ட மத்திய அரசை வலியுறுத்தும் மகத்தான தீர்மானம் 15-4-2013 அன்று பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

சென்னையில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, இலக்கை விஞ்சி, 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்க்க வழிவகுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியையும், பாராட்டினையும் தெரிவிக்கும் தீர்மானம் 23–9–2015 அன்று நிறைவேற்றப்பெற்றது.

தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க வகை செய்யும் அரசமைப்பு நூற்று இருபத்து ஒன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவிற்கு ஏற்பளிக்கும் தனித் தீர்மானம் 8–12–2014 அன்று நிறைவேற்றப்பெற்றது. ஆக, உலகத்தையே உற்று நோக்க வைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் இப்பேரவையில் நிறைவேற்றப்பட்டன.

விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கைகள்

கப்பியிருந்த இருள் மயத்தைக் களைந்தெறிந்து, தூய்மையுடன், இப்பாரும் எப்பாரும் போற்றும் வண்ணம், நெப்போலியன் வீரம்போன்று, நெஞ்சுறுதிதான் கொண்டு, தமிழினத்தைத் தன்னுயிராய்க் காத்து, தன்னலம் கருதாது உழைத்திடும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குப்தர்களின் பொற்கால ஆட்சிபோன்று விளங்கிட பல்வேறு திட்டங்களை, விதி 110—ன்கீழ் அறிவிப்புகளாக

[2016 பிப்ரவரி 20

வெளியிட்டுள்ளார்கள். கனிக்குள் உள்ளடங்கிய சுவைமிகு சுளையும், நன்கு முற்றிய கரும்பினுள் அடங்கிய சாறும், பனியில் மலர்ந்த மலரில் ஊறிய தேனும், இனியவை என்றானே பாரதிதாசன், அவற்றை விடவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் வெளியிட்டுள்ள அறிவிப்புகள் ஒவ்வொன்றும் இன்பம் தருபவை, இனிமையானவை, உயர்வைத் தருபவை. ஏக்கத்தைப் போக்குபவை. மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகள் ஒவ்வொன்றும் மனித வளமையைக் கூட்டுபவை. மேன்மையைத் தருபவை. வறுமையை அகற்றுபவை, செழுமையைத் தருபவை. இல்லாமையை இல்லாமல் செய்பவை.

சட்டமன்றப் பேரவை விதிகளில் விதி 110 என்பது மாண்புமிகு அம்மா அவர்களால் தனிப் பெருமையும், சிறப்பும் பெற்றுள்ளது என்று சொன்னால் அதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மக்களின் விதியை மாற்றிய விதி, வளத்தைத் தரும் உன்னதத் திட்டங்களுக்கான வழியாக, 110-ன்கீழான மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்புகள் அமைந்துள்ளன என மக்கள் பாராட்டினர். கடந்த ஐந்து ஆண்டுகளாக, பேரவை நடக்கும்போதெல்லாம் விதி 110-ன்கீழ் அறிவிப்புகளாக, 185 வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளைச் செய்து, கின்னஸ் சாதனை படைத்துள்ளதோடு, அவற்றுக்கான நிதியையும் ஒதுக்கி, திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதி செய்துள்ளார்கள். மற்ற சட்டமன்றங்களோ, பாராளுமன்றமோ செய்யாத ஒன்றை, தற்போது அவை பின்பற்ற நினைக்கும் ஒன்றை, மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவையில் நிகழ்த்திக்காட்டியுள்ளார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு 23-1-2016 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதிலுரை ஆற்றும்போது, "36 துறைகளிலும், 36 நாட்களும் சொல்லக்கூடிய அளவிற்கு, அத்தனை சாதனைகளைப் புரிந்துள்ளோம். அவற்றையெல்லாம் சுருக்கி, கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரத்தில் சொல்லக்கூடிய அளவிற்குக் கொண்டு வருவது என்பது, பகீரதப் பிரயத்தனம். எதைச் சொல்வது, எதை விடுவது என்று பார்த்துப் பார்த்து தயாரிக்கப்பட்ட பதிலுரை இது" என்று சொன்னார்கள்.

2016 பிப்ரவரி 20]

அந்த வகையில், விதி 110—ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்புகளில், முக்கியமானவற்றைப் பற்றி மட்டும் சொல்லலாம் என நானும் நினைத்தேன். முதல் அறிவிப்பு முக்கியமாக இருந்தது. அடுத்த அறிவிப்பு அதைவிட முக்கியமாக இருந்தது. அடுத்தது, அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சுருக்கமாகச் சொல்ல நினைத்தேன்; முடியவில்லை. சிலப்பதிகாரத்தை ஒரு வரியில் சொல் என்றால், "கோவலன் புகாரில் பிறந்தான். ஒரு புகாரால் மறைந்தான்" எனச் சொல்வேன். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகளில் எதை எடுப்பது, எதைத் தவிர்ப்பது எனத் தெரியாமல், சுருக்கமாக்கிச் சொல்ல இயலாமல், திகைத்துப் போனேன்.

வாடுகிற ஏழைகளுக்கும், வருங்கால தலைமுறைக்கும் பூரண ஒளியேற்றும் அறிவிப்புகளாக மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகள் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகள் ஒவ்வொன்றும், வைரம் போன்றவை, வைடூரியம் போன்றவை, கோமேதகம் போன்றவை, புஷ்பராகம் போன்றவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களால் கிடைத்த நன்மை, விளைந்த வளமை, வீழ்ந்த வறுமை, சேர்ந்த பெருமை, அடைந்த செழுமை, படைத்த புதுமை ஆகியவற்றைப் பற்றி வாய்மை, வல்லமை, நேர்மையின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அவையில் தெரிவித்துள்ளார்கள்.

தமிழுக்குத் தன்னைத் தந்த தியாகி கீழப்பழூர் சின்னசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலை, தமிழனுக்குத் தண்ணீர் தந்த கர்னல் பென்னிகுவிக், தூக்குக் கயிற்றில் தொங்குவதே மேல் என்று சுருக்குக் கயிற்றுக்குள் தானே முன்வந்து தலை கொடுத்த தன்னிகரில்லா பாளையத்து வீரன் கட்டபொம்மன், கல்லணைக் கட்டிய கரிகால் பெருவளத்தான், நீதியை நிலைநாட்டிய மனு நீதிச் சோழன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணி மண்டபங்கள், சிவகங்கை சீமை தந்த வீரமங்கை வேலுநாச்சிக்கு, சிவன் மலைக்கும் சென்னிமலைக்கும் இடையில் வாழ்ந்த தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னங்கள்; தமிழறிஞர்களுக்கு விருதுகள் என விதி 110—ன்கீழ் அறிவிப்புகள் செய்து, தமிழ்த் தாய்க்கு நம் தாய் பெருமை சேர்த்துள்ளார்கள். வீரத்திற்கே வீரத் திருமகள் செலுத்தும் வீர வணக்கம்.

[2016 பிப்ரவரி 20

உழவர் பாதுகாப்புத் திட்டம், உழவர் பெருவிழா, இந்தியாவிலேயே முதன்முறையாக டெல்டா அல்லாத இதர மாவட்டங்களுக்கென 1,755 கோடி நிவாரண உதவி, வேளாண் உற்பத்தியைப் பெருக்க விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க 984 கோடி, ஏர்முனை ஏற்றம் பெற்றிட கூர்முனை திட்டங்கள் என உழவுத் தொழில் காத்திட்ட உயிரோவியம், மாண்புமிகு அம்மா அவர்களின் உழவர் வாட்டம் போக்கும் விதி 110–ன்கீழ் அறிவிப்புகள்.

மருத்துவக் காப்பீடுத் திட்டம், உலகத் தரம் வாய்ந்த மருத்துவக் கல்லூரிகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் என எண்ணிலடங்கா விதி 110–ன்கீழ் அறிவிப்புகள். அரசு மருத்துவமனை பரிசு மருத்துவமனை ஆனது மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பினால். சென்னை நகரம் சுகாதாரத் துறையில் தெற்காசியாவின் கேந்திரமாகத் தலைசிறந்து விளங்குகிறது என்று இங்கிலாந்து சுகாதாரத் துறை மந்திரி அன்னா சவுப்ரா அவர்கள் வியந்து பாராட்ட வழிவகுத்தது. சமீபத்தில் பெய்த பெருமழையில் வெள்ளப் பாதிப்பு பெருமளவு இருந்தபோதும், மக்களுக்குத் தொற்று நோய் ஏற்படாமல், சுகாதாரக் குறைவு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், விதி 110—ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த அறிவிப்புகளால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களால் மட்டுமே சாத்தியமானது என்பதே நிதர்சனம்.

பள்ளிகள் தரம் உயர்த்தல், கட்டடங்கள் கட்டுதல், முப்பருவ கல்வி முறை, ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தல், கல்வி உதவித் தொகை உயர்வு, மாணவர் விடுதிகள் மேம்பாடு என மாண்புமிகு அம்மா அவர்கள் கல்விப் புரட்சிக்குக் கால்கோல் இடும் கனிவான அறிவிப்புகளை விதி 110–ன்கீழ் செய்து, அறிவுப் புரட்சி படைத்தார்கள்.

வறுமை, வன்கொடுமை இவை அனைத்தையும் விரட்டி, புரட்டி, இருந்த இடம் தெரியாமல், பதிந்த தடம் அறியாமல் துடைத்தெறியத் துடிக்கும் எங்களின் இதயத் துடிப்பு, மாண்புமிகு

2016 பிப்ரவரி 20]

அம்மா அவர்களின் 'அம்மா உணவகம்' குறித்த அறிவிப்பு. கர்ணனுக்கு மிஞ்சிய கொடையாளியில்லை என்பர். இல்லை, எங்கள் அம்மா இருக்கிறார். கர்ணன் செய்யாத அன்னதானத்தையும் செய்பவர். கர்ணனின் செயலில் "செஞ்சோற்றுக் கடன் தீர்த்தல்" என்னும் சுயநலம் இருந்தது. ஆனால், அம்மா அவர்களுக்கோ, இந்த 10 கோடி தமிழினமும் வறுமைப் பிடியில் சிக்காது, வயிறார உணவு வழங்க வேண்டும் என்ற பொதுநலம். அதிலும், அம்மா, நீங்களே உயர்ந்தீர்கள்.

உழைப்பவர்கள் உயர்வுபெற பல்வேறு அறிவிப்புகளை விதி 110-ன்கீழ் தந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒவ்வொரு நாளும் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து, உழைப்போரின் காவல் தெய்வமாகத் திகழ்கிறார்கள்.

இந்தப் பெருமைமிக்க பேரவையின் ஐம்பதாம் ஆண்டு பொன் விழாக் காலத்திலும், 2002-ல் மாண்புமிகு அம்மா அவர்களே பேரவையில் முதல்வராக அலங்கரித்தார்கள். வரலாறும்கூட தன்னை வழிநடத்திச் செல்வதற்கு தகுதிகொண்டோரை மட்டுமே தனதாக்கிக்கொள்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்ற வைரவிழா குறித்த அறிவிப்பை வெளியிட்டு, பேரவையின் வைர விழா நிகழ்ச்சிகளை 30–11–2012 அன்று மிகச் சிறப்பாக நடத்த ஆணையிட்டு, அனைவரும் வியக்கும் வண்ணம் அவ்விழாவை சிறப்புச் செய்தமைக்காக பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வமயம் பல்வேறு நவீன வசதிகளுடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான 60 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது பெருமையளிக்கக்கூடியது.

20–6–2013 அன்று வைரவிழா நினைவு வளைவு, மாண்புமிகு அம்மா அவர்களது திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது பெருமகிழ்ச்சிக்குரியது. சிங்க நிகர்த் தாயின் சீரிய தலைமையில் புகழ்மிக்க சட்டமன்றப் பேரவைக்கு வைர விழா எடுப்பதுதானே சாலப் பொருத்தமானது, சரித்திரத்தின் விருப்பமானது என்றனர் மக்கள். ஆம், இனி இப்பேரவையின் பவள விழா, நூற்றாண்டு விழா, இன்னும் இன்னுமாய் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையிலேயே நடத்தப்பட வேண்டும். அது இந்த மண்ணின் விருப்பமும், தமிழ் மக்களின் விருப்பமும் ஆகும்.

[2016 பிப்ரவரி 20

புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடினாரே, "ஆளுக்கொரு வீடு கட்டுவோம், அதில் ஆயக் கலைகளைச் சீராகப் பயில்வோம்" என்று; அதனையொட்டி தமிழகத்திலே ஆளுக்கொரு வீடு அளிக்க அன்னமிட்ட கையின் விதி 110-ன்கீழான ஆதரவான அறிவிப்புகள்.

"தரைமேல் பிறக்க வைத்தான்" என அன்று பாடினார். "துயர்தீர்த்து சிரிக்க வைத்தார் அம்மா" என இன்று பாட, மீனவர்களின் நலனைப் பேணிக் காத்திடவும், அவர்களின் வாழ்வு மேம்படவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விதி 110–ன்கீழ் பல்வேறு அறிவிப்புகள்.

தமிழகம் மின்மிகை மாநிலமாக பல்வேறு அறிவிப்புகள் மாண்புமிகு அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் வெளியிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்றைக்குக் கூடுதல் மின்சாரம் பெறப்பட்டு, மின்வெட்டு தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தொடரில், 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்வது குறித்த அறிவிப்பினை 18–2–2016 அன்று அறிவித்து, 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி, சாதனை படைத்த முதல் முதல்வர், தனித் தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

அதேபோன்று, அரசு அலுவலர்களின் நலனில் எப்போதும் தனி அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அரசு அலுவலர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற 11 அறிவிப்புகளை வெளியிட்டு, அரசு ஊழியர்களின் வயிற்றில் பால் வார்த்தார்கள்.

இன்று, (20–2–2016) திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணி மண்டபம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள்.

ஒளிமயமான பொற்கால ஆட்சியைத் தரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் 185 அறிவிப்புகளை இந்த அவையில் அளித்து, தமிழ் சமூகம் ஏற்றம் அடையச் செய்துள்ளார்கள். எண்ணற்ற அறிவிப்புகள், எட்டிலடங்கா

அவற்றின் பயன்கள்.

அடுத்ததாக, பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள் குறித்த விவரத்தை அறிவிக்கிறேன்.

பொதுக் கணக்குக் குழு	—	323
பொது நிறுவனங்கள் குழு	—	272
அரசு உறுதிமொழிக் குழு	—	216
மனுக்கள் குழு	—	47
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	—	22
மதிப்பீட்டுக் குழு	—	19
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு	—	7
அவை உரிமைக் குழு	—	6
பேரவை விதிகள் குழு	—	1

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	—	725
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	—	1,848

உறுப்பினர்கள் வருகை—

23-5-2011 முதல் 5 ஆண்டுகளில் பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல்—

வ. எண்	உறுப்பினர்கள் பெயர்
1.	திரு. ஆ.க. அரங்கநாதன்
2.	திருமதி த. இந்திராகாந்தி
3.	திரு. வி.எஸ். இராஜி

4. திரு. பா. கணேசன்

5. திரு. கே.பி. கந்தன்

6. திரு. கடம்பூர் ராஜு

7. திரு. வி.பி. கலைராஜன்

8. திரு. என்.வி. காமராஜ்

9. திரு. ம. குணசேகரன்

10. திரு. கே. குப்பன்

11. திருமதி ம. சக்தி

12. திரு. ஓ.கே. சின்னராஜ்

13. திரு. இரா. தமிழ்ச்செல்வன்

14. திரு. ப. தன்சிங்

15. திரு. ஆர். துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை

16. திரு. வ. நீலகண்டன்

17. திரு. கே.பி. பரமசிவம்

18. திரு. ச. பழனிச்சாமி

19. திரு. ஜே.சி.டி. பிரபாகர்

20. திரு. இரா. பெருமாள்

21. திருமதி மனோரஞ்சிதம்

22. திரு. சு. மாதேஸ்வரன்

23. திரு. கா.கோ. ரமேஷ்

24. திரு. சு. ரவி

25. திரு. மு. ரெத்தினசாமி

26. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

27. திரு. கோ. வெங்கடாஜலம்

28. திரு. எஸ். வேதாச்சலம்

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

மொத்தம்	—	1,15,441
ஆண்கள்	—	97,073
பெண்கள்	—	18,368

நூலகம்—

இப்பேரவையின் ஐந்தாண்டுக் காலத்தில் சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	—	2,344
வழங்கப்பெற்ற நூல்கள்	—	3,296
புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	—	144

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	—	3,722
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	—	38,879
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	—	10,794
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	—	2,681

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சட்டமன்ற நடவடிக்கைகளில் காட்டும் ஆர்வத்தையும், உன்னிப்பான ஈடுபாட்டையும், விதிகளைத் தவறாது பின்பற்றும் பாங்கையும் உறுப்பினர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எந்த அளவுக்கு சட்டமன்ற நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கிறார் என்பதற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம்.

உதாரணமாக, 4-4-2013 அன்று வினா நேரத்தில் நான் அவசரமாக உறுப்பினர் பெயரை 'முத்துக்கருப்பசாமி' என்று அழைத்ததைக் கவனித்து, உறுப்பினரின் பெயர் 'திரு. முத்துகருப்பண்ணசாமி' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உடன் திருத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், விவாதங்களில் உறுப்பினர்கள் எந்தத் துறையின் திட்டங்கள் குறித்து கருத்துகள் தெரிவித்தாலும், ஒவ்வொரு துறையின்கீழும் செயல்படும் அனைத்துத் திட்ட விவரங்களையும் உடனே தனது அபார நினைவாற்றலின்மூலம் நினைவுகூர்ந்து, உடன் எழுந்து விளக்கங்கள் அளித்து, மாண்புமிகு அமைச்சர்களின் பணியினையும் வெகுவாகக் குறைத்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

சட்டமன்றப் பேரவை வைர விழாவை நடத்திக் காட்டியது மட்டுமல்லாமல், சட்டமன்றத்திற்கென பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய ஓய்வு அறை, பெண் உறுப்பினர்களுக்குத் தனியே புதுப்பிக்கப்பட்ட ஓய்வு அறை ஆகியவற்றை 8-8-2011 அன்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் 'சி' பிளாக்கில் பெண் உறுப்பினர்களுக்கென தனியே அதிநவீன உடற்பயிற்சி மையத்தை 1-2-2012 அன்றும், புதுப்பிக்கப்பட்ட சட்டமன்றக் குடியிருப்பு வளாகத்தின் முகப்பு வாயிலை 8-7-2014 அன்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு Lap top வசதி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மின் அஞ்சல்மூலம் ஆவணங்களை அனுப்பும் முறை, சட்டமன்ற வளாகத்திற்குள் செல்ஃபோன் பாதுகாப்புப் பெட்டக வசதி, பொதுத் தொலைபேசி வசதி, உயரத்திற்கேற்ப மாற்றியமைக்கக்கூடிய ஒலி வாங்கிகள், உறுப்பினர்களின் தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் சேர்க்கும் புதிய நடைமுறை இவையனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களது எண்ணத்தில் உதித்த பொன்னானத் திட்டங்கள்.

பேரவைக் கூட்டங்கள் நடைபெறும்போது விதிமுறைகள், நடைமுறைகள், மரபுகள் இவற்றைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு

2016 பிப்ரவரி 20]

அம்மா அவர்கள் உரையாற்றுவதைக் கவனித்து வந்தாலே, கருத்தில்கொண்டாலே, அவையில் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகளைப் பற்றி உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள முடியும். மாண்புமிகு அமைச்சர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது, இப்பேரவையை நடத்திச் செல்லும் எனக்கே அது வழிகாட்டியாக அமைந்தது என்றால், அது மிகையாகாது.

பேரவை நடவடிக்கைகள் சிறப்பாக அமைந்திட, ஜனநாயக முறைப்படித் திகழ்ந்திட அவ்வப்போது பல்வேறு ஆலோசனைகள் வழங்கி, அனைத்து வகைகளிலும் எனக்கு வழிகாட்டியாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை.

பேரவை நடவடிக்கைகளை நடத்துவதில் எனக்குப் பேருதவியாக இருந்த மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதத்தின்போது எழுப்பும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் விளக்கமளித்ததோடு, பற்பல புதிய அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றைப் புத்தகமாக அச்சிட்டு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவை நடவடிக்கைகளை மிக நல்ல முறையில் நடத்திச் செல்வதில் பெரும் துணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் நல்ல முறையில் விவாதங்களில் பங்கேற்கவும் உறுதுணையாக இருந்த அரசுத் தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், அனைத்துக் கட்சிக் கொறடாக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு, பேரவைத் தலைவர் பதவியில் இருக்கும் எனக்கு யார் மீதும், தனிப்பட்ட முறையில் விருப்பு, வெறுப்பு கிடையாது. அவ்வாறு இருக்க, மாண்புமிகு

முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒருக்காலும் அனுமதிக்க மாட்டார்கள். இந்த அவை இயற்றிக்கொடுத்த விதிகளின்படி, மரபின்படி நான் செயல்பட்டுள்ளேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஐந்து வருட காலத்தில் பேரவையினுடைய அலுவல்கள் அனைத்தையும் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்ற உறுதுணையாக இருந்த பேரவைச் செயலாளர் திரு. அ.மு.பி. ஜமாலுதீன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உதவிய என்னுடைய தனிச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் மற்றும் என் அலுவலக ஊழியர்களுக்கும், பேரவையின் நிருபர் பிரிவு மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்புற ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் ரேடியோ பிரிவினருக்கும், அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த இந்தப் பொறுப்பில் நடுநிலை தவறாது பணியாற்றியுள்ளேன் என மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்துள்ள பாராட்டுதல்களுக்கு எனது நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தப் பாராட்டு ஒன்றையே என் பேறாக, கிடைத்தற்கரிய வரமாக, என் வாழ்நாளில் பெற்ற பெரும் பரிசாகக் கருதுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலராக விளங்கும் ஒரே தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மட்டும்தான். கௌதம புத்தரைப் பார்த்து, அவருடைய சீடர்கள் கேட்டார்களாம், உலகத்திலேயே உயர்வானவர் எவர் என்று. புத்தர் சிரித்துக்கொண்டே சொன்னாராம், பள்ளத்திலே இருக்கிறவனைக் கைதூக்கி விடுபவர் எவரோ, அவர்தான் உலகத்திலேயே

2016 பிப்ரவரி 20]

உயர்வானவர் என்று. அதுபோல, தாழ்ந்து கிடக்கிற மக்களை, கடைக்கோடியில் இருக்கக்கூடிய மக்களை, ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்களை, கைதூக்கி, கரை சேர்த்து, சிம்மாசனத்தில் அமர்த்தி, சிகரங்களாக உயர்த்துபவர் நம் சமூக நீதி காத்த சரித்திரத் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த பேரவையில், மிகப் பெரிய அங்கீகாரத்தை வழங்கியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் சட்டமன்ற வரலாற்றிலே, ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்கு வழிவகுத்தவர்கள் வரிசையிலே “மிக உயர்ந்தவர்” என்கிற, அந்த உச்சத்தை எட்டியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தாழ்த்தப்பட்ட மக்களின் ஒளி விளக்காக, கலங்கரை விளக்கமாக, நம்பிக்கை நட்சத்திரமாகக் காண்கிறோம். சாதி, மத பேதங்களை வேரறுத்து, சவலைப் பிள்ளைகளையும், சத்துள்ள பிள்ளைகளாக மாற்றும் தாயாக, பொருளாதாரத்தில் தாழ்ந்து கிடக்கும் இம்மக்களைப் பெருமைப்படுத்தும் அன்னையாக, ஆதி திராவிட மக்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் விடிவெள்ளியாக, பழங்குடியின மக்கள் வாழ்வின் பங்காளனாக, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிதாமகராக அனைத்து சமுதாய மக்களையும் அரவணைக்கும் அன்னை தெரசாவாக, புரட்சி மலர் தோட்டத்திலே பூத்த தனிப் பூவாக, இருட்டு மேகத்தைக் கிழித்து வந்த எழுச்சி நிலவாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் விசுவாசிகளாகத் திகழ்வோம். பொது வாழ்விலே எனக்குக் கிடைத்த அத்தனை உயர் பதவிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே அளிக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். எல்லா இனத்தினரையும் ஒரு கோட்டிலே நிறுத்தி, நேர்க்கோட்டில் பார்க்கிற சமத்துவத் தலைவி, நமது காவியத் தாய் என்பதற்கு, நானே ஓர் எடுத்துக்காட்டு. ஒடுக்கப்பட்ட மக்களை கைதூக்கி விடுகிற மனப்பாங்கு, எண்ணம், ஈடுபாடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, வேறு எவருக்கும் கிடையாது. பொதுத் தொகுதியிலே, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவரை வேட்பாளராக நிறுத்தும் கனிவு, நாடாளுமன்ற மேலவைக்குத்

தலித்துகளை நியமிக்கும் பரிவு, டாக்டர் அம்பேத்கர், சுவாமி சகஜானந்தா, தாத்தா ரெட்டை மலை சீனிவாசன், மொழி ஞாயிறு தேவனேயப் பாவாணர் ஆகியோருக்கு நினைவு மண்டபங்கள், வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் என சாதனைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

எனக்கு பேரவைத் தலைவர் பொறுப்பைத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, பேரவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற வழிகாட்டியாகத் திகழ்ந்த எங்கள் குல தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் நீடுழி, நெடுங்காலம் வாழ்ந்து, சிறப்பாக இந்தத் தமிழகத்தை வழிநடத்திச் செல்ல எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

பதினான்காவது பேரவை நிறைவேற்றிய அலுவல்களையும் இப்பேரவைக் காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆற்றிய அரும்பணிகளையும், செயல்படுத்திய திட்டங்களையும், அதன் பயனாக விளைந்த முன்னேற்றத்தையும் ஓரளவுதான் என்னால் எடுத்துச் சொல்ல இயன்றது. எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால், என் வாழ்நாள் முழுவதும் வேண்டும், நேரம் போதாது, நாட்கள் போதாது. எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

முப்பத்தி நான்கு வருட போராட்டப் பொது வாழ்வு. அதில் இருபத்தியேழு வருடங்கள் ஈடில்லா வெற்றிகளை இமைதுஞ்சா உழைப்பால் ஈட்டித் தந்த ஈடு இணையற்றத் தலைவி, அறிஞர் அண்ணா வீற்றிருந்த அதே இருக்கையில் மாநிலங்களவை உறுப்பினர், எதிர்கொண்ட முதல் தேர்தலிலேயே எதிர்க்கட்சித் தலைவர், மீண்டும் இந்த அவைக்கு முதலமைச்சராகவே வருவேன் என சூளுரைத்து, நினைத்ததை முடித்து, நிகரில்லை என உரைக்க, அகிலத்தை வியக்க வைத்த ஐந்தாம் முறை முதலமைச்சர். அன்னைத் தமிழ் பூமி காக்க, அவதாரம் எடுத்து வந்த அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரமாய் ஆறாம் முறையும் தலைமையேற்று, ஆட்சி அமைக்கப் போகும் எங்கள் அம்மா, ஏழேழு தலைமுறைக்கும் நீங்கள்தான் நிரந்தரம் அம்மா.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், மே திங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் பெறப்போகும் வெற்றி, பொன் எழுத்துகளால்

2016 பிப்ரவரி 20]

பதிக்கப்பட வேண்டிய வெற்றி, சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் வெற்றி, இமாலய வெற்றி மட்டுமல்ல, இமயம் தொடும் வெற்றியாக நிச்சயம் அமையும். மாண்புமிகு அம்மா அவர்கள், பள்ளிப் படிப்பில் பெற்றது இருநூறுக்கு இருநூறு மட்டுமல்ல, வரப்போகும் தேர்தலில் பெறப்போகும் வெற்றியும் நூற்றுக்கு நூறு, 234-க்கு 234. இந்தியாவில் மட்டுமல்ல, இவ்வுலகில் எங்கும் கண்டிராத வெற்றியாக, இவ்வுலகம் அதிசயிக்கும் கின்னஸ் சாதனையாக, வெற்றிச் செல்வியின் சரித்திரப் புத்தகத்தில் தலையாய இடம் பெறப் போகும் வெற்றி இது. வரும் மே திங்களிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மீண்டும் அரியணையில் அமர்வார்கள். இங்கே மக்கள் நலப் பணிகளைத் தொடர்வார்கள் என உரைத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்கள் நலப் பணிகள் தொடர வாழ்த்த வயதில்லையென்றாலும், இரு கரம் கூப்பி பணிந்து வணங்குகிறேன்.

வரும் மே திங்களில் மட்டுமல்ல, இனிமேலும், தமிழ் மேதினிக்கு, தாங்கள் மட்டுமே ஆதாரம் எனத் தெரிவித்து, 15-வது சட்டமன்றப் பேரவை, 16-வது சட்டமன்றப் பேரவை என இனி வரக்கூடிய சட்டமன்றப் பேரவையின் கூட்டங்களும் இங்கேயே, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலேயே நடைபெறும் என உரைத்து, அனைவருக்கும் பேரவையின் சார்பில் வாழ்த்துகளையும் என் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் உதித்த மாசி மகம் வாழ்த்தினையும், பிப்ரவரி 24 ஆம் நாள் பிறந்த நாள் வாழ்த்துகளையும் தெரிவிக்க வயதில்லை என்றாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னும் நூறாண்டு, நூறாண்டு நலமோடு வாழ்ந்து, தமிழகத்தை ஆட்சி நடத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.
